SEC | SECURITIES AND EXCHANGE COMMISSION OF SRI LANKA



# வளர்ச்சிக்கு துணையளித்தல்

ஆண்டறிக்கை 2022

# உள்ளடக்கம்


எம்மைப் பற்றி ....................................................................2

## நிறைவேற்றுநர் மீளாய்வுகள்

தலைவரின் மீளாய்வு ........................................................4

பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு....................................7

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் ...............................12

பணிப்பாளர்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர்கள் ......16

சிரேஷ்ட முகாமையாளர்கள் ........................................17

முகாமையாளர்கள்..........................................................17

பணியாள் அங்கத்தவர்கள் ...........................................18

நிகழ்ச்சி காட்சியகம் .....................................................24

## செயற்பாட்டு மீளாய்வு

செயற்பாட்டு மீளாய்வு ...................................................28

மேலதிகத் தகவல்கள் ..................................................61

## நிதியியல் அறிக்கைகள்

### இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை .......................................................................68

நிதி நிலைமைக் கூற்று ................................................73

நிதிச் செயற்திறன் கூற்று ............................................74

தேறிய சொத்துக்களின் மாற்றங்களிலான கூற்று .......75

காசுப் பாய்ச்சல் கூற்று ..................................................76

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ...........................77

### இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை .......................................................................91

நிதி நிலைமைக் கூற்று ................................................95

நிதிச் செயற்திறன் கூற்று ............................................96

தீர்வை நிதியத்தின் மாற்றங்களிலான கூற்று .............97

காசுப் பாய்ச்சல் கூற்று ................................................98

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ...........................99

### இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை .................................................................... 105

நிதி நிலைமைக் கூற்று ............................................. 109

நிதிச் செயற்திறன் கூற்று ......................................... 110

இழப்பீட்டு நிதியத்தின் மாற்றங்களிலான கூற்று......... 111

காசுப் பாய்ச்சல் கூற்று ............................................. 112

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ........................ 113

### இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை .................................................................... 119

நிதி நிலைமைக் கூற்று ............................................. 123

நிதிச் செயற்திறன் கூற்று ......................................... 124

தேறிய சொத்துக்களின் மாற்றங்களிலான கூற்று .... 125

காசுப் பாய்ச்சல் கூற்று ............................................. 126

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ........................ 127

கூட்டாண்மைத் தகவல்கள ..........உட்புற பின்பக்க அட்டை

## வளர்ச்சிக்கு



# துணையளித்தல்

ஒரு சாத்தியமான பிணையங்கள் சந்தையானது, முதலீட்டாளர்களிடமிருந்து சேமிப்புக்களை திரட்டி ஆக்கவளமுடைய முதலீடுகளுக்கு அனுப்பவதன்மூலம் பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான ஒரு பாதையினை செதுக்குகின்றது. இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது பிணையங்கள் சந்தையின் நேர்மை மற்றும் உறுதியினை பாதுகாப்பதற்கு மற்றும் பலப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை நிறுவியுள்ளது. இதன்மூலம் எமது பங்காளிகளது பேரார்வம் மற்றும் எதிர்பார்ப்புக்களை சந்திப்பதற்கான தொழில்சார் நியமங்கள் உறுதிப்படுத்துகின்றன. எமது தொலைநோக்கான குறிக்கோளானது நீண்டகால நிதி திரட்டலுக்கு முன்னுரிமையான தெரிவாக மூலதனச் சந்தையினை உருமாற்றுவதாகும். இ.பி.ப.ஆ. இல் நாங்கள் வளர்ச்சிக்கு துணையளிக்கின்றோம்.

SEC SECURITIES AND EXCHANGE COMMISSION OF SRI LANKA

# எம்மைப் பற்றி

## தொலைநோக்கு

பிராந்தியத்திலேயே பயனுறுதியான, ஆற்றல்மிக்க மற்றும் முன்னோடியான மூலதனச் சந்தை முறைமைப்படுத்தலில் தரக்குறியான முறைமைப்படுத்துபவராக வருவதற்கு

## பணிநோக்கு

நியாயமான, செயற்திறனான, முறையான மற்றும் வெளிப்படையான ஓர் மூலதனச் சந்தையினை ஊக்குவிப்பதற்கு, விருத்தி செய்வதற்கு மற்றும் பராமரிப்பதற்கு

### எம்மைப் பற்றி

1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் இ.பி.ப.ஆ. ஸ்தாபிக்கப்பட்டதுடன், தற்போது இச்சட்டமானது நீக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தினால் மாற்றீடு செய்யப்பட்டது. இ.பி.ப.ஆ. மூலதனச் சந்தையினை முறைமைப்படுத்துவதற்கும் அதன் அபிவிருத்திக்கு வசதியளிப்பதற்கும் சட்டரீதியாக வலுவளிக்கப்பட்டுள்ளதுடன், இது நிதி, பொருளாதார உறுதியாக்கல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் ஆதிக்கவரம்பின் கீழ் வருகின்றது.





# வெளிப்படைத்தன்மையினை வளர்த்தல்

செயற்குழு மீளாய்வுகள்

தலைவரின் மீளாய்வு 4 | பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு 7 | ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் 12 | பணிப்பாளர்களும் உதவிப் பணிப்பாளர்களும் 16
சிரேஷ்ட முகாமையாளர்கள் 17 | முகாமையாளர்கள் 17 | பணியாள் அங்கத்தவர்கள் 18 | நிகழ்ச்சி காட்சியகம் 24

# தலைவரது மீளாய்வு



"துல்லியமான, நேரகாலத்துடனான மற்றும் நம்பகமான வெளிப்படுத்தல்கள் முதலீட்டாளர் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதுடன் வலுவான மற்றும் பயனுறுதிமிக்க மூலதனச் சந்தையின் மிக முக்கியமான பண்பாகும். எமது தொடர்ச்சியான வெளிப்படுத்தல் மீளாய்வு திட்டத்தினூடாக பட்டியலிடப்பட்ட கம்பனிகள் நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் வெளிப்படுத்தல் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாட்டுடன் காணப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நாம் கடப்பாட்டுடன் உள்ளோம்."

## இவ்வருடத்தின் மீளாய்வு

பெப்ரவரி 2023 இல் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராக எனது நியமனத்தினைத் தொடர்ந்து 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் நான் மிகிழ்ச்சியடைகின்றேன். 2022 ஆம் ஆண்டில் அனேகமான நாடுகள் கோவிட்-19 தொற்றிலிருந்து மெதுவாக மீளெழும் வேளையில், இலங்கை அதன் மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடியினை சமாளிக்க வேண்டியதாயிருந்தது. இவை பல காரணிகளின் சங்கமத்திலிருந்து வந்ததுடன், உற்பத்தியிலான சுருக்கம், உயர்வடையும் பணவீக்கம் மற்றும் கடுமையான அந்நிய செலாவணி பற்றாக்குறை ஆகியவற்றை விளைவித்ததுடன், இதன் காரணமாக அத்தியாவசியமான பண்டங்களிலான பற்றாக்குறை, உயர்ந்த வட்டி வீதங்கள் மற்றும் வெளிநாட்டுக் கடனை மீளச் செலுத்துவதிலான சிரமங்கள் ஆகியவற்றுக்கு இட்டுச்சென்றது. இந்த சவால்களுக்கு எதிராக 2022 இல் இ.பி.ப.ஆ. அதன் முறைமைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி பொறுப்பாணையினை தொடர்ந்தது. இந்த சவால்களுக்கு மத்தியில், நாம் பின்வரும் நடவடிக்கைகளின் மூலம் முதலீட்டாளர்களை பாதுகாக்கவும் மூலதன உருவாக்கத்திற்கு வசதியளிக்கவும் கடப்பாட்டுடன் உள்ளோம். முறைமைப்படுத்தல் சுமையினைக் குறைத்தல், இணக்கப்பாட்டினை உறுதிசெய்தல், வலியுறுத்தல் நடவடிக்கையினை பலப்படுத்தல் மற்றும் நிதியியல் கல்வியறிவினை மேம்படுத்தல் என்பன இந்த ஆண்டறிக்கையில் வழங்கப்பட்டுள்ள முக்கிய சிறப்பம்சங்களாகும்.

## பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் நடத்தைக்கான தரத்தினை உயர்த்துதல்

துல்லியமான, நேரகாலத்துடனான மற்றும் நம்பகமான வெளிப்படுத்தல்கள் முதலீட்டாளர் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதுடன் வலுவான மற்றும் பயனுறுதிமிக்க மூலதனச் சந்தையின் மிக முக்கியமாக பண்பாகும். எமது தொடர்ச்சியான வெளிப்படுத்தல் மீளாய்வு திட்டத்தினூடாக பட்டியலிடப்பட்ட கம்பனிகள் நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் வெளிப்படுத்தல் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாட்டுடன் காணப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நாம் கடப்பாட்டுடன் உள்ளோம். குறிப்பிடத்தக்க குறைபாடுகள் மற்றும் தவறாக இட்டுச்செல்லும் வெளிப்படுத்தல்கள் என்பன கம்பனிகள் இந்த விடயங்களை தீர்த்து வெளிப்படுத்தல்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக அறிவிக்கப்பட்டன. சில இணக்கப்பாடற்ற சந்தர்ப்பங்களில் நாம் கடுமையான வலியுறுத்தல் நடவடிக்கைகளை பொறுப்பேற்றோம். காசுப்பாய்ச்சல்கள், செயற்பாடுகள், நிதியியல் செயற்திறன் மற்றும் வணிக வாய்ப்புக்களில் தாக்கத்தினை ஏற்படுத்திய நிச்சயமற்ற மற்றும் மாற்றமடையும் நிலைமைகளின்போது முதலீட்டாளர்கள் துல்லியமான, வெளிப்படையான மற்றும் நேரத்துக்கேற்ற தகவல்கள் பெறுவதனை உறுதிப்படுத்துவதற்காக நாம் கம்பனிகளுடனும் வெளிவாரி கணக்காய்வாளர்களுடனும் ஈடுபாட்டினை மேற்கொண்டோம். நிலைபேறுடைய நிதியிலான அதிகரித்த முன்னிறுத்தலுடன் பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் நிலைபேறுடைய வெளிப்படுத்தல்களது அமுலாக்கத்திற்கு வசதியளிப்பதற்காகவும் விழிப்புணர்வினை உருவாக்குவதற்காகவும் நாம் எமது பங்காளிகளுடன் ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்வோம்.

## முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களுக்கான உயர்ந்த மேற்பார்வை

2021 இல் புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் சட்டவாக்கத்தின் விளைவாக, நாம் சந்தை நிறுவனங்கள், சந்தை இடையீட்டாளர்களுக்கு புதிய விதிகளையும் கூட்டு முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒரு கோவையினையும் அறிமுகப்படுத்தினோம். இது சிறந்த நடத்தையினை ஊக்குவிப்பதன் மூலம் எமது சந்தையில் நம்பிக்கை மற்றும் மீளெழுச்சியினை கட்டியெழுப்புவதற்காகவும் பொறுப்புமிக்க வணிகத்தை ஊக்குவிப்பதற்காகவும், ஆளுகை நியமங்களை மேம்படுத்துவதற்காகவும் சுய முறைமைப்படுத்தல் மற்றும்

"நாம் சந்தை நிறுவனங்கள், சந்தை இடையீட்டாளர்களுக்கு புதிய விதிகளையும் கூட்டு முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒரு கோவையினையும் அறிமுகப்படுத்தினோம். இது சிறந்த நடத்தையினை ஊக்குவிப்பதன் மூலம் எமது சந்தையில் நம்பிக்கை மற்றும் மீளெழுச்சியினை கட்டியெழுப்புவதற்காகவும் பொறுப்புமிக்க வணிகத்தை ஊக்குவிப்பதற்காகவும், ஆளுகை நியமங்களை மேம்படுத்துவதற்காகவும் சுய முறைமைப்படுத்தல் மற்றும் இணக்கப்பாட்டு கலாச்சாரத்தினை உருவாக்குவதற்கும் ஆகும்."

இணக்கப்பாட்டு கலாச்சாரத்தினை உருவாக்குவதற்கும் ஆகும். இ.பி.ப.ஆ. விதிகளை விருத்திசெய்வதற்கும் முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் பதில்களை ஒருங்கிணைப்பதற்கும் முறைமைப்படுத்தல் சுமையினை குறைப்பதற்காகவும் முதலீட்டாளர்களை பாதுகாப்பதற்காகவும் ஒரு வலுவான செயன்முறையினை கடைப்பிடித்தது. முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களின் வினைத்திறனான மேற்பார்வையானது இ.பி.ப.ஆ. இன் முறைமைப்படுத்தல் பங்கின் மையமாகும். முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களிலிருந்து மூலதனச் சந்தைக்கு எழுகின்ற ஏதேனும் முறைசார் இடரினைக் குறைப்பதற்காக நாம் தளத்திலான மற்றும் தளத்திற்கப்பாலான மேற்பார்வைக்காக ஒரு பயனுறுதிமிக்க இடர் அடிப்படையிலான மேற்பார்வை வரம்புறுகையினூடாக முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களிலான மேற்பார்வையினை பலப்படுத்தினோம். மீளாய்வாண்டின்போது, பல குறிப்பிடத்தக்க இடையூறுகளின் மத்தியில் முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்கள் செயற்பாட்டு ரீதியாக மீளெழுச்சியுடன் காணப்படுவதனை இயலுமையாக்கிய முக்கிய நடவடிக்கைகள் பின்வருவனவாகும். வலுவான அமைப்புமுறைகள், பயனுறுதிமிக்க ஆளுகை ஏற்பாடுகள், தகவல் பாதுகாப்பு மற்றும் வினைத்திறனான வணிகத் தொடர்ச்சி திட்டங்கள் என்பனவாகும்.

## டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் சிற்றளவு சந்தை நடத்தை

பங்குச் சந்தையின் டிஜிட்டல் மயமாக்கலானது கொ.ப.ப. இல் சிற்றளவு முதலீட்டாளர்களின் எண்ணிக்கையில் ஒரு உச்சத்தை உருவாக்கியது. 2022 இல் சிற்றளவு முதலீட்டாளர்களது எண்ணிக்கையில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன், குறிப்பாக 40 வயதுக்கும் குறைந்த முதலீட்டாளர்களிடையே, இவர்கள் முதலீடு பற்றிய அறிவைப் பெறுவதற்கும் முதலீட்டு வழிகாட்டலை பெறுவதற்கும் சமூக ஊடக மேடைகளை நாடுபவர்கள். இந்த புதிய வழிகளது வெளித்தோன்றலுடன் தகவல்களது நம்பகத்தன்மையிலான அக்கறைகளும் உருவாகியுள்ளன. இவ்வாண்டின்போது சமூக ஊடக பதிவுகளூடாக மேற்கொள்ளப்பட்ட சாத்தியமான சந்தை துர்நடத்தைகளை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக வலியுறுத்தல் நடவடிக்கைகளை எடுத்தோம். முதலீட்டாளர்களுக்கு முறையான நிதியியல் கல்விக்கான அணுக்கத்தினை வழங்குவதனையும் அவர்கள் பல்வேறு வழிகளிலிருந்து உருவாகின்ற தகவல்களை சரிபார்த்து மற்றும் புரிந்துகொண்டு தகவலறிந்த முதலீட்டு தீர்மானங்கள் மேற்கொள்வதனையும் உறுதிசெய்வதற்காக நாம் தொடர்ச்சியாக முதலீட்டாளர் கல்வித் திட்டங்களை வழங்குகின்றோம்.

## சந்தை கண்காணிப்பிற்காக தொழில்நுட்பத்தின் பங்கு

சந்தை தளம்பல்களுக்கு மத்தியில், முதலீட்டாளர் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காகவும் முதலீட்டாளர் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதற்காகவும் வர்த்தக முறைகேடுகளை உரிய நேரத்தில் கண்டுபிடிப்பதனை உறுதிசெய்வதற்காக நாம் சந்தை நடவடிக்கைகளை கண்காணிப்பதனை அதிகரித்தோம். பல வருடங்களாக, இணையம் மற்றும் டிஜிட்டல் ஊடகங்களின் விரிவான பயன்பாட்டின் விளைவாக பிரசுரிக்கப்படாத தகவல்கள் அனுப்பப்படக்கூடிய வேகம் மற்றும்

# தலைவரது மீளாய்வு

முறையற்ற பயன்பாடு என்பது குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளன. இ.பி.ப.ஆ. சமூக ஊடகங்களினூடாக பரப்பப்படும் அத்தகைய மோசடியான பங்கு துப்புகளை ஆராய்வதற்கான மற்றும் தக்க நேரத்தில் மற்றும் அளவுவாரியான வலியுறுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குமான முயற்சியினை மேற்கொண்டது. விரைவாக மாற்றமடையும் தொழில்நுட்பமானது புத்தாக்கமான சவால்களை தோற்றுவிப்பதுடன் கண்காணிப்பின் முதுகெலும்பாக தரவுகள் காணப்படுகின்றன. சிக்கலான சந்தை துர்நடத்தைகளை கண்டுபிடிக்கும் எமது தொடர்ச்சியான முயற்சியில் நாம் பின்வரும் பல்வேறு புத்தாக்கமான செயல் நுட்பத்தினை கடைப்பிடித்தோம். பகுப்பாய்விற்கான வலுவான கருவிகளுடனான இணைய அடிப்படையான மேடைகளை பயன்படுத்தி பாங்கறிதல் மற்றும் தரவுப் பகுப்பாய்வு என்பனவாகும். மீறல்கள் கண்டுபிடிக்கப்படும்போது இ.பி.ப.ஆ. அதன் நிர்வாக, சிவில் மற்றும் குற்றவியல் அதிகாரங்களின் கீழ் பல்வேறு தரப்பட்ட வலியுறுத்தல் கருவிகளை பயன்படுத்துகின்றது. எதிர்கால கண்காணிப்பானது, மிகவும் சிக்கலான மற்றும் உருவாகின்ற சந்தை கையாளுகை நுட்பங்களை கண்டுபிடிக்கவும் கட்டுப்படுத்தவும் மேலதிக தொழில்நுட்பத்தின் பயன்பாட்டினை ஏற்படுத்தும்.

## புதிய மூலதன திரட்டல் தெரிவுகளுக்கு வசதியளித்தல்

அபிவிருத்தியினைப் பொறுத்தளவில், இ.பி.ப.ஆ. பல்வேறு வர்த்தக மூலோபாயங்கள், இடர் ஆர்வங்கள் மற்றும் முதலீட்டுக் காலங்கள் போன்றவற்றுடனான பலதரப்பட்ட முதலீட்டாளர்களுக்கு தெரிவுகளை வழங்குவதற்காக மற்றும் எமது சந்தையின் ஆழத்தினை அதிகரிப்பதற்காகவும் புதிய கருவிகள் மற்றும் மேடைகளின் அறிமுகத்திற்கு தொடர்ச்சியாக வசதியளித்தது. பசுமையான மற்றும் நிலைபேறுள்ள நிதியளிப்பின் அபிவிருத்திக்கு துணையளிப்பது இ.பி.ப.ஆ. இன் ஒரு முக்கிய முன்னிறுத்தமாகும். இந்த முயற்சியின் ஒரு பாகமாக, கொ.ப.ப. உடன் ஒன்றிணைந்து நாம் சுற்றுச் சூழல் சமூக மற்றும் ஆளுகை (சு.ச.ஆ.) அடிப்படையிலான கருவிகள் மற்றும் சு.ச.ஆ. சுட்டி ஆகியவற்றின் அறிமுகத்தினை முனைவதுடன் இவை பொருளாதாரம், சமூகம் மற்றும் சூழல் ஆகியவற்றில் ஒரு சாத்தியமான தாக்கத்தினை உருவாக்குவதற்காகும். எதிர்வரும் காலங்களில் அறிமுகப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள ஏனைய கருவிகள், பங்கு கடன்பெறுதல் மற்றும் கடன் வழங்கல், முறைமைப்படுத்தப்பட்ட குறை விற்பனை, இஸ்லாமிய மூலதனச் சந்தைக் கருவிகள், தங்க பரிமாற்றக வர்த்தக நிதியங்கள், உட்கட்டமைப்பு முறிகள் மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கை கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கான சாளரவழி மேடை என்பனவாகும்.

## மேம்படுத்தப்பட்ட முதலீட்டாளர் கல்வி

2021 இல் இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட நிதியியல் அறிவு மதிப்பாய்வானது இலங்கையில் 57.9% ஆன வயது வந்தோரே நிதியியல் அறிவினைக் கொண்டுள்ளார்கள் என்பதை வெளிப்படுத்தியது. இருந்தாலும் இலங்கையர்களின் நிதியியல் அறிவினை மேம்படுத்துவதற்கு ஒரு பரந்த வாய்ப்பு காணப்படுகின்றது. நிதியியல் அறிவு என்பது ஒரு வாழ்க்கைத் திறன் என்பதுடன் ஒரு இளம் வயதிலிருந்தே நிதியியல் அறிவினை வழங்குவது மிகவும் முக்கியமானதாகும். 2023 இல் திருத்தியமைக்கப்பட்ட பாடசாலை பாடத்திட்டத்தில் தரம் ஆறு முதல் "தொழில்முனைவு மற்றும் நிதியியல்" பாடத்தில் ஒரு பொருத்தமான மூலதனச் சந்தை உட்பொருள் உள்ளடக்கப்படும் என நாம் நம்பிக்கையுடன் உள்ளோம். ஸ்மார்ட் போன்கள் மற்றும் தன்னியக்க சாதனங்களில் சௌகரியமாக வர்த்தகம் செய்யும் மற்றும் இயங்கலை வளங்களிலிருந்து முதலீட்டுத் தீர்மானங்களுக்கான உள்ளீடுகளைத் தேடும் புதிய சந்ததி முதலீட்டாளர்களை நாம் அணுகுதல் கட்டாயமானதாகும். இந்த காரணத்திற்காக, எமது முயற்சிகள், முகப்புத்தகம், இன்ஸ்ட்டகிராம் மற்றும் டுவிட்டர் ஆகியவற்றில் சமூக ஊடக பதிவுகளின் மூலம் ஒரு வழமையான அடிப்படையில் வேடிக்கையாகவும் ஊடாட்டமான விதத்திலும் முதலீட்டு அறிவினை பகிர்வதனை எமது முயற்சிகள் உள்ளடக்குகின்றன. சாத்தியமான மோசடிகளினால் பாதிக்கப்படுவதனை தவிர்ப்பதற்காக நாம் முதலீட்டாளர்களுக்கு முன்னெச்சரிக்கை விடுத்து மற்றும் முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அதிகபட்ச முன்னெச்சரிக்கையினை கையாளுமாறும் அறிவுறுத்தினோம். எமது இயங்கலை முயற்சிகள் ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான தனிநபர்களை ஒரு சிக்கனமான விதத்தில் எட்டக்கூடியதாய் இருந்த வேளை இ.பி.ப.ஆ. நேரடியான நிகழ்வுகளது தாக்கவிளைவினை இனங்கண்டு கொ.ப.ப. உடன் ஒன்றிணைந்து நாடு பூராவும் பல வெளிக்கள நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

## பங்காளிகளுடனான ஈடுபாடுகள் ஒரு மூலைக்கல்லாக


இ.பி.ப.ஆ. பின்வரும் வழிமுறைகளை பயன்படுத்தி ஒரு பரந்தளவிலான பங்காளிகளுடன் வழக்கமான, நேரத்திற்கேற்ற மற்றும் முன்னியக்க ஈடுபாடுகளைத் தொடர்ந்தது. உரையாடல் ஈடுபாடுகள், கலந்தாலோசனைகள், துறைசார் விளக்கவுரைகள், சுற்றறிக்கைகள், பிரசுரங்கள், பத்திரிகை வெளியீடுகள் மற்றும் ஆண்டறிக்கைகளூடாக இருதரப்பு தொடர்புகளை அதிகரித்தது. இந்த ஈடுபாடுகள் எமது முறைமைப்படுத்தல் எதிர்பார்ப்புகள் மற்றும் அபிவிருத்தி முன்னெடுப்புகளில் இற்றைப்படுத்தல்களை வழங்குவதற்காக நடாத்தப்பட்டதுடன் கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பாக பங்காளிகள் அவர்களது அக்கறைகள் மற்றும் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான வாய்ப்புகளையும் வழங்குகின்றன. சந்தை பங்குபற்றுநர்களுடனான தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் இ.பி.ப.ஆ. க்கு சந்தையின் துடிப்பினை அளவிடுவதனையும் பிணையங்கள் சந்தையில் புதிய கொள்கை மற்றும் முறைமைப்படுத்தல் அபிவிருத்தியில் காலத்திற்கேற்றவாறு இருப்பதனையும் இயலுமையாக்கின.

ச.பி.ஆ.ஒ. இன் ஒரு அங்கத்தவராக அதன் கொள்கை குழுக்களான, வலியுறுத்தல் மற்றும் தகவல் பரிமாற்றக் குழு (குழு 4) மற்றும் சிற்றளவு முதலீட்டாளர்களிலான குழு ஆகியவற்றிலான பிரதிநிதித்துவத்துடன் இ.பி.ப.ஆ. சர்வதேச நியம உருவாக்கல் முன்னெடுப்புகள் மற்றும் சிந்தனை தலைமைத்துவம் ஆகியவற்றுக்கு தொடர்ச்சியாக பங்களிப்பு செய்தது. கோவிட்-19 தொற்றின்போது மற்றும் ச.பி.ஆ.ஒ. இன் தீர்மானமான அடிக்கடி இணையவழி கூட்டங்களை நடாத்துதல் ஆகியவற்றில் இ.பி.ப.ஆ., ச.பி.ஆ.ஒ. இன் பல்வேறு தொழில் ஓட்டங்களில் பங்கேற்றதுடன் ஏனைய பல்வேறு சர்வதேச நியாயாதிக்கங்களுடன் அனுபவங்களையும் சிறந்த நடைமுறைகளையும் பகிர்ந்துகொள்வதற்கும் கற்றுக்கொள்வதற்கும் இயலுமையாயிருந்தது.

## முன்னோக்கி நகருதல்

மூலதனச் சந்தையின் செயற்திறனானது நடைமுறையிலுள்ள பொருளாதார சிக்கல் நிலைமையினால் கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பொருளாதார நிலைமையானது எளிதாகி வளர்ச்சி நோக்கி மாற்றமடையும்போது மூலதனச் சந்தையும் மீளெழுந்து வளர்ச்சியடையும் என்ற உறுதியினையும் நம்பிக்கையினையும் நாம் கொண்டுள்ளோம். பொருத்தமான மற்றும் வினைத்திறனான முறைமைப்படுத்தல், செயற்பாட்டு வினைத்திறன்கள் மற்றும் புதிய மற்றும் கவர்ச்சியான கருவிகளது அறிமுகத்தினூடாக சந்தையில் முதலீட்டாளர் நம்பிக்கையினையும் நம்பகத்தன்மையினையும் மீள்-கட்டியெழுப்புவதற்காக இது உகந்த நேரமாகும்.

நிறைவாக, ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு அவர்களது நுண்ணறிவுமிக்க பங்களிப்புகள், உறுதுணைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்காகவும் மற்றும் பணிப்பாளர் நாயகம் மற்றும் செயலகத்தின் பணியாட்களுக்கு அவர்களது கடப்பாடு மற்றும் அயராத உழைப்பிற்காகவும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். மாண்புமிகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கும் என்னிலும் புதிய ஆணைக்குழு அங்கத்தவர்களிலும் அவர்களது நம்பிக்கையினை வைத்துள்ளமைக்காக நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



**வைசால் சாலி**
**தலைவர்**

15 மார்ச் 2023

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு



“டொலர் உழைப்புகளை ஈட்டும் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் இலங்கையின் பொருளாதார மீட்டலினை இயக்குவதில் ஒரு முக்கியமான பங்கினை வகிக்க இயலுமையாயுள்ளன. எமது டொலர் உழைக்கும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளிலிருந்து அவற்றின் சாத்தியம், இயக்கம் மற்றும் அர்ப்பணிப்பு என்பவற்றை அவதானிப்பதன் மூலம் வெற்றியாளர்களை தெரிவுசெய்வதற்கான நேரம் தற்போது வந்துள்ளது. அத்தகைய வெற்றியாளர்களை நாம் ஊக்கமளித்து வளர்க்கவேண்டிய அவசியம் காணப்படுவதுடன், பொருளாதார அபிவிருத்தியில் முன்னேற்றமடைவதற்கு வெளியே சென்று உலகளாவிய ஜாம்பவான்களுடன் போட்டியிடுவதற்கு அத்தகைய வெற்றியான கம்பனிகளை நாம் விடுவித்தல் வேண்டும். இதனால் எமது நாட்டின் முற்றான தோற்றமும் மாற்றமடையும்; இது எம்மை ஒரு இயக்காற்றலுடைய முயற்சியான தேசமாக மாற்றி நாடு அதன் மெய்யான சாத்தியத்தினை அடைவதற்கு துணைபுரியும்.”

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

பொருளாதாரமானது கடுமையான கட்டுப்பாடுகளை சந்தித்தவேளை 2022 ஆம் ஆண்டானது நாட்டிற்கு மிகவும் அதிவிசேட சவாலாகக் காணப்பட்டது என்று கூறலாம். சவாலுக்கு முகங்கொடுப்பதற்கும் இந்த நிதியியல் மற்றும் பொருளாதார இக்கட்டான நிலையிலிருந்து கடந்து வருவதற்கும், மேலும் பலவீனமடைவதைத் தடுப்பதற்கு எதனைச் செய்யவேண்டும் மற்றும் எப்படி செய்யவேண்டும் என்று புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

பின்னோக்கிப் பார்க்கும்போது, நாணயக் கொள்கையின் தவறான நிர்வாகம் மற்றும் போதுமையற்ற வெளிநாட்டு ஒதுக்கங்களுடன் சேர்ந்து சர்வதேச மூலதனச் சந்தைகளுக்கான அணுக்கத்தின் இழப்பு மற்றும் பகுப்பாய்வு செய்யாமல் கடனைத் தவறும் தீர்மானம் என்பன பொருளாதார வீழ்ச்சிக்கு பங்களிப்பு செய்த பல காரணிகளாகும். இவற்றின் விளைவாக நாடானது முன்நிகழ்ந்திராதளவுக்கு உணவு, எரிபொருள் மற்றும் மருந்து ஆகியவற்றில் பற்றாக்குறையினை அனுபவித்தது. பணவீக்கமானது விரைவாக உயர்வடைந்து வருடத்தின் இறுதி அரைப்பகுதியில் 60% நிலையிலிருந்தது. இதன் விளைவாக இ.ம.வ. அதன் கொள்கை வட்டி வீதங்களை இறுக்கமாக்கியது.

எவ்வாறாயினும், கொள்கை வட்டி வீதங்களிலான அதிகரிப்பு உயர்ந்த வங்கி வட்டிவீதங்களை விளைவித்ததுடன், இவை கம்பனிகள் அவற்றின் வணிக நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு வழிநடத்தியவேளை முதலீட்டாளர்கள் பங்குச் சந்தையிலிருந்து அவர்களது முதலீடுகளை நிலையான வருமான முதலீடுகளுக்கு மாற்றுத் தூண்டியது. இதன் காரணமாக அனைத்து பங்கு விலைச் சுட்டியானது (அ.ப.வி.சு.) 30.5% ஆல் வீழ்ச்சியடைந்து வருடத்தின் இறுதியில் 8489.66 ஆக காணப்பட்டது. மேலும் S&P SL20 சுட்டியானது அதேபோன்ற உணர்வினைக் காண்பித்ததுடன் சுட்டியானது 38% ஆல் வீழ்ச்சியடைந்து வருட இறுதியில் 2635.63 புள்ளிகளாகக் காணப்பட்டன.

ஒரு சாத்தியமான குறிப்பில், 2022 இல் நாளாந்த சராசரி புரள்வானது ரூபா 2.97 பில்லியனாகக் காணப்பட்டது. மொத்த புரள்வுக்கான வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பானது 2021 இல் பதிவுசெய்யப்பட்ட 5.2% இலிருந்த 2022 இல் 7.6% ஆக அதிகரித்தது. வெளிநாட்டு முதலீட்டாளர்களிடையேயான புதுப்பிக்கப்பட்ட ஆர்வமானது சந்தை ஒரு தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சலாக ரூபா 30.6 பில்லியனை பதிவுசெய்ய உதவியது. நான்கு வருடங்கள் தொடர்ச்சியான வெளிப்பாய்ச்சல்களின் பின்னர் சந்தை சந்தித்த முதலாவது தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல் இதுவாகும். 2021 இனைப் போன்றே உள்ளூர் முதலீட்டாளர்கள் சந்தையில் உயிர்ப்புடன் காணப்பட்டார்கள். 2022 ஆம் ஆண்டில் உள்ளூர் முதலீட்டாளர்களது பங்களிப்பு 92.4% ஆக பதிவுசெய்யப்பட்டது. மீளாய்வாண்டின்போது மொத்தமாக சந்தையில் ரூபா 44.73 பில்லியன் மூலதனம் திரட்டப்பட்டது. சந்தையின் விலை உழைப்பு விகிதமானது ஒரு மிதமான மட்டமான 4.95 மடங்காகக் காணப்படுகின்றது. மேலும், சந்தையின் பங்கிலாப விளைவானது 2021 இல் பதிவுசெய்யப்பட்ட 2.2% இலிருந்து 2022 இல் 4.1% ஆக கணிசமாக அதிகரித்தது.

இவ்வாண்டின்போது இ.பி.ப.ஆ. இல் நாம், நாடு சர்வதேச ரீதியாக ஒரு போட்டித்தன்மையான நடுநிலை சந்தையாக வெளித்தோன்றுவதனை இயலுமையாக்கும் நோக்கில் ஒரு சீர்திருத்தல் திட்டத்தினை ஆரம்பித்தது. ஆழமான மற்றும் திரவத்தன்மையான சந்தைகளது அபிவிருத்தி காணப்படல்வேண்டும் மற்றும் இது அரசாங்கத்தின் ஒரு முன்னுரிமையாக தெரிந்துகொள்ளப்பட்டுள்ளது. எமது சந்தை மூலதனவாக்கமும் சந்தை புரள்வின் பெறுமதியும் சமீப வருடங்களில் மொ.உ.உ. இன் 15% மற்றும் 25% இற்கிடையே காணப்பட்டதுடன் இது பிராந்தியத்திலுள்ள ஏனைய சந்தைகளை விட மிகவும் குறைந்ததாகும்.

> “மூலதனச் சந்தையானது வணிகங்களுக்கு அவற்றின் மூலதனத் தேவைகளை சந்திப்பதற்கு ஒரு நிதியளித்தல் மூலமாக ஒரு முக்கிய பங்கினை வகிக்கும்வேளை முதலீட்டாளர்களுக்கு முதலீட்டு வாய்ப்புக்களை உருவாக்குகின்றது”.

எனவே, இ.பி.ப.ஆ. இலுள்ள நாம் நாட்டில் மூலதனச் சந்தை அடிச்சுவட்டினை மேம்படுத்தும் நோக்கில் வலுவான முறைமைப்படுத்தல் மற்றும் சந்தை அபிவிருத்தி நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடுகின்றோம். ஒரு ஆழமான மற்றும் திரவத்தன்மையுடைய சந்தையினை கட்டியெழுப்புவதற்கு முக்கியமாகக் காணப்படுவது சந்தையில் முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையினை கட்டியெழுப்புவதாகும். மூலதனச் சந்தையானது வணிகங்களுக்கு அவற்றின் மூலதனத் தேவைகளை சந்திப்பதற்கு ஒரு நிதியளித்தல் மூலமாக ஒரு முக்கிய பங்கினை வகிக்கும்வேளை முதலீட்டாளர்களுக்கு முதலீட்டு வாய்ப்புக்களை உருவாக்குகின்றது என்பதைப் புரிந்துகொள்வது முக்கியமாகும்.

டொலர் உழைப்புகளை ஈட்டும் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் இலங்கையின் பொருளாதார மீட்டலினை இயக்குவதில் ஒரு முக்கியமான பங்கினை வகிக்க இயலுமையாயுள்ளன. எமது டொலர் உழைக்கும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளிலிருந்து அவற்றின் சாத்தியம், இயக்கம் மற்றும் அர்ப்பணிப்பு என்பவற்றை அவதானிப்பதன் மூலம் வெற்றியாளர்களை தெரிவுசெய்வதற்கான நேரம் தற்போது வந்துள்ளது. அத்தகைய வெற்றியாளர்களை நாம் ஊக்கமளித்து வளர்க்கவேண்டிய அவசியம் காணப்படுவதுடன், பொருளாதார அபிவிருத்தியில் முன்னேற்றமடைவதற்கு வெளியே சென்று உலகளாவிய ஜாம்பவான்களுடன் போட்டியிடுவதற்கு அத்தகைய வெற்றியான கம்பனிகளை நாம் விடுவித்தல் வேண்டும். இதனால் எமது நாட்டின் முற்றான தோற்றமும் மாற்றமடையும்; இது எம்மை ஒரு இயக்காற்றலுடைய முயற்சியான தேசமாக மாற்றி நாடு அதன் மெய்யான சாத்தியத்தினை அடைவதற்கு துணைபுரியும்.

உலக பொருளாதார மன்றத்தின் உலகளாவிய போட்டித்தன்மை அறிக்கையானது, வெளித்தோன்றும் சந்தைகளில் நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மை மற்றும் வினைத்திறனை விளித்துரைக்கும் அதன் தொடரான வரைகூறுகளின் அடிப்படையில் இலங்கையினை 51 ஆவதாக தரமிட்டுள்ளது. மலேஷியா 9 ஆவது நிலையிலும் தாய்லாந்து 31 ஆவது நிலையிலும் உள்ளன. தற்போதைய சூழமைவில், எம்மிடம் ஒரு பாரிய நம்பிக்கை பற்றாக்குறை காணப்படுகின்றது. ச.நா.நி. இன் பரிந்துரைகளுள் சில முறைமைகளின் நம்பகத்தன்மை மற்றும் நம்பிக்கை பற்றியவையாகும். அந்த பரிந்துரைகளின் சூழமைவில் தேவையான சட்டமியற்றும் வரம்புறுகை பற்றி விரிவாகக் குறிப்பிடுகின்றது. அவர்கள் எந்நேரமும் முறைமைகளிலுள்ள குறைகளை எடுத்துக்காட்டுகின்றார்கள். எமது சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகை என்பன காலம் கடந்துள்ளன என்பதை நாம் எந்நேரமும் செவிமடுத்துள்ளோம். எமது முறைமைப்படுத்தப்படும் சமூகத்திற்கு திடமான மற்றும் தெளிவான வழிகாட்டியினை வழங்காது நாம் எங்கும் செல்ல இயலாது.

எனவே புதிய முறைமைப்படுத்தல் வரம்புறுகையின் அறிமுகத்துடன் இவை அனைத்தையும் நிறுத்தியுள்ளோம். இ.பி.ப.ஆ. இன் முறைமைப்படுத்தல் கடமையானது 2022 ஆம் ஆண்டின்போது ஒரு முன்னுரிமையான விடயமாக நீட்டப்பட்டு பெருப்பிக்கப்பட்டது.

### செயலூக்கமான வழிமுறைகள்

இ.பி.ப.ஆ. இன் நிலைப்பாட்டினைப் பொறுத்தளவில், நாம் சந்தையினை திருத்தியமைத்து சந்தை செயற்படும் விதத்திற்கு அதிக தெளிவு, ஒவ்வுமை மற்றும் முன்கணிப்புத்தன்மை ஆகியவற்றை கொண்டுவர முயற்சிக்கும்வேளை சந்தை துர்நடத்தை விடயங்கள் விரைவாகவும் தீர்க்கமாகவும் விளித்துரைக்கப்படல் வேண்டும்.

ஒரு முறைமைப்படுத்துபவரின் வெற்றியினை அளவிடும்போது மேற்கொள்ளப்பட்ட வலியுறுத்தல் நடவடிக்கைகளின் எண்ணிக்கையினை ஒரு பொருத்தமான அடிப்படையாக கருத இயலாது என நான் கருதும்வேளை கடந்த வருடத்தில் இ.பி.ப.ஆ. அதன் அதியுயர்ந்த வலியுறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டது. வலியுறுத்தல் பதிவுகள் பல வழக்குத் தொடர்வு தீர்மானங்கள், ஒத்திணங்கல்கள் மற்றும் ஏனைய வலியுறுத்தல் வழிமுறைகளை உள்ளடக்கியிருந்தன. மேலும். இவ்வாண்டின்போது கண்காணிப்பு, மேற்பார்வை மற்றும் புலனாய்வுப் பிரிவுகள் பலப்படுத்தப்பட்டு வலியுறுத்தலானது செயலூக்கம், தடுப்பு மற்றும் விவேகம் எனும் வழிமுறைகளூடாக மேற்கொள்ளப்பட்டன. எடுத்துக்காட்டாக, கண்காணிப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவுகள் நாளாந்த வர்த்தகத்தில் 100 சந்தர்ப்பங்களை உணர்ந்து எச்சரித்தல், இணக்கப்பாட்டு உத்தியோகத்தருக்கு அல்லது ஒரு உயர் அதிகாரிக்கு அறிவித்தல், முதலீட்டு ஆலோசகர்களுக்கு எச்சரிக்கை விடுத்தல், இயங்கலை வர்த்தக வசதிகளை இடைநிறுத்தல், தரப்பினரை காரணங்காட்டுமாறு அழைப்புவிடுத்தல் மற்றும் குற்றவியல் வழக்கு அல்லது நடவடிக்கைகளை தாக்கல் செய்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. அத்தகைய செயலூக்கமான வழிமுறைகள் உயர்ந்த வினைத்திறனாக நிரூபிக்கப்பட்டது ஏனெனில் அவை இவ்வாண்டின்போது சந்தை துர்நடத்தையினை கணிசமானளவு குறைத்தது.

## விதிகளின் உருவாக்கம்

2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் சட்டவாக்கத்துடன், புதிய சட்டத்தில் காணப்படும் ஏற்பாடுகள் ஒரு பயனுறுதியான விதத்தில் வலியுறுத்தப்படுவதனை உறுதிசெய்வதற்காக, இ.பி.ப.ஆ. தேவையான விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் நியமங்களை ஒரு செயல்விரைவான விதத்தில் வரைவது பொருத்தமானதாக காணப்பட்டது.

எனவே இ.பி.ப.ஆ. இலுள்ள நாம் ஒரு பரிமாற்றகம், தீர்வக இல்லம், ஒரு மத்திய வைப்பகம் (கூட்டாக சந்தை நிறுவனங்கள் என அறியப்படுகின்றது) ஆகியவற்றுக்கு பொருத்தமான விதிகள் மற்றும் சந்தை இடையீட்டாளர்களான, முதலீட்டு முகாமையாளர்கள், கடன் தரப்படுத்தல் முகவர்கள், எல்லைக்கடன் வழங்குநர்கள், முகாமைத்துவ கம்பனிகள், கூட்டாண்மை நிதியளித்தல் ஆலோசகர்கள், ஒப்புரவாளர்கள், பங்குத் தரகர்கள் மற்றும் பங்கு வர்த்தகர்கள் ஆகியோருக்கு பொருத்தமான விதிகளையும் வரைந்து அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்ததுடன் இந்த முக்கியத்துவமான செயன்முறைக்கு தலைமைத்துவத்தினை வழங்கிய முன்னாள் தலைவரான திரு. விராஜ் தயாரத்ன அவர்களுக்கு என்றும் நன்றியுள்ளவராய் உள்ளேன்.

மேலும், கூட்டு முதலீட்டுத் திட்டக் (கூ.மு.தி.) கோவையானது நடைமுறையிலிருந்த 2011 இன் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிக் கோவையினை மாற்றீடு செய்ததுடன், இக்கோவையானது மீளாய்வாண்டில் முடிவுறுத்தப்பட்டு அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. கூ.மு.தி. விதிகள், முதலீட்டாளர்கள் மற்றும் வழங்குநர்கள் இருபகுதியினரும் பலனடையக்கூடிய ஒரு பரந்த வரிசையான முதலீட்டுத் திட்டங்களை உருவாக்குவதற்கான வாய்ப்புக்களை வழங்கும்.

இந்த விதிகள் அவசியமான பங்காளிகளுடனான ஆலோசனைகளை மேற்கொண்டதன் பின்னர் பிரசுரிக்கப்பட்டன. விதிகளை உருவாக்குவதில் ஒரு ஆலோசனை அணுகுமுறையினை கடைப்பிடித்தல் மூலதனச் சந்தை பங்காளிகளிடையே உள்ளடக்கப்படலை விருத்திசெய்யும் என இ.பி.ப.ஆ. நம்புகின்றது.

மேலும், சந்தை நிறுவனங்கள், சந்தை இடையீட்டாளர்கள், பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனி அல்லது ஒரு கூ.மு.தி. இற்கு சேவைகளை வழங்கும் காப்பீட்டாளர்கள், காப்பீட்டுக் கணிப்பாளர்கள், கணக்காய்வாளர்கள், நம்பிக்கை பொறுப்பாளர்கள், மதிப்பீட்டாளர்கள் போன்ற குறிப்பிட்ட துணைச்சேவை வழங்குநர்களுக்கு பொருத்தமான வழிகாட்டிகளை பிரசுரிப்பதற்கு இ.பி.ப.ஆ. நடவடிக்கைகளை எடுத்தது.

> "டிஜிட்டல்மயமாக்கல் முன்னெடுப்பானது மேம்பட்ட சௌகரியம் மற்றும் வினைத்திறனிலிருந்து சந்தை நலனடைவதற்கு வசதியளித்துள்ளதுடன் பங்குச் சந்தையில் ஒரு புதிய யுகத்திற்கான வழியினை அமைக்கின்றது. இந்த முன்னெடுப்பினை வெற்றிகரமாக நிறைவேற்றியமைக்காக இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இன் கூட்டுக்குழு அங்கத்தவர்களுக்கு அவர்களது தளர்வில்லாத முயற்சிகளுக்கு நான் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்."

குறித்த நிறுவனங்களில் நியாயமான வணிக நடத்தையினையும், முதலீட்டாளர்களது நலனைப் பாதுகாப்பதனையும் மற்றும் பிணையங்கள் சந்தையில் முறைசார் இடரினை தணிப்பதனையும் உறுதிப்படுத்துவதற்காக இந்த விதிகள் மற்றும் வழிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டன எனக் கூறுதல் பொருத்தமானதாகும். இந்த முற்போக்கான விதிகள் மற்றும் வழிகாட்டிகள் அனைத்து சந்தை பங்குபற்றுநர்களும் அவர்களது நடவடிக்கைகளை ஒரு நியாயமான விதத்தில் மேற்கொள்வதற்கு அவசியமான சூழல் மற்றும் நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## சந்தையின் முனையத்திலிருந்து முனையம் வரையான செயற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்கல்

கோவிட் -19 தொற்றின் விளைவாக இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட கடுமையான முடக்கலினால் 2020 இல் பங்குச் சந்தை 52 நாட்கள் மூடப்பட்டிருந்தது. இது பிரதானமாக பங்குச் சந்தை சில முக்கிய நடவடிக்கைகளை டிஜிட்டல் ரீதியாக நடாத்துவதற்கு இயலாமையிலிருந்ததனாலாகும். இது கொ.ப.ப. இன் முனையம் முதல் முனையம் வரையான செயற்பாடுகளை டிஜிட்டல்மயமாக்குவதில் முன்னணி வகிப்பதற்கு இ.பி.ப.ஆ. இனை தூண்டியது. இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இன் பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் ஒரு கூட்டுக்குழுவானது நிறுவப்பட்டது. பங்குச் சந்தையின் முனையம் முதல் முனையம் வரையான டிஜிட்டல்மயமாக்கலானது மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. முதல் இரண்டு கட்டங்களும் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டதுடன், மீளாய்வாண்டின்போது டிஜிட்டல் மயமாக்கலிலான இ.பி.ப.ஆ.-கொ.ப.ப. கூட்டுக்குழுவானது இம் முன்னெடுப்பின் மூன்றாம் மற்றும் இறுதிக் கட்டத்தினை நிறைவு செய்தது.

இந்த முன்னெடுப்பானது சந்தையினை ஒரு புதிய உச்சத்திற்கு உருமாற்றியுள்ளது என்பதைக் கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். டிஜிட்டல்மயமாக்கலின் முக்கிய கைல்கற்களுள் ஒன்றாறகக் காணப்பட்டது கொ.ப.ப. இன் மொபைல் செயலியின் அறிமுகமாகும். இது முதலீட்டாளர்களுக்கு சந்தையினை அவர்களது விரல் நுனியில் கொண்டுவந்துள்ளது. தகவல் பரப்புதலிலான அதிகரித்த வினைத்திறன் மற்றும் அணுக்கமானது கொ.ப.ப. இல் முதலீட்டாளர் தளத்தின் விரிவாக்கலினை விளைவித்தது.

மூன்றாம் கட்டத்தில் எட்டிய முக்கிய மைல்கற்களுள் சில, மொபைல் செயலியூடாக(பங்குத்தரகு நிறுவனங்களூடாக) வெளிநாட்டு தனிநபர்களை சேர்த்துகொள்ளுதல் மற்றும் ஒரு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியிடமிருந்து உள்வாரி முதலீட்டுக் கணக்குகளை திறப்பதனை

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

வேண்டுவதற்கான ஆற்றல், இ-கொடைமுனைவுகள்/மீள்கொள்வவு, இ-ஆரம்ப பொது வழங்கல் (ஆ.பொ.வ.) இணையதளம், எல்லைக்கடன் வர்த்தகக் கணக்கினை திறத்தல் போன்றவையாகும். இந்த புதிய சிறப்பியல்புகள் முதலீட்டாளர்களுக்கு ஒரு விரிவான அணியான முதலீட்டு வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளதுடன் அவர்களது முதலீடுகளை ஒரு விரைவான விதத்தில் வழிநடத்துவதற்கு உதவுகின்றது.

டிஜிட்டல்மயமாக்கல் முன்னெடுப்பானது மேம்பட்ட சௌகரியம் மற்றும் வினைத்திறனிலிருந்து சந்தை நலனடைவதற்கு வசதியளித்துள்ளதுடன் பங்குச் சந்தையில் ஒரு புதிய யுகத்திற்கான வழியினை அமைக்கின்றது. இந்த முன்னெடுப்பினை வெற்றிகரமாக நிறைவேற்றியமைக்காக இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இன் கூட்டுக்குழு அங்கத்தவர்களுக்கு அவர்களது தளர்வில்லாத முயற்சிகளுக்கு நான் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### கொ.ப.ப. இல் ஒரு மத்திய எதிர் தரத்தவர் (ம.எ.த.) பொறிமுறையினை அமுல்படுத்துதல்

உள்ளூர் பங்குச் சந்தைக்கு ஒரு ம.எ.த. இனை அமுல்படுத்துவதில் நாம் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளோம் என்பதை தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். ம.எ.த. ஆனது மூலாதாரப் பிணையங்கள் போன்ற புதிய கருவிகளின் அறிமுகத்திற்கான ஒரு உகந்த சூழலை உருவாக்கும்போது எதிர்தரத்தவர் இடரினை தணிப்பதனை உறுதிசெய்யும்.

இ.பி.ப.ஆ. கொ.ப.ப. உடன் ஒன்றிணைந்து உள்ளூர் பங்குச் சந்தைக்கு ம.எ.த. இனை அமுல்படுத்துவதனை விரைவாக்குவதற்காக ஒரு கூட்டுக் குழுவினை நிறுவியுள்ளது. இ.பி.ப.ஆ.-கொ.ப.ப. கூட்டுக் குழுவானது ம.எ.த. இனை அமுலாக்குவதில் ஒரு ம.எ.த. பொறிமுறையினை அறிமுகப்படுத்துவதற்காக ஒரு கொள்கை வரம்புறுகையினை விருத்திசெய்துள்ளது. குறித்த வரம்புறுகையினை முடிவுறுத்துவதற்கு முன்னர் கொ.ப.ப. துறைசார் கலந்தாலோசனைகளை நடாத்தியது. அதன்பின்னர், ஆணைக்குழுவானது வரம்புறுகையினை அங்கீகரித்ததுடன் தற்போது கொ.ப.ப. விற்பனையாளருடன் முறைமையின் விவரக்குறிப்புகளை முடிவுறுத்தும் செயன்முறையிலுள்ளது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில் இம்முறைமையானது இயக்கத்தில் இருக்கும் என நம்பிக்கைகொண்டுள்ளோம்.

### புதிய கருவிகளை திரைநீக்கம் செய்தல்

வழங்குநர்கள் அவர்களது முதலீடுகளுக்கு மிகவும் அவசியமான மூலதனத்தை திரட்டுவதற்கான வாய்ப்புக்களை வழங்கும் புதிய முதலீட்டு வாய்ப்புக்களை நாம் உருவாக்குவது முதன்மையானதாகும். இ.பி.ப.ஆ. இந்த முன்னெடுப்பினை விரைவுபடுத்துவதற்காக கொ.ப.ப. உடன் ஒருங்கிணைந்து ஒரு கூட்டுக் குழுவினை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தது.

கூட்டுக் குழுவானது புதிய கருவிகளின் அறிமுகத்தினை கட்டங்களாக வகுத்துள்ளது. இந்த முன்னெடுப்பின் முதல் கட்டத்தின் கீழ், பிணையங்கள் கடன்பெறல் மற்றும் கடன்வழங்கல் ஊடாக முறைமைப்படுத்தப்பட்ட குறைவிற்பனையின் அமுலாக்கம், பசுமை/நீள முறிகளின் அறிமுகம், சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (சு.ச.ஆ.) சுட்டியொன்றின் அறிமுகம், பட்டியலிடப்பட்ட கூட்டாண்மை தொகுதிக்கடன்களிலான மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காக ஒரு சாளரவழி மேடையின் அறிமுகம், நிரந்தரமான முறிகளின் பட்டியலிடல்கள், அரச உடைமை நிறுவனங்களினால் வழங்கப்படும் கடன்/உரித்துவ பிணையங்களின் பட்டியலிடலுக்கு வசதியளிப்பதற்காக பட்டியலிடல் வரம்புறுகையினை விரிவாக்குதல், இலங்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்களினால் வழங்கப்படும் வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட கடன் பிணையங்களின் பட்டியலிடல் மற்றும் வர்த்தகம், சாளரவழி மேடையில் உயர்விளைவுடைய கூட்டாண்மை கடன் பிணையங்களின் வர்த்தகம் மற்றும் XBRL அடிப்படையிலான அறிக்கையிடல் மேடையின் அமுலாக்கம் போன்ற பல்வேறு புதிய கருவிகளை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது.

முதலீட்டுச் சமூகத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளைச் சந்திப்பதற்கான ஒரு நிலைபேறுடைய சந்தையினை விருத்திசெய்வதிலான அழுத்தத்தினை இ.பி.ப.ஆ. பிரயோகிக்கின்றது. எனவே, நிலைபேறுடமையினை உருவாக்கும் கருவிகளுடனான நோக்கெல்லையின் வழங்கல் பக்கத்தை விருத்திசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது பொருத்தமானதாகும்.

> “முதலீட்டுச் சமூகத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளைச் சந்திப்பதற்கான ஒரு நிலைபேறுடைய சந்தையினை விருத்திசெய்வதிலான அழுத்தத்தினை இ.பி.ப.ஆ. பிரயோகிக்கின்றது. எனவே, நிலைபேறுடமையினை உருவாக்கும் கருவிகளுடனான நோக்கெல்லையின் வழங்கல் பக்கத்தை விருத்திசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது பொருத்தமானதாகும்”.

இன்று, சு.ச.ஆ. முதலீட்டின் முக்கியத்துவமானது முன்னரிலும் பார்க்க உணரப்படுகின்றது. முதலீட்டாளர்கள் சு.ச.ஆ. தொடர்பான முதலீட்டு மூலோபாயங்களை பின்பற்றுகின்றார்கள். இதனால், பசுமை முறிகளின் செயலாக்கம் தொடர்பான கொள்கை வரம்புறுகை மற்றும் கொ.ப.ப. இன் வரைவு விதிகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ஆ.அ.வ.) உறுதுணையுடன் முடிவுறுத்தப்பட்டது. பொதுவாக பசுமை முறிகளின் துணைத்தொகுதியாக கருதப்படும் நீள முறிகளுக்கான கொள்கை வரம்புறுகையும் முடிவுறுத்தப்பட்டது. இது கூட்டாண்மைகளுக்கு பசுமை முன்னெடுப்புகளுக்கு நிதிகளை திரட்டுவதற்கான வாய்ப்புக்களை திறக்கும்.

### மேம்பாட்டிற்கான ஒத்துழைப்பு

பட்டியலிடப்பட்ட கம்பனிகளிடையே சு.ச.ஆ. தொடர்பான நடைமுறைகளை ஊக்குவித்தல் முக்கியமானதாகும். எனவே, இ.பி.ப.ஆ., கொ.ப.ப. மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் ஆகியன அத்தகைய நடைமுறைகளை ஊக்குவிப்பதற்காக 24 ஆகஸ்ட் 2022 இல் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை (பு.ஒ.) கைச்சாத்திட்டன. இந்த பு.ஒ. ஆனது ஒருங்கிணைத்த அறிக்கையிடல், கூட்டாண்மை ஆளுகை, நிலைபேறுடமை போன்ற பிரிவுகளிலும் கூட்டாண்மைகளுக்கும் மற்றும் நிதியியல் அறிக்கைகள்/கூட்டாண்மை அறிக்கைகளது பயனாளிகளுக்கும் நன்மைபயக்கும் ஏதேனும் ஏனைய தொடர்பான பிரிவுகளில் கூட்டு விழிப்புணர்வினை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன.

முன்னேற்றப்படியாக, மற்றுமோர் பு.ஒ. ஆனது இ.பி.ப.ஆ., கொ.ப.ப. மற்றும் பட்டய நிதியியல் பகுப்பாய்வாளர்கள் (ப.நி.ப.) சங்கங்களுக்கிடையே 17 ஜூன் 2022 இல் கைச்சாத்திடப்பட்டது. இந்த பு.ஒ. ஆனது பல்வேறு சிறப்பான அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. இவ்வம்சங்களில் சில, இலங்கையின் முதலீட்டாளர்களிடையே சு.ச.ஆ. விழிப்புணர்வினை ஊக்குவிக்கவும் முதலீட்டாளர் பாதுகாப்பினை மேம்படுத்தவும் ஒரு ஒத்துழைப்பான உறவின் நிறுவுதலையும், முதலீட்டு பகுப்பாய்வு மற்றும் பெறுமதியிடல் செயன்முறையில் சு.ச.ஆ. இனை அறிமுகப்படுத்துவதற்கு மூலதனச் சந்தை பங்குபற்றுநர்களை ஊக்குவிப்பதனையும் இலங்கையின் மூலதனச் சந்தையில் தொழில்சார் நியமங்கள் மற்றும் நேர்மை பராமரிக்கப்படுவதனை உறுதிசெய்வதனையும் உள்ளடக்குகின்றன.

### பலதரப்பு அபிவிருத்தி வங்கிகளுடனான ஒத்துழைப்பு

மூலதனச் சந்தை அபிவிருத்தி திட்டமானது (மூ.ச.அ.தி.) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட ஒரு கொள்கை அடிப்படையிலான கடன் மற்றும் தொழில்நுட்ப உறுதுணை திட்டமாகும். மூ.ச.அ.தி. இன் கீழ் இ.பி.ப.ஆ. பசுமை முறிகள் மற்றும் கூட்டுநிதிநல்கை மற்றும் கூ.மு.தி. கோவை ஆகியவற்றின் அறிமுகத்திற்கான

முறைமைப்படுத்தல் மற்றும் கொள்கை வரம்புறுகையினை வரைதல் போன்ற பல்வேறு பிரிவுகளில் தொழில்நுட்ப உறுதுணையினை பெற்றது. மீளாய்வாண்டின்போது மூ.ச.அ.தி. நிறைவடைந்ததுடன் மூ.ச.அ.தி. ஆனது சந்தை பங்குபற்றுநர்களுக்கு பன்முகமான நலன்களை விளைவித்தது என்பதை குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இ.பி.ப.ஆ. பல்வேறு முக்கிய முறைமைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்காக உலக வங்கியிடமிருந்து நிதியியல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் நிதியினை பெற்றுக்கொண்டது. இத்திட்டமானது மீளாய்வாண்டின்போது நிறைவுற்றது. இத்திட்டமானது சந்தையில் பல முறைமைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி சீர்திருத்தத்திற்கு வழிசமைத்ததுடன் நிறுவனச் தனிச்சிறப்பினை விருத்திசெய்வதற்கு உதவியது.

இந்த திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் எமக்கு வழங்கப்பட்ட அர்ப்பணிப்பிற்கும் கடப்பாட்டிற்கும் நான் ஆ.அ.வ., உலக வங்கி மற்றும் நிதி அமைச்சின் திறைசேரியின் பிரதிச் செயலாளராக திரு. பிரியந்த ரத்நாயக்க அவர்களுக்குக் நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இ.பி.ப.ஆ. இந்த பலதரப்பு அபிவிருத்தி முகவர்களுடன் எதிர்காலத்தில் நெருங்கி பணிபுரிவதற்கும் மூலதனச் சந்தையின் ஒட்டுமொத்த நியமங்களை உயர்த்துவதற்கும் எதிர்பார்க்கின்றது.

### விழிப்புணர்வினை எழுப்புதல்

மக்களிடையே ஒரு முதலீட்டு மனநிலையினை அபிவிருத்தி செய்வதில் நிதியியல் அறிவானது ஒரு முக்கியமான கூறாகும். இ.பி.ப.ஆ. முதலிடும் பொதுமக்களிடையே நிதியியல் அறிவினை மேம்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கு தொடர்ச்சியாக கடும்முயற்சி எடுக்கின்றது. இ.பி.ப.ஆ. மாணவர்களது பாடத்திட்டத்தினுள் மூலதனச் சந்தை உட்கூறினை உள்ளடக்குவதற்காக தேசிய கல்வி நிருவகத்துடன் (தே.க.நி.) நெருங்கி பணிபுரிகின்றது. இந்த முயற்சியானது பலனளித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில் தரம் 6 மதல் தரம் 9 வரையான மாணவர்களுக்கான தேசிய கல்வி பாடத்திட்டத்தில் மூலதனச் சந்தை உட்கூறு உள்ளடக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பங்குச் சந்தை கல்வியினை விருத்திசெய்வதில் இது ஒரு பாரிய திருப்புமுனையாகும் என இ.பி.ப.ஆ. கருதுகின்றது.

### முன்னோக்கிய நகர்வு

முன்னோக்கி நகரும்போது யதார்த்தமான நேர அட்டவணைகளை வரையறை செய்வதன் மூலம் பல்வேறு முக்கிய முனைகளில் திடமான விளைவுகளை அடைவதற்கு நாம் தீவிரமாக பரிசீலிக்கவேண்டிய நேரம் இதுவாகும்.

> “நாட்டின் பிணையங்கள் சந்தையின் மேம்பாடு மற்றும் வாழ்வாதாரங்களை உறுதிசெய்வது நோக்கி இ.பி.ப.ஆ. ஒட்டுமொத்தமாக தொடர்ச்சியான அர்ப்பணிப்புடன் இருக்கும்”

நாம் அரசாங்கத்திடமிருந்து உறுதுணையினையும் ஊக்கத்தினையும் அனுபவித்தது மெய்யாகவே அதிர்ஷ்டமாகும். அரசாங்கத்தின் கொள்கை ஸ்திரத்தன்மை மற்றும் சித்தம் என்பன நாம் இவற்றை அடைவதை சாத்தியமாக்கியுள்ளன. எமது சுயாதீன செயலாற்றலுக்கான அவர்களது உறுதுணை எப்போதும் தவறவில்லை. எனவே, மாண்புமிகு ஜனாதிபதி மற்றும் திறைசேரியின் செயலாளர் திரு. மஹிந்த சிறிவர்தன அவர்களுக்கும் எமக்கு வழங்கிய அனைத்து உறுதுணைக்கும் எம்மில் வைத்துள்ள நம்பிக்கைக்கும் நான் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வெளிச்செல்லும் தலைவர் திரு. விராஜ் காரியவசம் ஜ.ச. மற்றும் ஆணைக்குழுவிற்கு எந்நேரமும் செயலகத்திற்கு அவர்கள் வழங்கிய தவறாத உறுதுணை மற்றும் வழிகாட்டலுக்கு எமது நன்றியினைத் தெரிவிக்கின்றேன். செயலகத்தின் சார்பில் நான் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதுடன் ஒரு தனிப்பட்ட மட்டத்தில் எம்மில் வைத்த நம்பிக்கைக்கும் நன்றியினைத் தெரிவிக்கின்றேன்.

ஒரு மேம்பட்ட தொழில்வல்லுநராக தலைவர் திரு. வைசால் சாலி அவர்களது புத்திசாலித்தனமான ஆலோசனை மற்றும் தவறாத உறுதுணை என்பன எமது பணியின் ஒவ்வொரு படிக்கும் பெறுமதி வாய்ந்ததாகும். செயலகத்தின் சார்பில் நான் அவருக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்றேன். ஆணைக்குழுவின் மேம்பட்ட அங்கத்தவர்களுக்கு அவர்களது தவறாத உறுதுணை, திடமான ஆலோசனை மற்றும் கூட்டான நிபுணத்துவம் மற்றும் இச்செயன்முறையில் சில சமயங்களில் அவர்களது தனிப்பட்ட மற்றும் தொழில்சார் நேரத்தின் தியாகத்திற்காகவும் நான் எனது நன்றியினைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஒரு உயர்ந்த மட்டத்திலான பணியாட்கள் ஈடுபாட்டினை பராமரித்தல், செயற்திறன் மற்றும் நம்பிக்கை என்பன இ.பி.ப.ஆ. இன் பொறுப்பாணையினை அடைவதற்கான தூண்கள் என நான் திடமாக நம்புகின்றேன். எனவே, நான் தொடர்ந்தும் இ.பி.ப.ஆ. இன் மனித மூலதனத்தினை விருத்திசெய்வேன். இறுதியாக, எனது பணிப்பாளர்கள், சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் பணியாட்களுக்கு எனது பாரிய நன்றியினைத் தெரிவிப்பதுடன் அவர்களது முழு ஒத்துழைப்பினையும் பெறுவதற்கு நான் அதிர்ஷ்டசாலியாய் உள்ளேன்.

தற்போது, முன்னெப்போதும் நிகழ்ந்திராத பொருளாதார வீழ்ச்சியின் பின்னர் சரியான திசையில் புதுப்பிக்கப்பட்ட உத்வேகம் மற்றும் விரைவான அசைவுகளை நான் காண்கின்றேன். பிரான்ஸ் புரட்சியின் ஆரம்பத்தில் காணப்பட்ட ஆர்வலர்கள் குறித்து வேர்ட்ஸ்வேர்த் பின்வருமாறு கூறினார், “விடியலில் உயிருடன் இருப்பது பேரின்பம்”. எமது சந்தையினை முறைமைப்படுத்துவதில் எமது அணுகுமுறையினை தொடர்ச்சியாக மீளாய்வு செய்வதற்கும் மீள்அளவீடு செய்வதற்கும் நான் எண்ணியுள்ளதுடன் எமது வெற்றியில் கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்ப்புடன் உள்ளேன்.

**சிந்தக்க மெண்டிஸ்**
பணிப்பாளர் நாயகம்

15 மார்ச் 2023

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்



திரு. வைசால் சாலி
தலைவர்



திரு. மனில் ஜயசிங்க



திரு. சுஜீவ முதலிகே



திரு. அன்டனி சனில் பர்னாந்து



திரு. அன்டன் கொட்விரி



திரு. ஆர்.எம்.பி.ரத்நாயக்க



திருமதி. ஈவட் பர்னாந்து



திரு. சஞ்ஜீவ திசாநாயக்க



திரு. சஞ்ஜய பண்டார

## திரு. வைசல் சாலி

**தலைவர்**

திரு. வைசல் சாலி அவர்கள் 15 பெப்ரவரி 2023 முதல் தலைவர் பதவியினை பொறுப்பேற்றார். இவர் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் வர்த்தக மற்றும் அபிவிருத்தி வங்கியியலில் நீண்ட மற்றும் விரிவான அனுபவமுடைய ஒரு மூத்த இளைப்பாறுதலடைந்த வங்கியாளர் ஆவார். இவர் கிரீன்ட்லேஸ் வங்கி, ANZ வங்கி, என்.டி.பி. மற்றும் அமானா வங்கி போன்ற உள்ளூர் மற்றும் உலகளாவிய வங்கிகளில் உயர் முகாமைத்துவ பதவிகளில் இருந்துள்ளார். ஒரு பணிப்பாளர் சபை அங்கத்தவராக இவரது பரந்த அனுபவங்கள் வங்கியியல், நிதி, காப்புறுதி, நிதி முகாமைத்துவம், பங்குத்தரகு, உற்பத்தி, வர்த்தகம் மற்றும் கல்வி ஆகிய வணிகங்களிலுள்ள பல கம்பனிகளை உள்ளடக்குகின்றன.

இவர் தேசிய பல்கலைக்கழக சபைகள் மற்றும் நிதியியல், பொருளாதார அலுவல்கள், வீடமைப்பு அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி ஆகிய துறைகளைச் சார்ந்த பல அரசாங்க மற்றும் அரச சார்பற்ற குழுக்களில் சேவையாற்றியுள்ளார். அத்துடன் இவர் இலங்கை வர்த்தகச் சம்மேளனம், இலங்கை வங்கியாளர்கள் நிருவகம் மற்றும் வரையறுக்கப்பட்ட (தனியார் ) லங்கா கிளியர் ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளிலும் சேவையாற்றியுள்ளார்.

திரு. சாலி அவர்கள் வங்கியியல் மற்றும் நிதியியலில் விசேடத்துவத்துடன் பொருளாதாரத்தில் முதலாம் வகுப்பு கௌரவ பட்டம் பெற்ற பட்டதாரி, வணிக நிர்வாகத்தில் முதுமாணி பட்டதாரி மற்றும் FCPM பட்டத்தையும் கொண்டுள்ளார். இவரது கூட்டாண்மைத்துறை அனுபவமானது 40 வருடங்களை விஞ்சுவதுடன், இவை 20 வருடங்களுக்கும் மேலான சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலும், முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி மட்டத்தில் 14 வருடங்களும் மற்றும் சபை மட்டத்தில் 30 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தையும் உள்ளடக்குகின்றன. இவர் பல கம்பனிகளில், நிறைவேற்று, நிறைவேற்றதிகாரமற்ற மற்றும் சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளர் போன்ற பணிப்பாளர் பதவிகளை வகித்துள்ளார்.

இவர் இலாப நட்டப் பகிர்வு மாதிரி அடிப்படையில் இலங்கை வட்டியற்ற வங்கியியல் நடைமுறையினை முன்னெடுப்பதில், விருத்திசெய்வதில் மிகச் சிறப்பான மூலோபாய மற்றும் செயற்பாட்டு தலைமைத்துவத்தினை வழங்கி அமானா வங்கியினை நிறுவுவதில் முக்கிய பங்காற்றினார். இதுவே இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட வட்டியற்ற உரிமமளிக்கப்பட்ட முதலாவது வர்த்தக வங்கி என்பதுடன் இவரே அதன் ஸ்தாபக முகாமைப் பணிப்பாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியும் ஆவார்.

இவர் தற்போது இலங்கை பணிப்பாளர்கள் நிருவகத்தின் தலைவர்; சபை தலைமைத்துவம் மற்றும் ஆளுகையில் ஒரு IFC சான்றளிக்கப்பட்ட பயிற்றுவிப்பாளர் மற்றும் பட்டப்படிப்பின் பின்னரான மட்டத்தில் பல தேசிய பல்கலைக்கழகங்களில் வணிக மூலோபாயத்தினை கற்பிப்பதில் பரவலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

## திரு. மனில் ஜயசிங்க

திரு. மனில் ஜயசிங்க அவர்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் ஒரு சமூக அங்கத்தவரும் மற்றும் அரச நிதியியல் மற்றும் கணக்கீட்டுக்கான பட்டய நிருவகத்தின் சமூக அங்கத்தவரும் ஆவார்.

இவர் 40 வருடங்கள் பரவலான அனுபவத்தினை இலங்கை எர்ன்ஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தில் கொண்டுள்ளதுடன இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கு வங்கியியல் மற்றும் நிதியியல் சேவைகளுக்குப் பொறுப்பான தேசத்தின் முகாமைத்துவ பங்காளி மற்றும் உறுதித் தலைமைப் பதவியினை வகிக்கின்றார்.

இவர் தற்போது பின்வரும் பதவிகளில் சேவையாற்றுகின்றார்:

- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் உடனடி முன்னாள் தலைவர் மற்றும் ஒரு சபை அங்கத்தவர்.
- சட்டரீதியான கணக்கீட்டு நியமங்கள் குழுவின் தலைவர், சட்டரீதியான கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர் மற்றும் வேறு பல குழுக்களிலும் சேவையாற்றுகின்றார்.
- தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் கணக்கீட்டு நியமங்கள் குழுவின் தலைவர்.
- இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுக் கண்காணிப்புச் சபையின் அங்கத்தவர்.
- சி.எம்.ஏ. ஸ்ரீ லங்காவின் சபை உறுப்பினர்
- பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் கணக்காய்வுக் குழுக்களுக்கு ஆலோசகர்.

இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் பரீட்சைகள் குழுவின் தலைவராகவும், கடந்த வருடத்தில் சட்டரீதியான கணக்கீட்டு நியமங்கள் குழுவின் மாற்றீடு தலைவராகவும், சர்வதேச கணக்காளர்கள் சம்மேளனத்தின் சர்வதேச கணக்கீட்டு கல்வி தரங்கள் சபையின் அங்கத்தவராகவும், மொரட்டுவ பல்கலைக்கழகத்தினது சங்கத்தின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார்.

## திரு. சுஜீவ முதலிகே

திரு. முதலிகே அவர்கள் ஒரு பட்டயக் கணக்காளராக 30 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவரது தகமைகள் பின்வருமாறு: FCA (ICA - இலங்கை), FCMA (CIMA – ஐ.இ.), FCCA (ACCA – ஐ.இ.) மற்றும் FCPA (CPA – அவுஸ்திரேலியா).

**தற்போதைய நியமனங்கள்:**

இவர் PwC ஸ்ரீலங்காவின் முகாமைப் பங்காளி மற்றும் மோர்கன்டைல் சேரிவிஸஸ் ப்ரொவிடன்ட் சொசைட்டியின் (MSPS) நிறைவேற்றுனரல்லா தலைவரும் ஆவார். இவர் என்.டி.பி. வங்கி பி.எல்.சி., சி.ஐ.சி. ஹோல்டிங்ஸ் பி.எல்.சி., சி.ஐ.சி. வீட்ஸ் குழுமம், என்.எஸ்.பி.எம். பசுமை பல்கலைக்கழகம், லிங்க் நெச்சுரல் ப்ரடக்ட்ஸ் லிமிட்டட், சொ்வூட் கெப்பிட்டல் மற்றும் ஐடியல் வைனான்ஸ் லிமிட்டட் ஆகியவற்றின் சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளரும் ஆவார். இவர் இலங்கை வர்த்தக சம்மேளனத்தில் ஒரு குழு அங்கத்தவரும் ஆவார்.

**கடந்தகால நியமனங்கள்:**

திரு. முதலிகே அவர்கள் ஒரு கணக்காய்வுக் குழுவின் தலைவராக அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் பரந்த அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் மற்றும் ஆசிய பசிபிக் கணக்காளர்கள் கூட்டமைப்பின் (CAPA) முன்னாள் தலைவர் மற்றும் இ.ப.க.நி. இன் சபையின் அங்கத்தவர் மற்றும் CIMA ஐ.இ. இன் இலங்கைப் பிரிவிற்கு ஆளுமைச் சபையின் அங்கத்தவர், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் (2010-2011) அங்கத்தவர் என்பதுடன் இவரது தொழில் வாழ்வில் உள்ளூ ரிலும் உலகளாவிய ரீதியிலும் பல ஏனைய அத்தகைய பதவிகளை வகித்துள்ளார்.

இவர் 2012 முதல் 2019 வரை ஹட்டன் நெஷனல் வங்கி பி.எல்.சி. இன் ஒரு நிறைவேற்றுனரல்லா சுயாதீன பணிப்பாளராக இருந்தார். இவர் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அமைப்புமுறை ஸ்திரத்தன்மை ஆலோசனைக் குழுவின் பிரதித் தலைவராகவும், தேசிய பொருளாதாரச் சபைக்கு ஆலோசனை வழங்கும் ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர் மற்றும் தோல்வியடைந்த உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளை புதுப்பிப்பதற்கான ஆலோசனைக் குழுவினதும் அங்கத்தவராக இருந்துள்ளார்.

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

## அன்டனி எம் சனில் பர்னாந்து

சனில் அவர்கள் சர்வதேச வர்த்தகச் சம்மேளனத்தின் (ஐசிசி ஸ்ரீலங்கா) தலைவராவார். நிலைபேறுடைய அபிவிருத்தி நிதியளித்தல் ICC-UNESCAP முன்னெடுப்பிற்கான தலைமை, ஏசியன் லொஜிஸ்டிக்ஸ் பார்க் பிரைவேட் லிமிட்டட்டின் தலைவர், முதலீட்டுச் சபை அங்கீகரிக்கப்பட்ட களஞ்சியப்படுத்தல் வழங்கல் சங்கிலி முகாமைத்துவக் கம்பனி, உடைமையுடன் முகாமைப்படுத்தும், பல்தேசிய கம்பனிகளுக்கு 3 இடங்களில் ஐந்து மு.ச. அங்கீகரிக்கப்பட்ட களஞ்சியசாலைகள். வேர்ல்ட் எக்ஸ்பிரஸ் (சிஎம்பி) (பிரைவேட்) லிமிட்டட், இன்டர்நெஷனல் விரய்ட் வோர்வார்டிங் NVOCC இன் தலைவர் மற்றும் உள்ளூர் மற்றும் பல்தேசிய கம்பனிகள் தங்க அட்டை சுங்க இல்ல முகவர் முகாமைத்துவக் கம்பனிகளுக்கான வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தினை கையாளும் லாரி கம்பனியாகும். உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உடைமையான கம்பனிகளுக்கு சேவையாற்றும் கம்பனி செயலாளர்கள் நிறுவனமான AFA கோர்ப்பரேட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டட்டின் தலைவர் மற்றும் எயார் அன்ட் சீ லொஜிஸ்டிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டின் தலைவர்.

சனில் ஒரு வழக்கறிஞர், மத்தியஸ்தர், பதிவுரிமை அதிகாரி, பிரமாண ஆணையாளர் மற்றும் பதிவுசெய்யப்பட்ட வணிகக் குறியீடு முகவர் மற்றும் கம்பனி காரியதரிசி /சுயாதீன பணிப்பாளர். அன்டன் பர்னாந்து சட்ட நிறுவனத்தின் பங்காளர். சனில் அவர்கள் இலங்கை சட்டக் கல்லூரியில் வர்த்தகச் சட்டத்தில் முதலாம் வகுப்பு கௌரவப் பட்டத்தையும் பரிசிலையும் பெற்றுள்ளதுடன் ஒரு மாபொல தகுதி அறிஞரும் ஆவார். இவர் அவரது சட்ட அறிவுரைஞர் (இங்கிலாந்து மற்றும் வேல்ஸ்) பரீட்சையினை நிறைவுசெய்துள்ளார். சனில் அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிருவகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளதுடன் இவரது ஆய்வுக் கற்கையானது “வர்த்தகம் மற்றும் போக்குவரத்துக்கு வசதியளிப்பதற்கான இலத்திரணியல் தரவு இடைப்பரிமாற்றத்தின் பயன்பாடு” என்பதிலாகும். சனில் அவர்கள் ஒரு பொதுநலவாய உதவித்தொகையில் (தற்போது செவனிங் என்று அழைக்கப்படுகின்றது) வர்த்தகச் சட்டத்தில் குயின் மேரி கல்லூரி, இலண்டன் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பின் பின்னரான கற்கையினைத் தொடர்ந்தார். அத்துடன் பட்டப்படிப்பின்னரான கற்கையினை அமெரிக்காவின் டெக்சாஸ் பல்கலைக்கழகம் மற்றும் கனடாவிலுள்ள பிரின்ஸ் எட்வட் ஐலண்ட் பல்கலைக்கழகம் மற்றும் ஜப்பானிலும் தொடர்ந்தார்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ தொழில்சார் சங்கத்தின் பட்டப்படிப்பின் நிருவகத்தினால் வழங்கப்பட்ட சாதனையாளர் விருதினைப் பெற்றுள்ளார் மற்றும் பட்டப்படிப்பின் பின்னரான தொழில்சார் சங்க அறக்கட்டளை இன் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஆவார். சனில் அவர்கள் சிங்கப்பூர் மத்தியஸ்தர்கள் நிருவகத்தின் அங்கத்தவர் மற்றும் மத்தியஸ்த்தத்தில் ஒரு டிப்ளோமாவையும் கொண்டுள்ளார்.

சனில் அவர்கள் ICC பாரிஸ் இனால் இலங்கையில் நடாத்தப்பட்ட மத்தியஸ்த்தத்தில் தோன்றியுள்ளார். சனில் அவர்கள் பாரிசின் ICC அகடமியில் சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் மத்தியஸ்தம் ஆகியவற்றில் பயிற்சி பாடத்திட்டங்களைப் பின்பற்றியுள்ளார். சனில் அவர்கள் கம்பனி ஆளுகையில் ஒரு சான்றளிக்கப்பட்ட பயிற்றுவிப்பாளர் மற்றும் கூட்டாண்மை ஆளுகைக்கான பொதுநலவாய சங்கம் இலண்டனில் பயிற்சி பெற்றுள்ளார். சனில் அவர்கள் ஒரு பயிற்றுவிப்பாளராக UNESCAP இனால் பயிற்றுவிக்கப்பட்டார், சர்வதேச வர்த்தக மற்றும் பல்முகட்டு போக்குவரத்து வசதியளித்தலில் ஒரு வளவாளராக பயிற்றுவிக்கப்பட்டார்.

இவர் பகுதியளவில் தகமை பெற்ற கணக்காளர், இவர் முகாமைத்துவ கணக்காளாகளுக்கான பட்டய நிருவகம் இலண்டனின் பரீட்சைகளில் சில பகுதிகளை பூர்த்தி செய்துள்ளார். சனில் அவர்கள் மத்தியஸ்தம் மற்றும் ADR இலான ICC ஆணைக்குழுவின் செயலணி அங்கத்தவராவார். இவர் பல ICC, சர்வதேச கருத்தரங்குகள் மற்றும் வெளிநாட்டு செயலமர்வுகளில் ஒரு குழு உறுப்பினரும் ஆவார். இவருக்கு டோக்கியோ, ஜப்பானிலுள்ள தெற்காசிய கூட்டாண்மை முகாமைத்துவத்தில் ஒரு பயிற்சியினை பின்பற்றுவதற்கு AOTS ஆதரவுத்தொகை வழங்கப்பட்டது.

இவர் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பெயரிடப்பட்ட முன்னால் சுயாதீன பணிப்பாளர் மற்றும் மத்தியஸ்தம் மற்றும் ஒழுக்காற்கு குழுவின் தலைவர், பிணக்கு தீர்த்தல் குழு, இடர் மற்றும் கணக்காய்வு, சந்தைப்படுத்தல் மற்றும் விதிகள் குழு ஆகியவற்றின் அங்கத்தவரும் ஆவார். கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் மத்திய வைப்பகத் திட்டங்கள் லிமிட்டட்டின் பெயரிடப்பட்ட முன்னால் சுயாதீன பணிப்பாளர் மற்றும் நெஷனல் வெல்த் கோர்ப்பரேஷன் லிமிட்டட்டின் முன்னால் சுயாதீன பணிப்பாளரும் ஆவார். சனில் அவர்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பேலியகொட வெயார்ஹவுசிங் கம்பனி லிமிட்டட்டின் முன்னால் அங்கத்தவரும் ஆவார். இவர் அரச உடைமையான இலங்கையின் ஊழியர்கள் நம்பிக்கை நிதியத்தின் முதலீட்டுக் குழுவின் அங்கத்தவரும் ஆவார்.

சனில் அவர்கள் இலங்கை சட்டவுரைஞர் சங்கம், கூட்டாண்மை வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் தொழில்சார் சங்கங்களின் ஒழுங்கமைப்பு ஆகியவற்றின் ஆயுட்கால அங்கத்தவர் மற்றும் இலங்கை பணிப்பாளர்கள் நிருவகத்தின் ஒரு அங்கத்தவரும் ஆவார். இவர் கூட்டாண்மைச் சட்டம், மத்தியஸ்தம், கூட்டாண்மை இணக்கப்பாடு, பேரம்பேசல் மற்றும் பிணக்கு தீர்த்தல் மற்றும் வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் ஆகிய பிரிவுகளில் வந்துபோகும் ஒரு வளவாளராகவும் சேவையாற்றுகின்றார். அன்டனி எம் சனில் பர்னாந்து அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பின் பின்னராக முகாமைத்துவ நிருவகத்தின் முகாமைத்துவ தொழில்சார் சங்கத்தின் பட்டப்படிப்பின் பின்னரான நிருவகத்தின் பழைய மாணவர் சங்கத்தின் கடந்த தலைவரும் ஆவார்.

## அன்டன் கொட்விரி

நிறைவேற்றதிகாரமுடைய தலைவர் - எக்ஷா குளோபல் மற்றும் ஏ.ஜி. இன்டர்நெஷனல்

எக்ஷா – ஏ.ஜி. இன்டர்நெஷனல் ஆகியவற்றின் ஸ்தாபகர் / நிறைவேற்றதிகாரமுடைய தலைவர், வணிக மதிநுட்பமுடைய சிறந்த தொழில்முனைவர், கம்பனியின் உலகளாவிய வணிக முன்னெடுப்புகளின் எல்லைகளது விரிவாக்கலின் பின்னால் காணப்பட்ட உத்வேகமானவர். இவர் உயர்ந்த தொழில்சார் நியமங்களை நிலைநிறுத்துபவர் மற்றும் அனைத்து பங்காளிகள் நோக்கிய பொறுப்புக்களை பராமரிப்பவராவார். இவர் சாதனையினை நெறிப்படுத்துபவர், புத்தாக்கத்தில் முன்னிறுத்தல் செய்பவர் மற்றும் நடைமுறையிலுள்ள வணிக வலையமைப்புகளை மேலும் விரிவாக்குவதனை ஊக்கமளிப்பதற்கான கடப்பாடுடையவர் ஆவார். அவரது தொலைநோக்கு மற்றும் புத்தாக்க சக்தியின் விளைவாக, ஒரு வெளிக்கள பிரசன்னத்துடன் எக்ஷா குளோபல் உலகில் முன்னணியிலுள்ள வணிக நாமங்களை பின்வரும் துறைகளில் பிரதிநிதித்துவம் செய்கின்றது. வர்த்தகம், வலு, இரசாயனங்கள், கூழ் மற்றும் தாள், தொழில்நுட்பம், கூட்டாண்மைச் நுகர்வுச் சேவைகள் மற்றும் வெளிவளம்பெறல் துறைகள் என்பனவாகும். துணை நிறுவனங்கள், இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் காணப்படுவதுடன், பிரதான வலையமைப்புகள் ஆசியா, ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் பரந்துள்ளன. வெளிநாட்டு பொது பட்டியலிடல்களுடன் வொன்ட்டே ரிசோசஸ் மற்றும் வியூசனெக்ஸ் உள்ளடங்கலான கூட்டு முயற்சிகளும் காணப்படுகின்றன. இவரது சாதனைகளின் அங்கீகாரமாக, திரு. கொட்விரி அவர்கள் முதன்மையான ஆசிய பசிபிக் தொழில்முனைவர் விருதினை ஆ.ப.தொ.வி. 2013 இல் பெற்றார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய சந்தைப்படுத்தல் நிருவகத்தின் பட்டய சந்தைப்படுத்துநர் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய சந்தைப்படுத்தல் நிருவகத்தின் மற்றும் அவுஸ்திரேலிய முகாமைத்துவ நிருவகத்தின் சமூக அங்கத்தவரும் ஆவார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் லெஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். திரு. அன்டன் கொட்விரி அவர்கள் இலங்கை மற்றும் அவுஸ்திரேலியாவின் வர்த்தக சம்மேளனங்கள் உள்ளடங்கலாக சர்வதேச வர்த்தக சங்கங்களில் தீவிரமான ஈடுபாட்டினைக் கொண்டவர் ஆவார். இவர் இலங்கை வர்த்தகச் சம்மேளனத்தின் வியட்நாம் இலங்கை வணிகச் சபை, இந்தோனேஷியா இலங்கை வணிகச் சபை மற்றும் கொழும்பு அப்டவுன் ரோட்டரி கழகத்தின் முன்னாள் தலைவருமாவார். இவர் 2015 முதல் 2019 வரை கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பணிப்பாளர் சபையிலும் சேவையாற்றியுள்ளார்.

## ஆர்.எம்.பி. ரத்நாயக்க

திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க அவர்கள் இலங்கை திட்டமிடல் சேவையின் ஒரு விசேட தரத்திலான அதிகாரியாவார். இவர் தற்போது நிதி அமைச்சின் திறைசேரிக்கு பிரதி செயலாளராக தொழில் புரிகின்றார். இவர் பல்வேறு முக்கிய பதவிகளில் 29 வருடங்களாக அரச சேவையில் உள்ளார். திரு. ரத்நாயக்க அவர்கள் நோர்வேயின் விவசாயப் பல்கலைக்கழகத்தில் ஒரு முதுமானி பட்டத்தினையும் பேராதனை பல்கலைக்கழகத்தில் (விசேட) இளமாணி விஞ்ஞான பட்டத்தையும் கொண்டுள்ளார்.

திரு. ரத்நாயக்க அவர்கள் 1994 இல் அரச சேவையில் இணைந்து பொது திறைசேரியில் பல்வேறு பதவிகளில் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் வெளிவாரி வளங்கள் திணைக்களம் ஆகியவற்றில் தொழில்புரிந்துள்ளார். இவர் அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் பாதீட்டில் விரிவான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். வெளிவாரி வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக இவர் பின்வருவனவற்றிற்கு பொறுப்பாயிருந்தார். அபிவிருத்தி பங்காளிகள், சர்வதேச நிதியியல் நிறுவனங்கள் மற்றும் மூலதனச் சந்தை ஆகியவற்றுடன் தேசம் குறித்த அபிவிருத்தி திட்டங்களை விருத்திசெய்வதற்கும் மற்றும் வெளிநாட்டு நிதியினை திரட்டுவதற்கும், இருதரப்பு பேரம்பேசுதலை வழிநடத்தவும் மற்றும் பலதரப்பு மற்றும் இருதரப்பு திட்டங்களுக்கான வெளிநாட்டு நிதி வழங்கல்கள் உரிய காலத்தில் பெற்றுக்கொள்வதற்கு வசதியளித்தல் என்பனவாகும்.

திறைசேரிக்கான பிரதி செயலாளரான அவரது கடமைகளுக்கு அப்பால், திரு. ரத்நாயக்க அவர்கள் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, இலங்கை வங்கி மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு ஆகியவற்றில் ஒரு பணிப்பாளராக சேவையாற்றுகின்றார். இவர் ஏனைய பல முக்கியமான தலைமைத்துவ பதவிகளையும் வகித்துள்ளார். தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர், மக்கள் வங்கியின் பணிப்பாளர், பட்டப்படிப்பின் பின்னரான மருத்துவ நிருவகத்தின் முகாமைத்துவ சபையின் அங்கத்தவர், இலங்கை அரச மருந்து கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபையின் அங்கத்தவர், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர், இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிருவகத்தின் பணிப்பாளர், தேசிய மருந்து முறைமைப்படுத்தல் அதிகார சபையின் அங்கத்தவர் என்பனவாகும்.

## திருமதி. ஈவட் பர்னாந்து

திருமதி. ஈவட் பர்னாந்து அவர்கள் தற்போது இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட பிரதி ஆளுநராக சேவையாற்றுவதுடன் நிதியியல் துறை ஸ்திரத்தன்மை குழுவுக்கு பொறுப்பாயுள்ளார். இவர் இலங்கை மத்திய வங்கியில் 30 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன், பின்வரும் பிரிவுகளில் சேவையாற்றியுள்ளார். வங்கிகள் மற்றும் வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வை மற்றும் முறைமைப்படுத்தல், நிதியியல் துறை ஸ்திரத்தன்மை, அந்நிய செலாவணி முகாமைத்துவம், நாணய முகாமைத்துவம், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் ஆகிய பிரிவுகளிலாகும். இக்காலப்பகுதியில், திருமதி. பர்னாந்து அவர்கள் வங்கி மேற்பார்வை பணிப்பாளராகவும் மற்றும் அந்நிய செலாவணி கட்டுப்பாட்டாளராகவும் சேவையாற்றியுள்ளதுடன், சர்வதேச நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கேற்ப வங்கிகளுக்கான ஒரு திடமான முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை செயல்படுத்துவதில் தலைமைத்துவம் வழங்கியதன் மூலம் நிதியியல் துறை ஸ்திரத்தன்மைக்கு முக்கிய பங்காற்றியுள்ளார். தற்போது இவர் வங்கி மேற்பார்வை, வங்கியல்லாத மேற்பார்வை, கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள், நாணயம், அந்நிய செலாவணி, நிதி, பிராந்திய அபிவிருத்தி மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகிய திணைக்களங்களுக்கு பொறுப்பாயுள்ளார்.

திருமதி. பர்னாந்து அவர்கள் நிதியியல் துறை ஸ்திரத்தன்மை குழு, இலங்கையில் நிலைபேறுள்ள நிதியளிப்பிற்கான வரைபடத்தின் அமுலாக்கல் இயக்கக்குழு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தேசிய கொடுப்பனவுகள் சபை, இலங்கை வங்கியாளர்கள் நிருவகம், இலங்கையின் கடன் தகவல் மையம் ஆகியவற்றின் தலைவராக தற்போத கடமையாற்றுவதுடன் இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும் சேவையாற்றுகின்றார்.

திருமதி. பர்னாந்து அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து நிதியியல் பொருளியலில் ஒரு முதுமானி பட்டத்தையும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தகத்தில் (விசேட) இளமானி பட்டத்தையும் வைத்துள்ளார்.

## திரு. சஞ்ஜீவ திசாநாயக்க

திரு. சஞ்ஜீவ திசாநாயக்க அவர்கள் டிசம்பர் 1997 இல் இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கறிஞராக அனுமதிக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்டார். இவர் ஹொங்கொங் பல்கலைக்கழகத்திலிருந்து மனித உரிமைகளில் ஒரு முதுமானி பட்டத்தைக் (LL.M) கொண்டுள்ளார். இவர் இலங்கையின் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்த பிரதி மன்றாடுநர் அதிபதியாவார் மற்றும் தற்போது கம்பனிகள் பதிவாளர் நாயகமாக கடமைகளை பொறுப்பேற்பதற்காக பொது சேவைகள் ஆணைக்குழுவினால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

திரு. சஞ்ஜீவ திசாநாயக்க அவர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தில் குற்றவியல் மற்றும் குடியியல் பிரிவுகளில் அனுபவத்தினைக் கொண்டுள்ளதுடன் பெப்ரவரி 2010 முதல் ஜுலை 2011 வரை ஊழல்களுக்கு எதிரான விஜி சுயாதீன ஆணைக்குழுவில் ஒரு அரசுதரப்பு வழக்குரைஞராக தொழில்புரிந்துள்ளார். இவர் கணக்கீட்டு நியமங்கள் குழு, இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை ஆகியவற்றின் ஒரு பதவிவழி அங்கத்தவராவார்.

## திரு. சஞ்ஜய பண்டார

### FCA, MBA (Col.) B.Sc. கணக்கியல் மற்றும் நிதியியல் முகாமைத்துவம் (ஸ்ரீ.ஜ.ப.)

திரு. பண்டார அவர்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகதின் தலைவர் மற்றும் ஆசிய பசிபிக் கணக்காளர்கள் கூட்டமைப்பு (CAPA), தெற்காசிய கணக்காளர்கள் கூட்டமைப்பு (SAFA) மற்றும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை ஆகியவற்றின் சபை அங்கத்தவரும் ஆவார்.

இவர் பி.ஆர்.டி சில்வா அன்ட் கம்பனி, பட்டயக் கணக்காளர்கள் (நெக்ஷியா இன்டர்நெஷனலின் அங்கத்துவ நிறுவனம் ) இன் பங்காளர் மற்றும் இவர் உறுதிமொழி சேவைகள் மற்றும் நிதியியல் அறிக்கையிடல் ஆகிய துறைகளில் விசேடத்துவத்துடன் 24 வருடங்களுக்கும் அதிகமான நடைமுறை அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

# பணிப்பாளர்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர்கள்



இடமிருந்து வலம் நிற்பவர்கள்: ஜி.எச். நிரோஷா கொடிகார – பணிப்பாளர், நிதி மற்றும் நிர்வாகம், துஷார ஜயரத்ன – பணிப்பாளர், வெளிவாரி உறவுகள் மற்றும் மூலதனச் சந்தைக் கல்வி மற்றும் மாற்றாள் பணிப்பாளர், மனித வளங்கள், ஜூட் நாணயக்கார – பணிப்பாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல், பிரபாஷ் வணிகதுங்க – பணிப்பாளர் கண்காணிப்பு, மாற்றாள் பணிப்பாளர், மூலதனச் சந்தை அபிவிருத்தி, சுனெத் பெரேரா – உதவிப் பணிப்பாளர், மேற்பார்வை, டிலும் மாவத்த – பணிப்பாளர், மேற்பார்வை, மதுகயனி பலப்பிட்டிய – உதவிப் பணிப்பாளர், புலனாய்வு மற்றும் தகவல் தொழில்நுட்பம்.

இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள்: சிந்தக்க மென்டிஸ் - பணிப்பாளர் நாயகம், மனூரி வீரசிங்க – மாற்றாள் பணிப்பாளர், கூட்டாண்மை அலுவல்கள், டி.எம்.ஜி. பிரியந்த – உதவிப் பணிப்பாளர், புலனாய்வுகள்

சமூகமளியாதோர் : தம்மிக்க பெரேரா – பிரதி பணிப்பாளர் நாயகம்

## சிரேஷ்ட முகாமையாளர்கள்



இடமிருந்து வலம்: ரன்மினி ஜயதிலக்க – சிரேஷ்ட முகாமையாளர், தகவல் தொழில்நுட்பம், சர்மிளா பண்டித்தரத்ன – சிரேஷ்ட முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல், சவுமி கொடிப்பிலி – சிரேஷ்ட முகாமையாளர், மேற்பார்வை, சஜீவனி பக்மீதெனிய – சிரேஷ்ட முகாமையாளர், மூலதனச் சந்தைக் கல்வி

## முகாமையாளர்கள்



இடமிருந்து வலம் நிற்பவர்கள்: ஷீனா குணரத்ன – முகாமையாளர், வெளிவாரி உறவுகள், தக்ஷிலா பிரான்சிஸ் - முகாமையாளர், மூலதனச் சந்தை அபிவிருத்தி, மேகலா ஜயபால – முகாமையாளர், கூட்டாண்மை அலுவல்கள், பி.எம்.நிரோஷிகா உதயங்கனி – முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல், நிமால் குமாரசிங்க – முகாமையாளர், வெளிவாரி உறவுகள், அனுலா விஜேசிங்க – முகாமையாளர், புலனாய்வுகள்

இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள் : லக்ஷ்மி விக்கிரமநாயக்க – முகாமையாளர், நிதி மற்றும் நிர்வாகம், ஆர். கே. வசந்த சுனிமல் - முகாமையாளர் புலனாய்வுகள், அசோகா கே. தயாரத்ன – முகாமையாளர் மனித வளங்கள்

சமூகமளியாதோர் : மஞ்சுளா சந்திரரத்ன – முகாமையாளர், மேற்பார்வை

# பணியாள் அங்கத்தவர்கள்

## தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம்



இடமிருந்து வலம்: கிரிஷாந்தி முத்துதந்திரிகே, சமிளா கருணாநாயக்க, சிந்தக்க மெண்டிஸ், ரசிக்க வல்பிட்டிகம, எஸ். ஏ. கே. ராதா ஜி பிரதிபா, கவீஷா கும்புக்கே

சமூகமளியாதோர்: நிஷோகா ஜயதுங்க

## மூலதனச் சந்தை அபிவிருத்திப் பிரிவு



இடமிருந்து வலம் நிற்பவர்கள்: நிம்தரா டி. அமரசேகர, டி.கே.ஐ. மல்ஷானி தஹநாயக்க, ஒலிவி சொலங்காராச்சி

இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள் : பிரபாஷ் வணிகதுங்க, தக்ஷிலா பிரான்சிஸ்.

## கூட்டாண்மை அலுவல்கள் பிரிவு



இடமிருந்து வலம் நிற்பவர்கள்: சமந்தி குணவர்தன, மேரியன் கிளென்டா சந்தானம், கே.ஏ.ஏ.டி.செமினி தயனிக்கா, லக்ஷ்மி அத்தபத்து

இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள்: சனிக்கா குணசிங்க, மனுரி வீரசிங்க, மேகலா ஜயபால

சமூகமளியாதோர்: தனிஷ்க திலக்கரத்ன

## வெளிவாரி உறவுகள் மற்றும் மூலதனச் சந்தை கல்விப் பிரிவு



இடமிருந்து வலம் நிற்பவர்கள்: ரவிஷா தெவிந்தி டி சில்வா, நிமால் குமாரசிங்க, ஷீனா குணரத்ன, ஜூலி அலகக்கோன், எம். ஜி. ஹன்சானி மதுஷா

இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள்: துஷார ஜயரத்ன, கே.வி. உஷானி என் சமரவிக்கிரம, எம். இம்ரான ஹாமட், சஜீவனி பக்மீதெனிய

# பணியாள் அங்கத்தவர்கள்

## நிதி மற்றும் நிர்வாகப் பிரிவு



இடமிருந்து வலம் நிற்பவர்கள்: எஸ்.டி. தர்மசிறி, சகுந்தலா தேவி, எம்.ஏ. சந்தருவன் விஜேரத்ன, சந்திரன் நாகேந்திரன், டபிள்யு. ஆரியரத்ன, துலாரி முகாந்திரம், வாசனா சன்ஜீவனி குரே, ஏ.சி. டயஸ், டி. பத்தும் நிரோஷன, பி.டபிள்யு.எல். பியதிஸ்ஸ

இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள்: ஹேன் கிரிஷாந்தி பர்னாந்து, ஜி.எச்.நிரோஷா கொடிகார, ப்ரீனிகா நிலக்ஷி பெரேரா, லக்ஷ்மி விக்கிரமநாயக்க

சமூகமளியாதோர்: வை.டி. சந்தமாலி, புத்திக பலபிட்டிய, சமித் பிரேமரத்ன

## மனித வளங்கள் பிரிவு



இடமிருந்து வலம் நிற்பவாகள்: ஜே. கே. பிரியதர்ஷினி, துஷார ஜயாரத்ன

இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள்: அசோகா கே தயாரத்ன, தனேஷா ராஜபுர

## சட்டம் மற்றும் வலியுறுத்தல் பிரிவு



இடமிருந்து வலம் நிற்பவர்கள் : உதானி கே. விக்கிரமரத்ன, மினோலி பியூமிகா ரத்நாயக்க, புத்தினி ஹேரத், டி. ரவிந்தி டி சில்வா, சி. எரந்ததி வைத்தியசேகர

இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள் : பி. எம். நிரோஷிகா உதயாங்கனி, ஜூட் நாணயக்கார, சர்மிளா பண்டித்தரத்ன

சமூகமளியாதோர்: குமாரி சிறிவர்தன

## கண்காணிப்புப் பிரிவு



இடமிருந்து வலம் நிற்பவர்கள் : எச். எம். பி. நவோத்யா திசாநாயக்க, பிரபாஷ் வணிகதுங்க, தசங்க வர்ணகுலசூரிய, ரந்திக்க சில்வா

இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள் : நிலஞ்சனா சிவாஜி, கங்கா டி கொஸ்ட்டா

# பணியாள் அங்கத்தவர்கள்

## புலனாய்வுகள் பிரிவு



இடமிருந்து வலம் நிற்பவர்கள்: பிரியந்த ஹேரத், ஆர்.கே. வசந்த சுனிமல், டபிள்யு. அனுஷ்க சி பெரேரா, டபிள்யு. டபிள்யு. எம். ரதீகா எச். வீரக்கோன், ஜி. டி. கபில குமார

இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள்: அனுலா விஜேசிங்க, மதுகயனி பலபிட்டிய, டி. எம். ஜி. பிரியந்த

சமூகமளியாதோர்: பி.ஜி.என். அஷானி பொன்சேகா, மனீஷா சேனரத்தாராச்சி

## தகவல் தொழில்நுட்பப் பிரிவு



இடமிருந்து வலம்: ரன்மினி ஜயதில்க்க, சமித் விஜேதுங்க, மதுகயனி பலபிட்டிய

## மேற்பார்வைப் பிரிவு



இடமிருந்து வலம் நிற்பவர்கள் : திலும் மாவத்த, தினுாஷி உடகும்புர, நொமானி செனவிரத்ன, பூர்ணி வீரசேகர, ரசாங்கி திசாநாயக்க, கவுஷல்யா குணவர்தன

இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள் : சச்சித்ர வருசுவிதான, சவுமி கொடிப்பிலி, சுனெத் பெரேரா

சமூகமளியாதோர் : மஞ்சுளா சந்திரரத்ன, சுதாரா வீரக்கொடி, சமிளா எஸ் கருணாரத்ன

# நிகழ்ச்சி காட்சியகம்



இலங்கையின் மூலதனச் சந்தையின் மூன்றாம் கட்ட டிஜிட்டல்மயமாக்கலை குறிப்பிடும் ஒரு விசேட சந்தை ஆரம்பித்தல் வைபவம்



நிதியியல் அறிவிற்காக மணியடித்தல்



ஐ.இ. இன் நிதியியல் நடத்தை அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுடனான ஈடுபாடு



ஓமான் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் ஓமானிய வணிகத் தூதுக்குழுவுடனான ஈடுபாடு


காலி முதலீட்டாளர் மன்றம்


யாழ்ப்பாண முதலீட்டாளர் மன்றம்



இலண்டன் பங்குச் சந்தை குழுமத்தில் வெளிநாட்டு நிதி முகாமையாளர்களுக்கான முதலீட்டாளர் மன்றம்


ஐ.இ. இன் இலங்கை உயர் ஆணையத்தில் இலங்கையின் புலம்பெயர் சமூகத்திற்கான முதலீட்டாளர் மன்றம்


பாடசாலை கருத்தரங்கு

# நிகழ்ச்சி காட்சியகம்



மொனராகல வலயக் காரியாலயத்தில் ஆசிரியர் பயிற்சித் நிகழ்ச்சித்திட்டம்



களணிய பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம்



பாடசாலை கருத்தரங்கு



குருணாகலை முதலீட்டாளர் மன்றம்



ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம்



# அபிவிருத்திக்கான வளர்ச்சி

செயற்பாட்டு மீளாய்வு

# செயற்பாட்டு மீளாய்வு

"2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளின் பிரகாரம் உரிமமளித்தலானது இரண்டு கட்ட செயன்முறையாகும். விண்ணப்பதாரிகள் முதலில் கொள்கையளவில் அங்கீகாரம் பெறுவதற்காக விண்ணப்பித்து அத்தகைய அங்கீகாரம் பெற்று மேலதிகத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்ததன் பின்னர், முறைமைப்படுத்தப்பட்ட மூலதனச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு உரிமம் வழங்குவதற்கான இறுதி அங்கீகாரத்திற்கு விண்ணப்பித்தல் வேண்டும்."

## முறைமைப்படுத்தல்

இ.பி.ப.ஆ. இன் முறைமைப்படுத்தல் அணுகுமுறையானது போதுமான ஒழுங்குவிதிகளுடன் சந்தை நடத்தையினை வடிவமைப்பதன் மூலம் முதலீட்டாளர்களை பாதுகாக்கும் நோக்கினை கொண்டுள்ளதுடன் மறுபுறத்தில் அபிவிருத்தி மற்றும் புத்தாக்கத்தினை ஊக்குவிப்பதற்கு போதுமான உத்வேகத்திற்கு இடமளிக்கின்றது.

## உரிமமளித்தல்

2021 இன் 19ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளைப் பொறுத்தளவில், உரிமமளித்தல் என்பது இரண்டு கட்ட செயன்முறையாகும். விண்ணப்பதாரிகள் முதலாவதாக கொள்கையளவிலான அங்கீகாரத்தினை பெறுவதற்காக விண்ணப்பிப்பதுடன், அத்தகைய அங்கீகாரத்தினைப் பெற்றதன் பின்னர் மற்றும் மேலதிகத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ததன் பின்னர், முறைமைப்படுத்தப்பட்ட மூலதனச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு உரிமம் வழங்குவதற்கான இறுதி அங்கீகாரத்திற்கு விண்ணப்பிப்பார்கள். வழங்கப்பட்ட உரிமங்களினுள் செயற்படுவதற்காக மேலதிக ஒரு வருட காலத்திற்கு புதுப்பிப்பதற்காக பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதற்காக நிறுவனங்கள் வருடாந்தம் மேலதிக மீளாய்விற்கு உட்படுகின்றன.

இ.பி.ப.ஆ., முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் மற்றும் வாடிக்கையாளர்களைக் கையாளும் நபர்களின் அல்லது வாடிக்கையாளரின் சார்பின் முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு நிறுவனத்தினால் நியமிக்கப்பட்டுள்ளவர்களின் தகமை மற்றும் பொருத்த உறுதிமொழியினை மீளாய்வு செய்கின்றது. இது ஆரம்பத்தில் ஒரு உரிமம் வழங்கப்படும்போதும், புதுப்பிக்கும்போது ஏதேனும் புதிய நியமனங்கள் வழங்கப்படுவதற்கு முன்னரும் மேற்கொள்ளப்படுகின்றது. இது நிறுவனத்தினுள் முக்கியமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பொறுப்பாயுள்ள முக்கிய முகாமைத்துவ நபர்கள் தொடர்பாகவும் மற்றும் வாடிக்கையாளர்களது நலன்களை பாதுகாப்பதற்கு அவர்களது தொழில்சார் நடத்தையிலும் முதலீட்டாளருக்கு நம்பகத்தன்மையினை ஏற்படுத்துவதுடன் சந்தையின் நேர்மையினை பாதகாப்பதற்கும் உதவுகின்றது.

மீளாய்வாண்டின்போது நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட புதிய உரிமங்களும் 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறான உரிமம் வைத்திருப்பவர்களின் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு: (உருவம் 01)

**உருவம் 01: 2022 இல் காணப்படும் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்**

| முறைமைப்படுத்தப்படும் நிறுவனத்தின் வகை | 1 ஜனவரி 2022 முதல் 31 டிசம்பர் 2022 வரை வழங்கப்பட்ட புதிய உரிமங்களின் மொத்த எண்ணிக்கை | 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறான உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| பங்குப் பரிவர்த்தனைகள் | - | 01 |
| பங்குத் தரகுக் கம்பனிகள் | - | 28 |
| பங்கு வர்த்தகக் கம்பனிகள் | 02 | 12 |
| முகாமைத்துவக் கம்பனிகள் | 08 | *17 |
| முதலீட்டு முகாமையாளர்கள் | - | 24 |
| எல்லைக் கடன் வழங்குநர்கள் | - | 20 |
| ஒப்புரவாளர்கள் | - | 08 |
| கடன் தரப்படுத்தல் முகவர்கள் | - | 03 |
| தீர்வக இல்லங்கள் | 01 | 01 |
| மத்திய வைப்பகங்கள் | 01 | 01 |

*நடப்பிலுள்ள அனைத்து முகாமைத்துவக் கம்பனிகளையும் உள்ளடக்குகின்றது

இதற்கும் மேலாக, மீளாய்வாண்டின்போது, நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி வடிவத்தில் ஆறு கூட்டு முதலீட்டுத் திட்டங்களுக்கு, தேவைப்பாடுகளுடனான அவற்றின் பொருந்துமையினை மதிப்பீடு செய்ததன் பின்னர் அங்கீகாரம் வழங்கப்பட்டது. (உருவம் 02)

**உருவம் 02: உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை**

| முறைமைப்படுத்தப்படும் நிறுவனத்தின் வகை | 31 டிசம்பர் 2021 இல் உள்ளவாறான உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை | 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறான உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| பங்குப் பரிவர்த்தனைகள் | 01 | 01 |
| பங்குத் தரகுக் கம்பனிகள் | 29 | 28 |
| பங்கு வர்த்தகக் கம்பனிகள் | 12 | 12 |
| யுனிட் ட்ரஸ்ட் முகாமைத்துவக் கம்பனிகள் | 16 | 17 |
| யுனிட் ட்ரஸ்ட் நிதியங்கள் | 76 | 81 |
| முதலீட்டு முகாமையாளர்கள் | 24 | 24 |
| எல்லைக் கடன் வழங்குநர்கள் | 20 | 20 |
| ஒப்புரவாளர்கள் | 08 | 08 |
| கடன் தரப்படுத்தல் முகவர்கள் | 03 | 03 |
| தீர்வக இல்லங்கள் | 01 | 01 |

## கொள்கை முன்னெடுப்புகள்

### சந்தை நிறுவனங்கள் மற்றும் சந்தை இடையீட்டாளர்கள் மீதான முறைமைப்படுத்தல் கட்டண விதிப்பு

2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டமானது பரிவர்த்தனை, தீர்வக இல்லம் மற்றும் மத்திய வைப்பகத்தினை சந்தை நிறுவனங்களாக மற்றும் சந்தை இடையீட்டாளர்களாக மீள் வகைப்படுத்தியுள்ளது. இது தொடர்பில், இலங்கையின் மூலதனச் சந்தைக்கு நிதியியல் சேவைகளை வழங்கும் அத்தகைய சந்தை நிறுவனங்கள் மற்றும் சந்தை இடையீட்டாளர்களுக்கு செலுத்தவேண்டிய உரிமக் கட்டணங்களை பரிந்துரைக்கும் ஒழுங்குவிதிகளை மேற்கொள்வது அவசியமாகின்றது. இ.பி.ப.ஆ. அவசியமான ஒழுங்குவிதிகளை வரைந்து வர்த்தமானியிடுவதற்காக அவற்றை நிதி அமைச்சிற்கு சமர்ப்பித்தது.

### முதலீட்டாளர் முறையீடுகளை கையாள்வதற்கான திட்டமிடப்பட்ட பொறிமுறை

பங்குத் தரகர்களுக்கும் அவர்களது வாடிக்கையாளர்களுக்கும் இடையில் எழுகின்ற பிணக்குகள், வாடிக்கையாளர்களுக்கும் பங்குத் தரகர்களுக்கும் மற்றும் எல்லைக் கடன் வழங்குநர்களுக்கும் இடையேயான பிணக்குகளையும் தீர்ப்பதற்கு இ.பி.ப.ஆ. கொ.ப.ப. உடன் சேர்ந்து ஒரு சுயாதீன தீர்ப்பாயத்தின் நிறுவுதலை அறிமுகப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ளன. கருத்து ஆவணமானது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் விதிகள் முடிவுறுத்தப்பட்டவண்ணமுள்ளன.

## முதலீட்டாளர்களது நலன்களை பாதுகாப்பதற்கான முறைமைப்படுத்தல் இடையீடுகள்

## அங்கீகாரங்கள்

### தேச, பிராந்திய மற்றும் உலகளாவிய நிதியங்கள்

ம.வை.தி. இன் பரிந்துரையின் பேரில் இ.பி.ப.ஆ., கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்வதற்கு உலகளாவிய, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு அங்கீகாரம் வழங்குகின்றது. அங்கீகாரங்கள், அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள், 2006 இன் 05 ஆம் இலக்க பணம் சலவை செய்தல் தடுப்புச் சட்டம், 2006 இன் 06 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம் மற்றும் இலங்கையில் பிணையங்கள் தொடர்பான சட்டங்களுடன் இணக்கப்பாட்டிற்கு உட்பட்டு வழங்கப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டின்போது இ.பி.ப.ஆ. 47 உலகளாவிய, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு இலங்கையில் பட்டியலிடப்பட்டுள்ள பிணையங்களில் முதலீடு செய்வதற்கு அங்கீகாரங்களை வழங்கியதுடன் 67 பெயர் மாற்றங்களையும் குறித்துக்கொண்டது.

### வரையறுக்கப்பட்ட (தனியார் ) மத்திய வைப்பகத் திட்டங்களின் விதிகளின் திருத்தியமைப்பு

கொ.ப.ப. இனது ஒருங்கிணைவுடன் மத்திய வைப்பகத் திட்டங்களின் விதிகள் (ம.வை.தி. விதிகள் ) 2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்திற்கு இணைவாக புதுப்பிக்கப்பட்டதுடன் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் அங்கீகரிக்கப்பட்டன.

### வரையறுக்கப்பட்ட (தனியார் ) மத்திய வைப்பகத் திட்டங்களின் பங்குரித்துவம்

2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 66 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் கொ.ப.ப. இற்கு, பின்வருவனவற்றிற்கு கட்டுப்பட்டு பிரேரிக்கப்பட்ட வணிகத் திட்டத்தின் அமுலாக்கலின் பின்னர் ம.வை.தி. இல் கொ.ப.ப. வைத்துள்ள பங்குகளை விற்றுவிடும் வரைக்கும் ம.வை.தி. இல் கொ.ப.ப. இனால் தற்போது வைத்திருக்கப்படும் 100% உரித்துவத்தினை பராமரிக்குமாறு அங்கீகாரம் வழங்கினார்கள்.

- 6 மாத காலப்பகுதியினுள் கொ.ப.ப. எவ்வாறு பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 66 இன் கீழ் விதிக்கப்பட்டுள்ள தேவைப்பாட்டுடன் இணக்கப்பாடு காணும் என்பதனை அதன் வணிகத் திட்டத்தினை இ.பி.ப.ஆ. இற்கு சமர்ப்பித்தல்; மற்றும்
- ஒரு வருட காலத்தினுள் குறித்த பங்குகளை விற்றுவிடுவதற்கான ஆற்றல்.

### கொ.ப.ப. இன் வர்த்தக பங்குபற்றுநரின் விதிகளது திருத்தம்

கொ.ப.ப. உடன் ஒன்றிணைந்து வர்த்தக பங்குபற்றுநரின் விதிகள் முழுவதும் (முன்னர் கொ.ப.ப. இன் பங்குத்தரகர் விதிகள் என அழைக்கப்பட்டது) புதுப்பிக்கப்பட்டு ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் அங்கீகரிக்கப்பட்டன. இத்திருத்தமானது 2021 இன் 19ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளுடன் கொ.ப.ப. இன் வர்த்தக பங்குபற்றுநர் விதிகளை ஒத்திசைவாக்குவதற்காக இந்த திருத்தமானது மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழுக்கள் ஒழுங்கமைப்பின் (ச.பி.ஆ.ஒ.) நியமங்கள் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு ஒத்ததாகக் காணப்படுவதற்காகுமாகும்.

### பங்குகளது மாற்றலை தடைசெய்யும் அறிவித்தல்கள்

சில தனிநபர்கள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களது பங்குரித்துவங்கள் மாற்றல் செய்யப்படுவதனை கட்டுப்படுத்துதல் தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சில முடக்கல்

# செயற்பாட்டு மீளாய்வு

கட்டளைகள் இ.பி.ப.ஆ. இற்கு அறிவிக்கப்பட்டன. இ.பி.ப.ஆ. கொழும்பு மேல் நீதிமன்றத்தின் தீர்மானங்களை கொ.ப.ப. மற்றும் ம.வை.தி. இற்கு அவசியமான நடவடிக்கைக்காக தெரிவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

### கொ.ப.ப. இன் தலையாய கடமைகளது டிஜிட்டல்மயமாக்கலுக்கு வசதியளித்தல்

கொ.ப.ப. இன் முனையத்திலிருந்து முனையம் வரையான செயற்பாடுகளது டிஜிட்டல்மயமாக்கலினை இயலுமையாக்குவதற்கு இ.பி.ப.ஆ. உம் கொ.ப.ப. உம் ஒரு முன்னேற்றகரமான தேசிய முன்னெடுப்பினை ஆரம்பித்ததுடன் ஏதேனும் தேசிய அவசரநிலையின்போது எவ்விதமான தடங்கலுமின்றி செயற்படுவதற்கு கொ.ப.ப. இற்கு வசதியளித்தது. இந்த முன்னெடுப்பானது பொதுச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் அனைத்து முக்கிய நடவடிக்கைகளையும் டிஜிட்டல்மயமாக்கும் அரசாங்கத்தின் முன்னெடுப்புக்கு ஒத்ததாக காணப்படுகின்றது.

இ.பி.ப.ஆ. இன் வழிநடத்தல், வழிகாட்டுதல் மற்றும் ஒத்திசைவுடன் கொ.ப.ப. மற்றும் அதன் முழுவதும் உரித்துவமுடைய துணைநிறுவனமான ம.வை.தி. என்பன எதிர்பார்ப்புள்ள ம.வை.தி. கணக்கு வைத்திருப்பவர்களுக்கு ஒரு தாள் விண்ணப்பப் படிவத்தினை பூர்த்திசெய்யாது மற்றும் ஒரு பங்குத் தரகரது காரியாலயத்திற்கு விஜயம் செய்யாது டிஜிட்டல் வழியூடாக ம.வை.தி. கணக்குகளை திறப்பதற்கான ஒரு மேடையினை அறிமுகப்படுத்தியது (டிஜிட்டல் ம.வை.தி. கணக்கு திறக்கும் வசதி). கொ.ப.ப. இன் பொருத்தமான விதிகளுக்கான திருத்தங்களை அங்கீகரிப்பதனை வசதியளிப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கொ.ப.ப. இன் தலையாய கடமையான முனையத்திலிருந்து முனையம் வரையான டிஜிட்டல் மயமாக்கலானது ஏனையவற்றுக்கிடையில், பின்வரும் மைல்கல் சாதனைகளை அடைவதற்கு வசதியளித்தது:

- மொபைல் செயலியூடாக (பங்குத் தரகு நிறுவனங்களூடாக) வெளிநாட்டு தனிநபர்களை இணைத்துகொள்வதற்கும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளிலிருந்து உள்வாரி முதலீட்டு கணக்குகளை (IIA) திறப்பதற்கான ஆற்றல்;
- கொ.ப.ப. இன் இணையத்தளம் மூன்று மொழிகளிலும் செயற்படுவதற்கு வசதியளித்தல்;
- கொ.ப.ப. இன் மொபைல் செயலியுடன் தனித்தனி பங்குத்தரகு நிறுவனங்களை இணைப்பதற்கான ஒரு விண்ணப்பத் திட்டமிடல் இடைமுகத்தின் (API) அறிமுகம்;
- இ-ஆ.பொ.வ. இணைய நுழைவாயிலுக்கு வசதியளித்தல்;
- கூட்டாண்மை நடவடிக்கை நிகழ்வுகள் நாளேட்டின் அறிமுகம்;
- மொபைல் செயலியூடாக யுனிட் ட்ரஸ்ட்களில் முதலீடு செய்வதற்கு வாடிக்கையாளர்களை இணைத்துக்கொள்ளுதல்;
- பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட யாரேனும் ஒருவர் ஒரு கம்பனியில் ஏதேனும் பங்குகளை பெற்றுக்கொள்வதற்கான உரிமையினை பெறுவதற்கு மற்றுமோர் நபரினை பெயர்குறிப்பிடும் இறந்தவர்கள் மற்றும் பெயர்குறிப்பிடும் களஞ்சியத்திற்கு வசதியளித்தல்;
- ஆய்வு நுழைவாயிலுக்கு குரல் வசதி / குரல் விசையின் சேர்க்கை;
- "செயற்திறன் பதில்வினை" அடிப்படையிலான பங்குத்தரகர் தரப்படுத்தலது அறிமுகம்;
- விலை எச்சரிக்கைகள், வர்த்தக அளவு போன்றவற்றினை கொ.ப.ப. மொபைல் செயலியில் அமைத்தல் மற்றும் இது உறுப்பினருக்கு ஒரு செயலியிலான செய்தியினை இயலுமையாக்குகின்றது.

### பட்டியலிடல் விதிகளின் திருத்தம்

2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் பிரகாரம் கொ.ப.ப. இனால் பட்டியலிடல் விதிகள் அனைத்தும் திருத்தியமைக்கப்பட்டதுடன், பிரேரிக்கப்பட்ட விதிகள் இ.பி.ப.ஆ. இனால் மீளாய்வு செய்யப்படுகின்றது.

### பட்டியலிலிருந்து அகற்றுதல்

மீளாய்வுக் காலத்தின்போது பின்வரும் கம்பனிகள் இ.பி.ப.ஆ. விதிகளின் விதி 4(2) மற்றும் 4(3) இன் பிரகாரம் கொ.ப.ப. இன் உத்தியோகபூர்வ பட்டியலிலிருந்து கட்டாயமாக அகற்றப்பட்டன.

- அடம் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி.
- அடம் கெப்பிட்டல் பி.எல்.சி.
- சிலோன் அன்ட் வொரின் ட்ரேட்ஸ் பி.எல்.சி.
- கொமர்ஷல் லீசிங் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி.
- ஸ்வர்ணமஹால் வைனான்சியல் சேர்விஸஸ் பி.எல்.சி.
- பிரைம் வைனான்ஸ் பி.எல்.சி.
- எம்டிடி வோர்க்கர்ஸ் பி.எல்.சி.
- லக்கி லங்கா மில்க் ப்ரோசஸிங் கம்பனி பி.எல்.சி.

இதற்கும் மேலாக, இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 5 இன் பிரகாரம் ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் பி.எல்.சி. இற்கு அதன் பிணையங்களை கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் உத்தியோகபூர்வ பட்டியலிலிருந்து மனமுவந்து அகற்றுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

### கொ.ப.ப. இன் வர்த்தக விதிகளுக்கான திருத்தங்கள்

மீளாய்வாண்டின்போது, கடன் பிணையங்களது மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களை ஆளுகை செய்யும் வர்த்தக விதிகளுக்கு கொ.ப.ப. இனால் பிரேரிக்கப்பட்ட திருத்தங்களுக்கும் நிரந்தரமான கடன் பிணையங்களுக்கும் ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

### கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் விதி இலக்கம் 5.4 (பி) இன் கீழான விலக்களிப்புகள்

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் விதி இலக்கம் 5.4(பி) இன் பிரகாரம் விலக்களிப்புகளை வேண்டும் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளினால் (ப.பொ.க.) மேற்கொள்ளப்படும் விண்ணப்பங்களை இ.பி.ப.ஆ. செயன்முறைப்படுத்துகின்றது. இவை ஒரு தனிப்பட்ட இடுகை மூலம் ப.பொ.க. இன் புதிய பங்குகளை வழங்குவதற்கு, அத்தகைய பங்கு வழங்கலின் உடனடியாக அடுத்து இவை வழங்கலிலுள்ள பங்குகளில் 20% இனை விஞ்சியிருக்கும்.

மீளாய்வாண்டின்போது அத்தகைய ப.பொ.க. இனால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு விண்ணப்பங்களுக்கு ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியது.

### 2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட புதிய விதிகள்

மீளாய்வாண்டின்போது 2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் செயலாற்றும் இ.பி.ப.ஆ. சந்தை நிறுவனங்கள், சந்தை இடையீட்டாளர்களின் குறிப்பிட்ட பிரிவினர் மற்றும் கூட்டு முதலீட்டுத் திட்டக் கோவை என்பவற்றினால் பின்பற்றவேண்டிய விதிகளை வழங்கியது.

சந்தை இடையீட்டாளர்கள் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட விதிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- பரிவர்த்தனைக்கு பிரயோகிக்கப்படும் விதிகள்
- தீர்வக இல்லத்திற்கு பிரயோகிக்கப்படும் விதிகள்
- மத்திய வைப்பகத்திற்கு பிரயோகிக்கப்படும் விதிகள்

சந்தை நிறுவனங்கள் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட விதிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- முதலீட்டு முகாமையாளர்களுக்கு பிரயோகிக்கப்படும் விதிகள்
- கடன் தரப்படுத்தல் முகவர்களுக்கு பிரயோகிக்கப்படும் விதிகள்
- எல்லைக் கடன் வழங்குநர்களுக்கு பிரயோகிக்கப்படும் விதிகள்
- முகாமைத்துவக் கம்பனிகளுக்கு பிரயோகிக்கப்படும் விதிகள்
- கூட்டாண்மை நிதியியல் ஆலோசகர்களுக்கு பிரயோகிக்கப்படும் விதிகள்
- ஒப்புரவாளர்களுக்கு பிரயோகிக்கப்படும் விதிகள்
- பங்குத் தரகர்களுக்கு பிரயோகிக்கப்படும் விதிகள்
- பங்கு வர்த்தகர்களுக்கு பிரயோகிக்கப்படும் விதிகள்

### பொது உரித்துடைமை தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு காணாமைக்கான வலியுறுத்தல் செயற்பாடு

கொ.ப.ப. இன் ஆகக்குறைந்த பொது உரித்துடைமை தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு காணாத பட்டியலிடப்பட்ட கம்பனிகள் தொடர்பாக முன்மொழியப்பட்ட வலியுறுத்தல் நடவடிக்கைக்கு ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியது.

### கொ.ப.ப. இன் வலியுறுத்தல் விதிகளின் ஒத்திவைப்பு

இவ்வாண்டின்போது இ.பி.ப.ஆ. கொ.ப.ப. இல் பிணையங்களது வர்த்தகத்தினை இடைநிறுத்துவதிலிருந்து ஒத்திவைப்பு தொடர்பான 5 விடயங்களை மீளாய்வு செய்தது. ஒத்திவைப்புகள் பின்வரும் கம்பனிகள் தொடர்பானவையாகும்.

1. ப்ளூ டயமன்ட்ஸ் ஜுவலரி வேர்ல்ட்வைட் பி.எல்.சி (02 ஒத்திவைப்புகள்)
2. மல்ட்டி வைனான்ஸ் பி.எல்.சி.
3. செரன்டிப் இன்ஜினியரிங் குரூப் பி.எல்.சி.
4. நேஷன் லங்கா வைனான்ஸ் பி.எல்.சி.

### பொறுப்புக்கள் மற்றும் இணைப்புக்கள் கோவையின் நிர்வகிப்பு

இந்த பொறுப்பேற்புகளை நிர்வகிப்பதற்கு முன்னர், இ.பி.ப.ஆ. 07 சுயாதீன ஆலோசகர்களது அறிக்கைகளை மீளாய்வு செய்து வெளிப்படுத்தல் உட்கூறுகளை மேம்படுத்துவதற்கு முறைமைப்படுத்தல் அவதானிப்புகளை வழங்கியது. பின்வரும் பொறுப்பேற்பு கொடைமுனைவுகள் 1995 இன் கம்பனி பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் கோவையின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரகாரம் 2022 ஆண்டின்போது நிர்வகிக்கப்பட்டன. (உருவம் 03)

**உருவம் 03: பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடைமுனைவுகள்**

| கொடைமுனையளிப்பவர் | பொறுப்பேற்கப்படுபவர் | கொடைமுனைவின் தன்மை | நிலைமை |
|---|---|---|---|
| பிரவுன்ஸ் பவர் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் (பிரவுன்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி. இன் முழுவதும் உரித்துடைமையான துணை நிறுவனம் ) | உடபுஸல்லாவ பிளான்டேஷன்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனைவு | நிறைவு செய்யப்பட்டது |
| திரு. யோ கிம் லெங் | ரம்பொட வோல்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனைவு | நிறைவு செய்யப்பட்டது |
| எல். பி. வைனான்ஸ் பி.எல்.சி. | மல்ட்டி வைனாக்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனைவு | நிறைவு செய்யப்பட்டது |
| பிரவுன்ஸ் பவர் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் (பிரவுன்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி. இன் முழுவதும் உரித்துடைமையான துணை நிறுவனம் ) | ஹப்புகஸ்தன்ன பிளான்டேஷன்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனைவு | நிறைவு செய்யப்பட்டது |
| ஐகொனிக் ட்ரஸ்ட் (பிரைவேட் ) லிமிட்டட் (பிரவுன்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி. இன் முழுவதும் உரித்துடைமையான துணை நிறுவனம் ) | அக்ஸ்டார் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனைவு | நிறைவு செய்யப்பட்டது |
| ப்ளூ ஓசியன் ரெசிடன்சீஸ் (பிரைவேட் ) லிமிட்டட் | கெல்சி டெவலப்மன்ட்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனைவு | நடந்தவண்ணமுள்ளது |
| எச்.என்.பி. வைனான்ஸ் பி.எல்.சி. | பிரைம் வைனான்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனைவு | நிறைவு செய்யப்பட்டது |

ஒரு பொது பட்டியலிடப்பட்ட கம்பனிக்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு கட்டயாக் கொடைமுனைவானது அக்கொடைமுனையினை முற்றாக அமுல்படுத்துவதற்கான நிதியியல் கொள்திறன் குறித்து ஆணைக்குழுவினை திருப்திபடுத்துவதற்கான ஆற்றலின்மையால் அது இடைநிறுத்தப்பட்டதுடன் பொ.இ.கோ. இன் விதி இலக்கம் 31 (1ஏ) (2) இன் கீழ் செயற்படும் ஆணைக்குழுவானது பொறுப்பேற்பவரை பொது பட்டியலிடப்பட்ட கம்பனியின் வாக்குரிமை கட்டுப்பாட்டின் 30% இனை விஞ்சிய சாதாரண பங்குகளை விற்றுவிடுமாறு பணித்தது.

### பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 80 இன் கீழான அங்கீகாரங்கள்

ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரினால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி, ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனி அல்லது ஒரு பரிவர்த்தனையில் ஒரு பட்டியலிடலைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ள ஏதேனும் பொதுக் கம்பனி பொதுமக்களிடமிருந்து நிதியினை திரட்டும் நோக்கத்திற்காக ஒரு முன்விவரணக்கோவையின் மூலம் அல்லது அதனையொத்த ஒரு ஆவணத்தின் மூலம் அல்லது வேறுவிதத்தில் நேரடியாக அல்லது ஒரு மூன்றாம் தரப்பினரூடாக பிணையங்களின் ஒரு பொது வழங்கலை மேற்கொள்ளலாகாது. இவ்வருடத்தின்போது அல்பா வையர் சேர்விஸஸ் பி.எல்.சி. மற்றும் யு பி வைனான்ஸ் லிமிட்டட் ஆகிய நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டன.

# செயற்பாட்டு மீளாய்வு

### பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 81 இன் கீழான அங்கீகாரங்கள்

பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 81 இன் பிரகாரம், பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் பட்டியலிடப்படா பிணையங்கள் வழங்குவது தொடர்பான விண்ணப்பங்கள் இ.பி.ப.ஆ. இற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பின்வரும் நிறுவனங்களுக்கு அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன. (உருவம் 04).

**உருவம் 04: பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 81 இன் கீழான அங்கீகாரங்கள்**

| வழங்குநரின் பெயர் | பிணையத்தின் வகை | அங்கீகரிக்கப்பட்ட தொகை | காலம் |
|---|---|---|---|
| சொவ்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. | சிரேஷ்ட, பிணைசார், பட்டியலிடப்படா, மீட்கத்தக்க மற்றும் தரப்படுத்தப்பட்ட 3 வருட தொகுதிக்கடன்கள். | அங்கீகரிக்கப்படவில்லை | பொருத்தமற்றது |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. | ரூபாவில் பெயரிடப்பட்ட, தரப்படுத்தப்படா, பட்டியலிடப்படா, பிணைசாரா, மாற்றத்தக்க தொகுதிக்கடன்கள். | ரூ. 27.06 பில்லியன் | 3 வருடங்கள் |
| இலங்கை வங்கி | பாசல் III இணக்கப்பாட்டு, அடுக்கு 2, பட்டியலிடப்படா, தரப்படுத்தப்பட்ட, பிணைசாரா, தாழ்நிலைப்படுத்தப்பட்ட, மீட்கத்தக்க தொகுதிக்கடன்கள், வாழ்தகவு திறனற்ற பதிவழித்தல் அம்சங்களையுடைய ஒரு தொடரான வழங்கல்கள். | ரூ. 20 பில்லியன் | வகை A – 5 வருடங்கள்<br>வகை B – 5 வருடங்கள்<br>வகை C - 8 வருடங்கள் |

### தளத்திற்கப்பாலான பங்கு கொடுக்கல் வாங்கல்களின் அங்கீகாரம்

பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 84 (1) இன் பிரகாரம், "ஒரு பரிமாற்றகத்தில் பட்டியலிடப்பட்டுள்ள ஒரு கம்பனியின் பிணையங்களை வைத்திருக்கும் ஒருவர் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட பரிமாற்றகத்தினால் கடைப்பிடிக்கப்படும் வர்த்தக நடைமுறைகளுக்கு இணங்க அத்தகைய பிணையங்களை கொள்வனவு செய்யலாம், விற்பனை செய்யலாம் அல்லது இல்லாவிடின் வர்த்தகம் செய்யலாம்". அத்தகைய பரிமாற்றகத்தினால் தெளிவான வர்த்தக செயன்முறை காணப்படாதவிடத்து, ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

மீளாய்வாண்டின்போது 958 விதிவிலக்கான மாற்றல்களுக்கும் 132 பங்குக் கொடைகளுக்கும் வழங்கப்பட்ட அங்கீகாரமானது இ.பி.ப.ஆ. இன் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இந்த விதிவிலக்கான மாற்றல்கள் எல்லைக்கடன் வர்த்தகம், தனியான கணக்கிலிருந்து கூட்டுக் கணக்கிற்கு /கூட்டுக் கணக்கிலிருந்து கூட்டுக் கணக்கிற்கு / கூட்டுக் கணக்கிலிருந்து தனியான கணக்கிற்கு, நிதியளித்தல் வசதிகள், கொடைகள் (விசேட), கட்டாயக் கொடைமுனைவுகள் ஆகியவற்றிற்கு வசதியளிப்பதற்காகும்.

### மேற்பார்வை மற்றும் இணக்கப்பாடு

அனைத்து முதலீட்டாளர்களுக்கும் உரியநேரத்தில் துல்லியமான மற்றும் பூரணமான தகவல்களுக்கான அணுக்கம் காணப்படும்போது சந்தைகள் மிகவும் வினைத்திறனாக செயற்படுகின்றன. பட்டியலிடப்பட்ட கம்பனிகள் முதலீட்டாளர்கள் அறிவுபூர்ணமான முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமான தகவல்களுக்கான அணுக்கத்தினை அவர்களுக்கு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் பிரகாரம், முதலீடுசெய்யும் பொதுமக்களுக்கு பட்டியலிடப்பட்ட கம்பனிகள் பரப்புதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படும் கூட்டாண்மை வெளிப்படுத்தல் மற்றும் ஏனைய முக்கிய தகவல்களை இ.பி.ப.ஆ. மேற்பார்வை செய்கின்றது. சந்தை பங்குபற்றுநர்கள் பிணையங்கள் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகளுடன் இணக்கப்பாடு காண்கின்றார்களா மற்றும் முதலீட்டாளர்கள் அக்கறைகளை பாதுகாக்கும் விதத்தில் அவர்கள் நடந்துகொள்கின்றார்களா என்று உறுதிப்படுத்திக்கொள்ளுதல் இ.பி.ப.ஆ. இன் பொறுப்பாகும்.

### பட்டியலிடப்பட்ட கம்பனிகள்

அனைத்து பட்டியலிடப்பட்ட கம்பனிகளும் நிதியாண்டு நிறைவடைந்து 5 மாதங்களினுள் அவர்களது பங்குதாரர்களுக்கும் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கும் (கொ.ப.ப.) ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்கவேண்டியுள்ளது.

கூட்டாண்மை அலுவல்கள் பிரிவானது பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் ஆண்டறிக்கைகளை மீளாய்வு செய்து இணக்கப்பாடு காணப்படாத விடயங்கள் தொடர்பாக கம்பனிகளுக்கு அறிவிக்கின்றது. இந்த முயற்சியில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் மறுமொழிகள் மிகவும் சாத்தியமாகக் காணப்படுகின்றன.

இந்த செயன்முறையின் குறிக்கோள் பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் நிதியியல் அறிக்கையிடல் மற்றும் தகவல் பரப்புதல் ஆகியவற்றின் தரத்தினை மேம்படுத்துவதாகும். பட்டியலிடப்பட்ட கம்பனிகள் பொருண்மையான தகவல்களை உடனடியாக பரப்பவேண்டும் என்பதுடன் இது பிணையங்கள் சந்தையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை நிறுவுவதற்கும் மற்றும் தொழில்சார் நியமங்கள் பராமரிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குமாகும்.

ஆண்டறிக்கைகளை மீளாய்வு செய்யும்போது பிரிவானது கீழ்காணும் விடயங்களில் முன்னிறுத்தம் செய்தது:

- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கம்பனிகள் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகள் ஆகியவற்றுடனான இணக்கப்பாடு
- கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகள்
- நிதியியல் சிறப்பம்சங்கள்
- தலைவரது அறிக்கை
- பணிப்பாளர்களது அறிக்கை
- சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை
- பங்குதாரர் மற்றும் முதலீட்டாளர் தகவல்கள்
- நிதியியல் தரவுகள்
- சபை உப குழுக்களின் அறிக்கைகள்

இச்செயன்முறையானது கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள் மற்றும் பொருத்தமான ஒழுங்குவிதிகளுக்கமைவாக ஆண்டறிக்கைகள்

மற்றும் நிதிக் கூற்றுக்களது தயாரிப்பு மற்றும் முன்னிலைப்படுத்தல் ஆகியவற்றில் கம்பனிகளில் சுமத்தப்பட்டுள்ள கடப்பாடுகள் குறித்து விழிப்புணர்வு மட்டத்தினை தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கு பங்களிப்பு செய்யும்.

இவ்வாண்டின்போது, கூட்டாண்மை அலுவல்கள் பிரிவானது பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் 118 ஆண்டறிக்கை மீளாய்வுகளை நடாத்தியுள்ளது. இணக்கப்பாட்டினை சீர்படுத்தவும் வெளிப்படுத்தல்களை மேம்படுத்தவும் 94 கருத்துக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டதுடன் 34 மீளாய்வுகள் முடிவாக நிறைவுசெய்யப்பட்டன.

மேலும், நாம் 9 கடன் மற்றும் 6 உரித்துவ முன்விவரணக்கோவைகளில் ஆரம்ப மீளாய்வுகளை நடாத்தினோம்.

நடைமுறையிலுள்ள பங்குதாரர்களிடமிருந்து மேலதிக நிதியினை திரட்டுவதற்கு விண்ணப்பித்துள்ள 11 கம்பனிகளின் பங்குதாரர் சுற்றறிக்கைகளில் ஆரம்ப மீளாய்வினை நடாத்தியதுடன் வெளிப்படுத்தல்களை மேம்படுத்துமாறு பின்னூட்டம் வழங்கப்பட்டது.

### வெளிப்படுத்தல்கள் மற்றும் பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் கூட்டாண்மை அலுவல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைமைப்படுத்தல் நடவடிக்கை

இவ்வாண்டின்போது, இ.பி.ப.ஆ. பட்டியலிடப்பட்ட நிறுவனங்களினால் சந்தை அறிவித்தல்களூடாக மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்களை மீளாய்வு செய்ததுடன், 102 சந்தர்ப்பங்கள் தொடர்பாக கொ.ப.ப. இடமிருந்து விளக்கங்கள் கோரப்பட்டன. அத்தகைய விளக்கங்கள் பின்வரும் வெளிப்படுத்தல்கள் தொடர்பானதாகும். (உருவம் 05)

**உருவம் 05: வெளிப்படுத்தல்கள் மற்றும் பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் கூட்டாண்மை அலுவல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை**

| விளக்கத்தின் தன்மை | நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| ப.பொ.க. அவதானிப்பு பலகையில் / இரண்டாம் பலகையில் காணப்படும்வேளை பணிப்பாளர்களினால் வர்த்தகம் மேற்கொண்டமை | 8 |
| பணிப்பாளர்களது வர்த்தகம் - தாமதமாக வெளிப்படுத்தல் | 31 |
| பணிப்பாளர்களது வர்த்தகம் - இருட்டடிப்பு காலத்திலான வர்த்தகம் (பட்டியலிடல் விதி 8.6) | 10 |
| தாமதமான வெளிப்படுத்தல்கள் | |
| பணிப்பாளர் சபையிலான மாற்றங்கள் | 44 |
| ஏனைய உடனடி கூட்டாண்மை வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் | 9 |

### ஏனைய முறைமைப்படுத்துபவர்களுக்கு குறிப்பிடப்பட்ட விடயங்கள்

பின்வரும் விடயங்கள் பிரயோகிக்கத்தக்க நியமங்களுடன் அங்கீகாரங்கள், அளவீடு மற்றும் வெளிப்படுத்தல் என்பன இணக்கப்பாடு காணப்பட்டுள்ளனவா என்பதற்காக ஏனைய முறைமைப்படுத்துபவர்களிடமிருந்து விளக்கங்களை கோருவதற்காக அனுப்பிவைக்கப்பட்டன. (உருவம் 06)

**உருவம் 06: ஏனைய முறைமைப்படுத்துபவர்களுக்கு குறிப்பிடப்பட்ட விடயங்கள்**

| முறைமைப்படுத்துபவர் | கம்பனிகளின் எண்ணிக்கை | தொடர்பான விடயங்கள் மற்றும் விளைவு |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை | 2 | **கோர்ப்பரேட்டிவ் இன்சூரன்ஸ் கம்பனி பி.எல்.சி. (COOP)**<br>COOP இன் நிதிக் கூற்றுக்களில் முறைகேடுகள் தொடர்பாக பெறப்பட்ட முறையீடு.<br>**ஏசியா கெப்பிட்டல் பி.எல்.சி.**<br>31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான சுயாதீன கணக்காய்வாளரது அறிக்கை தொடர்பாக விளக்கங்கள் கோரப்பட்டன. |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனை | 1 | **எக்ஸஸ் இன்ஜினியரிங் பி.எல்.சி.**<br>பிரிவின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் கம்பனியின் பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்களுக்கான ஒரு கடன் தரப்படுத்தல் தரமதிப்புக்குறைப்பு தொடர்பாக பொ.ப.ப. உடனடியாக சந்தைக்கு ஒரு வெளிப்படுத்தலை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| இலங்கை மத்திய வங்கி | 1 | **செலான் பேங்க. பி.எல்.சி.**<br>குத்தகை உடன்படிக்கைகள் தொடர்பான முறைகேடுகள் தொடர்பாக பெறப்பட்ட முறையீடு. |
| இலங்கை காப்பறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | 2 | **கோர்ப்பரேட்டிவ் இன்சூரன்ஸ் கம்பனி பி.எல்.சி. (COOP)**<br>COOP இன் பங்குதாரர்களது உரிமைகளை உரியவாறு கருத்திலெடுக்காது மேற்கொள்ளப்பட்ட பணிப்பாளர்கள் நியமனம்.<br>**கோர்ப்பரேட்டிவ் இன்சூரன்ஸ் கம்பனி பி.எல்.சி.**<br>COOP ,னது பணிப்பாளர்கள் சபையின் சட்டமுறைத் தகுதி. |

# செயற்பாட்டு மீளாய்வு

### சந்தை இடையீட்டாளர்கள்

2022 ஆம் ஆண்டின்போது, 2021 இல் சட்டமயமாக்கப்பட்ட புதிய பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மேலும் விளைவினை வழங்குவதற்காக இ.பி.ப.ஆ. விதிகளை அறிமுகப்படுத்தியது. இதன் பிரகாரம், சந்தை நிறுவனங்கள், சந்தை இடையீட்டாளர்கள் தொடர்பான விதிகள் மற்றும் முன்னர் யுனிட் ட்ரஸ்ட் என தெரிந்துகொள்ளப்பட்ட கூட்டு முதலீட்டுத் திட்டங்களுக்கான கோவை என்பன முடிவுறுத்தப்பட்டன. இவை மூலதனச் சந்தை செயற்பாடுகளது செயற்பாடு மற்றும் ஆளுகைக்கான ஒரு தெளிவான வரம்புறுகையினை மேலும் பலப்படுத்தி வலுப்படுத்தும்.

"இணக்கப்பாடின்மை மற்றும் அதன் தீவிரத்தின் தன்மையின் அடிப்படையில் நிர்வாக வலுவளிப்புகளை விதிப்பதற்கு ஆணைக்குழுவினை புதிய சட்டமானது இயலுமையாக்கியுள்ளதுடன், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் மேம்பட்ட அமலாக்கத்திறனுடன் இ.பி.ப.ஆ. பலப்படுத்தப்பட்டுள்ளது."

சந்தை நிறுவனங்கள் மற்றும் சந்தை இடையீட்டாளர்களுக்கான விதிகள் 15 மார்ச் 2022 திகதியிடப்பட்ட முறையே 2271/10 மற்றும் 2271/09 இலக்கத்தையுடைய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன. அதேவேளை கூட்டு முதலீட்டுத் திட்டம் தொடர்பான விதிகள் 07 மே 2022 திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2278/27 இல் பிரசுரிக்கப்பட்டது.

பரிமாற்றகம், மத்திய வைப்பகம் மற்றும் தீர்வக இல்லம் ஆகியவற்றை உள்ளடக்கிய 3 சந்தை நிறுவனங்களுக்கான விதிகளின் அறிமுகமானது, நாட்டின் தேசிய பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பங்கு வகிக்கும் ஒரு பிணையங்கள் சந்தையுடன் இணைந்துள்ள முறைசார் இடரினைக் குறைப்பதற்காகவும் மூலதனச் சந்தை செயலாக்கங்களின் பயனுறுதிமிக்க மற்றும் திறமையான செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காகும். ஏனையவற்றுக்கிடையில் விதிகளின் முக்கிய கூறுகள் உரிமமளித்தல் செயன்முறை, ஆகக்குறைந்த நிதியியல் மற்றும் உட்கட்டமைப்பு தேவைப்பாடுகள், ஆளுகை கட்டமைப்புகள், இணக்கப்பாடு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு தேவைப்பாடுகள் மற்றும் முக்கிய முகாமைத்துவ நபர்களின் தகமை மற்றும் பொருத்த மதிப்பீட்டிற்கான விபரமான வரன்முறைகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. 2022 இல் கொ.ப.ப. இனால் அறிமுகப்படுத்தப்பட்ட விநியோகம் எதிர் கொடுப்பனவு பொறிமுறையானது (வி.எ.கொ.) அதன் அமுல்படுத்தலின் பயனுறுதித்தன்மையினை மதிப்பிடுவதற்காக ஒரு சுயாதீன தளத்திலான பரிசீலனைக்கு உட்பட்டது. வி.எ.கொ. என்பது தீர்ப்பனவு இடரினைக் குறைக்கும் நோக்கத்திற்காக சந்தை உட்கட்டமைப்பிற்கு ஒரு முக்கிய மேம்பாடாகும்.

சந்தை இடையீட்டாளர்கள் மூலதனச் சந்தையின் முன்னணியில் செயலாற்றுபவர்கள், முதலீட்டாளர்களைக் கையாளுபவர்கள், சந்தையின் தடையற்ற செயலாற்றலுக்கு ஒரு முக்கிய பங்கினை செயற்படுத்துபவர்கள் ஆவார்கள். புதிய பி.ப.ஆ. சட்டமானது "சந்தை இடையீட்டாளர்களை" மீள்வரைவிலக்கணப்படுத்தி சில புதிய இடையீட்டாளர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது; கூட்டாண்மை நிதி ஆலோசகர்கள், மூலாதாரத் தரகர்கள், மூலாதார வர்த்தகர்கள் மற்றும் சந்தை உருவாக்குபவர்கள் என்பவையாகும்.

சந்தை இடையீட்டாளர்களுக்கான விதிகள் எட்டு சந்தை இடையீட்டாளர்களின் நோக்கெல்லையினை உள்ளடக்குகின்றன: முதலீட்டு முகாமையாளர்கள், எல்லைக் கடன் வழங்குநர்கள், கடன் தரப்படுத்தல் முகவர்கள், ஒப்புரவாளர்கள், பங்குத் தரகர்கள், பங்கு வர்த்தகர்கள், முகாமைத்துவக் கம்பனிகள் மற்றும் கூட்டாண்மை நிதியியல் ஆலோசகர்கள். அத்துடன் ஏனையவற்றுக்கிடையில் உரிமமளித்தல் செயன்முறைகள், ஆகக்குறைந்த நிதியியல் மற்றும் உட்கட்டமைப்பு தேவைப்பாடுகள், இணக்கப்பாடு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு தேவைப்பாடுகள் மற்றும் முக்கிய முகாமைத்துவ நபர்களின் தகமை மற்றும் பொருத்த மதிப்பீட்டிற்கான விரிவான வரன்மறை மற்றும் செயற்பாடுகளின் நிறுத்தம் தொடர்பான செயன்முறைகளையும் குறிப்பிடுகின்றன.

2022 இன் கூட்டு முதலீட்டுத் திட்டக் கோவையானது (கூ.மு.தி.கோவை) 2011 இன் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிக் கோவையினை சட்டநீக்கம் செய்து மாற்றீடு செய்துள்ளது. இக்கோவையானது ஏனையவற்றுக்கிடையில், இடைவெளி நிதியங்கள், பரிமாற்றக வர்த்தக நிதியங்கள், குடை நிதியங்கள் மற்றும் ஆதன முதலீட்டு நம்பிக்கைப் பொறுப்புக்கள் ஆகியவற்றின் அறிமுகத்திற்கு வழிசமைத்துள்ளது.

இ.பி.ப.ஆ. இன் முறைமைப்படுத்தல் நோக்கெல்லையானது உரிமமளித்தல், பதுப்பித்தல்கள் மற்றும் முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களின் நடவடிக்கைகளை தளத்திலான மற்றும் தளத்திற்கப்பாலான மேற்பார்வையினூடாக கண்காணித்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. இந்த வழமையான கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்களினால் முறையான நடத்தையினை உறுதிப்படுத்துவதற்காகவும் பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாட்டுடன் இருப்பதற்காகவும் மற்றும் அவற்றின் நிதியியல் ஸ்திரத்தன்மை மற்றும் செயற்பாட்டு வாழ்திறன் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், புதிய சட்டத்தின் சட்டமயமாக்கலுடன் ஆணைக்குழு இணக்கப்பாடற்ற தன்மை மற்றும் அதன் தீவிரம் என்பவற்றின் அடிப்படையில் நிர்வாக வலுவளிப்புகளை சுமத்துவதனை இயலுமையாக்கியுள்ளதுடன், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் மேம்பட்ட வலியுறுத்தத்தக்க தன்மையுடன் இ.பி.ப.ஆ. இனை பலப்படுத்தியுள்ளது.

### பங்குத் தரகர்கள்

சந்தை இடையீட்டாளர்களிடையே பங்குத் தரகர்கள் ஒரு முக்கிய பிரிவினராகும் என்பதுடன் பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகள், பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடு மற்றும் அவர்களது நடத்தையினை கண்காணிப்பதற்காக உரிய மேற்பார்வை மேற்கொள்ளப்படுகின்றது. பங்குத் தரகர்களிலான மேற்பார்வையானது ஒரு இடர் அடிப்படையிலான அணுகுமுறையில் மேற்கொள்ளப்படுகின்றது. இது நிறுவனத்திற்கு உரித்தான இடர் தரப்படுத்தல் மற்றும் ஒவ்வொரு நிறுவனத்தினதும் சார்புடைய சந்தைப் பங்களிப்பு ஆகியவற்றை கணக்கிலெடுத்து நிறுவனங்களின் சார்புடைய இடர் தோற்றுருவங்களை மதிப்பீடு செய்கின்றது. பங்குத்தரகர்கள் வெளிப்பாட்டினை கொண்ட இடர்கள் விவேகம், திரவத்தன்மை, எதிர்தரத்தவர், நிதியியல், கடன், செயற்பாட்டு மற்றும் சட்ட இடர்கள் என இனங்காணலாம். இ.பி.ப.ஆ. முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை விளக்கும்வேளை பரிமாற்றகமும் சுயாதீனமாக பங்குத்தரகர்களை கண்காணிக்கின்றது. இது பரிமாற்றகத்தின் விதிகளுடனான இணக்கம் தொடர்பானது என்பதுடன் ஏதேனும் மீறல்கள் அல்லது இணக்கப்பாடின்மை கண்டுபிடிக்கப்படின் பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய சவால்மிக்க சமூக பொருளாதார சூழலின் மத்தியில், இ.பி.ப.ஆ. குறித்த நிறுவனங்களின் பயனுறுதிமிக்க கண்காணிப்பிற்காக பங்குத்தரகர்களிலான சுயாதீன தளத்திலான மற்றும் தளத்திற்கப்பாலான மேற்பார்வைகள் மேற்கொள்வதனை தொடர்ந்தது. நிதிக் கூற்றுக்கள், இணக்கப்பாட்டு அதிகாரியின் அறிக்கைகள் மற்றும் சில முக்கிய மாறிகளிலான காலாகால வெளிப்பாட்டு அறிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பங்குத் தரகர்களினால் மேற்கொள்ளப்படும் காலாகால சமர்ப்பிப்புகளின் மீளாய்வு மற்றும் பகுப்பாய்வினை தளத்திற்கப்பாலான மேற்பார்வை கொண்டுள்ளது. தளத்திற்கப்பாலான மீளாய்வுகளின்போது கண்டுபிடிக்கப்படும் ஏதேனும் இணக்கப்பாடின்மைகள் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டு அவை திருத்தியமைக்கப்படும்வரை பின்தொடரப்படுகின்றன. தளத்திலான மேற்பார்வையின்போது இ.பி.ப.ஆ. இன் உத்தியோகத்தர்கள் பங்குத் தரகரின் பதிவுசெய்யப்பட்ட வணிக காரியாலயத்திற்கு விஜயம் செய்து அமைப்புமுறைகள் மற்றும் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான நிறுவனத்தின் இணக்கப்பாடு தொடர்பான சான்றுகளது விரிவான பரிசீலனைகளை நடாத்துகின்றார்கள். மேலும், இவ்வாண்டின்போது நிதியியல் நுண்ணறிவு அலகின் பிரதிநிதிகளுடன் இணைந்து மூன்று பங்குத்தரகு நிறுவனங்களில் கூட்டு பரிசீலனைகளும் நடாத்தப்பட்டன. இவை 2006 இன் 06 ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம் மற்றும் அதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாட்டு மட்டத்தினை தீர்மானிப்பதற்காகும்.

இவ்வாண்டின்போது, துறைசார் செயற்திறனானது, விதி விலக்கான திடமான 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பங்குத்தரகர்களின் மொத்த புரள்வு 41% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளதை குறிப்பிட்டது. துறையின் இலாபகரத்தன்மை 67% வீழ்ச்சியினைக் கண்டதுடன், 2021 இல் அறிக்கையிடப்பட்ட வரிக்கு பிந்திய தேறிய இலாபமான ரூபா 6,308 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2022 இல் வரிக்கு பிந்திய தேறிய இலாபம் 2,094 மில்லியனாகக் காணப்பட்டது. பங்குத்தரகுத் துறையின் செயற்திறனிலான ஒப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (உருவம் 07)

**உருவம் 07: பங்குத்தரகுத் துறையின் சிறப்பம்சங்கள்**

| | 2022 (ரூபா'000) | 2021 (ரூபா'000) | மாற்றம் % |
|---|---|---|---|
| புரள்வு | 7,989,609 | 13,555,296 | (41) |
| தேறிய தரகுக்கூலி | 7,383,356 | 12,764,289 | (42) |
| ஏனைய வருமானம் | 3,567,382 | 2,015,305 | 77 |
| செயற்பாட்டு இலாபம் / நட்டம் | 3,812,946 | 8,162,762 | (53) |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம் / நட்டம் | 3,001,569 | 7,723,787 | (61) |
| வரிக்கு பிந்திய தேறிய இலாபம் / நட்டம் | 2,094,232 | 6,307,940 | (67) |
| மொத்த சொத்துக்கள்* | 24,805,524 | 36,490,460 | (32) |
| மொத்த பொறுப்புக்கள்* | 11,631,100 | 23,956,798 | (51) |
| பங்குதாரர் நிதியங்கள்* | 13,174,424 | 12,533,662 | 5 |

*டிசம்பர் 31 இல் உள்ளவாறானது

மூலம்: பங்குத் தரகர்களினால் இ.பி.ப.ஆ. சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வு செய்யப்படாத நிதிக் கூற்றுக்கள்

## முகாமைத்துவக் கம்பனிகள் மற்றும் கூட்டு முதலீட்டுத் திட்டங்கள்

2022 இல் முகாமைத்தவக் கம்பனிகள் தொடர்பான விதிகள் அமுலுக்கு வந்ததுடன், ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஒரு திட்டத்தினை நிறுவுவதற்கு, முகாமைப்படுத்துவதற்கு, செலாற்றுவதற்கு அல்லது சந்தைப்படுத்துவதற்கு கம்பனிகள் இ.பி.ப.ஆ. இடமிருந்து ஒரு உரிமத்தினை பெறவேண்டிய தேவை காணப்படுகின்றது. இவ்வாண்டின்போது, வெளித்தோன்றும் இடர்கள் வினைத்திறனுடன் கண்காணிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக மூலோபாய முன்னுரிமைகள் சீரமைக்கப்பட்டன. இதன்மூலம் முகாமைத்துவக் கம்பனிகளது இடர் அடிப்படையிலான அணுகுமுறை நோக்கிய மேற்பார்வையானது பலப்படுத்தப்பட்டது.

முகாமைத்துவக் கம்பனிகளின் தளத்திலான மற்றும் தளத்திற்கப்பாலான இடர் அடிப்படையிலான அணுகுமுறை விவேகம், செயற்பாடு, திரவத்தன்மை, முகாமைத்துவக் கொள்கைகளின் போதுமை போன்ற பிரிவுகளை உள்ளடக்கிய முக்கிய இடர்களில் முன்னிறுத்தம் செய்தது. இம்மீளாய்வின் குறிக்கோளானது நிதியியல் ஸ்திரத்தன்மையினை மதிப்பிடுதல் மற்றும் தேவையான செயன்முறைகளை அமுல்படுத்துதல், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவப் பொறிமுறைகள் ஆகியவற்றினூடாக பொருத்தமான முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் அவற்றின் இணக்கப்பாடு மட்டத்தினை உறுதிப்படுத்திக்கொள்வதற்காகும்.

மேலும், தளத்திற்கப்பாலான மீளாய்வுனினூடாக மூலதனச் சந்தையின் ஸ்திரத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக, முகாமைத்துவக் கம்பனிகளின் நிதியியல் பலம், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் செயற்திறனான இடர் முகாமைத்துவ நடைமுறைகள் காணப்படுகின்றதா என்பவற்றை மதிப்பிடுவதற்காக கண்காணிக்கப்பட்டன. முகாமைத்துவக் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்படாத மாதாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் திட்டங்களின் மாதாந்த சமர்ப்பிப்புகளது பகுப்பாய்வினூடாக தளத்திற்கப்பாலான மேற்பார்வைகள் மேலும் பலப்படுத்தப்பட்டதுடன் இது முகாமைத்துவக் கம்பனிகளின் நிதியியல் நிலைமையானது ஸ்திரமாகக் காணப்படுவதனையும் மற்றும் இ.பி.ப.ஆ. இனால் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த பங்குதாரர்களது நிதியத் தேவைப்பாட்டுடன் இணங்கி செயற்படுவதனையும் உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்றன.

முகாமைத்தவக் கம்பனிகளுக்கான விதிகள் ஒரு இணக்கப்பாட்டு அதிகாரியினது நியமனத்திற்கான தேவைப்பாட்டினை கொண்டுவந்ததுடன், இவரது பொறுப்பானது முகாமைத்துவக் கம்பனி பொருத்தமான சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் எந்நேரமும் அமைவுறுவதனை உறுதிப்படுத்துவதுடன் இ.பி.ப.ஆ. இன் மீளாய்விற்கு ஒரு காலாண்டு இணக்கப்பாட்டு அறிக்கையினை சமர்ப்பிப்பதாகும்.

இதற்கும் மேலாக, ஆகக் குறைந்த எண்ணிக்கையிலான அலகுடைமையாளர்கள் தேவைப்பாடு, திட்டங்களின் முதலீடுகளிலான கட்டுப்பாடுகள் மற்றும் திரவத்தன்மை தேவைப்பாடுகள் ஆகியவற்றுடனான இணக்கப்பாடானது ஆராயப்பட்டு மேற்பார்வை பிரிவினால் ஓர் தொடர்ச்சியான அடிப்படையில் கண்காணிக்கப்படுகின்றது. இது முதலீட்டாளர்களது நலன்களைப் பாதுகாப்பதற்காக பொருத்தமான விதிகளினால் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளத்தக்க வரையறைகளினுள் அத்தகைய திட்டங்கள் செயலாற்றுவதனை உறுதிப்படுத்துவதற்காகும்.

அத்தகைய திட்டங்களின் நிதியியல் ஸ்திரத்தன்மை மட்டத்தினை உறுதிப்படுத்துவதற்காகவும் மற்றும் குறிப்பிடப்பட்ட முறைமைப்படுத்தல் தேவைபப்பாடுகளுடனான இணக்கப்பாட்டினை கண்காணிப்பதற்காக நாம் முகாமைத்துவ கம்பனிகள் மற்றும் திட்டங்களின் நம்பிக்கை பொறுப்பாளர்களுடன் வழக்கமான ஊடாட்டங்களை பராமரிக்கின்றோம். இவ்வாண்டின்போது திட்டங்களின் முதலீட்டு வரையறைகள் மற்றும் திரவத்தன்மை தேவைப்பாடுகளில் சில மீறுதல்கள் இனங்காணப்பட்டவுடன், இப்பிரிவானது குறித்த முகாமைத்துவக் கம்பனிகளை மட்டங்களை முறைப்படுத்துவதற்கு அவசியமான வழிமுறைகளை பொறுப்பேற்குமாறு அறிவுறுத்தியதுடன் இது எழக்கூடிய சாத்தியமான இடர்களை குறைப்பதற்காகும். இதன் பிரகாரம், பொருத்தமான முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக முகாமைத்துவக் கம்பனிகளுக்கு துணைபுரிவதற்காக நாம் தொடர்ந்தும் காலத்திற்கேற்ற வழிகாட்டியினை வழங்குகின்றோம். (உருவங்கள் 08, 09)

**உருவம் 08: திட்டங்களின் ஒட்டுமொத்த நிலைமை**


| | இல் உள்ளவாறானது 31.12.2022 | ல் உள்ளவாறானது 31.12.2021 | மூ மாற்றம் % |
|---|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | 81 | 75 | |
| தேறிய சொத்தின் பெறுமதி (ரூ. பில்லியன். அண்ணள.) | 143.00 | 194.00 | (26.28) |
| அலகுடைமையாளர்களின் எண்ணிக்கை | 67,912 | 59,426 | 14.27 |
| வழங்கிய அலகுகளின் எண்ணிக்கை (மில்.எண். அண்ணள.) | 6,283 | 7,835 | (19.80) |
| உரித்துவத்திலான முதலீடு (மில்.எண்.அண்ணள.) | 11,856 | 17,586 | (32.58) |
| அரசாங்கப் பிணையங்களில் முதலீடு (மில்.எண்.அண்ணள.) | 88,879 | 28,755 | 209.09 |
| ஏனைய கருவிகளில்* முதலீடு (மில்.எண்.அண்ணள.) | 48,187 | 148,907 | (67.63) |

*வணிகத் தாள்கள், நம்பிக்கைப்பொறுப்புச் சான்றிதழ்கள், தொகுதிக்கடன்கள், வங்கி வைப்புகள் போன்றவை.

மூலம்: முகாமைத்துவக் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் முறைமைப்படுத்தல் சமர்ப்பிப்புகள்

# செயற்பாட்டு மீளாய்வு

**உருவம்: 09: முகாமைத்துவக் கம்பனிகளின் சந்தைப் பங்களிப்பு**




### ஏனைய சந்தை இடையீட்டாளர்கள்

ஏனைய சந்தை இடையீட்டாளர்கள் எல்லைக்கடன் வழங்குநர்கள், முதலீட்டு முகாமையாளர்கள், கடன் தரப்படுத்தல் முகவர்கள், ஒப்புரவாளர்கள் மற்றும் கூட்டாண்மை நிதியியல் ஆலோசகர்களை உள்ளடக்குவதுடன் இந்நிறுவனங்கள் அனைத்தும் பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாட்டுடன் காணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து நிறுவனங்களும் ஒத்த மேற்பார்வை செயன்முறைக்கு உட்பட்டவையாகும். சந்தை இடையீட்டாளர்களிடமிருந்து மூலதனச் சந்தைக்கு எழுகின்ற ஏதேனும் முறைசார் இடரினைக் குறைப்பதற்காக தளத்திலான மற்றும் தளத்திற்கப்பாலான மேற்பார்வையின்போது ஒரு வினைத்திறனான இடர் அடிப்படையான மேற்பார்வை வரம்புறுகை கடைப்பிடிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டின்போது ஒரு கடன் தரப்படுத்தல் முகவர் அதன் பணிப்பாளர்கள் சபையினால் நாட்டில் அதன் வணிக செயற்பாடுகளை நிறுத்தும் தீர்மானத்தினை அறிவித்தது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். உரிய நிறுத்தல் செயன்முறைக்கு அவசியமான வழிகாட்டல் இ.பி.ப.ஆ. ஆல் வழங்கப்பட்டது.

மேலும், ஒரு கூட்டாண்மை நிதி ஆலோசகராக உரிமம் பெறுவதற்காக புதிய சந்தை இடையீட்டாளர் பிரிவின் கீழ் விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

### கண்காணிப்பு, புலனாய்வு மற்றும் வலியுறுத்தல்

இ.பி.ப.ஆ. இன் ஒரு முக்கிய முறைமைப்படுத்தல் இலக்காக நியாயமான மற்றும் ஒழுங்கான வர்த்தகத்தினை உறுதிப்படுத்துதல் காணப்படுகின்றது. இதனை அடைவதற்கு, இ.பி.ப.ஆ. கையாளுகை மற்றும் ஏனைய நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளை கண்டுபிடித்து தடுப்பதற்காக சந்தை கண்காணிப்பினை பயன்படுத்துகின்றது. அதன் கண்காணிப்பு வலையமைப்பினூடாக கண்டுபிடிக்கப்படும் ஏதேனும் சந்தேகத்திற்கிடமான சந்தை துர்நடத்தையானது முழுமையாக மீளாய்வு செய்யப்படுகின்றது. சந்தை துர்நடத்தையில் நியாயமான சந்தேகம் காணப்படும்போது புலனாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டு பொருத்தமான வலியுறுத்தல் நடவடிக்கைகள் தொடரப்படுகின்றன.

### கண்காணிப்பு


இ.பி.ப.ஆ. இன் முக்கிய முறைமைப்படுத்தல் குறிக்கோளாக, ஒரு நியாயமான, செயற்திறனான மற்றும் வெளிப்படையான சந்தையினை உருவாக்குதல், பராமரித்தல் மற்றும் முறைமைப்படுத்தல் ஆகியன காணப்படுவதுடன் எந்தவொரு மூலதனச் சந்தையும் நன்கு செயற்படுவதற்கு இது முக்கியமானதாகும். இ.பி.ப.ஆ. சாத்தியமான பாதிப்புகளை கண்டுபிடித்தல் மற்றும் தடுத்தல் என்பதன் மூலம் சந்தையின் நம்பகத்தன்மையினை பாதுகாப்பதற்காக சந்தை கண்காணிப்பினை நடாத்துகின்றது. இந்த நோக்கத்திற்காக, முறைமைப்படுத்தலுக்கும் சந்தை இயக்கவியலுக்கும் இடையே ஒரு சமநிலையினை பராமரிக்கும் வேளை பகுப்பாய்வுகளூடாக தவறுகளை தவிர்ப்பதற்காக பொருத்தமான மூலோபாயங்கள் செயற்படுத்தப்படுகின்றன. மேலும், சந்தை மற்றும் விலைக் கையாளுகை, உள்ளுறைபர் வர்த்தகம், சந்தை மோசடிகள் மற்றும் முன்னோடுதல் உள்ளடங்கலான ஒழுங்கிலா வர்த்தக நடவடிக்கையிலிருந்து சந்தைக்கு இடையூறுகளை தவிர்ப்பதற்காக முன்கூட்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### புதுமையான சவால்கள்


மீளாய்வுக் காலத்தின்போது, இணையவழி மேடைகளூடாக வர்த்தக நடவடிக்கைகளை செயலாற்றிய, பிரதானமாக புதிய தொழில்நுட்ப அறிவுத்திறன் மற்றும் அறிவுபூர்வமான முதலீட்டாளர்களது உள்நுழைவுடன் வர்த்தக நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டது. இளம் மக்கள் தொகை முதலீட்டாளர்களின் வருகையானது இ.பி.ப.ஆ. இனை அதன் பாரம்பரிய சந்தை கண்காணிப்பு அணுகுமுறைக்கு அப்பால் நோக்குவதற்கு கட்டாயப்படுத்தியது. இரண்டு வரைபடங்களினால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு 80% ஆன வர்த்தகங்கள் உள்ளூர் தனிநபர்களூடாக தோற்றுவிக்கப்பட்டுள்ளதுடன், அண்ணளவாக 70% ஆனவை 35 வயதிற்குக் குறைந்த உள்ளூர் தனிநபர்களின் புதிய ம.வை.தி. பதிவீடுகளூடாக இடம்பெற்றுள்ளன. டிஜிட்டல் ரீதியாக அறிவுடைத்த புதிய முதலீட்டாளர்கள் அவர்களது முதலீட்டுத் தீர்மானங்களை சமூக ஊடகங்களில் பிரசுரிக்கப்படும் முதலீடு தொடர்பான அபிப்பிராயங்கள், பகுப்பாய்வுகள் மற்றும் மதிப்பீடுகளின் அடிப்படையில் மேற்கொள்கின்றார்கள். இ.பி.ப.ஆ. சமூக ஊடக மேடைகளில் தரவேற்றம் செய்யப்படும் உட்பொருள்களில் உன்னிப்பாக கவனம் செலுத்தியது. ஏனெனில், இவை பொய்யான அல்லது தவறாக இட்டுச்செல்லும் மற்றும் சந்தை கையாளுகைக்கு வழிநடத்துவதற்கான தகவல்களை உள்ளடக்கியிருந்தன. இதற்கும் மேலாக, புதிய இ.பி.ப.ஆ. சட்டம் அமுலுக்கு வந்ததுடன், பங்குக் கையாளுகைகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன் சமூக ஊடகத்தின் தேவையற்ற தவறான பயன்பாட்டினை இனங்காண்பதற்கான தெளிவான மற்றும்

குறிப்பிட்ட ஏற்பாடுகள் கிடைக்கக்கூடியதாயிருந்தது. (உருவங்கள்: 10,11)

**உருவம்: 10 வாடிக்கையாளர் கணக்கு வகை வாரியான வர்த்தகத் தொகுப்பு**





**உருவம்: 11 வயது வாரியான புதிய ம.வை.தி. பதிவீடுகள் (உள்ளூர் தனிநபர்கள்)**




கீழே காணப்படும் வரைபடத்தில் எடுத்துக்காட்டியுள்ளவாறு இவ்வாண்டின்போது 6 மில்லியன் வர்த்தகங்கள் அறிக்கையிடப்பட்டதுடன், அவை அண்ணளவாக ரூபா 686 பில்லியன் சந்தை புரள்வினை உருவாக்கின. வர்த்தக நடவடிக்கைகளிலான குறிப்பிடத்தக்க மாற்றமானது அவசியமான சந்தை கண்காணிப்பு முயற்சிகளை மேலும் உயர்த்தியது. (உருவம் 12)

**உருவம்: 12 கொ.ப.ப. இன் வர்த்தக புள்ளிவிபரங்கள்**





### கண்காணிப்பு அவதானிப்புகள், பரிந்துரைத்தல்கள் மற்றும் குறிப்புகள்

இ.பி.ப.ஆ. வலியுறுத்தல் நடவடிக்கையினை விரைவாக்குவதற்கும் மற்றும் சந்தை துர்நடத்தையினை விளைவித்திருக்கக்கூடிய சந்தைக்கான பாதிப்புகளை குறைப்பதற்கும் அவதானிப்புகள் மற்றும் வலியுறுத்தல் நடவடிக்கை அறிக்கையிடல் பொறிமுறை தொடர்பாக அதன் மூலோபாயத்தினை மாற்றியமைத்தது. இதனைத் தொடர்வதில், இ.பி.ப.ஆ. 2020/2021 இலிருந்து ஒரு அவதானிப்பு முகாமைத்துவ முறைமையினை கடைப்பிடித்ததுடன், இது ஒரு முன்னேற்றகரமான அணுகுமுறை நோக்கிய பங்களிப்பினை மேம்படுத்தியது.

இவ்வாண்டின்போது, இ.பி.ப.ஆ. சந்தையில் 61 சந்தர்பங்களில் அசாதாரணமான வர்த்தக நடவடிக்கையினை இனங்கண்டதுடன் அவதானிப்புகளின் தவறு வாரியான பிரித்தலானது கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (உருவம் 13)

**உருவம் : 13 சந்தேகத்திட்கிடமான தவறுகளின் வகைகள்**




2022 இல் தலைவரின் வழிகாட்டலின் கீழ் செயலகமானது புதிய பி.ஆ.ச. இன் பகுதி ஏ இற்கு ஏற்றாற்போல் நடைமுறையிலுள்ள வலியுறுத்தல் நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இது அனைத்து சந்தை தவறுகளையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவந்தது. இந்த முன்னெடுப்பானது இ.பி.ப.ஆ. பயனுறுதிமிக்க மிக்க செயற்திறனான வலியுறுத்தல் நடவடிக்கையினை உரிய நேரத்தில் மற்றும் அளவுவாரியான விதத்தில் செயற்படுத்துவதனை இயலுமையாக்கும்.


# செயற்பாட்டு மீளாய்வு

மேலும், புதிய பி.ப.ஆ. சட்டத்தில் ஒவ்வொரு தவறின் கீழும் தடைசெய்யப்பட்டுள்ள நடாத்தையும் தவறினை நிலைநாட்டுவதற்கு அவசியமான உட்கூறுகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. எனவே, பிணையங்கள் சந்தையின் முறைமைப்படுத்தலில் முன்கணிப்புத்தன்மை மற்றும் ஒவ்வுமையினை வலுப்படுத்துகின்றது. இதற்கு ஏற்றாற்போல், முன்னைய கண்காணிப்பு மற்றும் புலனாய்வு செயன்முறை வரம்புறுகையானது மாற்றியமைக்கப்பட்டு தற்போது கண்காணிப்புப் பிரிவின் மீளாய்வு மற்றும் மதிப்பீட்டினை தொடர்ந்து கண்காணிப்பு பரிந்துரைத்தல்கள், குறிப்புகள் மற்றும் கொ.ப.ப. இன் பரிந்துரைத்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. தேவை ஏற்படின், புலனாய்வு பிரிவு உள்ளடங்கலான இ.பி.ப.ஆ. இன் ஏனைய பிரிவுகளிடமிருந்து உறுதணை பெறப்படுகின்றது.

மேலும், உரிய நேர நடவடிக்கை குறிக்கோளினை தொடர்வதற்காக இ.பி.ப.ஆ. பரிந்துரைத்தல்களை பூர்த்திசெய்வதற்கு தேவையான நேர முயற்சியினை மதிப்பிடுவதற்கான ஒரு வரம்புறுகையினை விருத்திசெய்தது. ஒவ்வொரு வகையான தவறின் கீழ், அதாவது, விலை கையாளுகை மற்றும் உள்ளுறைபவர் வர்த்தகம் என்பவற்றுக்கு வரம்புறுகையானது வெவ்வேறு நடவடிக்கைகளுக்கு எடுத்துக்கொள்ளப்படும் நேரத்தின் மதிப்பீட்டினை குறித்துக்காட்டுவதற்காக ஒரு வார்ப்படத்தினை முன்மொழிந்துள்ளது. இந்த வார்ப்படமானது இரண்டு கண்ணோட்டங்களை கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது; நிறைவேற்றவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் ஒவ்வொரு நடவடிக்கைக்காகவும் எடுத்துக்கொள்ளப்படும் நேரத்தினை இயக்கும் வரைகூறுகள். அத்தகைய வரைகூறுகள் “நேர முயற்சி இயக்கிகள்” என பெயரிடப்பட்டுள்ளன. எனவே, ஒவ்வொரு நடவடிக்கைக்கும் எடுத்துக்கொள்ளப்படும் நேரமானது தொடர்புடைய வரைகூறின் (நேர முயற்சி இயக்கி) அளவு / பருமன் ஆகியவற்றில் தங்கியுள்ளது. வரைகூறின் அளவு / பருமனானது கருத்திற்கொள்ளப்படும் ஒவ்வொரு சம்பவத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளப்படும். அளவு / பருமனின் அடிப்படையில், ஒவ்வொரு வரைகூறும் மூன்று உப பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு நடவடிக்கைக்கும், வரைகூறின் ஒவ்வொரு உப பிரிவின் கீழும் நேர முயற்சி வழங்கப்பட்டுள்ளது. இந்த வரம்புறுகையானது ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்குமான வள ஒதுக்கீட்டினை இறுதியாக தீர்மானிப்பதுடன் பகுப்பாய்வு முயற்சிகளின் உகப்புநிலையின் பயன்பாட்டினை இயலுமையாக்கும்.

இதன் பிரகாரம், இவ்வாண்டின்போது 13 கண்காணிப்பு பரிந்துரைத்தல்களும் 2 கண்காணிப்பு குறிப்புகளும் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன் இவை இ.பி.ப.ஆ. இன் கண்காணிப்பு கண்டுபிடிப்புகள், கொ.ப.ப. இடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைத்தல்கள் (இவ்வாண்டின்போது கொ.ப.ப. இடமிருந்து 3 பரிந்துரைத்தல்கள் பெறப்பட்டன) மற்றும் முறையீடுகளின் அடிப்படையிலாகும். (உருவம் 14)

**உருவம்: 14 கண்காணிப்பு பரிந்துரைத்தல்களும் குறிப்புகளும்**




ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து பரிந்துரைத்தல்கள் மற்றும் குறிப்புகள் பின்னர் அவசியமான நடவடிக்கைக்காக புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கப்பட்டன.

சந்தை துர்நடத்தையினை தவிர்க்கும் நோக்குடன், இ.பி.ப.ஆ. முறையான சந்தை வர்த்தக நிலைமையினை உறுதிசெய்வதற்காக பின்வரும் ஏனைய தடுப்பு வழிமுறைகளை பயன்படுத்தியது. அவை எச்சரிக்கை அறிவித்தல்கள், எச்சரிக்கைகள், கூற்றினை பதிவுசெய்வதற்காக அழைப்பு விடுத்தல், எழுத்துமூல விளக்கத்தினைக் கோருதல் மற்றும் துர்நடத்தையின் தீவிரத்தினைப் பொறுத்து தொலைபேசி அழைப்புகளூடாக விசாரணை செய்தல் என்பனவாகும்.

இந்த வழிமுறைகள் சந்தைக்கு எவ்வித தாமதமுமின்றி சாத்தியமான பாதிப்பினை குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, நம்பகத்தன்மையான தடுப்புகளை பரப்புவதற்கும் மற்றும் முதலீட்டுச் சமூகம் நம்பிக்கையினை பெறுவதனை தூண்டுவதற்கும் இ.பி.ப.ஆ. அதன் மரபுரீதியான அணுகுமுறையிலிருந்து ஒரு முன்னேறும் மூலோபாயத்திற்கு மாறியது.

2022 இல் சாத்தியமான சந்தை துர்நடத்தைகளில் விளக்கங்களை கோருவதற்காக 5 இணக்கப்பாட்டு அதிகாரிகள் அல்லது ஒரு உயர் அதிகாரி, 4 முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் 3 முதலீட்டாளர்கள் தொடர்புகொள்ளப்பட்டார்கள். மேலும் 36 சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுக்கான விளக்கங்களை பெறுவதற்காக நாம் முதலீட்டாளர்கள் மற்றும் சந்தை இடையீட்டாளர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்தோம். இதற்கும் மேலாக, சந்தை துர்நடத்தையில் ஈடுபட்டுள்ளதான தோற்றப்பாட்டினைக் கொண்ட நபர்களிடமிருந்து 23 கூற்றுக்கள் பதிவுசெய்தோம் (இது சமூக ஊடக செயற்பாட்டாளர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வலியுறுத்தல் நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்றன).

### சமூக ஊடகங்களை கண்காணித்தல்

புதிய இ.பி.ப.ஆ. சட்டம் நடைமுறைக்கு வந்ததுடன் கண்காணிப்பு செயற்பாட்டின் நோக்கெல்லை விரிவடைந்துள்ளது. சாத்தியமான சந்தை துர்நடத்தை சந்தர்ப்பங்களை இனங்காணவும் செயல்திறனான வழிமுறைகளை எடுப்பதற்காகவும் நாம் பல்வேறு சமூக ஊடக மேடைகளில் பகிர்ந்துகொள்ளப்பட்ட தகவல்களை ஆராய்ந்தோம். வழமையான கண்காணிப்பின்போது, வெவ்வேறு முதலீட்டாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் சமூக ஊடக இடுகைகளை நாம் அவதானித்தோம். இவை விலை இலக்குகள், வாங்குதல் அல்லது விற்றல் குறிகாட்டிகள், பரிந்துரைத்தலுக்கு ஒப்பான கூற்றுக்கள் மற்றும் சமூக ஊடக ஊக்கமளிப்பில் “பங்குப் பரிவர்த்தனை” என்ற தலைப்பு அல்லது குறிப்பின் பயன்பாடு ஆகியவற்றை உள்ளடக்கும்.

இதன் விளைவாக, சாத்தியமான சந்தை துர்நடத்தைகளுடன் இணைந்த சமூக ஊடகத்தின் தவறான பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்காக இ.பி.ப.ஆ. நேரகாலத்துடனான மற்றும் அளவுவாரியான வலியுறுத்தல் நடவடிக்கையினை தூண்டியது. இதன் பிரகாரம், 7 அவதானிப்புகள் தொடர்பாக முதலீட்டாளர்களிடமிருந்து தொலைபேசி அழைப்புகளூடாக உடனடியாக விளக்கங்கள் கோரப்பட்டன. அவதானிப்புகளின் தீவிரத்தினைப் பொறுத்து 11 விடயங்கள் தொடர்பாக கூற்றுக்களது பதிவு ஊடாக விளக்கங்கள் கோரப்பட்டன. கண்காணிப்பு கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், ஆணைக்குழுவானது செயலகத்தினை 7 தனிநபர்களுக்கு முன்னெச்சரிக்கை அறிவித்தல்களையும் 2 தனிநபர்களுக்கு எச்சரிக்கை அறிவித்தல்களையும் வழங்குமாறு பணித்தது. இதனைத்

தவிர, எவ்வித அடிப்படையுமின்றி ஒரு குறுஞ்செய்தியூடாக வாடிக்கையாளர்களுக்கு தவறாக வழிநடத்தும் பரிந்துரைகளை மேற்கொண்டமைக்காக இ.பி.ப.ஆ. ஆல் ஒரு தரகு நிறுவனத்திற்கு முதலாவது நிர்வாகத் தண்டனையாக ரூபா 500,000 நிர்வாகத் தண்டப்பணமாக விதிக்கப்பட்டது.

### வெவ்வேறு கொள்கை விடயங்களில் தலையீடு

மையமாக கண்காணிப்பு செயற்பாடுகளுக்கு மேலாக, சில விதிகள் மற்றும் மேற்பார்வை செயன்முறைகளில் அவதானிக்கப்பட்ட இடைவெளிகளை எடுத்துக்காட்டி ஆணைக்குழுவுக்கு பல பிரதிநிதித்துவங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவை கொ.ப.ப. இன் சில விதிகள் மற்றும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் ஆண்டறிக்கை மீளாய்வுகள் ஆகியவற்றில் அவதானிக்கப்பட்ட இடைவெளிகளை உள்ளடக்குகின்றன

### மனித மூலதனத்தினை கட்டியெழுப்புதல்

கண்காணிப்புச் செயற்பாடானது பெரும்பாலும் பல்வேறு தொழில்நுட்ப கருவிகளை மையப்படுத்தியுள்ளதனால், அமைப்பு முறைகள் பொய்யான சாத்தியங்களை வழங்கும் வாய்ப்பினை கொண்டதாகும். எனவே, சந்தை துர்நடத்தையினை துல்லியமாக கண்டுபிடிப்பதற்கு மனித உணர்வு ஒரு பிரிக்கவியலாத பகுதியாகும். மேலும், அவதானிக்கப்பட்ட அசாதாரணங்கள் மேலதிக புலனாய்வுகளுக்கான பரிந்துரைத்தல்களுக்காக ஒரு அடிப்படை அவசியமா என்று தீர்மானிப்பதற்கு ஆழமான பகுப்பாய்வினை நடாத்துவதற்கு மனித மூலதனம் அவசியமானதாகும். எனவே, சந்தை நடவடிக்கைகளில் மேம்படுத்தலுடன் செயலகமானது மனித மூலதனத்தினை இவ்வருடத்திலும் பலப்படுத்தியது.

மேலாக, இவ்வாண்டின்போது அவசியமான பிரிவுகளில் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் கண்காணிப்பு ஆளணியினரது தொடர்ச்சியான கொள்திறன் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டது.

### தொழில்நுட்ப மேம்படுத்தல்கள்

சந்தை நடவடிக்கையிலான அதிகரிப்பும் வர்த்தக பங்குபற்றுனர்களினால் மேற்கொள்ளப்படும் அதி நுட்பமான வர்த்தக நடத்தையும் கண்காணிப்பு செயற்பாட்டின் பகுப்பாய்வு கொள்திறனை மேம்படுத்துவதற்கான அவசியத்தினை உருவாக்கியது. எனவே, கடந்த ஆண்டில் இ.பி.ப.ஆ. ஒரு பொருத்தமான பகுப்பாய்வுக் கருவி மற்றும் ஏனைய தொழில்நுட்ப சேவைகளை அமுலாக்குவதனை தொடங்கியது. 2022 ஆம் ஆண்டின்போது, இ.பி.ப.ஆ. பகுப்பாய்வுக் கருவிகளின் அமுலாக்கத்தினை நிறைவு செய்ததுடன் இது தற்போது பகுப்பாய்வாளர்கள் சில காரியங்களை குறைவான நேரத்தில் மேற்கொள்வதற்கும் புதிய வரம்புகளினுள் பகுப்பாய்வினை விரிவுபடுத்துவதனையும் இயலுமையாக்கியுள்ளது. இதற்கு ஒத்தாற்போல், இ.பி.ப.ஆ. S&P Capital IQ மேடையினை கொள்வனவு செய்ததுடன் இது ஒரு சில சொடுக்குகளில் பல்வேறு வகையான சந்தை தகவல்களை மீட்டெடுக்கும் இணைய அடிப்படையிலான சேவையினை வழங்குகின்றது. இது தற்போது வெவ்வேறு மூலங்களிலிருந்து தகவல்களை தொகுக்கும் அலுப்பான பணியினை மாற்றீடு செய்கின்றது.

இதற்கும் மேலாக, இ.பி.ப.ஆ. சந்தையில் சமகால மற்றும் சாத்தியமான அபிவிருத்திகளது தேவைகளை சந்திக்கும் நவீன கண்காணிப்பு அமைப்பு முறைகளை மதிப்பீடு செய்வதனை தொடர்ந்தது. புதிய சட்டமானது புதிய கருவிகளது வழங்கலுக்கான நோக்கெல்லையினை தற்போது விரிவாக்கியுள்ளதுடன் புதிய கருவிகளுக்கு இடமளிப்பதற்கான அமைப்பு முறையின் ஆற்றலும் கருத்திலெடுக்கப்பட்டது.

## புலனாய்வுகள்

### வலியுறுத்தல் நடவடிக்கை

ஆணைக்குழுவின் அங்கத்தவர்களது வழிகாட்டல் மற்றும் தீர்மானத்திற்கமைய இ.பி.ப.ஆ. ஆல் வலியுறுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

### எச்சரிக்கை வழங்குதல்

- ஒரு பொது பட்டியலிடப்பட்ட கம்பனியின் பங்குகளில் ஒரு நேரத்தில் 10 பங்குகளுக்கும் குறைவானவற்றை கொள்வனவு செய்து விலை தளம்பல்களை உருவாக்கியமைக்காக ஒரு “காரணங் காட்டு” நடவடிக்கையினை தொடர்ந்து ஒன்பது நபர்கள் இ.பி.ப.ஆ. ஆல் எச்சரிக்கப்பட்டார்கள்.
- சில நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகங்களில் அவ்வர்த்தகங்கள் கையாளும் பண்புடையவையா என்று உறுதிப்படுத்துவதற்காக புலனாய்வுகள் நடாத்தப்பட்டு ஒரு முதலீட்டு ஆலோசகர் எச்சரிக்கப்பட்டார்.
- ஒரு பொது பட்டியலிடப்பட்ட கம்பனியின் பணிப்பாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகங்களில் அவ்வர்த்தகங்கள் உள்ளுறைபவர் வர்த்தகமாக என்று உறுதிப்படுத்துவதற்காக புலனாய்வு நடாத்தப்பட்டு பணிப்பாளர் எச்சரிக்கப்பட்டார்.
- பிரசுரிக்கப்படாத விலை உணர்திறனுடைய தகவலை மற்றுமோர் மூன்றாம் தரப்பினருக்கு தெரியப்படுத்திய ஒரு பொது பட்டியலிடப்பட்ட கம்பனியின் பணிப்பாளர் ஒருவரின் நடத்தையானது பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 32 இன் மீறலா என உறுதிப்படுத்துவதற்காக ஒரு புலனாய்வு நடாத்தப்பட்டு குறித்த பணிப்பாளர் மற்றும் மற்றைய நபர் எச்சரிக்கப்பட்டார்கள்.
- ஒரு பொது பட்டியலிடப்பட்ட கம்பனியின் பணிப்பாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகங்களில் அவ்வர்த்தகங்கள் உள்ளுறைபவர் வர்த்தகமா என்று உறுதிப்படுத்துவதற்காக ஒரு புலனாய்வு நடாத்தப்பட்டு பணிப்பாளர் எச்சரிக்கப்பட்டார்.
- ஒழுங்கான செயன்முறை மற்றும் பங்குத்தரகர் விதிகளை பின்பற்றாமைக்காக ஒரு முதலீட்டு ஆலோசகரும் அவரது பங்குத்தரகு நிறுவனமும் எச்சரிக்கப்பட்டு குறித்த மீறல்களை கண்டுபிடிக்காமைக்காக கொ.ப.ப. இடமிருந்து விளக்கங்கள் கோரப்பட்டன.
- கொ.ப.ப. இன் பங்குத்தரகர் விதிகளினால் தேவைப்படும் பணியாட்கள் வர்த்தகம் மேற்கொள்ளல் தொடர்பான அவரது பங்குத்தரகு நிறுவனத்தில் நடைமுறையிலுள்ள ஆவணப்படுத்தப்பட்டுள்ள செயன்முறையினை பின்பற்றத் தவறியமைக்காக ஒரு முதலீட்டு ஆலோசகர் எச்சரிக்கப்பட்டார்.
- ஒரு பொது பட்டியலிடப்பட்ட கம்பனியின் தலைவரின் சார்பில் காரணங் காட்டல்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட பதில்கள், வாய்மூல மற்றும் எழுத்துமூல சமர்ப்பிப்புகள் மற்றும் இரண்டு சந்தர்ப்பங்களில் இந்த தொடர்புடைய நபரினால் குறித்த பொது பட்டியலிடப்பட்ட கம்பனியின் பங்குகளை கொள்வனவு செய்தமை என்பன ஆணைக்குழுவினால் விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டு அவருக்கு சில நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு ஒத்த நடத்தையிலிருந்து விலகியிருக்குமாறு ஒரு எச்சரிக்கையினை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இது அந்நபர் குறித்த குழுமத்தினுள்ள கம்பனிகளுடன் தொடர்புடைய நபர்களினால் பங்குகளில் வர்த்தகத்தின் நேரம் தொடர்பான முறைமைப்படுத்தல் அக்கறைகளை விளித்துரைப்பதற்காக குறித்த கம்பனிகள் குழுமத்தினுள் அமுலாக்குவதாக பொறுப்பேற்ற ஒரு இணக்கப்பாட்டு திட்டத்தினை விவரிக்கும் ஒரு ஆவணத்தின் சமர்ப்பிப்பினையும் உள்ளடக்கும்.

# செயற்பாட்டு மீளாய்வு

- ஒரு முறையான அடிப்படையின்றி கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பிணையங்களது வர்த்தகத்திலான பரிந்துரைகள் மற்றும் கருத்துக்களை மேற்கொண்டமை மற்றும் சமூக ஊடகத்தில் சில பதிவேற்றங்களை பிரசுரித்தமைக்காக ஒரு முதலீட்டாளர் எச்சரிக்கப்பட்டார்.

## விளக்கம் கோரும் அறிவிப்பின் வழங்கல்

- ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிக்கும் அதன் பணிப்பாளர்கள் சபைக்கும் "விளக்கம் கோரல்" அறிவிப்பானது பின்வரும் காரணங்களுக்காக வழங்கப்பட்டது. செப்டம்பர் 2022 இல் கம்பனியின் சிரேஷ்ட பிணைசாரா மீட்கத்தகு பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்களுக்கும் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிக்கும் பதிவீடளிக்கப்பட்ட கடன் தரப்படுத்தல் முகவரினானல் வழங்கப்பட்ட கடன் தரப்படுத்தல் மாற்றமான [SL] A+ (எதிர்மறை) இலிருந்து [SL] A (எதிர்மறை) தக்க நேரத்தில் வெளிப்படுத்தத் தவறியமைக்காக இ.பி.ப.ஆ. அதற்கெதிராக ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று விளக்கமளிக்குமாறு அனுப்பப்பட்டது.
- ஒரு புலனாய்வின் கண்டுபிடிப்பினைத் தொடர்ந்து இரண்டு தனிநபர்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட ஒரு பொதுக் கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு 1995 இன் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையின் விதி இலக்கம் 31 (3) இனை சாட்டிய மீறலுக்கு மற்றும் அதற்கு உதவியமைக்கு மற்றும் அல்லது சூழ்ச்சிசெய்தமைக்காக விளக்கம் கோரப்பட்டது.
- நான்கு பணிப்பாளர்கள், ஒரு தனியார் கம்பனி மற்றும் பொது பட்டியலிடப்பட்ட கம்பனி ஆகியவற்றுக்கு ஒரு காலப்பகுதியில் கம்பனி தொடர்பான பிரசுரிக்கப்படாத விலை உணர்திறன் தகவல்களை வைத்திருந்த சமயம் பல சந்தர்ப்பங்களில் பங்குகளை கொள்வனவு செய்தும் கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளது சாட்டிய மீறலுக்காகவும் விளக்கம் கோரப்பட்டது.
- ஒரு புலனாய்வின்போது சாட்டப்பட்ட பொய்யான மற்றும் தவறாக இட்டுச்செல்லும் தகவல்களை வழ்ங்கியமைக்காக ஒரு நபரிடம் விளக்கம் கோரப்பட்டதுடன், பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் கோவையினை விதி இலக்கம் 31 (1) (பி) இனை மீறியமைக்காக ஒரு கம்பனியின் பணிப்பாளர்களாக ஏனைய எண்மரிடமிருந்து விளக்கம் கோரப்பட்டது.
- ஒரு புலனாய்வின் கண்டுபிடிப்பினைத் தொடர்ந்து இ.பி.ப.ஆ. இன் விதி 12 இனது சாட்டிய மீறலுக்காக பதின்மூன்று தனிநபர்களிடமிருந்து விளக்கம் கோரப்பட்டதுடன் அதற்கு உதவியாயும் உடந்தையும் இருந்த ஒரு நபரிடமிருந்து விளக்கம் கோரப்பட்டது. கொ.ப.ப. இன் பங்குத்தரகர் விதிகளது முறையான செயன்முறையினை பின்பற்றாதமைக்காக ஒரு பங்குத்தரகு கம்பனிக்கு விளக்கம் கோரல் அனுப்பப்பட்டது.
- பிரசுரிக்கப்படாத விலை உணர்திறனுடைய தகவலை வைத்திருக்கும் சமயம் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியுடன் தொடர்புடைய ஒருவர் அதன் பங்குகளது சாட்டப்பட்ட கொள்வனவிற்காக ஒரு தனிநபருக்கு விளக்கம் கோரல் அனுப்பிவைக்கப்பட்டது.
- கண்காணிப்புப் பிரிவின் கண்டுப்பிடிப்புகளைத் தொடர்ந்து கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்ட சில பிணையங்கள் தொடர்பாக அவரது தனிப்பட்ட டுவிட்டர் கணக்கில் தரவேற்றம் செய்யப்பட்ட அவரது செய்திகளுக்காக விளக்கம் கோரல் அனுப்பப்பட்டது. இது முதலீட்டாளர்களை அந்த பிணையங்களில் வர்த்தகம் செய்வதற்கு தூண்டும் முயற்சியான தோற்றத்தினை வழங்கியது.

## தவறுகளது ஒத்திணங்கல்கள்

- பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 12 இன் கீழ் ஒரு தவறான சந்தை கையாளுகைத் தவறொன்றினை ஒத்திணங்குவதற்கு ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் உடன்பட்டார்கள். இது இரண்டு பட்டிலிடப்பட்ட பொது கம்பனிகளின் பங்குகள் தொடர்பானது என்பதுடன் இரண்டு தனிநபர்கள் ஒவ்வொரு தவறுக்கும் அவர்களது கொடுப்பனவான ரூபா 3.3 மில்லியனுடன் மேற்கொண்ட விண்ணப்பங்களுக்காகும். ஒரு தனிநபரது தவறு தொடர்பாக இ.பி.ப.ஆ. இற்கு அவரது கொடுப்பனவான ரூபா 6.6 மில்லியன் தொகையுடன் ஒத்திணக்கம் செய்யப்பட்டு இது 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க அப்போதைய சட்டத்தின் பிரிவு 51 ஏ இன் பிரகாரம் ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டது. இரண்டாம் நபர் குறித்த தொகையினை இன்னமும் செலுத்தவேண்டியுள்ளது. அவர் ஒத்திணங்குவதற்கு தவறியமைக்காக அவருக்கெதிராக வழக்கு தொடரப்படும்.
- 2001 இன் இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 12 இனை மீறியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு தனிநபர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு விண்ணப்பத்தின் பேரில் ஆணைக்குழு குறித்த தவறுகளை ஒவ்வொருவருக்கும் ரூபா 3.3 மில்லியனுக்கு ஒத்திணங்குவதற்கு அங்கீகாரம் அளித்தது. ஒரு தனிநபர் ஒத்திணங்கல் தொகையான ரூபா 3.3 மில்லியனை தீர்ப்பனவு செய்தமையினை தொடர்ந்து ஒத்திணக்கம் செய்யப்பட்டது. மற்றைய நபரினால் அவரது ஒத்திணங்கல் தொகையில் ஒரு குறைப்பினை மேற்கொள்ளுமாறு மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் நிராகரிக்கப்பட்டு அது அவருக்கு அறிவிக்கப்பட்டது.

## எச்சரிக்கைகள்

- கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் வர்த்தகம் செய்யப்பட்ட பிணையங்களுக்கான விலைக்கு அல்லது சந்தைக்கு ஒரு பொய்யான தோற்றத்தினை வழங்கக்கூடிய வர்த்தக அமைப்பினை கடைப்பிடித்தல் மற்றும் ஈடுபடுவதற்கு எதிராக ஒரு சிற்றளவு முதலீட்டாளர் எச்சரிக்கப்பட்டார்.
- கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் வர்த்தகம் செய்யப்பட்ட பிணையங்களைப் பற்றி சமூக ஊடகங்களில் கருத்துக்களை மேற்கொண்டமைக்கு எதிராக இரண்டு சிற்றளவு முதலீட்டாளர்களுக்கு எதிராக எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இது அந்த பிணையங்கள் தொடர்பாக ஏனைய முதலீட்டாளர்கள் முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்வதற்கு செல்வாக்கு செலுத்தப்படலாம் என்பதுடன் அந்த பிணையங்கள் தொடர்பாக ஒரு பொய்யான சந்தையினை உருவாக்குதல் நோக்கி பங்களிப்பு செய்யலாம் என்ற விதத்திலாகும்.

## நிர்வாகத் தண்டப்பணம் விதிப்பு

இ.பி.ப.ஆ. இன் விளக்கம் கோரலுக்கான பதில்களை கேட்டறிந்ததன் பின்னர் ஒரு பயிற்சி முதலீட்டு ஆலோசகருக்கும் அவரது பங்குத்தரகு நிறுவனத்திற்கும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் தீர்மானத்தின் பிரகாரம் நிர்வாக தண்டப்பணங்கள் விதிக்கப்பட்டன. இது வாடிக்கையாளர்களுக்கு ஒரு குறிப்பிட்ட பட்டியலிடப்பட்ட பிணையம் தொடர்பாக எவ்வித அடிப்படையுமின்றி பரிந்துரைகளை மேற்கொண்டமை மற்றும் அதன் விலையில் எதிர்மறையான தாக்கத்தினை உருவாக்கியமை தொடர்பாக பங்குத்தரகு நிறுவனத்தினால் பின்பற்றப்படும் செயன்முறையினை கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 112 (1) இனை மீறியுள்ளமைக்காக, பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 178 (1) (ii) ஏற்பாடுகளுக்கமைய பங்குத்தரகு நிறுவனத்திற்கு ஒரு தண்டப்பணமாக ரூபா 500,000/- விதிக்கப்பட்டது மற்றும் பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 178 (1) (i) இன் பிரகாரம் இ.பி.ப.ஆ.

இனால் உரிமமளிக்கப்பட்ட ஒரு பங்குத்தரகராக அதன் நடவடிக்கைகளை நடாத்துவது தொடர்பான நடைமுறைகளை அவதானித்து இணங்குமாறு பணிக்கப்பட்டார்கள். மேலும், குறித்த நிறுவனத்தினால் நியமிக்கப்பட்டுள்ள பயிற்சி முதலீட்டு ஆலோசகர் பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 178 (1) (iii) இற்கமைய பி.ப.ஆ. சட்டத்தினை பிரிவு 112 (1) இனது மேற்குறிப்பிட்ட மீறல் தொடர்பான அவரது நடத்தைக்காக கண்டிக்கப்பட்டார்.

## வழக்காடல்கள்

### இ.பி.ப.ஆ. எதிர் எம்.ஐ.சம்சுதீன் மற்றும் எம். பி. நிஷார் - MC S/5322/17

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 113 (பி) மற்றும் 102 இனை 18 டிசம்பர் 2001 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு விதிகளில் விதி இலக்கம் 12 இனையும் சேர்த்து வாசித்து இவற்றின் கீழ் தண்டிக்கத்தகு சந்தை/விலை கையாளுகைக்கு சதி செய்தமை மற்றும் சந்தை/விலை கையாளுகையினை செய்தமைக்காக மேற்குறிப்பிட்ட வழக்கினை இ.பி.ப.ஆ. கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் எம். இம்தியாஸ் சம்சுதீன் மற்றும் பாவிக் நிஷார் என்பவர்களுக்கெதிராக தாக்கல் செய்தது.

இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### மெக்பெக் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் எதிர் இ.பி.ப.ஆ. - HCMCA 217/2007

இ.பி.ப.ஆ. விதிகளுக்கு முரணாக சில முக்கியமான தகவல்களை உடனடியாக வெளிப்படுத்தாமைக்காக அறிவுபடைத்த கொழும்பு கோட்டை நீதிவான் அவர்களினால் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்ட நான்கு குற்றஞ் சுமத்தப்பட்டவர்கள் தீர்ப்புக்கும் அவர்களது தண்டனைத் தீர்ப்புக்கும் எதிராக மாகாண மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்கள். நீதிமன்றமானது மூன்று குற்றஞ் சுமத்தப்பட்டவர்களுக்கு எதிரான தீர்ப்பினை மீளுறுதிபடுத்தியது ஆனால் ஒரு தண்டப்பணமாக ரூபா 2.5 மில்லியனை விதிப்பதன் மூலம் மேன்முறையீட்டிலுள்ள தண்டனைத் தீர்ப்பினைக் குறைத்தது.

அறிவுபடைத்த நீதிவான் அவர்களினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனைத் தீர்ப்பு இரண்டிற்கும் எதிராக 6ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர் தொடர்ந்தும் மேன்முறையீடு செய்துள்ளதுடன் மேல் நீதிமன்றத்தின் அறிவுபடைத்த நீதவான் அவர்கள் 30 ஜுன் 2022 இல் 6 ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரது மேன்முறையீட்டிற்கு அனுமதி வழங்கியதுடன் அறிவுபடைத்த நீதிவான் அவர்களது தீர்ப்பினையும் தண்டனைத் தீர்ப்பினையும் தள்ளி வைத்தார்.

### இ.பி.ப.ஆ. எதிர் லங்கா கன்னங்கர, கபில சேனாரத், பாரிக் வுர்கான், மற்றும் ரவீந்திர மல்லவாரச்சி, MC/Fort/13736/19

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 113(பி) மற்றும் 102 மற்றும் 2001 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்டவாறான இ.பி.ப.ஆ. விதிகளில் விதி இலக்கம் 12 இல் ஓர் தண்டிக்கத்தகு தவறாகக் கருதப்படும் சந்தை கையாளுகை, சந்தை கையாளுகையினை செய்வதற்கு கூட்டு சதி செய்தமை மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக நான்கு முதலீட்டு ஆலோசகர்களுக்கு எதிராக 2019 இல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### டபிள்யு.கே.எச். வெகாபிட்டிய மற்றும் திலக் டி சில்வா எதிர் சிந்தக்க மென்டிஸ் HCRA 28/22

இ.பி.ப.ஆ. இனால் தாக்கல் செய்யப்பட்ட நீநீ /கோட்டை / 16967 / 20 இலக்கத்தினை கொண்ட வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட இருவரினால் அறிவுபடைத்த நீதிவான் அவர்களது விசாரணையினை தொடர்வதற்கான கட்டளைக்கு எதிராக ஒரு மீட்டல் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### சிந்தக்க மென்டிஸ் எதிர் டபிள்யு.கே.எச். வெகாபிட்டிய, திலக் டி சில்வா மற்றும் தக்ஷிலா ஹுலங்கமுவ, MC/Fort/16967/20

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 113(பி) மற்றும் 102 மற்றும் 2001 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்டவாறான இ.பி.ப.ஆ. விதிகளில் விதி இலக்கம் 12 இல் ஓர் தண்டிக்கத்தகு தவறாகக் கருதப்படும் சந்தை கையாளுகை, சந்தை கையாளுகையினை செய்வதற்கு கூட்டு சதி செய்தமை மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக மேற்குறிப்பிடப்பட்ட நபர்களுக்கு எதிராக 2020 இல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### இ.பி.ப.ஆ. எதிர் சேன யத்தெஹிகே மற்றும் எஸ். தினமணி, MC/Fort/12639/19

1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்டவாறு பிரிவு 32 இனை தண்டனைக் கோவையின் பிரிவு 102 உடன் சேர்த்து வாசிக்கும்போது உள்ளுறைபவர் வர்த்தகம் மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக கலாநிதி. சேன யத்தெஹிகே மற்றும் திரு. சுப்பிரமணியம் தினமணி ஆகியோருக்கெதிராக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### சேன யத்தெஹிகே எதிர் இ.பி.ப.ஆ., மே.நீ./பேராணை/417/2017

### சேன யத்தெஹிகே எதிர் இ.பி.ப.ஆ., உநீ/விசேடம் /LA 100/19 (இவ்விரண்டும் இ.பி.ப.ஆ. எதிர் சேன யத்தெஹிகே மற்றும் எஸ். தினமணி, நீநீ/கோட்டை/12639/19 உடன் இணைந்ததாகும்)

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் கலாநிதி. சேன யத்தெஹிகே மற்றும் திரு. சுப்பிரமணியம் தினமணி ஆகியோருக்கெதிராக உள்ளுறைபவர் வர்த்தகம் மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு மறுமொழியாக முதலாவது குற்றம் சுமத்தப்பட்டவர் இ.பி.ப.ஆ. க்கு எதிராக ஓர் பேராணை விண்ணப்பத்தினை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன் ஏனையவற்றுக்கிடையில் நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் உள்ள நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு வேண்டி தாக்கல் செய்தார். மேன்முறையீட்டு நீதிமன்றமானது நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் உள்ள நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு மறுப்பு தெரிவித்து கட்டளையினை வழங்கியதுடன் அறிவித்தல் வழங்கலில் எழுத்துமூல சமர்ப்பணங்களை தாக்கல் செய்யுமாறு வேண்டியது.

# செயற்பாட்டு மீளாய்வு

அதன்பின்னர், பேராணை விண்ணப்பம் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட கட்டளைக்கு எதிர்ப்பு தெரிவித்து குற்றஞ்சாட்டப்பட்டவர் உயர்நீதிமன்றத்திற்கு விசேட அனுமதிக்காக மேன்முறையீடு செய்தார். சத்தியம் மற்றும் உறுதிப்படுத்தல் கட்டளைச்சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டின் தூதரகச் செயற்பாடுகள் சட்டத்திற்கமைய விண்ணப்பதாரியினால் நீதிமன்றத்தின் முன்னே சத்தியக்கடதாசி முறையாகத் தாக்கல் செய்யப்படவில்லை, காணப்படவில்லை என்ற ஆட்சேபனையை இ.பி.ப.ஆ. முன்வைத்தது. ஆரம்ப ஆட்சேபனைகளிலான கட்டளையினை நீதிமன்றம் ஒதுக்கி வைத்ததுடன் நீதவான் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னால் உள்ள நடவடிக்கைகள் உயர்நீதிமன்றத்தின் கட்டளை வரும் வரை நிறுத்திவைக்கப்பட்டன. உயர்நீதிமன்றத்தின் கட்டளையானது நிலுவையிலுள்ளது.

### டலிப் தவ்வீக் அல் நகீப் எதிர் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு (வழக்கு இலக்கம் WP/HCCA/LA/COL/158/17 (LA), DSP/20/2016)

விண்ணப்பதாரி ஓர் பட்டியலிடப்படா கம்பனியின் விடயங்களில் புலனாய்வுகளை நடாத்துமாறு ஓர் கட்டளையினை வேண்டி இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. க்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் முன்னால் ஓர் விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார். இவ்விடயமானது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் கலைக்கப்பட்டது.

இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஆகியவற்றுக்கு எதிராக டலிப் தவ்வீக் அல் நகீப் அவர்களினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இலக்கம் DSP/20/2016 இல் மதிப்பிற்குரிய கொழும்பு மாவட்ட நீதிபதியினால் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையிடுவதற்கான அனுமதி வேண்டி மேற்குறிப்பிட்ட மேல் நீதிமன்றத்தில் விண்ணப்பதாரி வழக்கினை தாக்கல் செய்தார்.

குறிப்பிட்ட மேன்முறையீடானது நிலுவையிலுள்ளது.

### S.C.F.R. விண்ணப்ப இலக்கம் 182/2021 – பொறியியலாளர் ஜி. கபில ரேணுக்க பெரேரா எதிர் மதிப்பிற்குரிய சட்டமா அதிபர் மற்றும் இ.பி.ப.ஆ. உள்ளடங்கலான 32 ஏனையோர்

விண்ணப்பதாரி உயர் நீதிமன்றத்தில் செலன்டிவா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட் மற்றும் இ.பி.ப.ஆ. (07ஆவது பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது) உள்ளடங்கலாக ஏனைய 32 பேருக்கு எதிராக பின்வருவனவற்றை வேண்டி ஓர் அடிப்படை உரிமை விண்ணப்பத்தினை தாக்கல் செய்துள்ளார். ஏனையவற்றுக்கிடையில், அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட (இலங்கையின் சகல அனைத்து பிரஜைகளும் உள்ளடங்கலாக) விண்ணப்பதாரியின் 1 அல்லது அதற்கு மேற்பட்ட அடிப்படை உரிமைகளில் ஓர் உடன்நிகழக்கூடிய மீறலாக வெளிப்படுத்தலுக்காகும்.

விண்ணப்பதாரி செலந்திவ இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட் இனை (இது பொருத்தமான மறுசீரமைப்பினூடாக உச்ச செயற்திறன் மட்டத்திற்கு அரச உடைமையான விருந்தோம்பல் நிறுவனங்களை மாற்றுவதற்கான பிரதான குறிக்கோளினைக் கொண்டுள்ள ஓர் புதிய அரச உடைமையான ஆதன அபிவிருத்தி கம்பனியாகும்) நிறுவிய 06 மார்ச் 2020 திகதியிடப்பட்ட அமைச்சரவையின் தீர்மானத்தினை வெற்றும் வரிதுமானதாக்குமாறு ஓர் வெளிப்படுத்தலை வேண்டுகின்றார். திறைசேரியானது கம்பனியின் 100% உரித்துவத்தினைக் கொண்டுள்ளது.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் செலந்திவ இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட்டினை இ.பி.ப.ஆ. பட்டியலிடுவதற்கு அனுமதிப்பதிலிருந்து இ.பி.ப.ஆ. இனை தடைசெய்யும் ஓர் இடைக்காலக் கட்டளை வேண்டப்பட்டது.

இவ்விடயமானது உச்ச நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### மே.நீ. (பேராணை) விண்ணப்பம் இலக்கம் 148/2021: எம்.ஏ.சி.ஈ. மந்திரிரத்ன எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் 14 ஏனையோர்.

விண்ணப்பதாரி இந்த விடயத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதிகேள் பேராணை மற்றும் ஆணையீட்டெழுத்தாணை வழங்குவதற்காக ஓர் விண்ணப்பத்தினை தாக்கல் செய்துள்ளார். இது ஓர் பணியாளுக்கு பதவியுயர்வினை வழங்கும் இ.பி.ப.ஆ. இன் தீர்மானத்தினை நீக்குமாறும் மற்றும் அதற்குப்பதிலாக விண்ணப்பதாரியை பதவியுயர்த்துமாறு இ.பி.ப.ஆ. இல் ஓர் பணிப்புறுத்தலை வேண்டியும் அல்லது மாற்றுவழியாக விண்ணப்பதாரியை முகாமையாளர் பதவிக்கு, முகாமையாளர் பதவிக்கு ஏற்கனவே நியமிக்கப்பட்ட பணியாளுக்கு மேலாக விண்ணப்பதாரியை நியமிப்பதன்மூலம் பதவியுயர்வினை வழங்குவதை வேண்டியாகும்.

மீளாய்வாண்டின் இறுதியில் இவ்வழக்கானது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### வழக்கு இலக்கம் : உநீ (விசேட) LA விண்ணப்பம் இலக்கம் 177/2020

விண்ணப்பதாரி கம்பனியான பஞ்சலிங்கம் எசோஸியேஸன் (பிரைவேட் ) லிமிட்டட் எச்.என்.பி. பி.எல்.சி. இன் கம்பனியினால் வைத்திருக்கும் பங்குகள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட சில பணிப்புரைகளுக்கு எதிராக உறுதிகேள் பேராணைக்காக ஓர் விண்ணப்பத்தினை தாக்கல் செய்தது. விண்ணப்பதாரி கம்பனி இலங்கை மத்திய வங்கியினது பணிப்புரைகளை ஒதுக்கிவைக்குமாறு வேண்டுகின்றது. நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், வங்கி மேற்பார்வை பிரிவின் இரண்டு பணிப்பாளர்கள் மற்றும் இ.பி.ப.ஆ. உள்ளடங்கலாக ஏனைய நால்வர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளார்கள். மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் பேராணையினை வழங்குவதற்கு மறுக்கப்பட்டதனால், விண்ணப்பதாரி கம்பனி உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கான விசேட அனுமதிக்கு தாக்கல் செய்துள்ளது. இ.பி.ப.ஆ. இடமிருந்து எவ்வித நிவாரணமும் கோரப்படவில்லை. இந்த விடயமானது உயர்நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### நகர அபிவிருத்தி அதிகாரசபை (ந.அ.அ.) எதிர் ஒனாலி ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. – மே.நீ. (சிவில்)/11/2021/ CO

ஒனாலி ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. இன் 5% இற்கும் குறையாத பங்குகளை வைத்துள்ள ஓர் பங்குதாரரான ந.அ.அ. கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 225 இன் கீழ் அதே சட்டத்தின் பிரிவுகள் 226, 520 மற்றும் 521 உடன் சேர்த்து வாசித்து, ஒனாலி ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. க்கு எதிராக ஓர் விண்ணப்பத்தினை தாக்கல் செய்தது. இங்கு ஒனாலி ஹோல்டிங்ஸின் நடவடிக்கைகள் கம்பனியின்

நலன்களுக்கு முரணான விதத்தில் நடாத்தப்படுவதாகவும் சமீபத்தில் ஒரு கட்டாயக் கொடைமுனைவின் மூலம் ஒனாலி ஹோல்டிங்ஸ் பி.எல்.சி இனை பொறுப்பேற்ற லங்கா ரியலிட்டி இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி. இனால் பங்குகளது உரித்துவத்தினூடாக கம்பனியின் கட்டுப்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது என குற்றம் சுமத்தப்பட்டது.

ந.அ.அ., ஒனாலி ஹோல்டிங்ஸ் பி.எல்.சி., லங்கா ரியலிட்டி இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி, ரேணுகா கெப்பிட்டல் பி.எல்.சி, பி.டபிள்யு கோர்ப்பரேட் செக்கடேரியல் (பிரைவேட் ) லிமிட்டட் ஆகியோரை முறையே 1 முதல் 5 ஆவது பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளதுடன் இ.பி.ப.ஆ. 06ஆவது பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

## "இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகள், அதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட விதிகள் மற்றும் / அல்லது ஒழுங்குவிதிகளில் சந்தேகத்திற்கிடமான மீறல்களில் இ.பி.ப.ஆ. புலனாய்வுகளை நடாத்துகின்றது."

### கெப்பிட்டல் ட்ரஸ்ட் ஹோல்டிங்ஸ் மற்றும் துஷான் ஹர்ச மென்டிஸ் விக்கிரமசிங்க எதிர் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபரி (CA (W) 465/2022)

இ.பி.ப.ஆ. இற்கு எதிராக விண்ணப்பதாரிகளினால் தாக்கல் செய்யப்பட்ட பேராணை விண்ணப்பமானது ஏனையவற்றுக்கிடையில், திரு. விக்கிரமசிங்க இ.பி.ப.ஆ. இன் விதி இலக்கம் 12 இனை மீறியுள்ளார் மற்றும் அவருக்கெதிராக குற்றவியல் நடவடிக்கைகளை தாக்கல் செய்யும் இ.பி.ப.ஆ. இன் தீர்மானத்தினை நீக்குமாறு உறுதிகேள் பேராணையினை வழங்குமாறு வேண்டியுள்ளதுடன் இவ்விண்ணப்பமானது விண்ணப்பதாரிகளது சட்டவுரைஞர்களால் துணையளிப்பதற்கு நிச்சயிக்கப்பட்டுள்ளதுடன் இது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### சிந்தக்க மென்டிஸ் எதிர் நிஹால் ரதெல்ல நீநீ/கோட்டை/23337/22

ஒரு புலனாய்வின்போது எடுக்கப்பட்ட கூற்றுக்களது பதிவின்போது இ.பி.ப.ஆ. ஒரு கூற்றினை வழங்கும்போது பொய்யான அல்லது தவறாக இட்டுச்செல்லும் தகவலை வழங்கியமைக்காக திரு. நிஹால் ரத்தெல்லவிற்கு எதிராக 2022 இல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் முன் சட்ட நடவடிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இது 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்டவாறு பிரிவு 46ஏ (1) 32 இனை தண்டனைக் கோவையின் பிரிவு 102 உடன் சேர்த்து வாசிக்கும்போது மீறியமைக்காகும்.

இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

### முறையீடுகள் குறைதீர்த்தல் முறைமை

பட்டியலிடப்பட்ட கம்பனிகள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறையீடுகளது நிலவரம் மற்றும் அவற்றுக்கான குறைதீர்த்தல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன: (உருவம்: 15)

**உருவம் 15: பட்டியலிடப்பட்ட கம்பனிகள் தொடர்பான முறையீடுகள் மற்றும் விடயங்களை கையாண்டமை**

| முறையீட்டின் தன்மை | கையாண்ட முறையீடுகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை / தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையினது நடத்தை | 5 | அனைத்து விடயங்களும் பொருத்தமானவாறு முடிவுறுத்தப்பட்டன |
| பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் நடத்தை | 6 | 04 விடயங்கள் பொருத்தமானவாறு முடிவுறுத்தப்பட்டன. |
| இ.பி.ப.ஆ. விதிகள் /கொ.ப.ப. பட்டியலிடல் விதிகளுடன் இணங்கியொழுகாமை | 1 | விடயமானது தற்போது நிலுவையிலுள்ளது. |
| ஏனைய நிர்வாக விடயங்கள் | 8 | அனைத்து விடயங்களும் பொருத்தமானவாறு முடிவுறுத்தப்பட்டன |
| பிரயோகிக்கப்படவேண்டிய நிதியியல் அறிக்கையிடல் வரம்புறுகையுடன் இணங்கியொழுகாமை | 1 | விடயமானது பொருத்தமானவாறு முடிவுறுத்தப்பட்டது. |
| | 21 | |

# செயற்பாட்டு மீளாய்வு

## மூலதனச் சந்தை அபிவிருத்தி

மூலதனச் சந்தைகள், வணிகங்களுக்கு நிதியளித்தல், தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல், சொத்துக்களின் உரித்துடைமையினை பரவலாக்குதல் மற்றும் நீண்டகால சேமிப்புகளுக்கு விளைவுகளை உருவாக்குதல் என்பவற்றில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது. மீளாய்வாண்டின்போது, இலங்கை மூலதனச் சந்தையின் நிலத்தோற்றத்தினை உருமாற்றும் குறிக்கோளுடன் இ.பி.ப.ஆ. ஒரு வினையூக்க பங்களிப்பினை வழங்கி பல்வேறு அபிவிருத்தி முன்னெடுப்புகளை பொறுப்பேற்றது. இவ்வாண்டின்போது வசதியளிக்கப்பட்ட முக்கிய அபிவிருத்தி முன்னெடுப்புகள் பின்வருமாறு:

### பங்குச் சந்தை செயற்பாடுகளின் டிஜிட்டல் உருமாற்றம்

மூலதனச் சந்தை வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாக குறிப்பிடும் வகையில், பங்குச் சந்தை செயற்பாடுகளின் முனையம் இருந்து முனையம் வரையான டிஜிட்டல் மயமாக்கலானது மூன்று கட்டங்களில் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது. இந்த முன்னெடுப்பானது, இ.பி.ப.ஆ. இன் தலைவரினால் இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு கூட்டுக்குழுவின் நியமனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இது சந்தையின் சௌகரியம் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக என்பதுடன், மிகவும் தொழில்நுட்ப அறிவுடைய இளம் சந்ததி முதலீட்டாளர்களின் உள்வருகையினை விளைவித்தது.

பங்குச் சந்தையிலான இந்த டிஜிட்டல் உருமாற்றமானது சந்தை நடவடிக்கை மட்டங்களை மேம்படுத்துவதில் சாதகமாக பங்களித்துள்ளது. இது மொபைல் செயலியின் ஆரம்பத்தின் பின்னர், சிற்றளவு முதலீட்டாளர்களின் பங்குபற்றலில் கணிசமான அதிகரிப்பினூடாக தெளிவாகியது. இந்த முன்னெடுப்பின் கீழான டிஜிட்டல் உருமாற்றமானது இயங்கலையூடாக பல்வேறு எண்ணிக்கையிலான பங்குச் சந்தை செயற்பாடுகளின் நிறைவேற்றலினை இயலுமையாக்கியதுடன், இது ஒட்டுமொத்த மூலதனச் சந்தை தோற்றத்தினை புத்துயிர்ப்படுத்தியது. மூன்றாம் கட்ட "இலங்கையின் மூலதனச் சந்தை - த ஒடிசி" இன் கீழ் பின்வரும் டிஜிட்டல்மயமாக்கல் முன்னெடுப்புகள் நிறைவுசெய்யப்பட்டன:

மொபைல் செயலியூடாக (பங்குத்தரகு நிறுவனங்களூடாக) வெளிநாட்டு தனிநபர்களை உள்ளீர்த்தல் மற்றும் ஒரு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் ச.மு.கணக்குகளை திறக்குமாறு வேண்டக்கூடிய ஆற்றல்

- பங்குத்தரகர் ம.வை.தி. கணக்கு ஆரம்பித்தல்
- ஒவ்வொரு பங்குத் தரகு நிறுவனமும் தனியாக கொ.ப.ப. மொபைல் செயலியுடன் இணைப்பதற்கான நிரல் பயன்பாட்டு இடைமுகம்
- கொ.ப.ப. மொபைல் செயலி - மும்மொழி அம்சம்
- இலாபம் மற்றும் நட்ட வசதி
- இ-ஆரம்ப பொது வழங்கல் (ஆ.பொ.வ.) வலைவாசல்
- இ-கனெக்ட் அறிக்கைகள் கொள்வனவுகள்
- எல்லைக்கடன் கணக்கு திறத்தல்கள்
- தனிப்பட்ட மாற்றல்கள் (எல்லைக்கடன் வர்த்தகத்தின் பயன்பெறும் உடைமை மாற்றங்கள் காணப்படும்போது)
- கூட்டாண்மை நடவடிக்கை நிகழ்வு நாள்காட்டி
- நியமனங்கள்
- இ-கொடைமுனைவுகள் / மீள்கொள்வனவு
- இ-உரிமைகள் (முதலாம் கட்டம் - ஒதுக்கீட்டு கடிதம் டிஜிட்டல்மயமாக்கல்)
- யுனிட் ட்ரஸ்ட்களில் உள்ளீர்த்தல்கள்

### கொ.ப.ப. இல் ம.எ.த. பொறிமுறையின் அமுலாக்கத்திற்கு வசதியளித்தல்

கொ.ப.ப. இனால் வி.எ.கொ. பொறிமுறையின் வெற்றிகரமான அமுலாக்கத்துடன், அடுத்த கட்டமாக சந்தையில் வர்த்தகத்தின் பின்னரான இடரினை வினைத்திறனாக முகாமைப்படுத்துவதற்காக ஒரு ம.எ.த. பொறிமுறையின் அமுலாக்கம் காணப்படுகின்றது. இதனை நோக்கி, இ.பி.ப.ஆ. இன் அங்கத்தவரான திரு. சுனில் லங்காதிலக்கவின் தலைமையில் இந்த முன்னெடுப்பினை வழிநடத்துவற்காக ஒரு இ.பி.ப.ஆ. - கொ.ப.ப. கூட்டுக்குழுவானது ஜனவரி 2022 இல் இ.பி.ப.ஆ. இன் தலைவரினால் நியமிக்கப்பட்டது. முன்னெடுப்பிற்கு உதவுவதற்கான உலக வங்கியின் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் திட்டத்தின் கீழ் (நி.து.ந.தி.) பெறப்பட்ட ஆலோசகரிடமிருந்தான தொழில்நுட்ப உதவி மற்றும் கூட்டுக்குழுவின் வழிநடத்தலின் கீழ், ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் ம.எ.த. அமைப்புமுறையின் அமுலாக்கத்திற்கான கொள்கை வரம்புறுகை முடிவுறுத்தப்பட்டது. இதன் பிரகாரம், கொ.ப.ப. அமைப்புமுறை உட்கட்டமைப்பின் தரமுயர்த்தலை ஆரம்பித்ததுடன் மற்றும் தற்போது கொ.ப.ப. விற்பனையாளருடன் அமைப்புமுறை தரவரைவுகளை முடிவுறுத்தும் செயன்முறையிலுள்ளது. பிரேரிக்கப்படும் மாதிரியில் துறைசார் கலந்துரையாடல்களையும் கொ.ப.ப. நடாத்தியுள்ளது. அமைப்புமுறைகளுக்கான திருத்தங்கள் கொ.ப.ப. மற்றும் பங்குத்தரகு நிறுவனங்களினால் நிறைவுசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் 2023 இன் இரண்டாம் காலாண்டில் நேரலையாக செல்லவுள்ளது.

### சந்தைக்கான புதிய கருவிகளின் அறிமுகம்

சந்தைக்கு பல்வேறு புதிய கருவிகளின் அறிமுகத்தினை விரைவுபடுத்தும் நோக்கில், ஆணைக்குழுவின் அங்கத்தவரான திரு. மனில் ஜயசிங்கவின் தலைமையில் இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இன் அங்கத்தவர்களை உள்ளடக்கிய ஒரு இ.பி.ப.ஆ.-கொ.ப.ப. கூட்டுக்குழுவானது இ.பி.ப.ஆ. இன் முன்னாள் தலைவரினால் நியமிக்கப்பட்டது. இக்குழுவானது கட்டம் 1 இன் கீழ் பின்வரும் முன்னெடுப்புகளை மேற்பார்வை செய்கின்றது:

- பிணையங்கள் கடன் பெறல் மற்றும் கடன் வழங்கலூடாக முறைமைப்படுத்தப்பட்ட குறை விற்பனையின் அமுலாக்கம்
- பசுமை/நீல முறிகளின் அறிமுகம்
- சு.ச.ஆ. சுட்டியின் அறிமுகம்
- பட்டியலிடப்பட்ட கூட்டாண்மை தொகுதிக்கடன்களிலான மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு ச.நி. சா. மேடை
- நிரந்தரமான முறிகளின் பட்டியலிடல்
- அரசுடைமை நிறுவனங்களினால் வழங்கப்படும் கடன்/உரித்துவ பிணையங்களது பட்டியலிடலுக்கு வசதியளிப்பதற்கு பட்டியலிடல் வரம்புறுகையினை விரிவாக்குதல்
- இலங்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்களினால் வழங்கப்படும் வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் பிணையங்களின் பட்டியலிடல் மற்றும் வர்த்தகம்

- ச.நி.சா. மேடையில் உயர் விளைவையுடைய கூட்டாண்மை கடன் பிணையங்களின் வர்த்தகம்
- XBRL - அடிப்படையிலான அறிக்கையிடல் மேடையின் அமுலாக்கம்

கட்டம் இரண்டின் கீழ் கருத்திலெடுக்கப்படும் முன்னெடுப்புகள், இஸ்லாமிய மூலதனச் சந்தை கருவிகள், உரித்துவ கூட்டு நிதிநல்கை, தங்கம் அடிப்படையிலான பரிமாற்றக வர்த்தக நிதியங்கள், கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்கள் மற்றும் அடைமானப் பின்னணியிலான பிணையங்கள் ஆகிவற்றின் அறிமுகம் ஆகும்.

### பிணையங்களது கடன் பெறுதல் மற்றும் கடன் வழங்கல் (பி.க.பெ.க.வ.) ஊடாக காக்கப்பட்ட குறை விற்பனையின் (கு.வி.) அறிமுகத்திற்கு வசதியளித்தல்

பி.க.பெ.க.வ. ஊடாக காக்கப்பட்ட கு.வி. க்காக வழங்கப்படும் உத்வேகமானது சந்தையில் திரவத்தன்மை மற்றும் நடவடிக்கை மட்டங்களை மேம்படுத்தக்கூடும். பி.க.பெ.க.வ. ஊடாக காக்கப்பட்ட கு.வி. இனை இயலுமையாக்கும் கொள்கை வரம்புறுகையானது உலக வங்கியினால் ஒப்படைக்கப்பட்ட ஆலோசகரின் தொழில்நுட்ப உறுதுணையின் கீழ் இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஆகியவற்றினால் கூட்டாக முடிவுறுத்தப்பட்டு ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. இதன் பிரகாரம், கொ.ப.ப. தற்போது அவசியமான அமைப்புமுறை திருத்தங்களை மேற்கொள்வதுடன், அதனை இயலுமையாக்குவதற்கான விதிகளை முடிவுறுத்தும் செயன்முறையிலுள்ளது. புதிய முன்னெடுப்புடன் பழக்கப்படுத்திக்கொள்வதற்காக பங்காளிகளுக்கான விழிப்புணர்வினை கட்டியெழுப்புதல் அமர்வுகளை நடாத்த ஆரம்பித்துள்ளது.

### சு.ச.ஆ. தொடர்பான முன்னெடுப்புகளின் அறிமுகத்திற்கு வசதியளித்தல்

உலகம் பூராவுமான சு.ச.ஆ. முன்னிறுத்தமான முதலீட்டு நடைமுறைகளின் வளர்ச்சியடையும் செல்வாக்கு மற்றும் அமுலாக்கத்துடன் பல மூலதனச் சந்தைகள் பசுமை முன்னெடுப்புகளை அறிமுகப்படுத்துவதற்கான கொள்கை மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை இயலுமையாக்கியுள்ளன. எனவே, நாம் வழங்கல் பக்கம் மற்றும் கேள்விப் பக்கம் ஆகிய இரண்டையும் விருத்திசெய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். இது உள்ளூர் மூலதனச் சந்தை பங்காளிகளிடையே சு.ச.ஆ. முதலீடு மற்றும் அறிக்கையிடலின் முக்கியத்துவத்தில் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காகவும் பழக்கப்படுத்திக்கொள்வதற்கும் ஆகும் என்பதுடன் பசுமை, சமூக மற்றும் நிலைபேறுடைய (ப.ச.நி.) மூலதனச் சந்தை நிதியளிப்பிற்கு மிகவும் பொருத்தமான சூழலினை உருவாக்குவதற்கும் வசதியளிக்கின்றது.

> “வழங்கல் பக்கத்தினை ஊக்குவிக்கும் ஒரு பகுதியாக, பசுமை முறிகளின் அறிமுகத்திற்காக கொள்கை வரம்புறுகையானது முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் மற்றும் அதன் பிரகாரம், கொ.ப.ப. வரைவு விதிகளை விருத்திசெய்து அவை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிபுணர்களினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கமைய முடிவுறுத்தப்பட்டன.”

### வழங்கல் பக்கத்தினை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள்

#### பசுமை / நீல முறிகளின் வழங்கலை இயலுமையாக்குதல்

வழங்கல் பக்கத்தினை ஊக்குவிக்கும் ஒரு பகுதியாக, பசுமை முறிகளின் அறிமுகத்திற்காக கொள்கை வரம்புறுகையானது முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் மற்றும் அதன் பிரகாரம், கொ.ப.ப. வரைவு விதிகளை விருத்திசெய்து அவை ஆ.அ.வ. இன் நிபுணர்களினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கமைய முடிவுறுத்தப்பட்டன. பசுமை முறிகளின் உப பிரிவான நீல முறிகள் சமுத்திரம் தொடர்பான திட்டங்களில் தனித்துவமாக முதலீடு செய்வதுடன், இவை கருத்திலெடுக்கப்பட்டு கொள்கை வரம்புறுகையானது முடிவுறுத்தப்பட்டது. பசுமை மற்றும் நீல முறிகள் இரண்டிற்கும் பிரயோகிக்கப்படும் கொள்கைகள் மற்றும் நியமங்கள் ஒத்ததாய் இருப்பதனால், ஒரே வரம்புறுகையின் கீழ் இரண்டினதும் வழங்கலினை இயலுமையாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. விதிகள் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர், கம்பனிகள் பசுமை திட்டங்களுக்கு நிதியினை திரட்டிக்கொள்ளலாம் மற்றும் இது சாத்தியமான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சந்தைக்கு உட்புகுவதற்கான வாய்ப்புக்களை திறப்பதுடன் நாட்டிற்கு மிகவும் அவசியமான வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை கொண்டுவரும்.

#### சு.ச.ஆ. அறிக்கையிடலை ஊக்குவித்தல் மற்றும் கொ.ப.ப. இனால் மேற்கொள்ளப்படும் ஏனைய சு.ச.ஆ. தொடர்பான முன்னெடுப்புகளுக்கு உறுதுணையளித்தல்

பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் சு.ச.ஆ. அறிக்கையிடலை ஊக்கமளிப்பது தொடர்பாக, இ.பி.ப.ஆ., கொ.ப.ப., மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் ஆகியன இணைந்து 24 ஆகஸ்ட் 2022 இல் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்நுழைந்ததுடன் இது ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல், கூட்டாண்மை ஆளுகை, நிலைபேறுடமை ஆகியவற்றில் விழிப்புணர்வினை கட்டியெழுப்புதல் மற்றும் கம்பனிகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் / கூட்டாண்மை அறிக்கைகள் ஆகியவற்றின் பயனாளர்களது நலனுக்காக வேறு ஏதேனும் தொடர்புடைய பிரிவுகளையும் பரந்தளவில் உள்ளடக்கியது. மேலாக, இ.பி.ப.ஆ. ஒரு சு.ச.ஆ. சுட்டியினை உள்வாரியாக விருத்திசெய்யுமாறு கொ.ப.ப. இனை வேண்டியது. இது புதிய சு.ச.ஆ. அடிப்படையிலான கருவிகளை உருவாக்குவதற்காக அடிப்படையாக பயன்படுத்துவதற்கு அல்லது அத்தகைய முதலீடுகளுக்கு ஒரு தரக்குறியாக பயன்படுத்துவதற்கு மற்றும் இலங்கையில் ப.ச.நி. மூலதனச் சந்தை நிதியளித்தலுக்கு வசதியளிப்பதற்கு தேவையான முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை அறிமுகப்படுத்துவதற்கும் ஆகும்.

### கேள்விப் பக்கத்தினை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள்

#### சு.ச.ஆ. இல் விழிப்புணர்வினை கட்டியெழுப்புதல்

சு.ச.ஆ. தொடர்பான முன்னெடுப்புகளில் விழிப்புணர்வினை கட்டியெழுப்புவதனை மேம்படுத்துவதற்காக இ.பி.ப.ஆ., கொ.ப.ப. மற்றும் பட்டய நிதியியல் பகுப்பாய்வாளர் சங்கத்துக்கிடையே 17 ஜூன் 2022 இல் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (பு.ஒ.) கைச்சாத்திடப்பட்டது. இந்த பு.ஒ. இலங்கையின் முதலீட்டாளர்களிடையே முதலீட்டாளர் பாதுகாப்பினை மேம்படுத்தவும், மூலதனச் சந்தை பங்குபற்றுநர்களிடையே அவர்களது ஆய்வு மற்றும் பெறுமதியிடல் செயன்முறையில் சு.ச.ஆ. அறிமுகப்படுத்துவதனை ஊக்குவிப்பதற்காகவும் ஒரு கூட்டு உறவினை

# செயற்பாட்டு மீளாய்வு

நிறுவுவதற்கான பரவலான நோக்கத்தினைக் கொண்டது. இது சவால்மிக்க உலகளாவிய போக்குகளுக்கு இணையாக காணப்படுவதற்கும் இலங்கையின் மூலதனச் சந்தையில் தொழில்சார் நியமங்கள் மற்றும் நேர்மை பராமரிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும் ஆகும்.

### கொ.ப.ப. இல் சுக்குக் கருவிகளது அறிமுகத்திற்கான வரம்புறுகை

இலங்கையின் மூலதனச் சந்தைக்கு சுக்குக் உள்ளடங்கலான இஸ்லாமிய மூலதனச் சந்தை கருவிகளை அறிமுகப்படுத்துவதற்காக ஒரு முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை விருத்திசெய்வதற்காக ஆ.அ.வ. இன் மூலதனச் சந்தை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப உறுதுணை வழங்கப்பட்டது. இதன்பின்னர், ஆ.அ.வ. இன் ஆலோசகர்கள் இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. உடன் கலந்தாலோசித்து உடன்பட்ட பணி நோக்கெல்லைக்கு அமைவாக முன்னெடுப்பிலான பணி ஆரம்பிக்கப்பட்டது. சமர்ப்பிக்கப்பட்ட சந்தை மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், உள்ளூர் மூலதனச் சந்தையில் சுக்குக் கருவிகளை அறிமுகப்படுத்துவதற்கான திடமான ஆர்வம் மற்றும் சாத்தியம் காணப்படுவதாக எடுத்துக்காட்டப்பட்டது.

சுக்குக் என்பது மரபுசார் கடன் பிணையங்களுக்கு ஒத்ததான ஒரு நிதியியல் கருவி மற்றும் இது ஒரு உள்ளார்ந்த சொத்துடன் (வழக்கமாக உருப்படியானது) இணைக்கப்பட்டதாகும். முதலீட்டாளர்களது பார்வையில் ஒரு சுக்குக்கினை வைத்திருப்பது தொடர்புடைய சொத்தில் ஒரு பகுதியளவான உரித்துவத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. சுக்குக் கட்டமைப்புகளின் விபரங்கள் வேறுபட்டதாகும். எவ்வாறாயினும், மூலதனம் தேவையான ஒரு கம்பனி ("தொடங்குபவர்" ஆக குறிப்பிடப்படுகிறார்) ஒரு சிறப்பு நோக்கு ஊர்தியினை (சி.நோ.ஊ.) நிறுவி சொத்துக்களை சி.நோ.ஊ. இற்கு விற்பனை செய்கின்றது. இந்த சி.நோ.ஊ., முதலீட்டாளர்களுக்கு விற்பனை செய்யப்படும் சுக்குக் சான்றிதழ்களை வழங்குகின்றது. தொடங்குபவர் அதன்பின்னர் அதன் வணிகத்தில் சொத்துக்களை பயன்படுத்துவதற்கு ஒப்பந்தமிடுகிறார், உதாரணமாக அவற்றை குத்தகைக்கு விடுவதன் மூலமாகும்; இதற்காக பெறப்படும் கொடுப்பனவானது முதலீட்டாளர்களுக்கு விளைவினை வழங்குகின்றது. அத்துடன் காலம் நிறைவடையும்போது சொத்துக்களை மீள்கொள்வனவு செய்வதற்கும் ஒப்பந்தம் செய்கின்றது.

சந்தை மதிப்பீட்டு அறிக்கையிடல் ஆ.அ.வ. ஆலோசகர்களினால் முன்னிலைப்படுத்தப்பட்ட கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் ஆலோசகர்கள், இ.பி.ப.ஆ., கொ.ப.ப. மற்றும் உள்நாட்டு இறைவரிகள் திணைக்களம் மற்றும் இ.ம.வ. போன்ற ஏனைய முறைமைப்படுத்தல் அங்கங்களிடையே பல்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இதன்பிரகாரம், கடன் பிணையங்களுக்கு பிரயோகிக்கப்படும் கொ.ப.ப. இல் காணப்படும் நடைமுறையிலுள்ள பட்டியலிடல் விதிகளுக்கு திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் மூலதனச் சந்தைக்கு சுக்குக் கருவிகளை அறிமுகப்படுத்துவதற்கு ஆலோசகர்கள் முன்மொழிந்துள்ளார்கள்.

அதன் பின்னர், சுக்குக் கருவிகளுக்கு வசதியளிப்பதற்காக நடைமுறையிலுள்ள பட்டியலிடல் வரம்புறுகைக்கு முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களுக்கமைய ஒரு வரைவு ஒழுங்குவிதி / வழிகாட்டி சமர்ப்பிக்கப்பட்டு அது இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஆனால் மீளாய்வு செய்யப்பட்டு உடன்பாடு காணப்பட்டது. முன்மொழியப்பட்ட திருத்தங்களுடனான வரைவு ஒழுங்குவிதி / வழிகாட்டி இ.பி.ப.ஆ. அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இதன் பிரகாரம், சுக்குக் கருவிகளை வழங்குவதற்காக முன்மொழியப்பட்ட

"டிஜிட்டல் மேடை செயற்பாட்டாளர்களுக்கு வசதியளிப்பதற்காக இயலுமையாக்கக்கூடிய கொள்கை மற்றும் ஒரு முறைமைப்படுத்தல் வரம்புறுகை அறிமுகப்படுத்தப்பட்டது. இது அவர்களது வசதிகளை அவர்களது அங்கத்தவர்கள் தளத்திற்கு வழங்குவதற்கும் பங்குச் சந்தையில் முதலீட்டாளர் தளத்தினை பரவலாக்குவதற்கும் ஆகும்"

முறைமைப்படுத்தல் வரம்புறுகையானது அவசியமான நடவடிக்கைகளுக்காக கொ.ப.ப. இற்கு தெரியப்படுத்தப்பட்டது.

### கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்களின் அறிமுகம்

கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்களை வழங்குவதற்கான வரைவு வழிகாட்டிகள் ஒப்படைக்கப்பட்ட ஆ.அ.வ. நிபுணரினால் விருத்திசெய்யப்பட்டு கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்களை இலுமையாக்குவதற்காக விதிகளை விருத்திசெய்வதனை கருத்திலெடுப்பதற்காக கொ.ப.ப. உடன் பகிரப்பட்டது. மேலாக, ஆ.அ.வ. நிபுணர்கள் கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்களுக்கு மேலாக சந்தை செயற்பாட்டாளர்களுக்கான வரைவு விதிகள் விருத்திசெய்யப்பட்டு பொது ஆலோசனைக்காக பிரசுரிக்கப்பட்டு உள்வாரியாக முடிவுறுத்தப்பட்டவண்ணமுள்ளன. கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்களின் அறிமுகமானது புதிய கருவிகளுக்கான இ.பி.ப.ஆ.-கொ.ப.ப. கூட்டுக்குழுவின் கீழான ஒரு இரண்டாம் கட்ட முன்னெடுப்பாக இனங்காணப்பட்டது. கருவியானது அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர், இது முதலீட்டாளர்களுக்கு கிடைக்கக்கூடிய சொத்து வகுப்புகளை பரவலாக்குவதுடன், கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்களின் வழங்குநராகுதல் மற்றும் சந்தை செயற்பாட்டாளர்களாக வருதல் போன்ற மேலான வணிக வாய்ப்புக்களை வழங்கும்.

### வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிணையங்களின் பட்டியலிடல், வர்த்தகம் மற்றும் தீர்ப்பனவிற்கு வசதியளித்தல்

நாட்டிற்கு மிகவும் அவசியமான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களை மேம்படுத்தும் நோக்கத்தில், இ.பி.ப.ஆ. இந்த முன்னெடுப்பிற்கு வசதியளித்தது. கொ.ப.ப. இடமிருந்து வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட பிணையங்களை பட்டியலிடல், வர்த்தகம் செய்தல் மற்றும் தீர்ப்பனவு ஆகியவற்றுக்கு வசதியளிப்பதற்காக பெறப்பட்ட பிரேரணைகளுடன் நி.அ. மற்றும் இ.ம.வ. உடன் எடுத்துக்கொள்ளப்படவேண்டிய தொடர்புடைய விடயங்களை இ.பி.ப.ஆ. இப்பிரேரணைகளை நி.அ. உடன் இந்த முன்னெடுப்பிற்கு உறுதுணையளிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டி பகிரப்பட்டன. இதன் பிரகாரம் கொ.ப.ப. இன் பிரேரணையில் எடுத்துக்காட்டப்பட்ட விடயங்கள் மற்றும் இந்த முன்னெடுப்பிற்கு வசதியளிப்பதனை விளித்துரைப்பதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை இயலுமையாக்கின. அதன் பின்னர், கொ.ப.ப. வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட பிணையங்கள் தொடர்பான பொருத்தமான விதிகள், டிக் அளவு மற்றும் கொடுக்கல் வாங்கல் கட்டண கட்டமைப்பிற்கான திருத்தங்களை முன்மொழிந்ததுடன் இவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டன. கருவியின் அறிமுகத்திற்கு வசதியளித்தலைத் தொடர்ந்து, பிரேரிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் கட்டண கட்டமைப்பு மற்றும் உரிய ஒழுங்குவிதிகளை வழங்குதல் ஆகியவற்றுக்கான அங்கீகாரம் நி.அ. இடமிருந்து கோரப்பட்டது.

### உரித்துவ கூட்டு நிதிநல்கை மேடைகளூடாக நிதி திரட்டலுக்கு வசதியளித்தல்

உரித்துவ கூட்டு நிதிநல்கையின் அறிமுகத்திற்கான கொள்கையளவிலான அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர், ஒப்படைக்கப்பட்ட ஆ.அ.வ. ஆலோசகர்களினால் முறைமைப்படுத்தல் கவனிப்புகளும் வரைவு கொள்கையும் இனங்காணப்பட்டதுடன் இவற்றின் அடிப்படையில் முன்னெடுப்பினை இயலுமையாக்குவதற்காக அவர்கள் வரைவு விதிகளை விருத்திசெய்தார்கள். வரைவு விதிகள் பொதுமக்களது ஆலோசனைகளுக்காக பிரசுரிக்கப்பட்டு அவை உள்வாரியாக முடிவுறுத்தப்படடவண்ணமுள்ளன. விதிகள் வழங்கப்பட்டதன் பின்னர், சாத்தியமுள்ள சந்தை செயலாற்றுபவர்கள் இ.பி.ப.ஆ. உடன் பதிவுசெய்து கொள்ள இயலும் மற்றும் முதலீட்டாளர்களுக்கு உரித்துவ கூட்டு நிதிநல்கை மேடைகளை வழங்கக்கூடியதாயிருக்கும். இது ஒரு புதிய வணிக வாய்ப்பினை உருவாக்குவதுடன், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கு (சி.ந.நி.) ஒரு மாற்றீட்டு நிதி திரட்டல் வழியாகக் காணப்படுகின்றது. இது நாட்டின் முதுகெலும்பாகக் காணப்படும் சி.ந.நி. துறைக்கு மிகப்பெரியளவில் துணைபுரிவது மாத்திரமன்றி முதலீட்டாளர்களுக்கு கிடைக்கக்கூடிய முதலீட்டு தெரிவுகளையும் பரவலாக்குகின்றது.

### முதலீட்டாளர் தளத்தினை பரவலாக்குவதற்காக டிஜிட்டல் மேடைகளுக்கு வசதியளித்தல்

பங்குச் சந்தையில் முதலீட்டாளர் தளத்தினை பரவலாக்குவதற்காக டிஜிட்டல் மேடை செயற்பாட்டாளர்கள் அவர்களது வசதிகளை அவர்களது அங்கத்தவர்களுக்கு வழங்குவதற்கு வசதியளிப்பதற்கான கொள்கை மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகை இயலுமையாக்கப்பட்டது. இது பங்குச் சந்தையிலான விழிப்புணர்வினை மேம்படுத்துவதுடன் பங்குச் சந்தை செயற்பாடுகளின் தொழில்நுட்ப உருமாற்றலுக்கும் துணைபுரியும். தற்போது, கொ.ப.ப. அவற்றின் டிஜிட்டல் மேடைகளை பல்வேறு மூன்றாம் தரப்பு சேவை வழங்குநர்கள் பயன்படுத்துவதனை இயலுமையாக்கியுள்ளது.

### கொடையாளி முகவர் திட்டங்களை ஒருங்கிணைத்தல்

ஆ.அ.வ. இன் மூலதனச் சந்தை அபிவிருத்தி திட்டமும் உலக வங்கியின் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் திட்டமும் (நி.த.ந.தி.) மீளாய்வாண்டின்போது நிறைவுசெய்யப்பட்டதுடன் இத்திட்டங்களினால் செயலகமும் மூலதனச் சந்தையும் பலமடங்கு நன்மையடைந்துள்ளன.

### ஆ.அ.வ. இன் மூலதனச் சந்தை அபிவிருத்தித் திட்டம் (மூ.ச.அ.தி.)

மூ.ச.அ.தி. ஆனது ஆ.அ.வ. இனால் இலங்கை அரசாங்கத்திற்கான ஒரு கொள்கை அடிப்படையிலான கடன் மற்றும் தொழில்நுட்ப உறுதுணை திட்டமாகும். இத்திட்டமானது இ.பி.ப.ஆ., இ.ம.வ. மற்றும் இலங்கையின் காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு (இ.கா.ம.ஆ.) போன்ற அமுலாக்கல் முகவர்களுக்கு தொழில்நுட்ப உறுதுணையினை வழங்கியது. மூ.ச.அ.தி. இன் கீழ் இ.பி.ப.ஆ., கூ.மு.தி. கோவையினை வரைதல், கொ.ப.ப. பரஸ்பரமற்றமயமாக்கல், மூலதனச் சந்தை சான்றளித்தல் செயன்முறையினை மறுசீரமைத்தல், நிதியியல் அறிவு மற்றும் யுனிட் ட்ரஸ்ட்களின் பிரச்சாரம், இஸ்லாமிய மூலதனச் சந்தை கருவிகள், கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்கள், பசுமை முறிகள், கூட்டு நிதிநல்கை மேடைகள் போன்றவற்றின் அறிமுகத்தினை இயலுமையாக்குவதற்கான கொள்கை மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை விருத்திசெய்தல், மூலாதாரப் பிணையங்களது அறிமுகத்திற்கான மூலோபாயம் என்பன மீளாய்வாண்டின்போது வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டன.

### உலக வங்கியின் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் திட்டம் (நி.து.ந.தி.)

நி.து.ந.தி. இன் முக்கிய குறிக்கோளானது நிதியியல் செயற்திறனை மேம்படுத்துவதற்கு வசதியளித்தல் மற்றும் நிதியியில் சந்தை உட்கட்டமைப்பு, சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை தரமுயர்த்துதலூடான உள்ளடக்கம் மற்றும் நிதியியல் துறை முறைமைப்படுத்துபவரது மேற்பார்வை கொள்திறனை பலப்படுத்துவது மூலமாகும். இ.பி.ப.ஆ, இ.ம.வ. மற்றும் இ.கா.மு.ஆ, ஆகியன திட்ட நலன்பெறுநர்களாக இனங்காணப்பட்டார்கள்.

நி.து.ந.தி. இரண்டு கூறுகளைக் கொண்டதாகும்:

- கூறு 1 - விளைவு அடிப்படையிலான நிதியளித்தல் எனும்போது திட்டத்தின் நிதிகள் தெரிவுசெய்யப்பட்ட முக்கிய பிரித்தளித்தல் இணைந்த குறிகாட்டிகளை எய்தப்பெறுவதற்கு எதிராக பிரித்தளிக்கப்படும்.
- கூறு 2 - முதலீட்டு அடிப்படையிலான நிதியளித்தல் எனும்போது இனங்காணப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளது கொள்முதலுக்காக நிதி வழங்கப்படுவதாகும்.

இதன் பிரகாரம், இ.பி.ப.ஆ. பல்வேறு முக்கிய முறைமைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்கு திட்டத்தின் கீழ் நிதியினைப் பெற்றுக்கொண்டது. (உருவம் 16)

**உருவம் 16: விளைவு அடிப்படையிலாள நிதியளித்தல் கூறு**

| பிரித்தளித்தல் இணைக்கப்பட்ட குறிகாட்டி (பி.இ.கு.) | தொடர்புடைய பிரித்தளித்தல் இணைக்கப்பட்ட விளைவு (பி.இ.வி.) | பி.இ.வி. எய்தப்பெறுதல் நிலைமை |
|---|---|---|
| பி.இ.கு. 1. நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைக்கு ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட இடர் அடிப்படையிலான அணுகுமுறையினை கடைப்பிடித்தல் | • பி.இ.வி. 1.1: ஒரு பு.ஒ. ஊடாக நிதியியல் துறை மேற்பார்வை குழுவானது (நி.து.மே.கு.) இ.ம.வ. ஒருங்கிணைக்கப்பட்ட முன்னணி மேற்பார்வையாளராக இருக்கும் என உடன்படுகின்றது | முற்றாக எய்தப்பெற்றுள்ளது |
| | • பி.இ.வி. 1.2: மூன்று முறைமைப்படுத்துபவர்களினால் கைச்சாத்திட்ட பு.ஒ.இன் அமுலாக்கமானது நி.து.மே.கு. இன் நான்கு கூட்டங்களினால் ஆதாரமளிக்கப்படுவதுடன் நி.து.மே.கு. இன் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டது | முற்றாக எய்தப்பெற்றுள்ளது |
| பி.இ.கு. 4. நிதியியல் ஸ்திரத்தன்மைக்கான சாத்தியமான இடர்களை குறைப்பதற்காக கூட்டாண்மை பிணையங்களுக்கான தீர்ப்பனவிற்கு வி.எ.கொ. முறையினை நிறுவுதல் | • பி.இ.வி. 4.1: இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஆகியன கூட்டாண்மை உரித்துவப் பிரிவின் தீர்ப்பனவினை வி.எ.கொ. அடிப்படையில் இயலுமையாக்குவதற்கு அவசியமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை கடைப்பிடித்தன | முற்றாக எய்தப்பெற்றுள்ளது |
| | • பி.இ.வி. 4.2: வி.எ.கொ. ஏற்பாடு உள்ளடங்கலான வெற்றிகரமான கொ.ப.ப. வணிகச்செயல்நிலை தொடர்ச்சி திட்டமிடல் பரிசோதனை நிறைவுசெய்யப்பட்டது. | முற்றாக எய்தப்பெற்றுள்ளது |
| | • பி.இ.வி. 4.3: வி.எ.கொ. அமைப்புமுறையானது முழுவதுமாக அமுலாக்கப்பட்டுள்ளதனை உறுதிப்படுத்துவதற்காக இ.பி.ப.ஆ. வி.எ.கொ. இயலுமையாக்கப்பட்டு ஒரு வருடத்தின் பின்னர் தளத்திலான மற்றும் தளத்திற்கு அப்பாலான பரிசீலனைகள் / கணக்காய்வுகளை பொறுப்பேற்கும் | முற்றாக எய்தப்பெற்றுள்ளது |

# செயற்பாட்டு மீளாய்வு

திட்டத்தின் நிறைவின்போது இ.பி.ப.ஆ. அனைத்து பிரித்தளித்தல் இணைக்கப்பட்ட குறிகாட்டிகளையும் முற்றாக எய்தப்பெற்றது. இதன் பிரகாரம், உலக வங்கியானது பி.இ.வி.1.1, 1.2, 4.1 மற்றும் 4.2 தொடர்பாக ஒதுக்கப்பட்ட நிதியினை பிரித்தளித்துள்ளது. பி.இ.வி. 4.3 தொடர்பாக ஒதுக்கப்பட்ட நிதியானது ஜனவரி 2023 இல் விடுவிக்கப்பட்டது.

## முதலீடு அடிப்படையிலான நிதியளித்தல் கூறு

### ஆலோசனைக் கொள்முதல்கள்

டிசம்பர் 2022 இன் பிரகாரம், பின்வரும் நிபுணத்துவம் கொள்முதல் செய்யப்பட்டு பொருத்தமான ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டு வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன.

- வி.எ.கொ. இன் அமுலாக்கம் மற்றும் ம.எ.த. அமுலாக்கத்திற்கான கொள்கை வரம்புறுகை மற்றும் பி.க.பெ.க.வ. ஊடான முறைமைப்படுத்தப்பட்ட கு.வி. ஆகியவற்றுக்கான ஆலோசனை
- கல்வி மற்றும் விழிப்புணர்வு விநியோக வழிமுறைகளை மேம்படுத்துவதற்கான ஆலோசனை - இணையத்தளங்களது விருத்திசெய்தல் நிபுணத்துவம்
- ஒரு நிறுவன த.தொ. மூலோபாயம் / அமுலாக்கல் கண்காணிப்பினை விருத்திசெய்வதற்கான ஆலோசனை
- சந்தை கண்காணிப்பிற்கான ஆலோசனை

### உட்கட்டமைப்பு கொள்முதல்கள்

டிசம்பர் 2022 பின்வரும் இனங்காணப்பட்ட பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டன.

- கண்காணிப்பு பிரிவிற்கான தரவு பகுப்பாய்வுக் கருவி - Tableau
- ஆவணக் காப்பகமிடல் மற்றும் முகாமைத்துவ அமைப்புமுறை
- களஞ்சியப்படுத்தல் விரிவாக்கம்
- 10 எண்ணிக்கையிலான ஒரக்கல் DB நிலையான பதிப்பு 2
- இ.பி.ப.ஆ. பணியாட்களுக்கான மடிக்கணனிகளின் கொள்முதல்

### இ.பி.ப.ஆ. இன் பணியாட்களது பயிற்றுவித்தலை அமுலாக்குவதற்காக பெறப்பட்ட நிதி

மேலாக, இ.பி.ப.ஆ. இனால் விருத்திசெய்யப்பட்ட ஒரு பயிற்றுவித்தல் திட்டத்தின் அடிப்படையில் இ.பி.ப.ஆ. இன் பணியாட்களது கொள்திறனை கட்டியெழுப்புவதற்காக நிதி ஒதுக்கப்பட்டது. இ.பி.ப.ஆ. இனால் விருத்திசெய்யப்பட்ட பயிற்றுவித்தல் திட்டமானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் இதன் பிரகாரம் பல்வேறு இனங்காணப்பட்ட கொள்திறன் கட்டியெழுப்புதல் திட்டங்களுக்கு நிதி பயன்படுத்தப்பட்டது.

## மனித மூலதன அபிவிருத்தி

புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் சட்டவாக்கத்துடன் இ.பி.ப.ஆ. இன் பணி நோக்கெல்லையானது விரிவாக்கப்பட்டதுடன் உரித்துவ கூட்டு நிதிநல்கை மற்றும் கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்களுக்கான சந்தை செயற்பாட்டாளர்கள் போன்ற பல புதிய முன்னெடுப்புகளை அறிமுகப்படுத்துதல் என்பன சாத்தியமாயின. புதிய பணி நோக்கெல்லைக்கு அமைய மீளாய்வாண்டின்போது பிரிவின் கொள்திறனானது பலப்படுத்தப்பட்டது. இது புதிய மூலதனச் சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புகள் தொடர்பாக பிரிவின் அங்கத்தவர்களுக்கான பல கற்றல் வாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் புதிய ஆட்களை பணிக்கமர்த்தல் மூலமாகும். மேம்பட்ட திறன் மற்றும் திறமைகளுடன் சந்தை அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு மிகவும் வினைத்திறனான விதத்தில் இப்பிரிவானது துணையளிக்க இயலும்.

## மூலதனச் சந்தை விழிப்புணர்வு மற்றும் வெளிவாரி உறவுகள்

அறிவுபடைத்த முதலீட்டாளர்கள் நிதியியல் கருவிகள் மற்றும் சேவைகளில் சிறந்த புரிந்துணர்வினைக் கொண்டுள்ளதுடன் முதலீட்டுக் கருவிகளின் சாத்தியமான இடர்கள் மற்றும் வெகுமதிகளை மதிப்பிடு செய்து தகவலறிந்த முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்கின்றார்கள். மேலும், அறிவுபடைத்த முதலீட்டாளர்கள் தவறான நடத்தைகளிலிருந்து தங்களை பாதுகாக்கக்கூடியதாயுள்ளது. இவ்வாண்டின்போது இ.பி.ப.ஆ. சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு பரந்த அளவிலான முதலீட்டாளர் விழிப்புணர்வுத் திட்டங்களை வடிவமைத்து, விருத்திசெய்து வழங்கக்கூடியதாயிருந்தது.

### வெளிக்கள நிகழ்வுகள் - கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

இ.பி.ப.ஆ. இன் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் அறிவுபடைத்த முதலீட்டாளர்களை உருவாக்குவதனையும், அவர்களது செல்வத்தை வளர்ப்பதற்கான திடமான அறிவினை அவர்களுக்கு வழங்குவதனையும் அவர்களை நிதியியல் ரீதியில் சுயாதீனமாக்குவதனையும் நோக்காகக் கொண்டிருந்தன. பொருளாதார சிக்கல்களின் சவால்கள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில், டிஜிட்டல் வழிமுறைகளூடாக முதலீட்டாளர் நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதன் மூலம் நாம் தடையற்ற கற்றலை உறுதிசெய்தோம். வருடத்தின் இறுதிப் பாகத்தில், ஆசிரியர்கள், முதலீட்டாளர்கள், பாடசாலை மாணவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு நேருக்கு நேரான நிகழ்ச்சித்திட்டங்களை மீள ஆரம்பித்தோம்.

> "அறிவுபடைத்த முதலீட்டாளர்கள் நிதியியல் கருவிகள் மற்றும் சேவைகளில் சிறந்த புரிந்துணர்வினைக் கொண்டுள்ளதுடன் முதலீட்டுக் கருவிகளின் சாத்தியமான இடர்கள் மற்றும் வெகுமதிகளை மதிப்பிடு செய்து தகவலறிந்த முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்கின்றார்கள்"

### ஆசிரியர் பயிற்றுவித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்

ஒரு கல்வி அமைப்புமுறையின் முக்கிய பாகமாக ஆசிரியர்கள் காணப்படுகின்றார்கள். ஆசிரியர்களில் முதலீடு செய்வதனை நாம் கற்றலில் முதலீடு செய்வதாக கருதுகின்றோம். மாணவர்களது கற்றல் விளைவுகளை மேம்படுத்துவதற்காக இ.பி.ப.ஆ. ஆசிரியர்களுக்கு தொடர்ச்சியாக மூலதனச் சந்தையிலான அறிவினை வழங்கியது. கல்வி அமைச்சு மற்றும் தேசிய கல்வி நிருவகத்துடன் ஒன்றிணைந்து நாம் மீளாய்வாண்டில் கம்பஹா, தெஹியத்தகண்டிய, மாவனல்லை, மாத்தறை, காலி, மொனராகலை மற்றும் வெல்லவாய ஆகிய இடங்களில் ஆசிரியர்களுக்கு மும்மொழிகளிலும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தினோம்.

### பாடசாலை கருத்தரங்குகள்

பாடசாலைகளிலான மூலதனச் சந்தை அறிவானது மாணவர்களது முதலீட்டு ஆர்வத்தை அதிகரிப்பதற்கும் மற்றும் அவர்கள் முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. பாடசாலைகள் படிப்படியாக மீளத் திறந்ததுடன், நாம் பின்வரும் பாடசாலைகளில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தினோம்.

- அலிகார் தேசிய பாடசாலை, ஏறாவூர், மட்டக்களப்பு
- பண்டாரநாயக்க கல்லூரி, கம்பஹா
- அல் அக்சா தேசிய பாடசாலை, கல்பிட்டிய
- தெஹியத்தகண்டிய மத்திய கல்லூரி, தெஹியத்தகண்டிய
- ரிவிசந்த மத்திய மஹா வித்தியாலயம், அரநாயக்க, மாவனல்லை
- அல் அசார் மத்திய கல்லூரி, ஹேமத்தகம, மாவனல்லை
- ஆர். பிரேமதாச தேசிய கல்லூரி, ஹசலக்க

### பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கையிலுள்ள அனைத்து தேசிய பல்கலைக்கழகங்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவர்களது நிதியியல் அறிவினை மேம்படுத்தவும் பிணையங்கள் சந்தையில் முதலீடு செய்வதனை ஊக்கப்படுத்தவும் விழிப்புணர்வுத் திட்டங்களை நடாத்துவதற்கான எமது விருப்பத்தினை நாம் தெரிவித்தோம். மேலாக, இந்த முன்னெடுப்பானது மூலதனச் சந்தைத் துறைக்கு பணிக்கமர்த்தக்கூடிய இளையோரைக் கொண்ட ஒரு குழாமினை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வரும் தேசிய பல்கலைக்கழகங்களில் நடாத்தப்பட்டன.

- இலங்கையின் வயம்ப பல்கலைக்கழகம், கணக்கீட்டுத் துறை
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், வணிகப் பொருளாதாரத் துறை
- களணிய பல்கலைக்கழகம், வர்த்தகம் மற்றும் முகாமைத்துவத் துறை
- இலங்கையின் ரஜரட்ட பல்கலைக்கழகம், முகாமைத்தவத் துறை
- ருஹுன பல்கலைக்கழகம், கணக்கீட்டுத் துறை
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், நிதியியல் துறை

### இ.பி.ப.ஆ. முதலீட்டாளர் மன்றங்கள்

நிதியியல் அறிவினை வலுவூட்டவும் மூலதனச் சந்தையில் ஒரு சிறந்த புரிந்துணர்வினை ஊக்குவிப்பதற்காகவும் மற்றும் சிற்றளவு முதலீட்டாளர்களினால் மிகவும் செயல்திறனுடனான மற்றும் அறிவுபூர்வமான பங்குபற்றலை ஊக்குவிப்பதற்காக இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. “கொட்டஸ் வெலந்த பொல, நகரயென் நகரயட்ட” என்ற தலைப்பிலான முதலீட்டாளர் மன்றத் தொடரினை மீள் ஆரம்பித்தது.

கண்டி, காலி, யாழ்ப்பாணம் மற்றும் குருணாகலை போன்ற இனங்காணப்பட்ட இடங்களில் நேருக்கு நேரான பிராந்திய முதலீட்டாளர் மன்றங்கள் நடாத்தப்பட்டன.

### செய்தியாளர்களுக்கு மூலதனச் சந்தை அறிவினை வழங்குதல்

இலங்கையிலுள்ள செய்தியாளர்களிடையே மூலதனச் சந்தையிலான அறிவு மற்றும் அடிப்படை நிதியியல் அறிவு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக இ.பி.ப.ஆ. பத்திரிகையியல் கல்லூரியின் மாவணவர்களுக்கு மூலதனச் சந்தையில் முதலிடுவது பற்றிய ஒரு முன்னிலைப்படுத்தலை நடாத்தியது.

### சமூக ஊடக அடிப்படையிலான கல்விப் பிரச்சாரங்கள்

பிரதானமாக இளம் முதலீட்டாளர்களிடையே கைப்பேசி மற்றும் இணையத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு விரிவாகக் காணப்படுகின்றது. எனவே, இவ்வாண்டின்போது நாம் விசேடமாக இளம் சந்ததியினர் நோக்கிய பரவலான அணுகத்தினை இலக்குவைத்து சமூக ஊடக வழிமுறைகளில் இடுகையிடுதல் மற்றும் அறிவித்தல்கள் ஊடாக முதலீட்டாளர் வலுவளித்தல் முன்னெடுப்புகளுக்கு நாம் முன்னுரிமையளித்தோம்.

சமூக ஊடகங்களில் மூன்று மொழிகளிலும் ஆகக்குறைந்தது ஒரு நாளுக்கு ஒரு தடவையேனும் நாம் டுவிட்டர் மற்றும் முகநூலில் சமநிலையான கருத்துக்களை இடுகையிட்டதுடன், இது முதலீட்டாளர் கல்வியினை மேம்படுத்தவும் முதலீட்டு மோசடிகளிலிருந்து முதலீட்டாளர்களை பாதுகாப்பதற்கும் ஆகும்.

### உலக முதலீட்டு வாரப் பிரச்சாரம்

உலக முதலீட்டாளர் வாரத்துடன் ஒன்றிப்பொருந்தும் விதமாக நாம் பல்வேறு நடவடிக்கைகளை ஒழுங்குசெய்ததுடன் சமூக ஊடக வலையமைப்புகளூடாக முக்கிய செய்திகளைப் பரப்பினோம். இது கற்றல் வாய்ப்புக்களை வளர்ப்பதற்கும் நடைமுறை போக்குகள் மற்றும் பின்வரும் முதலீட்டாளர் அக்கறைகளை விளித்துரைப்பதற்கும் ஆகும். ஒரு நிலைபேறான முதலீட்டினை மேற்கொள்ளல் மற்றும் முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்காக புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகள், சமூக வலையமைப்பில் நிதியியல் ஆலோசனை வழங்கல் மற்றும் உயர்ந்த பணவீக்க காலத்தில் முதலீடுகளை எவ்வாறு முகாமைப்படுத்துவது போன்றவையாகும். ‘அறிவுபூர்மாயிருங்கள்’ என்ற தலைப்பிட்ட இந்த சமூக ஊடகப் பிரச்சாரமானது இ.பி.ப.ஆ. சட்டத்தினால் இயலுமையாக்கப்பட்டுள்ள புதிய கூட்டு முதலீட்டுத்திட்டக் கோவை மற்றும் முதலீட்டாளர் பாதுகாப்பு ஆகியவற்றிலான ஏழு குறுங் காணொளிகளை உள்ளடக்கியிருந்தன.

இ.பி.ப.ஆ. இன் 35 ஆவது ஆண்டுவிழாவுடன் ஒன்றிப்பொருந்தும் விதமாக புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் மேம்பட்ட அதிகாரத்தினை ஒருங்கிணைத்த இ.பி.ப.ஆ. கூட்டாண்மைக் காணொளியானது வெளியிடப்பட்டது. இவ்வாண்டின்போது, சன்டே டைம்ஸ் பத்திரிகையில் முதலீடு செய்வதிலான கட்டுரைகளை உள்ளடக்கிய முழுப்பக்க இணைப்பினை இலவசமாக

“உலக முதலீட்டாளர் வாரத்துடன் ஒன்றிப்பொருந்தும் விதமாக நாம் பல்வேறு நடவடிக்கைகளை ஒழுங்குசெய்ததுடன் சமூக ஊடக வலையமைப்புகளூடாக முக்கிய செய்திகளைப் பரப்பினோம். இது கற்றல் வாய்ப்புக்களை வளர்ப்பதற்கும் நடைமுறை போக்குகள் மற்றும் முதலீட்டாளர் அக்கறைகளை விளித்துரைப்பதற்கும் ஆகும்."

பிரசுரித்தோம். சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் எட்டு முதலீட்டாளர் கல்விச் சிற்றேடுகள் இற்றைப்படுத்தப்பட்டு இ.பி.ப.ஆ. இன் இணையத்தளத்தின் முதலீட்டாளர் பக்கத்தில் தரவேற்றம் செய்யப்பட்டது. புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய மூன்று மொழிகளிலுமான ஒரு புதிய சிற்றேட்டினை தயாரிக்கும் பணியினை நாம் ஆரம்பித்தோம்.

### “இலங்கையில் முதலிடுங்கள்” இலண்டன் மன்றம்

இலண்டனிலுள்ள சாத்தியமான முதலீட்டாளர்களுக்காக இ.பி.ப.ஆ., கொ.ப.ப. மற்றும் ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கை உயர் ஸ்தானிகராலயம் ஆகியன பல மன்றங்களை ஒழுங்குசெய்திருந்தன. இந்த மன்றங்கள், நிறுவன முதலீட்டாளர்கள், ஐக்கிய இராச்சியத்திலுள்ள இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் அங்கத்தவர்கள், நாடுகடந்த இலங்கைச் சமூகம் மற்றும் நிதியியல் நடத்தை அதிகாரசபையின் பணிப்பாளர்கள் ஆகியோருக்காக இடம்பெற்றன.

### ச.பி.ஆ.ஒ. உடனான ஈடுபாடு

இ.பி.ப.ஆ. ச.பி.ஆ.ஒ. இன் ஒரு சாதாரண அங்கத்தவர் மற்றும் வளர்ச்சி மற்றும் வெளித்தோன்றும் சந்தைகள் குழு (வ.வெ.ச.கு) மற்றும் ஆசிய பசிபிக் பிராந்திய குழுவின் (ஆ.ப.பி.கு.) ஒரு அங்கத்தவராகும். ச.பி.ஆ.ஒ. இன் அனேகமான பணிகள் அதன் கொள்கை குழுக்களில் இடம்பெறுவதுடன் இ.பி.ப.ஆ. பின்வரும் குழுக்களில் பங்கேற்கின்றது, வலியுறுத்தல் மற்றும் தகவல் பரிமாற்றக் குழு (குழு 4) மற்றும் சிற்றளவு முதலீட்டாளர்களிலான குழு (குழு 8). இ.பி.ப.ஆ. ச.பி.ஆ.ஒ. இன் ப.பு.ஒ. இன் ஒரு கையொப்பதாரி மற்றும் ச.பி.ஆ.ஒ. இன் ப.பு.ஒ. ஊடாக எல்லை தாண்டிய ஒத்துழைப்பினை புலனாய்வு உறுதுணைக்காக ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பு மற்றும் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றை பயன்படுத்திக்கொண்டது. இரண்டு கொள்கை குழுக்களின் கூட்டங்களிலும் இ.பி.ப.ஆ. முனைப்பாக பங்கேற்பதுடன் மதிப்பாய்வுகள் மற்றும் வினாப்பட்டியல்களுக்கு பதிலளிப்பதனூடாக பல்வேறு பணிகளுக்கு பங்களிப்பு செய்தது.

### மூலதனச் சந்தைக் கல்வி


இ.பி.ப.ஆ. தொழில்சார் கல்வியினை விருத்திசெய்து நிர்வகிப்பதுடன் இலங்கையினை மூலதனச் சந்தைக்கான உரிமமளித்தல் ஆட்சிமுறையின் பகுதியாக தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி திட்டங்களை (தொ.அ.தி.) நடாத்துகின்றது. இதற்கும் மேலாக, இ.பி.ப.ஆ. பொது மக்களுக்கு முதலிடுவதன் அடிப்படை கோட்பாடு மற்றும் நடைமுறை தோற்றங்களை புகட்டும் கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களையும் வழங்குகின்றது.

மீளாய்வாண்டின்போது இ.பி.ப.ஆ. 2019 இல் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட மூலதனச் சந்தை தகமை வரம்புறுகையினை தொடர்ந்தது. இது பங்குத் தரகு நிறுவனங்களின் பயிற்சி முதலீட்டு ஆலோசகர்களுக்கு ஒரு ஆகக்குறைந்த மட்டத்திலான திறமையினை வழங்கும் நோக்கத்தையுடையதாகும். குறித்த வரம்புறுகையானது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சொத்து வகுப்புகளுக்கான சான்றளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர்களுக்கு வழி வகுக்கின்றது. அதாவது உரித்துவப் பிணையங்கள், கடன் பிணையங்கள், மூலாதாரங்கள் மற்றும் யுனிட் ட்ரஸ்ட்கள்.

பதிவீடளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (ப.மு.ஆ.) தகமையாளது பிணையங்கள் துறையிலுள்ள அனைத்து சொத்து வகைகளையும் உள்ளடக்கும் ஒரு உச்ச தகமையாக மேம்படுத்தப்பட்டது. (உருவம் 17).

# செயற்பாட்டு மீளாய்வு

உருவம் 17: மூலதனச் சந்தை தகமை வரம்புறுகை




தொற்றினால் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் மற்றும் நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நிலைமைகளுக்கு சீராக்குவதன் முக்கியத்துவத்தினை அறிந்து மற்றும் புரிந்து நாம் தொடர்ந்தும் மூலதனச் சந்தை சான்றிதழ் திட்டத்தினை இயங்கலை ஊடாக நடாத்தியதுடன் இயங்கலை மேடைகளூடாக தடையற்ற விரிவுரைகளை வழங்குவதற்கு இயலுமையாயிருந்தது. நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இந்த திட்டங்கள் தொடர்பான அனைத்து பரீட்சைகளும் முறையாக நடாத்தப்பட்டன.

உரிமளித்தல் நடப்பாட்சியின் ஒரு பாகமாக நாம் பதிவீடளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (பமுஆ) மற்றும் சான்றளிக்கப்பட்ட உரித்துவ பிணையங்கள் ஆலோசகர் சான்றளிப்புகளை நிர்வகிக்கின்றோம். இவை உரிமமளிக்கப்பட்ட பங்குத் தரகு நிறுவனங்களில் ஒரு முதலீட்டு ஆலோசகராக செயலாற்றுவதற்கு கட்டாயமானதாகும். எனவே, முதலீட்டு ஆலோசகர்களுக்காக தொடர்ச்சியான வாய்மொழித்தேர்வுப் பரீட்சைகள் வருடம் பூராவும் நடாத்தப்பட்டதுடன் இவை நான்கு சொத்து வகுப்புகளுக்கும் சேவையாற்றும் பமுஆ உரிமத்தினை வேண்டும் மாணவர்களை உள்ளடக்கியவையாகும். அதாவது, உரித்துவப் பிணையங்கள், கடன் பிணையங்கள், யுனிட் ட்ரஸ்ட்கள் மற்றும் மூலாதாரங்கள் என்பதுடன் உரித்துவப் பிணையங்களை மாத்திரம் கொண்ட ஒரு தனி சொத்து வகுப்பிற்கான சாஉபிஆ இனையும் உள்ளடக்குகின்றது. பொருளாதார நெருக்கடிகள் மற்றும் எரிபொருள் கட்டுப்பாடுகளின் நிமித்தம் குறித்த பரீட்சைகளில் சில முழுவதுமாக இயங்கலை மூலமாக அல்லது இரண்டு விதத்திலும் நடாத்தப்பட்டன. எவ்வாறாயினும், வாய்மொழித்தேர்வு பரீட்சைகள் அனேகமாக தளத்திலேயே நடாத்தப்பட்டன. மேலாக, தொ.தொ.தி. இணைய கருத்தரங்குகள் வடிவில் நடாத்தப்பட்டன. இவை சந்தை தொழில்புரிபவர்களது தொழில்வல்லுனர்கள் தொடர்பான அறிவு மற்றும் திறன்களை விருத்திசெய்து பராமரிப்பதற்காகும்.

மேலாக, இ.பி.ப.ஆ. 2022 ஆம் ஆண்டின்போது முதலிடுவதிலான நிகழ்ச்சித்திட்டங்களை (மு.நி.) நடைமுறையிலுள்ள மற்றும் சாத்தியமான முதலீட்டாளர்களுக்கு நடாத்தியது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வழங்கப்பட்டது. அனைத்து மு.நி. ளும் இயங்கலை மூலமாகவே நடாத்தப்பட்டன. மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் துறைசாரா தனிநபர்கள், பல்லைக்கழக மாணவர்கள், பாடசாலைவிட்டு விலகியவர்கள் மற்றும் மூலதனச் சந்தை தொழில்வல்லுநர்களுக்கும் மேலாக ஏனைய துறைகளைச் சார்ந்த தொழில்வல்லுநர்களும் பங்குபற்றியதனை அவதானிக்கக் கூடியதாயிருந்தது.

## மூலதனச் சந்தைகளில் சான்றிதழ் (மூசசா), உரித்துவப் பிணையங்களில் சான்றிதழ் (உபிசா), கடன் பிணையங்களில் சான்றிதழ் (கபிசா) மற்றும் யுனிட் ட்ரஸ்களில் சான்றிதழ் (யுட்சா)

மேற்குறிப்பிட்ட திட்டங்கள் ஆங்கில மொழியில் நடாத்தப்பட்டதுடன் இவை 2022 ஆம் ஆண்டின்போது ஆரம்பிக்கப்பட்டன. 26 ஆவது தொகுதியானது ஒக்டோபர் 2022 இல் 88 பதிவுசெய்யப்பட்ட பங்குபற்றுநர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. (உருவம் 18)

**உருவம் 18: புள்ளிவிபரச் செயற்திறன்**

| பதிவுசெய்யப்பட்ட மொத்தம் | பிணையங்கள் சந்தைகள் மற்றும் கருவிகள் தொடர்களை நிறைவுசெய்தவர்கள் | உரித்துவத் தொடர்களை நிறைவு செய்தவர்கள் | கடன் தொடர்களை நிறைவு செய்தவர்கள் | யுனிட் ட்ரஸ்ட் தொடர்களை நிறைவு செய்தவர்கள் | நிதியியல் திட்டமிடல், ஆலோசனை வழங்கல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்களை நிறைவு செய்தவர்கள் | பிணையங்கள் ஒழுங்குவிதிகள் மற்றும் நெறிமுறைகள் தொடர்களை நிறைவு செய்தவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 88 | 53 | 39 | 37 | 62 | 68 | 46 |

## பதிவீடளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (பமுஆ), சான்றளிக்கப்பட்ட உரித்துவ பிணையங்கள் ஆலோசகர் (சாஉபிஆ) மற்றும் மீளமர்த்தல்கள்

இவ்வாண்டின்போது 12 வாய்மொழித்தேர்வு பரீட்சைகள் பின்வருவனவற்றை வேண்டும் மாணவர்களுக்காக நடாத்தப்பட்டன. பமுஆ உரிமம், சாஉபிஆ உரிமம் மற்றும் வருடாந்த தொ.தொ.தி. தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகாததன் நிமித்தம் முதிர்வடைந்த உரிமத்தினைக் கொண்ட முதலீட்டு ஆலோசகர்களை மீளமர்த்துவதற்காகவும் நடாத்தப்பட்டன.

இதன்பிரகாரம், இந்த வாய்மொழித்தேர்வு பரீட்சைக்கு 48 மாணவர்கள் பங்குபற்றியதுடன் சராசரி சித்தி எய்தல் வீதம் 60% ஆகும். சித்தி எய்திய மாணவர்களில் 19 மாணவர்கள் பமுஆ உரிமத்தினை பெற்று 70% சித்தி எய்தல் வீதத்தினையும் 100% சித்தி எய்தல் வீதத்தினை பெற்ற நான்கு மாணவர்கள் சாஉபிஆ உரிமத்தினையும் பெற்றார்கள். இவ்வாண்டின்போது ஆறு முதலீட்டு ஆலோசகர்கள் மாத்திரமே மீளமர்த்தப்பட்டதுடன் இது 35% சித்தி எய்தல் வீதத்தினை குறிப்பிடுகின்றது. (உருவம் 19)

**உருவம் 19: வாய்மொழித்தேர்வு பரீட்சைகளது புள்ளவிபரச் செயற்திறன்**

| வாய்மொழித்தேர்வுப் பரீட்சை | பங்குபற்றின மாணவர்களின் எண்ணிக்கை | சராசரி சித்தி % |
|---|---|---|
| பமுஆ / சாஉபிஆ / மீளமர்த்தல்கள் | 48 | 60% |

## தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (தொ.தொ.அ.)

மீளாய்வாண்டின்போது, பங்குத் தரகு நிறுவனங்களின் நடைமுறையிலுள்ள முதலீட்டு ஆலோசகர்களுக்கு உள்ளூர் மற்றும் உலகளாவிய மூலதனச் சந்தைகளில் காணப்படும் சமீபத்திய போக்குகளை தொடர்ச்சியாக அணுகி அவர்கள் தங்களை இற்றைப்படுத்திக்கொள்வதனை இயலுமையாக்கிக் கொள்வதற்காக ஐந்து தொ.தொ.அ. திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் 1400 இற்கும் அதிகமான பங்குபற்றுநர்களைக் கவர்ந்ததுடன், இவை பங்குத் தரகுக் கம்பனிகளின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள், முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் பகுப்பாய்வாளர்களை உள்ளடக்கியிருந்தன. அனைத்து தொ.தொ.அ. ளும் இணையக் கருத்தரங்குகளாக நடாத்தப்பட்டன.

இ.பி.ப.ஆ. நடைமுறையிலுள்ள முதலீட்டு ஆலோசகர்கள் அடுத்த வருடத்திற்கு அவர்களது பமுஆ நிலைமையினை புதுப்பிப்பதற்கு ஒரு வருடத்தில் ஆகக்குறைந்தது நான்கு தொ.தொ.அ. கருத்தரங்கு மதிப்புகளை பெற்றிருத்தல்வேண்டும் எனும் கட்டாயத் தேவைப்பாட்டினை பராமரித்தது. (உருவம் 20).

**உருவம் 20: தொ.தொ.அ. திட்டங்களின் சுருக்கம்: ஆண்டு 2022**

| தொ.தொ.அ. இன் தலைப்பு | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பணம் சலவை செய்தலுக்கு எதிரானவை மற்றும் வாடிக்கையாளர் அவதான விதிகளின் அறிமுகம் | 317 |
| இலங்கையின் பொருளாதாரம் : முன்னோக்கிய பாதை | 356 |
| சந்தை இடையீட்டாளர்கள் / நிறுவனங்களுக்கு பிரயோகிக்கப்படும் விதிகள் | 436 |
| கூட்டு முதலீட்டுத் திட்டங்கள் (கூ.மு.தி.) கோவையின் அறிமுகம் | 191 |
| தொடர்ச்சியான பட்டியலிடல் விதிகள் - உங்களது வாடிக்கையாளர்களுக்கு ஆலோசனை வழங்கும்போது நீங்கள் அறிந்திருக்கவேண்டியது என்ன | 181 |

## முதலிடுவதிலான நிகழ்ச்சித்திட்டம் (முநி)

முதலிடுவதிலான நிகழ்ச்சித்திட்டம் நடைமுறையிலுள்ள சாத்தியமான முதலீட்டாளர்களுக்கு பங்கு வர்த்தகத்தில் அடிப்படை கோட்பாடு மற்றும் நடைமுறை தோற்றங்களை வழங்கும் நோக்கத்திற்காக முன்னெடுக்கப்பட்டது. ஆறு கிழமைகள் அளவுடைய சிங்கள மொழி மற்றும் ஆங்கில மொழி நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வாண்டின்போது நடாத்தப்பட்டன. 28 ஆவது மற்றும் 29 ஆவது தொகுதிகள் ஜனவரி மற்றும் மார்ச் 2022 இல் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாண்டின்போது 26 மற்றும் 24 பங்குபற்றுநர்கள் முறையே சிங்கள மற்றும் ஆங்கில மொழித் திட்டங்களுக்கு பதிவுசெய்தார்கள்.

# செயற்பாட்டு மீளாய்வு

## தங்கப் பதக்கம் மற்றும் பண விருது திட்டம்

மீளாய்வாண்டின்போது நாம் தங்கப் பதக்கம் மற்றும் பண விருது திட்டத்தினை தொடர்ந்தோம். இது பல்கலைக்கழகங்களில் பல்கலைக்கழக மாணவர்கள் மூலதனச் சந்தை தொடர்பான பாடங்களை கற்பதனை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டதாகும். இந்த திட்டத்தின் கீழ் இலங்கையிலுள்ள தேசிய பல்கலைக்கழகங்களில் மூலதனச் சந்தைகள் பிரிவில் சிறப்பாக செயலாற்றும் பல்கலைக்கழக மாணவனுக்கு ஒரு தங்கப் பதக்கமும் பண விருதும் வழங்கப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட திட்டம் தொடர்பாக பதினொரு தேசிய பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம், 2022 இன் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேசிய பல்கலைக்கழகங்களுக்கு தங்கப் பதக்கங்களும் பண விருதுகளும் வழங்கப்பட்டன.

- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- களணிய பல்கலைக்கழகம்
- இலங்கையின் வயம்ப பல்கலைக்கழகம்
- இலங்கையின் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
- இலங்கையின் ரஜரட்ட பல்கலைக்கழகம்
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- இலங்கையின் கிழக்கு பல்கலைக்கழகம்



மூலதனச் சந்தைப் பிரிவில் சிறப்பாக செயலாற்றிய ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மாணவி செல்வி. எம்.எச்.எம்.ஐ.எம்.செனவிரத்ன அவர்களுக்கு தங்கப் பதக்கம் மற்றும் பண விருது வழங்கப்பட்டது.

## மூலதனச் சந்தை தகவல் மையம் (மூ.ச.த.மை)

மூலதனச் சந்தையில் முறைமைப்படுத்துபவராக இ.பி.ப.ஆ. நாட்டில் நிதியியல் அறிவினை மேம்படுத்துவதற்கு எந்நேரமும் முயற்சிக்கின்றது. இது மூலதனச் சந்தையின் நிலைபேறுடைய அபிவிருத்திக்கு ஒரு அறிவு அடிப்படையான, அறிவினால் வழிநடத்தப்படும் துறையினை உருவாக்குவதில் முக்கியம் என நாம் நம்புகின்றோம். மூலதனச் சந்தை பாடத்தை பிரபல்யப்படுத்தல் மற்றும் ஆய்வினை ஊக்கப்படுத்தல் நோக்கத்துடன் இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களில் மூ.ச.த.மை இனை நிறுவுவதற்கான ஒரு திட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படுகின்றது. இங்கு ஒரு இ-பயிலல் சூழலூடாக மூலதனச் சந்தை தகவல்கள், தரவு மற்றும் ஏனைய கல்விக் கருவிகள் என்பன ஆய்வு மற்றும் கற்றல் நோக்கங்களுக்கு மூலதனச் சந்தை பற்றிய அவர்களது புரிந்துணர்வினை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் முதலீடு செய்வதில் அவர்களது அறிவினை தரமுயர்த்துவதற்காகவும் கல்வியாளர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போதைய சூழமைவில் அத்தகைய முன்னெடுப்பின் முக்கியத்துவம் எடுத்துக் காட்டப்படுவதுடன் தற்போது நாம் இணையத்தளத்தினை புதுப்பிக்கும் செயன்முறையில் உள்ளோம். 2022 இன்போது நாம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் மேற்கொண்டு மூ.ச.த.மை. இன் நிலைமை மற்றும் அதன் பயன்பாட்டினை அவதானித்தோம்.

செய்திகளில் இ.பி.ப.ஆ.



# Capital market content in school curriculum from 2023

SEC to allow local companies to raise capital in foreign currencies

Lanka's financial literacy low at 58%

COLOMBO, 23RD MARCH 2022

# Securities and Exchange Commission of Sri Lanka and CFA Society Sri Lanka continue to advance capital market governance standards

SEC UNDERSCORES ROLE OF CFA CAPITAL MARKET AWARDS IN UPLIFTING INVESTMENT RESEARCH STANDARDS

Mr Viraj Dayaratne, PC Chairman, Securities Exchange Commission, Sri Lanka

We are happy that they have shown an interest and taken steps towards contributing to the market, along with the regulator, the Securities and Exchange Commission, as well as the Colombo Stock Exchange, with the idea of bringing in new regulations

Podium Participants (from left): CSE CEO Rajeeva Bandaranaike, CSE Director Jayantha Fernando, CSE Director Dimuthu Abeywardena, CSE Director Ray Abeywardena, CSE Chairman Dilshan Wirasekara, SEC Chairman Viraj Dayaratne PC, SEC/CSE Joint Committee Chairman for Digitalisation Naresh Abeyesekara, SEC DG Chinthaka Mendis, SEC Commission Member Sanjaya Bandara, SEC Commission Member Manil Jayesinghe, CSE Director Arjuna Herath, and SEC Commission Member Sanjeewa Dissanayake

# SEC, CSE complete third phase of CSE digitalisation

A special market- ... ceremony under the patronage of SEC Chairman Viraj Dayaratne PC to mark the third phase ... of the Sri ... SEC/CSE Joint Committee for Digitalisation Chairman Naresh Abeysekera said: "Today, this digital ... not only market, but has changed the entire digital landscape of the capital market industry. It's a remarkable feat we achieved." A joint committee was formed by SEC Chairman Dayaratne, with the objective of identifying measures and mechanisms required for the Colombo stock market to conduct its core activities digitally.

Contd. on page 8

# SEC, CSE and CA Sri Lanka to capitalise on synergies to advance non-financial reporting

THE Securities and Exchange Commission of Sri Lanka (SEC), the Colombo Stock Exchange (CSE) and the Institute of Chartered Accountants of Sri Lanka (CA Sri Lanka) recently signed a Memorandum of Understanding (MoU) to encourage and advance non-financial reporting in Sri Lanka.

Through the MoU, the three institutions aim to capitalise on mutual interests and synergies to jointly deliver awareness on Integrated Reporting, Corporate Governance, Sustainability and other ESG focus areas. Furthermore, the MoU also paves the way for broader cooperation on ESG, including dialogue and consultations on driving progressive ESG policies and frameworks and the introduction of ESG focused new products in the capital market and ... stakeholder engagement on advancing ESG.

SEC Chairman Viraj Dayaratne PC said: "The MoU with CA Sri Lanka brings together three like-minded institutions, with the common goal of establishing more elaborate and transparent reporting of non-financial information in Sri Lanka. The MoU lays a long-term foundation for the SEC and CSE to work with CA Sri Lanka to introduce policies to ensure that Sri Lankan corporates report more ...

From left: CASL CEO Dulani Fernando, SEC Commission Member Manil Jayesinghe, ... Viraj Dayaratne PC, CSE Chairman Dilshan Wirasekara, SEC DG Chi...

# SEC Act enables setting up Central Counterparty mechanism

The new Securities and Exchange Commission of Sri Lanka (SEC) Act which came into force from September 19, 2021 contains provisions which enable the setting up of a Central Counterparty (CCP).

The need for setting up a CCP to enhance the efficiency of post trade risk management had been spoken of for a long time and as the first step towards this, the launch of Delivery vs Payment (DvP) mechanism was successfully completed on August 16, 2021.

The SEC and the Colombo Stock Exchange (CSE) engaged in several rounds of discussions to determine how such a project could be taken forward.

The initiative was considered as part of the ...

Committee comprising of members of the SEC and the CSE.

It was also decided to have a close dialogue with the Central Bank of Sri Lanka (CBSL) since the CBSL is in the process of setting up a CCP mechanism for government securities which is also one of the policy actions under the Capital Market Development Project of the Asian Development Bank (ADB).

The Chairman of the SEC Viraj Dayaratne has nominated Commission Member Sunil Lankatilaka to head the Joint Committee which will include Director General, Chinthaka Mendis and Acting Director, Capital Market Development, Prabash Wanigathunga from the SEC.

The CSE has nominated Director Dilshan Wirasekara, Director Suren De Silva, CEO Rajeeva Bandaranaike, ...

...mittee's key mandate will be to identify the manner of implementation of a CCP and to recommend the entire procedure including matters pertaining to procurement.

The expectation is that it could be completed before the end of next year. The first meeting of the Committee will be held soon.

A CCP can offer significant benefits to the Financial Market in Sri Lanka and can be considered as part of the critical Financial Market Infrastructure that is needed and is of national interest.

The effectiveness of CCPs in acting as firewalls have been proven in other markets especially during the global financial crisis in 2008 where they successfully contained the contagion of losses resulting as consequences of default by certain financial institutions active in markets cleared by those CCPs. To complete the transitioning of the market towards adopting a CCP mechanism for clearing ...

... and settlement that would not only enhance the post trade risk management but also unlock the potential for the launch of more complex and new instruments such as derivatives, for which provision is made in the Act.


Having a robust post trade management mechanism in place is one of the key requirements considered by foreign portfolio investors in identifying the most suited investment destinations.

Upon implementing a CCP mechanism Sri Lanka could have much needed foreign investment flows to the country. As per the Market Classification Framework, a well-functioning clearing and settlement system based on the broad framework set by the Bank for International Settlements including a DVP will positively contribute towards in the efforts of elevating to "emerging market" status from the current frontier market status.

# செயற்பாட்டு மீளாய்வு

சமூக ஊடக மேடைகளூடாக முதலீட்டாளர்களை வலுவளித்தல்




























SEC
ඔබ දන්නවාද?
2021 අංක 19 දරන ශ්‍රී ලංකා සුරැකුම්පත් සහ
විනිමය කොමිෂන් සභා පනතට අනුව සෑම කොටස්
තැරැව්කාර ආයතනයක්මසමීක්ෂණ අංශයක්
පවත්වා ගත යුතු බව.
සමීක්ෂණයෙන් තොරව කොටස් වෙළෙඳපොළේ
ආයෝජනය කිරීමෙන් වළකින්න!


BEWARE OF FALSIFIED RESEARCH REPORTS
Base your investment decisions from research reports obtained directly from your stockbroker firm/CSE Mobile App. Always check the authenticity of broker reports that you receive via Social media/third parties
@SEC_SriLanka


DID YOU KNOW?
Delivery versus payment (DVP) is a mechanism adopted by Stock Exchanges to minimize principal risk,
that is, the risk that the seller of a security would deliver the security but not receive payment or that the buyer of a security would make payment but not receive delivery of the security.


SEC
Equity Crowdfunding is solicitation of funds (small amounts) from multiple investors through a web-based platform or social networking site for a business venture.


35
SEC
DID YOU KNOW ?
Prior written approval of the SEC shall be obtained by Stock Broker Firms, in order to transfer Securities from one Client Account to another Client Account, outside the trading procedure of the CSE.
All such transfer application forms shall be submitted to the CDS along with original letter of approval received from the SEC.


35
SEC
Don't despair amid the inevitable setbacks that all investors face, especially during a crisis in the market. If the reasoning behind the investment was sound, stick with it, and it should eventually turn around


SEC
Capitalization of Reserves
CONSIDERATION (RS.)
The per share value which will be considered for the increase in the stated capital, in respect of the new shares issued by way of the capitalization of reserves


BLUE BONDS
Blue bonds are a subset of Green bonds, where the funds raised are used to finance the resilience of marine and coastal ecosystems, particularly in line with Sustainable Development Goals.
SEC

# செயற்பாட்டு மீளாய்வு

## மனித வளங்கள்

இ.பி.ப.ஆ. இன் பணியாட்கள் மிகவும் பெறுமதியான மற்றும் அவசியமான சொத்தாகும், மற்றும் ஒரு உயர் செயற்திறனுடைய நிறுவனத்தினை வளர்ப்பதற்கு இ.பி.ப.ஆ. தொடர்ச்சியாக திறமையுடையோரை கவர்ந்து தக்கவைத்துக் கொள்ளல் முக்கியமாகும். ஒவ்வொரு பணியாளரதும் நலன் மற்றும் முன்னேற்றத்தினை உறுதிப்படுத்துவதற்கு நாம் முயற்சிப்பதுடன் பணியாட்கள் துணையளிக்கப்பட்டும் மதிக்கப்படுவதனையும் உணரக்கூடிய ஒரு சாத்தியமான பணிச் சூழலினை உருவாக்குவதன் மூலம் அவர்களது மனவுறுதியினை உயர்த்துவதற்கும் முயற்சிக்கின்றோம்.


## பணிக்கமர்த்தல்

இளம் தொழில் வல்லுநர்களினால் இ.பி.ப.ஆ. இனை போட்டிக்குரியதாகவும், பொருத்தமானதாகவும், புதிய கண்ணோட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப ஆற்றல்கள் போன்ற முக்கியமான திறன்களையும் கொணர்ந்து துணைபுரிய இயலும் என நாம் நம்புகின்றோம். எனவே, நாம் 2022 இன் கடைசிப் பகுதியில் செயலகத்தின் ஐந்து முக்கிய பிரிவுகளில் பணியாற்றுவதற்காக பல்வேறு துறைகளிலுள்ள பதினான்கு இளம் செதாழில் வல்லுநர்களை நிரந்தச சேனைக்கு பணிக்கமர்த்தினோம். மேலாக, செயலகமானது இரண்டு பணிப்பாளர்களை, பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம் பணிப்பாளர் மேற்பார்வை ஆகியோரை நிரந்தர சேனைக்கு நியமிக்க இயலுமையாயிருந்தது. இதற்கும் மேலாக, இ.பி.ப.ஆ. இன் தொழிற்சேனையினை பலப்படுத்துவதற்காக பணிப்பாளர் சட்டம் மற்றும் வலியுறுத்தல், பிரதான தகவல் அதிகாரி மற்றும் பணிப்பாளர் மனித வளங்கள் போன்ற சிரேஷ்ட பதவிகளை நிரப்புவதற்காக நேர்முகத்தேர்வுகளை நடாத்தினோம்.

பணியாளர் ஒருமுனைப்படுத்தல் புதிய பணியாளர்களுக்கு அவர்கள் நிறுவனத்துடன், அதன் கொள்கைகளுடன், கலாச்சாரம் மற்றும் விழுமியங்களுடன் பழக்கப்படுத்திக்கொள்வதற்கு ஒரு முக்கியமான தோற்றமாகும். ஒரு ஒருமுனைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் புதிய பணியாட்களுக்காக நடாத்தப்பட்டதுடன் இது செயலகத்தின் பணியிலான நுண்ணறிவினை பெறுவதற்காகவும் பிணையங்கள் சந்தையின் செயற்பாடுகள் பற்றிய அறிவு மற்றும் விழிப்புணர்வினையும் பெற்றுக்கொள்வதற்குமாகும்.


எவ்வாறாயினும், மீளாய்வாண்டின்போது அனுபவமிக்க மற்றும் திறன்மிக்க இளம் தொழில்வல்லுநர்களை நிறுத்திவைத்திருப்பது ஒரு கடுமையான சவாலாகக் காணப்பட்டது. நாட்டில் தற்போது நிலவும் நிலைமையில், ஐந்து பணியாட்கள் குடிபெயர்ந்ததுடன் எட்டு பணியாட்கள் நாட்டிலுள்ள வேறு நிறுவனங்களுக்கு நகர்ந்தார்கள். இதன் பிரகாரம், இரண்டு பணிப்பாளர்கள், ஒரு முகாமையாளர், இரண்டு சிரேஷ்ட உதவி முகாமையாளர்கள், ஏழு உதவி முகாமையாளர்கள் மற்றும் ஒரு சிரேஷ்ட நிறைவேற்று காரியதரிசி உள்ளடங்கலான பதின்மூன்று பதவி விலகல்கள் பதிவுசெய்யப்பட்டதுடன், இவ்வாண்டிற்கான பணியாட்கள் புரள்வானது 14% ஆக காணப்பட்டது. (உருவங்கள் 21,22,23,24,25)

உருவம் 21: சேவைக்கால தகவல்கள்





"இளம் தொழில் வல்லுநர்களினால் இ.பி.ப.ஆ. இனை போட்டிக்குரியதாகவும், பொருத்தமானதாகவும், புதிய கண்ணோட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப ஆற்றல்கள் போன்ற முக்கியமான திறன்களையும் கொணர்ந்து துணைபுரிய இயலும் என நாம் நம்புகின்றோம்"


உருவம் 22: கல்வித் தகமைகள்





உருவம் 23: பாலினத் தொகுப்பு




உருவம் 24: வயது ஆய்வியல்



உருவம் 25: நடைமுறையிலுள்ள தொழிற்சேனை




## பயிற்சி மற்றும் அபிவிருத்தி

பயிற்சி மற்றும் அபிவிருத்தி என்பது இ.பி.ப.ஆ. இல் ஒரு முக்கிய அம்சமாகும் என்பதுடன் இது பணியாட்கள் தொழில்ரீதியாகவும் தனிப்பட்டரீதியாகவும் வளர்ச்சியடைவதற்கு அனுமதிக்கின்றது. இ.பி.ப.ஆ. இக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பாணையினை பயனுறுதிமிக்கதாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு பணியாட்களின் தொழில்நுட்ப மற்றும் ஏனைய பொருத்தமான திறன்களை மேம்படுத்துவதில் தொடர்ச்சியான அழுத்தம் மேற்கொள்ளப்படுகின்றது. பணியாட்களுக்கு வெளிநாட்டு பயிற்சியினை வழங்கும் நோக்கில் இ.பி.ப.ஆ. மீளாய்வாண்டின்போது ரூபா 25 மில்லியனை ஒதுக்கியது.

ச.பி.ஆ.ஒ. இன் வருடாந்த கருத்தரங்கானது அதன் அங்கத்தவர்களுக்கு உலகிலுள்ள பிணையங்கள் மற்றும் எதிர்வுகள் சந்தையில் எழுகின்ற மிகவும் அழுத்தமான முறைமைப்படுத்தல் அக்கறைகளை கலந்துரையாடுவதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது. ஒக்டோபர் 2022 இல் மொரோக்கோவில் இடம்பெற்ற ச.பி.ஆ.ஒ. இன் 47 ஆவது வருடாந்த கருத்தரங்கில் இ.பி.ப.ஆ. இன் தலைவர் பிரதிநிதித்துவம் செய்தார்.

மேலும், இ.பி.ப.ஆ., ச.பி.ஆ.ஒ. இன் குழு 4 மற்றும் பரிசோதனை குழுவில் (ப.கு.) ஒரு அங்கத்தவராகும். இந்த கூட்டத்தின் நோக்கம், புதிய அங்கத்தவர்களை பரிசோதித்தல், ப.பு.ஒ. இன் அமுலாக்கலிலிருந்து எழுகின்ற வலியுறுத்தல் சிக்கல்களை விளித்துரைத்தல், ச.பி.ஆ.ஒ. பு.ஒ. தொடர்பான செயன்முறைகளில் கருத்துக்களை பரிமாற்றிக்கொள்ளுதல், சிறந்த நடைமுறைகளை இனங்காணுதல் மற்றும் தகவல்களை பரிமாற்றிக்கொள்ளுதல் என்பவையாகும். ச.பி.ஆ.ஒ. இன் குழு 4 இல் தொடர்ச்சியான பங்குபற்றலின் முக்கியத்துவத்தினை கருத்திலெடுத்து நவம்பர் 2022 இல் ஸ்பெயினில் இடம்பெற்ற கூட்டத்தில் பணிப்பாளர் நாயகம் அவர்கள் பங்குபற்றினார்கள்.

முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில், பணியாட்களுக்கு வெளிநாட்டு பயிற்சிகள் வழங்கப்படாத போதிலும் பல்வேறு உள்ளூர் பயிற்சிகளுக்கு வசதியளிக்கப்பட்டது. பணியாட்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக, சுக்குக், புதிய இ.பி.ப.ஆ. சட்டம், இஸ்லாமிய வங்கியியல் மற்றும் நிதியியல், திறைசேரி பின்புலக் காரியாலயத்தின் செயற்பாடுகள், நிலையான வருமான முதலீடுகளின் பகுப்பாய்வு, இடர் அடிப்படையிலான த.தொ. கணக்காய்வு போன்ற பிரிவுகளில் பயிற்சி வழங்கப்பட்டது. மேலாக, எமது பணியாட்கள் பட்டயக் கணக்காளர்களின் 43 ஆவது தேசிய கருத்தரங்கான, நிதியியல் அறிக்கையிடலில் "உங்களது தொழில்நுட்ப திறன்களை இற்றைப்படுத்துங்கள்" இல் பங்குபற்றியதுடன் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் நடாத்தப்பட்ட தடயவியல் கணக்கீட்டில் சான்றிதழ் பாடக்கோப்பிலும் பங்குபற்றினார்கள்.

மேலும், பணியாட்களுக்கு உலகளாவிய சு.ச.ஆ. முதலீட்டில் ஒரு சான்றிதழ் திட்டம் வழங்கப்பட்டதுடன் இது ப.நி.ப. இனால் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முன்னெடுப்பானது உலக வங்கியின் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் திட்டத்தினால் நிதியளிக்கப்பட்டதாகும். இ.பி.ப.ஆ. கழிவிறக்கம் செய்யப்பட்ட வீதங்களில் ப.நி.ப. பாடக்கோப்புகளை பின்பற்றுவதற்காக பணியாட்களுக்கு கல்வி உதிவித்தொகைகளுக்கு தொடர்ச்சியான வசதியினை வழங்கியது.

மேலாக, பணியாட்களுக்கு மூன்று கொள்திறன் கட்டியெழுப்பல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் பணியாட்கள் அவர்களது கடமைகளை மிகவும் பயனுறுதிமிக்க விதத்தில் நிறைவேற்றுவதனை இயலுமையாக்குவதற்காக அவர்களிடையே தொழில்நுட்ப மற்றும் மென் திறன்கள் விருத்திசெய்யும் மற்றும் வலுவூட்டும் குறிக்கோளைக் கொண்டதாகும்.

பணியாட்களது கல்விக்கான கடப்பாட்டினை வெளிப்படுத்தும் விதமாக இ.பி.ப.ஆ. பணியாட்கள் கற்கை நெறிகளை தொடர்வதற்கு தொடர்ச்சியாக வாய்ப்புக்களை வழங்கியது. இதன் பிரகாரம், ஒரு சிரேஷ்ட அலுவலக உதவியாளர் மற்றும் ஒரு ஓட்டுநருக்கு ஒரு ஆறுமாத கணினி சான்றிதழ் பாடத்திட்டத்தினை பின்பற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. இது அறிவினைப் பெறுவதற்கும் செயற்பாடுகளை திறமையாக மேற்கொள்வதற்கும் ஆகும்.

மீளாய்வாண்டின்பொது இ.பி.ப.ஆ. இன் பணியாட்களுக்கான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சிக்காக மொத்தமாக ரூபா 9.3 மில்லியன் செலவழிக்கப்பட்டது. மேலாக, உயர் கல்வி மற்றும் அங்கத்துவ கட்டணங்களுக்கான உதிவித்தொகைகளாக அண்ணளவாக ரூபா 2 மில்லியன் செலவழிக்கப்பட்டது.

## பணியாட்கள் நலன்

இ.பி.ப.ஆ. இன் செயலகமானது அதன் பணியாட்களுக்கு வெளிவாரி மருத்துவத் திட்டங்கள், நெகிழ்வான வருகைகள், ஒரு இன்னல் கடன் திட்டம், பண்டிகை முற்பணங்கள், ஒரு தொழில்சார் அங்கத்திற்கான அங்கத்துவ கட்டணங்களின் செலவீடு, சுகாதார மற்றும் ஆயுள் காப்புறுதி காப்புகள், உதவி பணியாட்களுக்கான சீருடைகள் போன்ற பரவலான நலன்களை வழங்குகின்றது.

கொ.ப.ப. இரண்டு நிறுவனங்களுக்கிடையேயான நட்புணர்ச்சி மற்றும் சிறந்த ஒருங்கிணைப்பினை மேம்படுத்தும் எண்ணத்தில் இ.பி.ப.ஆ. இனை ஒரு தோழமையான கிரிக்கட் போட்டிக்கும் அதனைத் தொடர்ந்தான தோழமை மற்றும் இராப்போசனத்திற்கும் வரவேற்றது. இந்த மறக்கவியலாத மற்றும் வெற்றிகரமான நிகழ்வானது டி.எஸ்.சேனநாயக்கா பாடசாலை மைதானத்தில் இரு நிறுவனங்களதும் 140 பணியாட்களின் பங்குபற்றலுடன் 19 டிசம்பர் 2022 இல் இடம்பெற்றது.

பணியாட்களது வருடாந்த கிறிஸ்மஸ் ஒன்றுகூடலானது ஆவலுடன் காத்திருக்கும் வருடாந்த நிகழ்வாகும் என்பதுடன் இது பணியாட்கள் மற்றும் அவர்களது குடும்பத்தார் ஒன்றிப் பழகுவதற்காக ஒழுங்குசெய்யப்படுகின்றது. மீளாய்வாண்டின்போது வருடாந்த பணியாட்களது ஒன்று கூடலானது அலுவலக வளாகத்தினுள்ளேயே இடம்பெற்றது.

இ.பி.ப.ஆ. பணியாட்களின் பிள்ளைகளிடையே வாசிப்பு மற்றும் எழுதுதலுக்கான ஆர்வத்தினை மேம்படுத்துவதற்காக பல போட்டிகள் நடாத்தப்பட்டன. இந்த முன்னெடுப்பானது பணிப்பாளர் நாயகத்தின் யோசனையாகும். இப்போட்டிகள் பின்வருமாறு தலைப்பிடப்பட்டிருந்தன: "ஒரு வாசகரை எழுப்புங்கள்", "சிறிய பிக்காஸோ", "எனது விருப்பமான புத்தகத்தில் - நுண்ணிய எண்ணங்கள்" மற்றும் "புத்தகங்களின் யுத்தம்" என்பனவாகும். மேலும், பணியாட்கள்

# செயற்பாட்டு மீளாய்வு

மற்றும் அவர்களது பிள்ளைகளை வாசிப்பதற்கு ஊக்குவிக்கும் முகமாக இவ்வாண்டின்போது இ.பி.ப.ஆ. இன் நூலகமானது புதிய கற்பனை மற்றும் கற்பனையல்லா புத்தகங்களினால் நிரப்பப்பட்டுள்ளது. வெற்றியாளர்களுக்கும் பங்குபற்றியவர்களுக்கும் பாராட்டுக்கான சின்னங்கள் வழங்கப்பட்டன.

### உள்ளிருப்புப் பயிற்சி

தேசிய பல்கலைக்கழகங்களின் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உள்ளிருப்புப் பயிற்சியினை வழங்குதல் இ.பி.ப.ஆ. இனால் நிர்வகிக்கப்படும் ஒரு முக்கியமான பகுதியாகும். செயலகமானது பல்கலைக்கழக மாணவர்கள் வேலை பயிற்சியினை பெறுவதற்கு தொடர்ச்சியாக துணைபுரிந்ததுடன், 10 புதிய உள்ளிருப்பு பயிற்சியாளர்களுக்கு அவர்களது பொருத்தமான கற்கை பிரிவுகளின் பிரகாரம் இ.பி.ப.ஆ, இன் பல்வேறு பிரிவுகளில் சேவையாற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது.

### தகவல் தொழில்நுட்பம்

மீளாய்வாண்டின்போது, உலக வங்கியின் நி.து.ந.தி. இன் கீழ் கே.பி.எம். ஜி. ஸ்ரீலங்கா மற்றும் ஏஎஸ்எம் மெனேஜ்மன்ட் இன்வர்மேஷன் கன்சல்ட்டிங் (ஹங்கேரி) என்பன அடுத்த ஐந்து வருடங்களுக்கு இ.பி.ப.ஆ. இனது தகவல் தொழில்நுட்ப மூலோபாயம் மற்றும் தகவல் தொழில்நுட்ப (த.தொ.) சாலை வரைபடம் ஆகியவற்றை விருத்திசெய்தது.

தகவல் தொழில்நுட்ப மூலோபாயமானது இ.பி.ப.ஆ. இன் கூட்டாண்மைத் திட்டம் 2021-2023 மற்றும் மூலதனச் சந்தை மூலோபாயம் 2021-2025 உடன் ஒத்திருந்தன. த.தொ. மூலோபாயத்தில், ஆலோசனை நிறுவனமானது இ.பி.ப.ஆ. இற்கு 5 முக்கியமான மூலோபாய போக்கினை பரிந்துரைத்துள்ளது. அவையாவன, உள்ளக வணிகச் செயற்பாடுகளின் தன்னியக்கமாக்கலினை மேம்படுத்துதல், வெளிவாரி பங்காளிகளுக்கான சிறந்த சேவைகள், உள்ளக வாடிக்கையாளர்களுக்கான சிறந்த சேவைகள், போதுமையான கணினி வளங்கள் மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தியினை வழங்குதல் ஆகும். ஒவ்வொரு மூலோபாய போக்கும் மூலோபாய செயற்பாடுகளுடன் இணைக்கப்பட்டது. நிறுவனத்தின் குறிக்கோள்களது தேவைகள் மற்றும் நிறைவேற்றலின் அடிப்படையில் செயற்பாடுகள் முன்னுரிமையளிக்கப்பட்டதுடன், இவை த.தொ. சேவைகள், உட்கட்டமைப்பு, செயன்முறைகள் மற்றும் மனித வளங்களை பலப்படுத்துவதன் மூலமாகும்.

த.தொ. மூலோபாய இலக்குகளின் இனங்காணலானது இ.பி.ப.ஆ. இன் நடைமுறையிலுள்ள த.தொ. சூழலிலான ஆய்ந்தறிதல் அறிக்கையின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையிலாகும். ஆலோசகர் தகவல் மற்றும் தொடர்புடைய தொழில்நுட்பங்களுக்கான கட்டுப்பாட்டு குறிக்கோள்கள், வணிகச் செயன்முறைகள், உட்கட்டமைப்பு மற்றும் அதன் ஆட்கள் உள்ளடங்கலான இ.பி.ப.ஆ. த.தொ. சூழலிலை மதிப்பிடும் செயன்முறை முதிர்வு மாதிரி என்பவற்றை பயன்படுத்தியுள்ளார்.

முக்கிய மூலோபாய போக்குகளின் பிரகாரம், வணிகச் செயற்பாடுகளின் தன்னியக்கமாக்கல் மேம்பாட்டின் கீழ், இ.பி.ப.ஆ. த.தொ. குழுவானது 2022 வருடத்தின்போது மைக்ரோசொவ்ட் செயார்பொயின்ட் இல் முழு அளவிலான அதிநவீன ஆவண முகாமைத்துவம் மற்றும் ஆவணக்காப்பக அமைப்புமுறையினை அமுலாக்குவதில் வெற்றிகண்டது.

> "தேசிய பல்கலைக்கழகங்களின் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உள்ளிருப்புப் பயிற்சியினை வழங்குதல் இ.பி.ப.ஆ. இனால் நிர்வகிக்கப்படும் ஒரு முக்கியமான பகுதியாகும். செயலகமானது பல்கலைக்கழக மாணவர்கள் வேலை பயிற்சியினை பெறுவதற்கு தொடர்ச்சியாக துணைபுரிந்தது"

## சட்டரீதியான நிதியங்கள்

### தீர்வை நிதியம்

தீர்வை நிதியமானது 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 14பி, 1991 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கத் திருத்தச்சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கத் திருத்தச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத் திருத்தச் சட்டம் (பழைய இ.பி.ப.ஆ. சட்டம் ), என்பவற்றின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டதுடன் இவை 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 156 (1) இனால் நீக்கப்பட்டு மாற்றீடு செய்யப்பட்டது.

2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவுகள் 155 (1) மற்றும் (2), 156 (1), (2) மற்றும் (3) இன் பிரகாரம் தீர்வை நிதியத்தினை செயற்படுத்துவதற்கான செயல்முறை மற்றும் நோக்கங்கள் பின்வருமாறு.

155 (1) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினால் அமைச்சரினால் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய வீதத்தில், உரிமம் பெற்ற பங்குப் பரிமாற்றகமொன்றில் பதிவாகும் ஒவ்வொரு பிணையங்கள் கொள்வனவு மற்றும் விற்பனையிலும் அல்லது அதன் விதிகளுக்கேற்ப கொள்வனவாளராலும் விற்பனையாளராலும் ஓர் தீர்வை விதிக்கப்பட்டு, அறவிடப்பட்டு மற்றும் செலுத்தப்படல் வேண்டும். வெவ்வேறு வகைப்பட்ட பிணையங்களுக்கு வெவ்வேறு கட்டணங்கள் குறிப்பிடப்படலாம்.

(2) இப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையானது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் வேறு ஏதேனும் வரி அல்லது தீர்வைக்கு மேலாகச் செலுத்தப்படல்வேண்டும்

156 (1) பிரிவு 155 இன் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையை வரவு வைப்பதற்காக தீர்வை நிதியம் எனப்படும் நிதியமொன்று நிருவப்படல்வேண்டும்.

(2) தீர்வை நிதியத்தின் வரவிலுள்ள பணமானது பின்வரும் நோக்கங்களுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படலாம் -

(அ) பிணையங்கள் சந்தையினை விருத்தி செய்வதற்கு

(ஆ) இழப்பீட்டு நிதியத்தின் வரவிலுள்ள பணத்தை மேம்படுத்துவதற்கு அல்லது இந்த பகுதியின் கீழ் நிறுவப்பட்ட ஆணைக்குழுவின் நிதியத்திற்கு

(இ) ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு, செயலாற்றுவதற்கு மற்றும் நிறைவேற்றுவதில் முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் செயற்பாடு என்பவற்றுக்கான ஆணைக்குழுவினால் ஆட்பட்ட அனைத்து செலவினங்களையும் சந்திப்பதற்கு

(ஈ) ஆணைக்குழு பொருத்தமானது எனக் கருதும் பிரகாரம் ஆணைக்குழுவின் பணியாட்களுக்கு வீடமைத்தல், கல்வி, ஆரோக்கியம் மற்றும் போக்குவரத்து நோக்கங்களுக்கு கடன்கள் வழங்குவதற்கு

(உ) பணிப்பாளர் நாயகம் மற்றும் அதன் அதிகாரிகள் மற்றும் சேவகர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போர் மற்றும் நியமிக்கப்பட்டோர் ஆகியோரது நலனுக்காக நிறுவப்பட்ட ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்கள் மற்றும் ஏனைய திட்டங்களுக்கு பங்களிப்புகளை மேற்கொள்வதற்கு மற்றும்

(ஊ) ஆணைக்குழுவினால் தகுதியானவர்கள் என தீர்மானிக்கப்பட்டவாறு ஆணைக்குழவின் அதிகாரிகள் மற்றும் சேவகர்களுக்கு இலங்கையில் அல்லது வெளிநாட்டில் கற்கைக்கான செலவினங்களுக்கு பணங்கொடுத்து தீர்ப்பதற்கு

(3) தீர்வை நிதியத்தின் வரவிலுள்ள ஏதேனும் மேலதிக பணத்தை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய விதத்தில் தீர்வை நிதியத்தினை விருத்திசெய்யும் நோக்கத்திற்காக ஆணைக்குழு முதலீடு செய்யலாம்.

## உரித்துவ பிணையங்களுக்கான இ.பி.ப.ஆ. தீர்வை

கொ.ப.ப. இன் வழிகாட்டல்களின் பிரகாரம், 1 ஆகஸ்ட் 2010 முதல் இ.பி.ப.ஆ. ஆல் விதிக்கப்பட்டுள்ள தீர்வை வீதமானது இரண்டாவது தடவையாக ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.09% இலிருந்து ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.072% ஆக குறைக்கப்பட்டுள்ளது. முன்னைய குறைப்பானது 1 டிசம்பர் 2003 முதல் பிரயோகத்திலுள்ள தீர்வைக் கட்டணம் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.1% இலிருந்து 0.09% ஆகக் குறைக்கப்பட்டது.

மேலும், மேற்குறிப்பிட்ட வீதங்களுக்கு பிரயோகிக்கப்படும் குறுமட்டமானது 27 ஜூன் 2017 முதல் ரூபா 100 மில்லியனாக மாற்றியமைக்கப்பட்டது. முன்னர், 1 ஜனவரி 2011 முதல், ரூபா 50 மில்லியன் வரைக்குமான மற்றும் ரூபா 50 மில்லியனுக்கு மேலான கொடுக்கல் வாங்கல்களுக்கு இ.பி.ப.ஆ. தீர்வையானது முறையே 0.072 % மற்றும் 0.045% ஆக அறவிடப்பட்டன. அதன் பின்னர் 27 ஜூன் 2017 தொடக்கம், மாற்றியமைக்கப்பட்ட குறுமட்டத்தின் பிரகாரம் ரூபா 100 மில்லியன் வரைக்குமான மற்றும் ரூபா 100 மில்லியனுக்கும் மேலான கொடுக்கல் வாங்கல்களுக்கு இ.பி.ப.ஆ. தீர்வையானது முறையே 0.072% மற்றும் 0.045% ஆக அறவிடப்பட்டன.

இதற்கும் மேலாக, ஒரே நாளிலான வர்த்தகங்களுக்கு, அதாவது ஒரு வாடிக்கையாளர் ஒரே தினத்தில் ஒரே தரகரூடாக ஒரே பிணையத்தினை வாங்கி விற்றால் (அல்லது நேர்மாறாக) இ.பி.ப.ஆ, க்கு சேரவேண்டிய கொடுக்கல் வாங்கல் கட்டணம் 15 பெப்ரவரி 2006 முதல் ஒரு பக்க கொடுக்கல் வாங்கலுக்கு விதிக்கப்படமாட்டாது.

கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை விற்பனை செய்த பங்குகளின் எண்ணிக்கைக்கு சமமாக இல்லாதவிடத்து மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு கொடுக்கல் வாங்கல் கட்டணம் குறைந்த எண்ணிக்கையிலான வாங்கிய அல்லது விற்ற பங்குகளுக்கு அறவிடப்படமாட்டாது. வாங்கிய பங்குகளின் மொத்த எண்ணிக்கை விற்ற பங்குகளின் மொத்த எண்ணிக்கைக்கு சமமாக உள்ளவிடத்து கொடுக்கல் வாங்கல் கட்டணம் விற்பனைக்கு அறவிடப்படமாட்டாது. ஒரு வாடிக்கையாளரின் ஒரே பிணையத்திலான மொத்த கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் இ.பி.ப.ஆ. கொடுக்கல் வாங்கல் கட்டணத்தின் விலக்களிப்பினை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக கருத்திலெடுக்கப்படும். இருப்பினும், அரசாங்க பங்குக் கொடுக்கல் வாங்கல் கட்டணமான 0.30% ஆனது கொடுக்கல் வாங்கலின் இரு பக்கங்களுக்கும் அறவிடப்படும்.

## தீர்வை நிதியத்தின் செயற்பாடு


இழப்பீட்டு நிதியத்தினைப் பலப்படுத்தவதற்காக 2009 ஆம் ஆண்டில் தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டது. இதற்கும் மேலாக ரூபா 100 மில்லியன் தீர்வை நிதியத்திலிருந்து தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்திற்கு 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ரூபா 50 மில்லியன் வீதம் மாற்றல் செய்யப்பட்டது.

திரட்டிய நிதியத்திற்கு ஐந்து தடவைகள் மேற்கொண்ட மாற்றல்கள் முறையே ரூபா 276 மில்லியன், ரூபா 380 மில்லியன், ரூபா 94 மில்லியன், மற்றும் ரூபா 52 மில்லியன் மற்றும் 312 மில்லியன் என்பன முறையே 2010, 2012, 2013, 2019 மற்றும் 2020 ஆகும்.

2022 ஆம் ஆண்டின் இறுதியில் இத்தீர்வை நிதியத்தின் வரவிலுள்ள தொகை ரூபா 4,674.2 மில்லியனை எட்டியது என்பதுடன் இதில் பன்னிரண்டு மாதங்களினுள் முதிர்வடைவதற்கு எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 148.8 மில்லியன் முதலீடு செய்யப்பட்டும், பன்னிரண்டு மாதங்களின் பின்னர் முதிர்வடைவதற்கு எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 3,010.3 மிலலியன் முதலீடு செய்யப்பட்டும், ரூபா 73.72 மில்லியன் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு செய்யப்பட்டும் உள்ளன.

2013 முதல் 2022 வரையான காலப்பகுதியில் நிதியத்தின் அசைவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள:

உருவம் 26: தீர்வை நிதியம்




## இழப்பீட்டு நிதியம்

1987 இல் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு நிறுவப்பட்டதோடு இழப்பீட்டு நிதியமும் செயற்பாட்டிற்கு வந்துள்ளது. 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 158 இன் கீழ், ஓர் இழப்பீட்டு நிதியத்தினை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் இ.பி.ப.ஆ. இன் சட்டரீதியான ஓர் பொறுப்பாகும். இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் பிரகாரம், இழப்பீட்டு நிதியத்தின் குறிக்கோள் மற்றும் அதனைப் பராமரிப்பதற்கான வழிகாட்டிகள் பின்வருமாறு:

158 (1) யாரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர் அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்கு வர்த்தகர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை சந்திப்பதற்கு ஆற்றலின்றி காணப்படுகின்றார் என்று கண்டறிவதன் விளைவாக யாரேனும் முதலீட்டாளர் பணவகையான நட்டத்தினை அடைந்தால் அவருக்கு இழப்பீடு வழங்கும் நோக்கத்திற்காக இழப்பீட்டு நிதியம் என்றழைக்கப்படும் ஓர் நிதியம் நிறுவப்படல் வேண்டும்.

(2) இழப்பீட்டு நிதியமானது பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்

(அ) பாராளுமன்றத்தினால் வாக்களிப்பு செய்யக்கூடிய அத்தகைய பணத்தொகைகள்.

(ஆ) இந்த சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்திற்கு வரவு வைக்கப்படக்கூடிய அத்தகைய பணத்தொகைகள் மற்றும்

(இ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு தீர்வை நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படக்கூடிய அத்தகைய பணத்தொகைகள்.

(3) இழப்பீட்டு நிதியத்திற்கு சொந்தமான பணமானது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கும் அத்தகைய விதத்தில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 159 ஆனது ஆணைக்குழு ஆணைக்குழுவின் அங்கத்தவர்களிலிருந்து மூன்று அங்கத்தவர்களை உள்ளடக்கிய இழப்பீட்டு குழுவினை நியமித்தல் வேண்டும் என வேண்டுகின்றது.

இக்குழுவானது செய்யப்படும் எந்த விண்ணப்பத்தின் தொடர்பிலும் இழப்பீட்டை மதிப்பிடுவதற்கும் வழங்குவதற்கும் பொறுப்பாயிருப்பதோடு, அத்தகைய மதிப்பீட்டின் அல்லது அளிப்பின் மீதான இக்குழுவின் தீர்மானம் இச்சட்டத்தின் தேவைகளுக்காக இறுதியானதும் முடிவானதுமாக இருத்தல் வேண்டும்.

இச்சட்டமானது இழப்பீட்டிற்கு விண்ணப்பம் செய்வதற்கான வழிமுறையையும் கூட வழங்குகிறது. இச்சட்டத்தின் பிரகாரம் இக்குழுவானது விண்ணப்பதாரரொருவரினால் செய்யப்படும் உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவாகச் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களையும் பிற சான்றுகளையும் பரிசீலனை செய்த பின்னர், அல்லது எவ்வாறாயினும் விசாரணையொன்று

# செயற்பாட்டு மீளாய்வு

நடத்தப்பட்டிருந்தால் அவ் விசாரணை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அந்த உரிமைக்கோரிக்கையை இழப்பீடு பெறுவதற்கு அனுமதிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம். இதுநாள்வரை இழப்பீட்டு நிதியத்திலிருந்து எவ்வித உரிமைக்கோரிக்கைகளும் செய்யப்படவில்லை.


## இழப்பீட்டு நிதியத்தின் செயற்பாடு

இழப்பீட்டு நிதியத்தினை பலப்படுத்துவதற்காக 2009 ஆம் வருடத்தில் தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் இறுதியில் இழப்பீட்டு நிதியத்தின் வரவிலுள்ள மீதி ரூபா 625.2 மில்லியனை எட்டியது. இதில் பன்னிரண்டு மாதங்களில் முதிர்வடைவதற்கு எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 24.8 மில்லியனும், பன்னிரண்டு மாதங்களுக்கு பின்னர் முதிர்வடைவதற்கு எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 369.4 மில்லியனும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் ரூபா 8 மில்லியனும் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

2013 முதல் 2022 வரையான காலப்பகுதியில் இழப்பீட்டு நிதியத்தின் அசைவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

உருவம் 27: இழப்பீட்டு நிதியம்




## தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் (தீ.உ.நி.)

தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் 1998 மே மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிதியம் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் மத்திய வைப்பக முறைமையில் பங்குபற்றுபவர்களுக்கிடையேயான வர்த்தகங்களின் தீர்ப்பனவை உத்தரவாதமிடும் நோக்கத்திற்காக தாபிக்கப்பட்டுள்ளது. தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் தொழிற்பாடு கீழே விளக்கப்பட்டுள்ளது.

- வர்த்தகமொன்று நிறைவேற்றப்பட்டவுடன் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் உடைமை மாற்றப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆந் திகதி கொ.ப.ப. ஆனது ஓரடுக்குத் தீர்வுச்சுற்றை அமுல்படுத்தியது. இதற்கமைய வாங்குபவர் ரி+3 மீது கொடுப்பனவு செய்யவேண்டும், அதாவது வர்த்தகம் செய்த நாள் உள்ளடங்களாக 4 ஆவது சந்தை தினத்தில் செலுத்தவேண்டும். விற்பனை செய்பவர் தீர்ப்பனவை ரி+3 ஆம் நாளன்று பெறுவார், அதாவது வர்த்தகம் செய்த நாளிலிருந்து 4ஆவது சந்தை நாளில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றது. உடமையின் மாற்றத்திற்கும் வரும்படிகளின் பெறுகைகளுக்குமிடையிலான ஒப்பீட்டளவிலான நீண்ட இடைவெளி பாதுகாப்பற்ற தீர்ப்பனவு இடர்நேர்கைக்கு வழிவகுத்துள்ளது. இது தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் தாபிக்கப்படும் தேவையை ஏற்படுத்தியுள்ளது.
- இந்நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக கீழ் காண்பவர்கள் பதவி வழி நியமனம் பெற்றுள்ளார்கள். இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தலைவர், திறைசேரிப் பிரதிச் செயலாளர், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பணிப்பாளர் நாயகம்.
- இலங்கை அரசாங்கமானது இந்த நிதியத்தினை உருவாக்குவதற்கு 50 மில்லியன் ரூபாயைக் கொண்ட தொகையை வழங்கியுள்ளது. இப்பணத்தொகையானது அரசாங்கப் பிணையங்களிலும் நிலையான வைப்புகளிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளது. தீர்ப்பனவு உத்தரவாத நிதியமானது மீள் நிறைவாக்கல்களாக நன்கொடைகள், கொடைகள், தரும சாதனங்கள் போன்றவற்றைக்கூடப் பெற்றுக்கொள்ள முடியும். தற்போது தரகர்களும் காப்பக வங்கிகளும் இந்நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யுமாறு வேண்டப்படுவதில்லை.
- எவ்வாறாயினும் தீ.உ.நி. ஆனது தீர்ப்பனவு இடர்நேர்கையை முறையாகத் தீர்ப்பதற்கு போதாததாகக் காணப்படுவதனால் இத் தீர்ப்பனவு இடர்நேர்கையை பயனுள்ள விதத்தில் சந்திக்கத்தக்க ஒரு மத்திய எதிர்தரத்தவர் பொறிமுறையினை (ம.எ.பொ.) நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து தீ.உ.நி. இலிருந்து எவ்வித உரிமைகோரல்களும் இடம்பெறவில்லை.


## தீ.உ.நி. இன் செயற்பாடு

இந்நிதியத்தினைப் பலப்படுத்தும்பொருட்டு தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 100 மில்லியன் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் தலா ரூபா 50 மில்லியன் வீதம் இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்டது. கொ.ப.பரிவர்த்தனையும் ஜனவரி 2012 இல் இந்நிதியத்திற்கு ரூபா 100 மில்லியனை, தீ.உ.நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்புறுதியில் இத்தகைய பெறுகைகளுக்கு வசதியளிக்கும் திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர் மாற்றல் செய்தது.

2022 ஆம் ஆண்டின் இறுதியில் தீ.உ.நி. இன் வரவிலுள்ள மீதியானது ரூபா 1,162.3 மில்லியனை எட்டியது. இதில் பன்னிரண்டு மாதங்களினுள் முதிர்வடையும் என எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 104.2 மில்லியனும், பன்னிரண்டு மாதங்களின் பின்னர் முதிர்வடையும் என எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 90.6 மில்லியனும், அரச வங்கிகளில் நிலையான வைப்பாக ரூபா 300 மில்லியனும், மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் ரூபா 9 மில்லியனும் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

2013 முதல் 2022 வரையான காலப்பகுதியில் தீ.உ. நிதியத்தின் அசைவு கீழேயுள்ள வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உருவம் 28: தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்



# மேலதிகத் தகவல்கள்

## சந்தை இடையீட்டாளர்கள்

### 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறான உரிமமளிக்கப்பட்டவர்கள்

இ.பி.ப.ஆ. இனால் கீழ்காணும் பிரிவுகளின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்களான, எல்லைக் கடன் வழங்குநர்கள், முதலீட்டு முகாமையாளர், ஒப்புரவாளர், கடன் தரப்படுத்தல் முகவர், பங்குத் தரகர், பங்கு வர்த்தகர் மற்றும் கூட்டு முதலீட்டுத் திட்டங்களின் முகாமைத்துவக் கம்பனிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன்

### எல்லைக்கடன் வழங்குநர் பிரிவின் கீழான உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்:

- எக்யூட்டி பார்ட்னர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
- எஸட்லைன் வைனான்ஸ் லிமிட்டட்
- பன்சாய செக்கியூரிட்டீஸ் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்
- கெப்பிட்டல் ட்ரஸ்ட் கிரடிட் (பிரைவேட்) லிமிட்டட்
- சிட்டிசன்ஸ் டெவலப்மன்ட் பிசினஸ் வைனான்ஸ் பிஎல்சி
- கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
- டிஎவ்சிசி பேங்க் பிஎல்சி
- டயலொக் வைனான்ஸ் பிஎல்சி
- ஹட்டன் நெஷனல் பேங்க் பிஎல்சி
- ஜே பி கிரடிட் (பிரைவேட்) லிமிட்டட்
- எல் ஓ எல் சி வைனான்ஸ் பிஎல்சி
- மேர்ச்சன்ட் பேங்க் ஒவ் ஸ்ரீலங்கா அன்ட் வைனான்ஸ் பிஎல்சி
- நேஷன் லங்கா கெப்பிட்டல் லிமிட்டட்
- நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பிஎல்சி
- பேன் ஏசியா பேங்கிங் கோர்ப்பரேஷன் பிஎல்சி
- பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி
- பி.எம்.எவ். வைனான்ஸ் பிஎல்சி
- ஆர் பி சி மார்ஜின் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டடட
- சம்பத் பேங்க் பிஎல்சி
- செலான் பேங்க் பிஎல்சி

### முதலீட்டு முகாமையாளர் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்:

- ஏசியா செக்கியூரீட்டீஸ் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட் ) லிமிட்டட்
- எஸட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட் ) லிமிட்டட்
- எஸட்லைன் கெப்பிட்டல் (பிரைவேட் ) லிமிட்டட்
- இலங்கை வங்கி
- கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட்
- கெப்பிட்டல் ட்ரஸ்ட் வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- சீபேங்க் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- சி டி சி எல் எஸ் ஏ எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- வெர்ஸ்ட் கெப்பிட்டல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- கார்டியன் எக்கியுட்டி எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- கார்டியன் வன்ட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- இனோவெஸ்ட் இன்வெஸ்ட்மனட்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- ஜேபி வைனான்சியல் (பிரைவேட் ) லிமிட்டட்
- லீனியர் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட் ) லிமிட்டட்
- மேர்ச்சன்ட் பேங்க் ஒவ் ஸ்ரீலங்கா அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி.
- நெஷனல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- என்டிபி வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- என்எஸ்பி வன்ட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட்
- ஒரியன் வன்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட் ) லிமிட்டட்
- பிரீமியர் வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- சென்வின் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட் ) லிமிட்டட்
- சொவட்லொஜிக் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட் ) லிமிட்டட்
- வோல்டொக் மெக்கன்சி லிமிட்டட்

### ஒப்புரவாளர் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்:

- இலங்கை வங்கி
- கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பி.எல்.சி.
- டிஎவ்சிசி பேங்க் பி.எல்.சி.
- ஹட்டன் நெஷனல் பேங்க் பி.எல்.சி.
- மேர்ச்சனட் பேங்க் ஒவ் ஸ்ரீலங்கா அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி.
- நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பி.எல்.சி.
- சம்பத் பேங்க் பி.எல்.சி.
- செலான் பேங்க் பி.எல்.சி

### கடன் தரப்படுத்தல் முகவர் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்:

- விட்ச் ரேட்டிங்
- இக்ரா லங்கா லிமிட்டட் (செயற்பாடுகளை நிறுத்தும் செயன்முறையிலுள்ளது)
- லங்கா ரேட்டிங் ஏஜன்சி லிமிட்டட்

### பங்குத்தரகர்கள் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்:

- எக்யூட்டி ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- அல்மாஸ் ஈக்கியுட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
- அம்பியொன் செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
- ஆஷா செக்கியுரிட்டீஸ் லிமிட்டட்
- ஏசியா கெப்பிட்டல் ஸ்டொக் புரோக்கர்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- ஏசியா செக்கியுரிட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- பார்ட்லீட் ரெலிகெயார் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- கெப்பிட்டல் எலாயன்ஸ் பிஎல்சி (கடன் பிணையங்கள் )
- கெப்பிட்டல் எலாயன்ஸ் செக்கியுரிட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- கெப்பிட்டல் ட்ரஸ்ட் செக்கியுரிட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- சிடி சி எல் எஸ் ஏ செக்கியூரிட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- என்டர்பிரைஸ் சிலோன் கெப்பிட்டல் (பிரைவேட் ) லிமிட்டட்
- வெர்ஸ்ட் கெப்பிட்டல் ஈக்யூட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- வெர்ஸ்ட் கார்டியன் ஈக்யூட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- ஜே பி செக்கியுரிட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- ஜோன் கீல்ஸ் ஸடொக்புரோக்கர்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- லங்கா செக்கியுரிட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட்

# மேலதிகத் தகவல்கள்

- எல்ஓஎல்சி செக்கியுரிட்டீஸ் லிமிட்டட்
- நேஷன் லங்கா ஈக்கியுட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- என்டிபி செக்கியுரிட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- நெஸ்ட்டர் ஸ்டொக் புரோக்கர்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- என்எஸ்பி வன்ட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட் (கடன் பிணையங்கள் )
- ரிச்சட் பீரிஸ் செக்கியுரிட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- எஸ்சி செக்கியுரிட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- சென்வின் செக்கியுரிட்டீஸ் லிமிட்டட்
- சொவட்லொஜிக் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- சமர்வில் ஸ்டொக் புரோக்கர்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- வெல்த் ட்ரஸ்ட் செக்கியுரிட்டீஸ் லிமிட்டட் (கடன் பிணையங்கள்)

பங்கு வர்த்தகர்கள் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்:

- ஏசியா செக்கியுரிட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- பார்ட்லீட் ரெலிகெயார் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட் (கடன் பிணையங்கள் )
- கெப்பிட்டல் எலாயன்ஸ் பிஎல்சி (கடன் பிணையங்கள் )
- என்டர்பிரைஸ் சிலோன் கெப்பிட்டல் (பிரைவேட் ) லிமிட்டட்
- ஜேபி செக்கியுரிட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- நேஷன் லங்கா ஈக்கியுட்டீஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- நெஸ்டர் ஸ்டொக் புரோக்கர்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட் (கடன் பிணையங்கள் )
- என்எஸ்பி வன்ட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட் (கடன் பிணையங்கள் )
- செலான் பேங்க் பி.எல்.சி. (கடன் பிணையங்கள் )
- சொவ்ட்லொஜிக் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட்
- வெல்த் ட்ரஸ்ட் செக்கியுரிட்டீஸ் லிமிட்டட் (கடன் பிணையங்கள்)

முகாமைத்துவக் கம்பனிகள் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்களும் அவற்றின் கூட்டு முதலீட்டுத் திட்டங்களும்:

**ஆர்பிக்கோ ஹட்டரக்சியா எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட் ) லிமிட்டட்**

- ஆர்பிக்கோ ஹட்டரக்ஷியா கேஷ் மெனேஜ்மன்ட் ட்ரஸ்ட் வன்ட்
- ஆர்பிக்கோ ஹட்டரக்ஷியா ஈக்கியுட்டி இன்கம் வன்ட்
- ஆர்பிக்கோ ஹட்டரக்ஷியா ரிபோ இன்வெஸ்ட்மன்ட் வன்ட்
- ஆர்பிக்கோ ஹட்டரக்ஷியா ஸ்ரீலங்கா பொன்ட் வன்ட்
- ஆர்பிக்கோ ஹட்டரக்ஷியா யுஎஸ்டி விக்ஸ்ட் இன்கம் வன்ட்

**ஏசியா செக்கியரிட்டீஸ் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட் ) லிமிட்டட்**

- ஏசியா செக்கியுரிட்டீஸ் மணி மார்க்கட் வன்ட்
- ஏசியா செக்கியுரிட்டீஸ் இன்கம் வன்ட்
- ஏசியா செக்கியுரிட்டீஸ் கிள்ட் வன்ட்

**எஸட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட் ) லிமிட்டட்**

- எஸ்ட்ரூ எக்டிவ் இன்கம் வன்ட்
- எஸ்ட்ரூ அல்பா வன்ட்

**எஸட்லைன் கெப்பிட்டல் (பிரைவேட் ) லிமிட்டட்**

- எஸட்லைன் இன்கம் வன்ட்
- எஸட்லைன் இன்கம் ப்ளஸ் குரோத் வன்ட்

**கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டட்**

- கெல் பெலன்ஸ்ட் வன்ட்
- கெல் கோர்ப்பரேட் ட்ரஸரி வன்ட்
- கெல் விக்ஸ்ட் இன்கம் ஒப்பச்சுனிட்டீஸ் வன்ட்
- கெல் கிள்ட் வன்ட்
- கெல் கிள்ட் மணி மார்க்கட் வன்ட்
- கெல் கிள்ட் ட்ரேடிங் வன்ட்
- கெல் ஐ ஹீல்ட் வன்ட்
- கெல் இன்கம் வன்ட்
- கெல் இன்வெஸ்ட்மன்ட் கிரேட் வன்ட்
- கெல் மீடியம் ரிஸ்க் டெட் வன்ட்
- கெல் குவான்டிடேடிவ் இக்யுடி வன்ட்
- கெல் ஸ்ரீலங்கா டொலர் வன்ட்

**சீபேங்க் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட் ) லிமிட்டட்**

- சீபேங்க் சென்சரி குரோத் வன்ட்
- சீபேங்க் கில்ட் எட்ஜட் வன்ட் (ஏ சீரீஸ்)
- சீபேங்க் கில்ட் எட்ஜட் வன்ட் ( பி சீரீஸ்)
- சீபேங்க் ஐ ஹீல்ட் வன்ட்
- சீபேங்க் சேவிங்ஸ் ப்ளஸ் மணி மார்க்கட் வன்ட்
- சீபேங்க் சுரகும் கிள்ட் எட்ஜ் வன்ட்
- சீபேங்க் யுனிட் ட்ரஸ்ட் வன்ட்

**சிலோன் எஸட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட்**

- சிலோன் டொலர் பொன்ட் வன்ட்
- சிலோன் வைனான்சியல் செக்டர் வன்ட்
- சிலோன் இன்கம் வன்ட்
- சிலோன் இன்டெக்ஸ் வன்ட்
- சிலோன் ஐபிஓ வன்ட்
- சிலோன் மணி மார்க்கட் வன்ட்
- சிலோன் டுஹரிசம் வன்ட்
- சிலோன் டிரசரி இன்கம் வன்ட்

**சி டி சி எல் எஸ் ஏ எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்**

- கொம்ரஸ்ட் அடல் முதாரபஹா வன்ட்
- கொம்ரஸ்ட் இக்யுடி வன்ட்
- கொம்ரஸ்ட் கில்ட் எட்ஜ்ட் வன்ட்
- கொம்ரஸ்ட் மணி மார்க்கட் வன்ட்

**வெர்ஸ்ட் கெப்பிட்டல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்**

- வெர்ஸ்ட் கெப்பிட்டல் ஈக்யுட்டி வன்ட்
- வெர்ஸ்ட் கெப்பிட்டல் விக்ஸ்ட் இன்கம் வன்ட்
- வெர்ஸ்ட் கெப்பிட்டல் கில்ட் எட்ஜட் வன்ட்
- வெர்ஸ்ட் கெப்பிட்டல் மணி மார்க்கட் வன்ட்
- வெர்ஸ்ட் கெப்பிட்டல் வெல்த் வன்ட்

**கார்டியன் எக்யூட்டி எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்**

- கார்டியன் எக்யூட்டி ஈக்யுட்டி வன்ட்
- கார்டியன் எக்யூட்டி மணி மார்க்கட் வன்ட்
- கார்டியன் எக்யூட்டி இன்கம் வன்ட்

**ஜே பி வைனான்சியல் (பிரைவேட் ) லிமிட்டட்**

- ஜே பி வான்டேஜ் மணி மார்க்கட் வன்ட்
- ஜே பி வான்டேஜ் சோர்ட் டேர்ம் கிள்ட் வன்ட்
- ஜே பி வான்டேஜ் வெலியூ ஈக்யுட்டி வன்ட்

**நெஷனல் எஸட் மெனேஜ்மன்ட லிமிட்டட்**

- நாமல் பேங் வன்ட்
- நாமல் குரோத் வன்ட்
- நாமல் ஐ ஹீல்ட் வன்ட்
- நாமல் இன்கம் வன்ட்
- நெஷனல் இக்யுட்டி வன்ட்

**என்டிபி வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்**

- என்டிபி வெல்த் கில்ட் எட்ஜ்ட் வன்ட்
- என்டிபி வெல்த் குரோத் அன்ட் இன்கம் வன்ட்
- என்டிபி வெல்த் குரோத் வன்ட்
- என்டிபி வெல்த் இன்கம் வன்ட்
- என்டிபி வெல்த் இன்கம் ப்ளஸ் வன்ட்
- என்டிபி வெல்த் இஸ்லாமிக் மணி பிளஸ் வன்ட்
- என்டிபி வெல்த் மணி வன்ட்
- என்டிபி வெல்த் மணி பிளஸ் வன்ட்

**பிரீமியர் வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்**

- பிரீமியர் குரோத் வன்ட்
- பிரீமியர் மணி மார்க்கட் வன்ட்

**சென்வின் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட் ) லிமிட்டட்**

- சென்வின் டைனமிக் இன்கம் வன்ட்
- சென்வின் டிவிடன்ட் வன்ட்
- சென்வின் குரோத் வன்ட்
- சென்வின் மணி மார்க்கட் வன்ட்
- சென்வின் ஷரியா பெலன்ஸ்ட் வன்ட்
- சென்வின் ஷரியா இன்கம் வன்ட்
- சென்வின் இன்சூரன்ஸ் செக்டர் வன்ட்

**சொவ்ட்லொஜிக் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட் ) லிமிட்டட்**

- சொவ்ட்லொஜிக் ஈக்கியூட்டி வன்ட்
- சொவட்லொஜிக் மணி மார்க்கட் வன்ட்

**லீனியர் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்**

- லீனியர் வெல்த் மணி மார்க்கட் வன்ட்
- லீனியர் வெல்த் குரோத் அன்ட் இன்கம் வன்ட்
- லீனியர் வெல்த் இன்கம் வன்ட்

## சந்தை நிறுவனங்கள்

### 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறு உரிமமளிக்கப்பட்டவை

பரிவர்த்தனை, மத்திய வைப்பகம் மற்றும் தீர்வக இல்லம் ஆகிய பிரிவுகளின் கீழ் இ.பி.ப.ஆ. இனால் உரிமமளிக்கப்பட்ட சந்தை நிறுவனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன: :

#### உரிமமளிக்கப்பட்ட பரிவர்த்தனை:

- கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

#### உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லம்:

- மத்திய வைப்பக முறைமைகள் (பிரைவேட்) லிமிட்டட்

#### உரிமமளிக்கப்பட்ட மத்திய வைப்பகம்:

- மத்திய வைப்பக முறைமைகள் (பிரைவேட்) லிமிட்டட்

# மேலதிகத் தகவல்கள்

ஆண்டு

| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|
| வருடாந்த புரள்வு (ரூ.மில்.) உரித்துவம் | 200,069 | 171,408 | 396,882 | 1,173,157 | 686,602 |
| உள்ளூர் (ரூ.மில்.) | 111,378 | 109,003 | 318,354 | 1,112,817 | 634,426 |
| வெளியூர் (ரூ.மில்.) | 88,691 | 62,405 | 78,527 | 60,340 | 52,176 |
| சந்தை நாட்கள் (எண்.) | 240 | 241 | 209 | 240 | 231 |
| நாளாந்த சராசரி புரள்வு (ரூ.மில்.)உரித்துவம் | 834 | 711 | 3,217 | 4,888 | 2,972 |
| வர்த்தகம்செய்யப்பட்ட பங்குகள் (எண்.)உரித்துவம் | 6,001 | 9,855 | 21,349 | 59,772 | 29,048 |
| உள்ளூர் (ரூ.மில்.) | 4,821 | 7,091 | 19,808 | 57,904 | 28,142 |
| வெளியூர் (ரூ.மில்.) | 1,180 | 2,764 | 1,541 | 1,866 | 905 |
| வர்த்தகங்கள் (எண்.)உரித்துவம் | 885,657 | 1,197,205 | 3,070,021 | 8,131,508 | 6,057,233 |
| உள்ளூர் (எண்.) | 838,784 | 1,150,486 | 2,968,092 | 8,009,816 | 5,973,350 |
| வெளியூர் (எண்.) | 46,873 | 46,719 | 101,929 | 121,692 | 83,883 |
| புதிய பட்டியலிடல்கள் (எண்.) | 3 | 2 | 1 | 17 | 5 |
| பட்டியலிலிருந்து நீக்கம் (எண்.) | 2 | 10 | 7 | 3 | 11 |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகள் | 297 | 289 | 283 | 296 | 290 |
| வர்த்தகம் செய்யப்பட்ட கம்பனிகள் | 279 | 279 | 266 | 280 | 236 |
| சந்தை மூலதனவாக்கம் (ரூ.பில்.) | 2,839.45 | 2,851.31 | 2,960.65 | 5,489.17 | 3,847.15 |
| வருட இறுதியியல் சந்தை விலை உழைப்பு விகிதம் (மடங்குகள்) | 9.65 | 10.83 | 11.3 | 13.63 | 5.0 |
| சந்தை மூலதனவாக்கத்திற்கு புரள்வு (%) | 7.0 | 6.01 | 13.4 | 21.4 | 17.8 |
| வருட இறுதியில் பங்கிலாப விளைவு (%) | 3.09 | 3.17 | 2.7 | 2.17 | 4.1 |
| வருட இறுதியியல் புத்தகப் பெறுமதிக்கு விலை (மடங்குகள்) | 1.18 | 1.14 | 1.1 | 1.67 | 0.9 |
| மொ.உ.உ. இன் சதவீதமாக சந்தை மூலதனவாக்கம் | 21.4 | 21.5 | 19.7 | 36.7 | 22.8 |
| **விலைச் சுட்டிகள்** | | | | | |
| அனைத்து பங்கு விலைச்சுட்டி (அ.ப.வி.சு.) | 6,052.37 | 6,129.21 | 6,774.22 | 12,226.01 | 8,489.66 |
| வருடத்திலிருந்த வருட மாற்றம் % | (5.0) | 1.27 | 10.52 | 80.48 | (30.6) |
| S&P ஸ்ரீலங்கா 20 | 3,135.18 | 2,936.96 | 2,638.10 | 4,233.25 | 2,635.63 |
| வருடத்திலிருந்த வருட மாற்றம் % | (14.6) | (6.32) | (10.18) | 60.47 | (37.7) |
| **மொத்த விளைவு சுட்டிகள்** | | | | | |
| அ.ப.வி.சு. இல் மொத்த விளைவுச் சுட்டி(ASTRI) | 8,066.97 | 8,203.82 | 9,078.65 | 16,423.75 | 11,404.60 |
| வருடத்திலிருந்த வருட மாற்றம் % | (4.6) | 1.70 | 10.7 | 80.91 | (4.65) |
| S&P ஸ்ரீலங்கா 20 மொத்த விளைவுச் சுட்டி ( S&P ஸ்ரீலங்கா 20TRI) | 4,686.71 | 4,603.57 | 4,332.84 | 7,241.29 | 4,749.27 |
| வருடத்திலிருந்த வருட மாற்றம் % | (10.9) | (1.77) | (5.9) | 67.13 | (10.71) |

| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|
| **தேசியமல்லாத நடவடிக்கைழு** | | | | | |
| வருடாந்த புரள்வு (ரூ.மில்.) | 88,691 | 62,405 | 78,527 | 60,340 | 52,176 |
| கொள்வனவுகள் (ரூ.மில்.) | 77,067 | 56,537 | 52,889 | 34,016 | 67,488 |
| விற்பனைகள் (ரூ.மில்.) | 100,315 | 68,272 | 104,165 | 86,665 | 36,863 |
| தேறிய வெளிநாட்டுப் பாய்ச்சல் | (23,247.5) | (11,735.3) | (51,275.7) | (52,649) | 30,625 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகள் (எண். மில்.) | 1,180 | 2,764 | 1,541 | 1,866 | 905 |
| கொள்வனவுகள் (எண்.மில்.) | 1,060 | 3,896 | 928 | 1,308 | 884 |
| விற்பனைகள் (எண்.மில்.) | 1,299 | 1,631 | 2,154 | 2,425 | 927 |
| வர்த்தகங்கள் | 46,873 | 46,719 | 101,929 | 121,692 | 83,883 |
| கொள்வனவுகள் (எண்.) | 37,855 | 25,759 | 42,134 | 74,172 | 80,859 |
| விற்பனைகள் (எண்.) | 55,892 | 67,680 | 161,725 | 169,213 | 86,908 |
| **கடன் சந்தை** | | | | | |
| கூட்டாண்மைக் கடன் | | | | | |
| புரள்வு (ரூ.000) | 4,540,599 | 5,677,080 | 5,856,002 | 1,244,587 | 4,041,226 |
| வர்த்தகங்களின் எண்ணிக்கை | 293 | 234 | 243 | 93 | 90 |
| வர்த்தகம் செய்யப்பட்ட தொகுதிக்கடன்களின் எண்ணிக்கை (000) | 44,024 | 55,643 | 54,230 | 11,439 | 38,839 |
| சந்தை மூலதனவாக்கம் (மில்.) | | | | | |
| **நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகள்** | | | | | |
| தேறிய சொத்தின் பெறுமதி (தே.சொ.பெ.)(ரூ.பில்.) | 64.22 | 104.79 | 200.94 | 194 | 143 |
| அலகுடைமையாளர்கள் (எண்.) | 42,093 | 46,481 | 51,707 | 59,426 | 67,912 |
| வழங்கப்பட்ட அலகுகள் (எண். 000) | 3,368 | 4,769 | 8,210 | 7,835 | 6,283 |
| உரித்துவத்திலான முதலீடு (ரூ.மில்.) | 9,416 | 9,841 | 14,019 | 17,586 | 11,856 |
| திறைசேரி உண்டியல்களிலான முதலீடு (ரூ.மில்.) | 3,379 | 9,150 | 28,613 | 28,755 | 88,879 |
| | | | | | |
| ஏனைய கருவிகளிலான முதலீடுகள் **(ரூ.மில்.) | 50,601 | 84,542 | 158,725 | 148,907 | 48,187 |

மூலங்கள்: கொ.ப.ப., யுனிட் ட்ரஸ்ட் முகாமைத்துவ கம்பனிகளின் முறைமைப்படுத்தல் சமர்ப்பிப்புகள்.

** வணிகத் தாள்கள், நம்பிக்கைச் சான்றிதழ்கள், தொகுதிக்கடன்கள் மற்றும் வங்கி வைப்புகள்.



# நம்பகத்தன்மையினை வளர்த்தல்

## நிதியியல் அறிக்கைகள்


இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு - கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 68 |
நிதி நிலைமைக் கூற்று 73
நிதிச் செயற்திறன் கூற்று 74 | தேறிய சொத்துக்களின் மாற்றங்களிலான கூற்று 75
காசுப் பாய்ச்சல் கூற்று 76 | நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 77

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம் - கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 91
நிதி நிலைமைக் கூற்று 95 | நிதிச் செயற்திறன் கூற்று 96 | தேறிய சொத்துக்களின் மாற்றங்களிலான கூற்று 97
காசுப் பாய்ச்சல் கூற்று 98 | நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 99

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம் - கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 105
நிதி நிலைமைக் கூற்று 109 | நிதிச் செயற்திறன் கூற்று 110 | தேறிய சொத்துக்களின் மாற்றங்களிலான கூற்று 111
காசுப் பாய்ச்சல் கூற்று 112 | நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 113

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் - கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 119
நிதி நிலைமைக் கூற்று 123 | நிதிச் செயற்திறன் கூற்று 124 | தேறிய சொத்துக்களின் மாற்றங்களிலான கூற்று 125
காசுப் பாய்ச்சல் கூற்று 126 | நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 127

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } BAN/G/SEC/FA/2022/2 | මබේ අංකය / உமது இல. / Your No. } | දිනය / திகதி / Date } 26 May 2023

தலைவர்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

**2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ("ஆணைக்குழு") 2022 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்களிலான கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன் (SLAuSs). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொறுத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව | இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. | No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 1.3 நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஓர் நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான ஆணைக்குழுவின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் ஆணைக்குழுவினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் ஆணைக்குழுவின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமைக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு ஆணைக்குழு வேண்டப்படுகின்றது.

## 1.4 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமான எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கருதத்தக்கதாக கருதப்படும்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.
- ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்
- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான ஆணைக்குழுவின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் ஆணைக்குழு நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

## 2 ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

**2.1** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

**2.1.1** கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து, 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவின் தேவைக்கேற்ப ஆணைக்குழுவானது முறையான கணக்கீட்டு பதிவுகளை வைத்துள்ளதான தோற்றத்தை வழங்குகின்றது.

**2.1.2** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றன.

**2.1.3** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

**2.1** செயலாற்றப்பட்ட செயல்முறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில், கருதத்தக்க விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை.

**2.2.1** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (டி) பிரிவின் தேவைக்கேற்ப வழக்கமான வணிக நிகழ்வுகளுக்கு அப்பால் ஆணைக்குழுவினது ஆளுமை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் ஆணைக்குழுவினால் செய்து கொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு.

**2.2.2** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எவ்) பிரிவின் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூல சட்டம், ஆணைக்குழுவினது ஆளுமை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு ஆணைக்குழு இணக்கப்பாடு காணவில்லை என குறிப்பிடுவதற்கு.

**2.2.3** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஜி) பிரிவின் தேவைக்கேற்ப ஆணைக்குழுவானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை என குறிப்பிடுவதற்கு.

**2.2.4** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எச்) பிரிவின் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு ஏற்றாற்போல் ஆணைக்குழுவின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்டுத்தப்படவில்லை என குறிப்பிடுவதற்கு.

**டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் அதிபதி

# நிதி நிலைமைக் கூற்று

| 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று | குறிப்பு | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 7 | 59,773,251 | 64,954,716 |
| அருவச் சொத்துக்கள் | 7.1 | 34,267,756 | - |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| கையிருப்புகள் | 8 | 4,159,956 | 3,005,873 |
| வருமதிகள் | 9 | 264,880,170 | 226,209,609 |
| நிலையான வைப்புகளில் முதலீடுகள் | 10 | 654,244 | 642,737 |
| வைப்புகள், முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் | 11 | 65,837,245 | 62,548,982 |
| காசும் காசுக்குச் சமனானவைகள் | 12 | 52,147,144 | 109,037,723 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 481,719,766 | 466,399,640 |
| **நிதியங்களும் பொறுப்புக்களும்** | | | |
| **பயன்படுத்தப்பட்ட நிதியங்களும் ஒதுக்கங்களும்** | | | |
| திரண்ட நிதியம் | 13 | - | - |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | | |
| மானியம் - மூலதனச் செலவினங்களுக்காக தீர்வை நிதியத்திலிருந்தான மாற்றல்கள் | 14 | 40,157,488 | 58,702,817 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகள் | 15 | 68,889,206 | 59,054,227 |
| ஒத்திவைக்கப்பட்ட வருமானம் - அரசாங்க மானியங்கள் நி.து.ந.தி. | | 47,631,620 | - |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| செலுத்தவேண்டிய வரி | 16 | 245,819,781 | 323,018,972 |
| கடன் கொடுத்தோரும் அட்டுறுகளும் | 17 | 22,785,337 | 19,436,181 |
| விற்பனையாளருக்கு செலுத்தவேண்டியவை - நி.து.ந.தி. | 18 | 50,122,635 | 68,134 |
| முற்பணமாக பெற்றவை | | 6,313,699 | 6,119,309 |
| **மொத்த நிதியங்களும் பொறுப்புக்களும்** | | 481,719,766 | 466,399,640 |

பக்கங்கள் 77 முதல் 90 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் பொறுப்பாளியாவார்கள்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்காகவும் அதன் சார்பிலும்

**சிந்தக்க மெண்டிஸ்**
பணிப்பாளர் நாயகம்

**வைசால் சாலி**
தலைவர்

**நிரோஷா கொடிகார**
பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம்

கொழும்பு
31 மார்ச் 2023

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# நிதிச் செயற்திறன் கூற்று

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| உரிமக் கட்டணங்கள் | | 3,449,164 | 2,793,194 |
| நிர்வாக அறவீடுகள் | | 6,152,213 | 6,360,039 |
| கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | | 8,671,966 | 5,542,684 |
| வட்டி வருமானம் | | 717,743 | 1,820,617 |
| ஏனைய வருமானம் | | 110,261 | 448,073 |
| பணியாட்கள் கடன்களிலான வட்டி | | 719,194 | 818,946 |
| நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் திட்டத்திலிருந்தான வருமானம் | 19 | 172,252,739 | 104,804,128 |
| மானியங்களின் அங்கீகாரம் | 14 | 19,350,111 | 21,735,241 |
| **மொத்த வருமானம்** | | 211,423,391 | 144,322,923 |
| **செலவினங்கள்** | | | |
| ஆளணிச் செலவினங்கள் | 20 | (312,436,108) | (269,419,695) |
| நிர்வாக மற்றும் நிலையச் செலவினங்கள் | 21 | (179,803,251) | (172,148,244) |
| மூலதனச் சந்தை அபிவிருத்தி செலவினங்கள் | 22 | (50,328,063) | (55,241,934) |
| நிதிச் செலவினங்கள் | 23 | (120,430) | (103,030) |
| **மொத்தச் செலவினம்** | | (542,687,852) | (496,912,903) |
| வருமான வரிச் செலவினம் | | - | - |
| **வருமானத்திலும் மிகையான செலவினம்** | | (331,264,461) | (352,589,980) |
| **வருமானத்திலும் மிகையான செலவினம் நோக்கி தீர்வை நிதியத்திலிருந்து மாற்றல் செய்யப்பட்ட நிதிகள்** | | 331,264,461 | 352,589,980 |

பக்கங்கள் 77 முதல் 90 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# தேறிய சொத்துக்களிலான மாற்றங்களின் கூற்று

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | திரண்ட நிதியம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|
| 1 ஜனவரி 2021 இல் உள்ளவாறான மீதி | - | - |
| வருடத்திற்கான வருமானத்திலும் விஞ்சிய செலவினம் | (352,589,980) | (352,589,980) |
| வருமானத்திலும் மிகையான செலவினம் நோக்கி தீர்வை நிதியத்திலிருந்து மாற்றல் செய்யப்பட்ட நிதிகள் | 352,589,980 | 352,589,980 |
| 31 டிசம்பர் 2021 இல் உள்ளவாறான மீதி | - | - |
| 1 ஜனவரி 2022 இல் உள்ளவாறான மீதி | - | - |
| வருடத்திற்கான வருமானத்திலும் விஞ்சிய செலவினம் | (331,264,461) | (331,264,461) |
| வருமானத்திலும் விஞ்சிய செலவினம் நோக்கி தீர்வை நிதியத்திலிருந்து மாற்றல் செய்யப்பட்ட நிதிகள் | 331,264,461 | 331,264,461 |
| 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறான மீதி | - | - |

பக்கங்கள் 77 முதல் 90 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# காசுப்பாய்ச்சல் கூற்று

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| தீர்வை நிதியத்திலிருந்தான மாற்றல்களின் பின்னர் தேறிய அதிகரிப்பு / (குறைப்பு) | | - | - |
| **செம்மையாக்கல்கள்** | | | |
| பெறுமானத்தேய்வு | 7 | 19,350,111 | 21,735,241 |
| பெறுமானத்தேய்வு - நி.து.ந.தி. | 7 | 522,195 | - |
| பெறுமானக் குறைப்பு | 7.1 | 56,249 | - |
| மானியத்தின் அங்கீகாரம் | 14 | (19,350,111) | (21,735,241) |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 15 | 19,639,458 | 9,591,504 |
| செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு /(குறைப்பு) | | 20,217,902 | 9,591,504 |
| **செயற்பாட்டு மூலதனத்தின் மாற்றம்** | | | |
| கையிருப்புகளின் (அதிகரிப்பு)/குறைப்பு | | (1,154,083) | (971,906) |
| வருமதிகளின் (அதிகரிப்பு)/குறைப்பு | | (38,670,562) | (178,996,490) |
| வைப்புகள், முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகளின் (அதிகரிப்பு)/குறைப்பு | | (3,288,263) | 2,136,114 |
| முற்பணமாக பெற்றவையின் அதிகரிப்பு / (குறைப்பு) | | 194,390 | 2,111,522 |
| செலுத்தவேண்டிய வரியின் அதிகரிப்பு / (குறைப்பு) | | (77,199,191) | 299,679,157 |
| கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறுகளின் அதிகரிப்பு / (குறைப்பு) | | 3,349,156 | (126,111,030) |
| செலுத்தவேண்டியவைகளின் அதிகரிப்பு / (குறைப்பு) | | 50,054,501 | (489,926) |
| செயற்பாட்டு மூலதன மாற்றங்களின் பின்னரான தேறிய அதிகரிப்பு / (குறைப்பு) | | (66,714,052) | (2,642,559) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கிய காசு | | (46,496,150) | 6,948,945 |
| இவ்வாண்டில் செலுத்திய பணிக்கொடை | | (9,804,479) | (915,485) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கிய தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | | (56,300,629) | 6,033,460 |
| **முதலீட்டு நடவடிக்கைக்குள்ளான காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | 7 | (14,690,841) | (11,242,118) |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | 7.1 | (34,324,005) | - |
| நிலையான வைப்புகளில் முதலீடு | | (11,506) | (2,842) |
| ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணம் மற்றும் அருவச் சொத்துக்களின் விற்பனையிலிருந்தான வருவாய்கள் | | - | - |
| ஒத்திவைக்கப்பட்ட வருமானம் | | 47,631,620 | |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | | (1,394,732) | (11,244,960) |
| **நிதியளித்தல் செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| தீர்வை நிதியத்திலிருந்து மூலதன மாற்றல் | 14 | 804,782 | 11,242,118 |
| நிதியளித்தல் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ய்சல் /(வெளிப்பாய்ச்சல்) | | 804,782 | 11,242,118 |
| காசும் காசுக்குச் சமனானவைகளில் தேறிய அதிகரிப்பு / (குறைப்பு) | | (56,890,578) | 6,030,618 |
| காலப்பகுதியின் ஆரம்பத்திலுள்ள காசும் காசுக்குச் சமனானவைகளும் (குறிப்பு A) | | 109,037,723 | 103,007,105 |
| **காலப்பகுதியின் இறுதியிலுள்ள காசும் காசுக்குச் சமனானவைகளும் (குறிப்பு B)** | | 52,147,145 | 109,037,723 |
| **குறிப்பு (A)** | | | |
| காலப்பகுதியின் ஆரம்பத்திலுள்ள காசும் காசுக்குச் சமனானவைகளும் | | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | | 74,999,999 | 64,610,002 |
| வங்கியிலுள்ள காசு | | 33,997,724 | 38,357,103 |
| கையிலுள்ள காசு | | 40,000 | 40,000 |
| | | 109,037,723 | 103,007,105 |
| **குறிப்பு (B)** | | | |
| காலப்பகுதியின் இறுதியிலுள்ள காசும் காசுக்குச் சமனானவைகளும் | | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | 12 | - | 74,999,999 |
| வங்கியிலுள்ள காசு | 12 | 52,107,145 | 33,997,724 |
| கையிலுள்ள காசு | 12 | 40,000 | 40,000 |
| | | 52,147,145 | 109,037,723 |

பக்கங்கள் 77 முதல் 90 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1 பொதுவான தகவல்கள்

### 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது (இ.பி.ப.ஆ.) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் மற்றும், 1991 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கச் சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டம், 2009 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றால் திருத்தியமைக்கப்பட்டு (பழைய இ.பி.ப.ஆ. சட்டம்), உருவாக்கப்பட்ட இலாபமீட்டாத ஓர் சட்டபூர்வமான சபையாகும். இந்த பழைய சட்டமானது 21 செப்டம்பர் 2021 முதல் 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தினால் (புதிய இ.பி.ப..ஆ. சட்டம் ) சட்ட நீக்கம் செய்யப்பட்டது.

இ.பி.ப.ஆ. இலங்கை சனநாயக சோசலிஷ குடியரசில் இடம்கொண்டுள்ளதுடன் அது கொழும்பு 1, எச்சிலன் சதுக்கம், உலக வர்த்தக மையம், கிழக்குக் கோபுரம் 28 ஆம் மற்றும் 29 ஆம் மாடிகளில் அமைந்துள்ளது.

### 1.2 செயற்பாடுகளின் தன்மையும் பிரதான நடவடிக்கைகளும்

2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 03 இன் பிரகாரம், சட்டத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கம் பின்வருமாறு,

(அ) இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினை நிறுவுவதற்கு;

(ஆ) ஒரு நியாயமான, செயற்திறனான மற்றும் வெளிப்படையான பிணையங்கள் சந்தையினை உருவாக்குவதற்கு, பராமரிப்பதற்கு மற்றும் முறைமைப்படுத்துவதற்கு;

(இ) உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களது நலன்களை பாதுகாப்பதற்கு; மற்றும்

(ஈ) பிணையங்கள் சந்தை தொடர்பான சேவைகளை வழங்குவதில் உயர் தரத்திலான நியமங்கள் பராமரிக்கப்படுவதனை உறுதிசெய்தல்

### 1.3 இணக்கப்பாடு கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது அதன் நிதிக்கூற்றுக்களை இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.அ.க.நி.) ஏற்ப தயாரித்துள்ளது. நிதிக்கூற்றுக்கள், நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, ஒதுக்கங்களில் ஏற்படும் மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளையும் உள்ளடக்குகின்றது.

### 1.4 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் பொறுப்பாளியாவார்கள்.

### 1.5 நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இ.பி.ப.ஆ. இன் தொடர்ச்சியாக தொடர்ந்து செல்லக்கூடிய ஆற்றலை மதிப்பீடு செய்தார்கள். ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இ.பி.ப.ஆ. எதிர்வரும் காலங்களில் தனது செயற்பாட்டு வாழ்க்கையைத் தொடர்வதற்கு போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என ஓர் நியாயமான எதிர்பார்ப்பினைக் கொண்டுள்ளார்கள். எதிர்காலம் பற்றிய கிடைக்கப்பெற்ற அனைத்து தகவல்களையும் கருத்திற்கொண்டு ஒழித்துக்கட்டலுக்கோ அல்லது செயற்பாட்டினை நிறுத்துவதற்கான தேவையொன்றை இ.பி.ப.ஆ. எதிர்பார்க்கவில்லை. இதற்கமைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இ.பி.ப.ஆ. நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பின்பற்றுவதனைத் தொடர்ந்ததுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

### 1.6 தயாரிப்பிற்கான அடிப்படை

இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இ.பி.ப.ஆ. இன் கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், 1 ஜனவரி 2020 முதல் தீர்வை நிதியத்திற்கும் மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்கும் தனித்தனியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தீர்மானித்தது. எனவே, இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, தேறிய சொத்துகளின் மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளை மாத்திரம் உள்ளடக்குகின்றது.

இ.பி.ப.ஆ. இன் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில், கிட்டிய முழு ரூபாய்க்கு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிதிக்கூற்றுக்கள், நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகள் தவிர்த்தலாக, அட்டுறு மற்றும் வரலாற்றுக் கிரய மரபொழுங்கின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகளைப் பொறுத்தளவில் தேறிய பொறுப்பானது நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகளின் நிகழ்காலப் பெறுமதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. காலத்தின் இறுதியில் உள்ளவாறான நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகளை அறிந்துகொள்வதற்காக, வட்டிச் செலவினம், நடைமுறை சேவைக் கிரயம், இக்காலத்தில் பதவி விலகியோருக்கு செலுத்தப்பட்ட /செலுத்தவேண்டிய பணிக்கொடை மற்றும் ஆயுள் எதிர்பார்ப்பு (இலாபம்)/ நட்டம் தொடர்பாக பொருத்தமான சீரமைவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இ.பி.ப.ஆ. நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பின்பற்றுவதனைத் தொடர்ந்ததுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

### 1.7 மதிப்பீடுகள் மற்றும் நியாயப்பாடுகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பானது முகாமைத்துவம் பின்வருவனவற்றை மேற்கொள்ளவேண்டுமென வேண்டப்படுகின்றது. வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மற்றும் அதனுடனிணைந்த வெளிப்படுத்தல்களும் எதிர்பாரா பொறுப்புக்களின் வெளிப்படுத்தல்கள் என அறிக்கையிடப்படும் தொகையில் நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன தாக்கத்தினை ஏற்படுத்தலாம்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

இந்த மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பனவற்றின் நிச்சயமற்றதன்மையானது, எதிர்வரும் காலப்பகுதியில் பாதிக்கப்படும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களது கொண்டுசெல்லப்படும் தொகையில் கணிசமானளவு செம்மையாக்கல்கள் தேவைப்படும் விளைவினை உருவாக்கலாம். மதிப்பீடுகளும் உள்ளார்ந்த அனுமானங்களும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகளுக்கான திருத்தியமைத்தல்கள் வருங்காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகையில் மிகவும் கணிசமானளவு விளைவினைக் கொண்டுள்ளவற்றில் பிரயோகிக்கப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளில் மேற்கொள்ளப்படும் நியாயப்பாடுகள் பற்றிய தகவலானது நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடு குறிப்பினில் விபரிக்கப்பட்டுள்ளன. நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் கிரயமானது ஓர் காப்பீட்டுக் கணிப்பீட்டினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. காப்பீட்டுக் கணிப்பீடானது கழிவு வீதங்கள், எதிர்கால வேதன அதிகரிப்புகள், இறப்பு வீதங்கள் போன்றவற்றைப் பற்றிய அனுமானங்கள் மேற்கொள்வதனை உள்ளடக்குகின்றன. இத்திட்டத்தின் நீண்டகால தன்மையின் காரணமாக, அத்தகைய மதிப்பீடுகள் கணிசமானளவு நிச்சயமற்றதன்மையினைக் கொண்டுள்ளன. காப்பீட்டுக் கணிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட அனுமானங்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 15 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.8 செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது இ.பி.ப.ஆ. இன் செயற்பாட்டு நாணயமாகும். மீளாய்வாண்டில் நிறுவனத்தின் முன்னிலைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு நாணயத்தில் எவ்விதமான மாற்றங்களும் காணப்படவில்லை. அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் யாவும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்ற சமயத்தில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளன.

### 1.9 பொருண்மை மற்றும் திரள்வு

ஒத்த வகையான உருப்படியின் ஒவ்வொரு பொருண்மையான வகுப்பும் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. ஒத்தமையாத தன்மை அல்லது செயற்பாட்டினை உடைய உருப்படிகள் அவை பொருண்மையாக இல்லாதவிடத்து மாத்திரமே தனித்தனியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.10 ஈடுசெய்தல்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பன பின்வருமாறு தேவைப்பட்டாலன்றி அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி ஈடுசெய்யப்படவில்லை. இ.அ.க.நி. அனுமதித்தால் அல்லது கொடுக்கல் வாங்கல் அல்லது ஏனைய நிகழ்வின் சாராம்சத்தினை ஈடுசெய்தல் பிரதிபலித்தால், பயனாளிகள் கொடுக்கல் வாங்கல்கள், ஏனைய நிகழ்வுகள் மற்றும் அவை ஏற்பட்ட நிலைமைகள் குறித்து புரிந்துகொள்ளுதல் மற்றும் இ.பி.ப.ஆ. இன் எதிர்கால காசுப்பாய்ச்சலை மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்கான ஆற்றலிலிருந்து விலகியிருந்தால்.

### 1.11 ஒப்பிடப்படும் தகவல்கள்

ஒப்பிடப்படும் எண்கள் நடைமுறை நிதியாண்டில் சமர்ப்பிப்பிலுள்ள மாற்றங்களுக்கு அமைவாக செம்மையாக்கப்பட்டுள்ளன.

### 1.12 அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கவனத்திற்கொள்ளப்பட்டு தேவையானவிடத்து நிதிக்கூற்றுக்களில் உகந்த செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.13 கணக்கீட்டுக் கொள்கைகளின் மாற்றங்கள்

பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

## 2 சொத்துக்களும் அவற்றின் பெறுமான மதிப்பீட்டின் ஆதாரங்களும்

### 2.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

#### சொந்த ஆதனங்களும் பொறித்தொகுதியும் உபகரணங்களும் மற்றும் அருவச் சொத்துக்களும்

ஆதனங்களும், பொறித்தொகுதியும், உபகரணங்களும் (ஆ.பொ.உ.) மற்றும் அருவச் சொத்துக்களும் அவற்றின் மீதான ஏதேனும் தற்செயலான செலவுகளும் கொள்விலையில் குறிப்பிடப்பட்டு அவற்றின் உபயோகமுள்ள ஆயுள்காலத்தில் பெறுமானத்தேய்வு / பெறுமானக்குறைப்பு செய்யப்பட்டும் உள்ளன. மானியமாகப் பெறப்பட்ட சொத்துக்கள் அவற்றின் கிரயத்தில் கணக்கிற்கொண்டு வரப்பட்டு அவற்றின் மீதான பெறுமானத் தேய்வு /பெறுமானக் குறைப்பு அந்தந்த ஒதுக்கக் கணக்கிற்கெதிராக செலவு வைக்கப்பட்டுள்ளது. பெறுமானத் தேய்மானம் / பெறுமானக் குறைப்பு நேர்கோட்டு அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகனங்கள், காரியாலய உபகரணங்கள் மற்றும் மென்பொருள் உள்ளடங்களான ஈடிபி உபகரணங்கள் மற்றும் பயிற்சி உபகரணங்கள் என்பன சொத்துக்களின் பொருளாதாரப் பயன்பாட்டுக் காலத்தினைக் கருத்திற்கொண்டு பின்வரும் சதவீதங்களில் பெறுமானத்தேய்வு /பெறுமானக் குறைப்பு செய்யப்பட்டன.

| | |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 10.00% |
| தளபாடம், பொருத்திகள் மற்றும் இணைப்புகள் | 12.50% |
| பயிற்றுவித்தல் உபகரணம் | 20.00% |

மென்பொருள்* உள்ளடங்கலாக இலத்திரணியல் தரவு செயல்முறையாக்கல் (இ.த.செ.) உபகரணம்

| | |
|---|---|
| இ.த.செ. - வன்பொருள் | 20.00% |
| இ.த.செ. உபகரணம் - மென்பொருள் | 20.00 – 33.33% |
| இ.த.செ. உபகரணம் - கையடக்கத் தொலைபேசிகள் | 33.33% |
| இ.த.செ. உபகரணம் - ஏனையவை | 20.00 – 25.00% |
| அருவச் சொத்துக்கள் | 20.00 – 33.33% |

கொள்வனவு செய்யப்பட்ட சகல சொத்துக்களுக்கும் அவை பாவனைக்கு கிடைக்கும் தினத்திலிருந்து பெறுமானத் தேய்வு ஒதுக்கப்படுகின்றது. விற்பனை செய்யப்படும் ஆண்டில் பெறுமானத் தேய்வானது சொத்து தெரிந்துகொள்ளாத திகதி வரை ஒதுக்கப்படுகின்றது.

ஆ.பொ.உ. மற்றும் அருவச் சொத்துக்களில் பின்னர் ஏற்படும் செலவினங்கள் குறிப்பிட்ட சொத்துடன் பொதிந்துள்ளபோது அதனுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நலன்கள் அதிகரித்தால் மாத்திரமே சொத்தாகக் கருதப்படுகின்றது. ஏனைய அனைத்து செலவினங்களும் ஆட்பட்ட செலவினமாகக் கருதப்படுகின்றன.

### 2.2 முதலீடுகள்

முதலீடுகள் உரிமமளிக்கப்பட்ட அரச வங்கிகளில் நிலையான வைப்பு மற்றும் குறுங்கால முதலீடுகளிலும், அரசாங்கத் திறைசேரி உண்டியல்கள் மற்றும் அரசாங்க திறைசேரி முறிகளில் மேற்கொள்ளப்பட்டு அவை கொள்விலை மற்றும் அறிக்கையிடும் காலப்பகுதி வரைக்குமான அட்டுறு வட்டி அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.3 இருப்புக்கள்

இருப்புக்கள் கொள்விலையில் அல்லது தேறிய தேறத்தக்க பெறுமதியில் ஆகக் குறைந்த பெறுமானத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன. இருப்புக்களது பெறுமதி முதல் உள் முதல் வெளியே (மு.உ.மு.வெ.) என்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளன.

விரைவாக மாற்றமடையும் உலகச் சந்தை நிலவரங்களினால் மூலதனச் சந்தை தொடர்பான சட்டங்களும் விதிகளும் தொடர்ச்சியாக மாற்றமடைந்து வருவதனால் கொள்கையளவில் நூலக புத்தகங்களின் பெறுமதியானது பதிவழிப்புச் செய்யப்படுகின்றது.

### 2.4 வருமதிகள்

வருமதிகள் மதிப்பிடப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

### 3.1.1 நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊ.சே. நி./ஊ.ந.நி.

இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சகல ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினதும் அங்கத்தவர்களாவார்கள். இ.பி.ப.ஆ. ஊழியர்களது மொத்த ஊதியத்தில், வாகன மற்றும் எரிபொருள் படிகள் தவிர்ந்த, முறையே 12% மற்றும் 3% த்தை செலுத்துகின்றது.

### 3.1.2 நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடு – பணிக்கொடை

பணிக்கொடை என்பது பணியின் பின்னரான நலனாகும். 1983 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கமைய இ.பி.ப.ஆ. பணியின் பின்னரான நலனை செலுத்துவதற்கு பொறுப்பாளியாயுள்ளது. ஊழியர்களுக்கான பொறுப்பு அவர்கள் 5 வருட தொடர்ச்சியான சேவையைப் பூர்த்தி செய்தால் மாத்திரமே எழுகின்றது. எவ்வாறாயினும், 01 ஜனவரி 2018 முதல் அமுலுக்கு வந்த SLPSAS 19 – 'ஊழியர் நலன்கள்' ஏற்பாடுகளுக்கமைய நிதி நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ள பொறுப்பானது அறிக்கையிடப்படும் திகதியில் உள்ளவாறான நிர்ணயிக்கப்பட்ட ஊழியர் நலன் கடப்பாடுகளது நிகழ்காலப் பெறுமதியாகும். இப்பொறுப்பிற்கு வெளிவாரியாக நிதியளிக்கப்படுவதில்லை. அங்கீகரிக்கப்படாத காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள் அல்லது நட்டங்கள் மற்றும் அங்கீகரிக்கப்படாத முன்னைய மற்றும் நடைமுறைச் சேவைக் கிரயங்கள் என்பன உடனடியாக நிதியியல் செயற்திறன் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடானது ஓர் தகைமை பெற்ற காப்பீட்டுக் கணிப்பு நிபுணரினால் 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறு SLPSAS 19 – 'ஊழியர் நலன்கள்' இல் பரிந்துரைக்கப்பட்டவாறு உத்தேச அலகு வரவு முறையினைப் பயன்படுத்தி கணிப்பிடப்பட்டுள்ளது.

### 3.2 பொறுப்புக்கள்

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் கோரும் பட்சத்தில் செலுத்தவேண்டியவற்றைக் கொண்டுள்ளன. நடைமுறையல்லாத பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் செலுத்தவேண்டிய நிலுவைகளைக் கொண்டுள்ளன.

தெரிந்துகொள்ளப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கிரயத்தில் கணக்கிடப்பட்டுள்ளன.

### 3.3 கொடைகள்

தீர்வை நிதியத்திலிருந்து மாற்றப்பட்ட மூலதனச் செலவினங்கள் கொடையாகக் கருதப்பட்டு நிதியியல் செயற்திறன் கூற்றில் தொடர்புடைய சொத்தின் உத்தேச உபயோகமுள்ள ஆயுள்காலத்திற்கு ஓர் வருமானமாக ஓர் ஒழுங்குமுறை அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## 4. நிதிச் செயற்திறன் கூற்று

### 4.1 வருவாய் அங்கீகரிப்பு

இ.பி.ப.ஆ. இன் வருவாயானது உரிமக் கட்டணம், நிர்வாகக் கட்டணம், பிரசுரங்களது விற்பனை, கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் முதலியவற்றிலான வருமானங்களை உள்ளடக்குகின்றது. மேற்கூறப்பட்ட சேவைகள் / கட்டணங்களிலிருந்து வரும் வருவாயானது அச்சேவைகள் நிறைவேற்றப்பட்ட காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 4.2 வட்டி வருமானம் மற்றும் செலவினங்கள்

முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் மற்றும் வட்டிச் செலவினங்கள் என்பன நிதிச் செயற்திறன் கூற்றில் ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 4.3 ஏனைய வருமானம்

ஏனைய வருமானமானது ஒரு அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 4.4 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் விற்பனையிலான இலாபம் அல்லது நட்டம்

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களது விற்பனையிலிருந்து எழும் இலாபம் அல்லது நட்டமானது நிதிச் செயற்திறன் கூற்றில் பின்வருமாறு கணக்கிலிடப்பட்டுள்ளது. இது விற்பனை வருமானத்திலிருந்து சொத்தின் கொண்டுசெல்லல் கிரயத்தினையும் அதனுடன் தொடர்பான விற்பனை செலவினத்தினையும் கழித்ததன் பின்னர் கணிப்பிடப்படுகின்றது.

## 5. செலவின அங்கீகரிப்பு

நிதிச் செயற்திறனை உறுதிசெய்யும்போது இ.பி.ப.ஆ. இனைப் பராமரிப்பதில் ஏற்படும் சகல செலவினங்கள் ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு வருமானத்திற்கு ஆட்படுத்தப்படுகின்றது.

## 6. காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றிற்காக, காசும் காசுக்குச் சமமானவைகளுக்குள் கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கிகளில் உள்ள மூன்று மாதங்களுக்குக் குறைவான முதிர்வினைக்கொண்ட மீள்கொள்வனவு உடன்படிக்கைகளையும் உள்ளடக்குகின்றன.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 7 அதனம், பொறித்தொகதி மற்றும் உபகரணம்

| விபரம் | மோட்டார் வாகனங்கள் ரூ. | தளபாடம் மற்றும் பொருத்திகள் ரூ. | அலுவலக உபகரணங்களும் ஈ.டி.பி. ஊபகரணங்களும் ரூ. | பயிற்றுவித்தல் உபகரணங்கள் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| **கிரயம்** | | | | | |
| 01.01.2022 இல் உள்ளவாறான மீதி | 45,165,786 | 50,318,199 | 167,264,628 | 4,326,348 | 267,074,961 |
| இவ்வாண்டிலான மாற்றல்கள் | - | - | - | - | - |
| இவ்வாண்டிலான சேர்க்கைகள் | - | 591,000 | 213,782 | - | 804,782 |
| இவ்வாண்டிலான சேர்க்கைகள் - நி.து.ந.தி. | | - | 13,886,059 | - | 13,886,059 |
| இவ்வாண்டிலான விற்பனைகள் | - | - | - | - | - |
| **31.12.2022 இல் உள்ளவாறான மீதி** | 45,165,786 | 50,909,199 | 181,364,469 | 4,326,348 | 281,765,802 |
| **திரண்ட பெறுமானத்தேய்வு** | | | | | |
| 01.01.2022 இல் உள்ளவாறான மீதி | 31,981,791 | 38,561,849 | 127,377,413 | 4,199,192 | 202,120,245 |
| இவ்வாண்டிலான மாற்றல்கள் | - | - | - | - | - |
| இவ்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு | 2,863,341 | 3,211,452 | 13,149,780 | 125,538 | 19,350,111 |
| இவ்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு-நி.து.ந.தி. | | | 522,195 | - | 522,195 |
| விற்பனைகளிலான திரண்ட பெறுமானத்தேய்வு | - | - | - | - | - |
| **31.12.2022 இல் உள்ளவாறான மீதி** | 34,845,131 | 41,773,301 | 141,049,388 | 4,324,731 | 221,992,551 |
| **31.12.2022 இல் உள்ளவாறான கு.எ.பெ.** | 10,320,655 | 9,135,898 | 40,315,081 | 1,618 | 59,773,251 |
| **31.12.2021 இல் உள்ளவாறான கு.எ.பெ.** | 13,183,995 | 11,756,350 | 39,887,215 | 127,156 | 64,954,716 |
| 31.12.2022 இல் உள்ளவாறான முழுவதும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயம் (மேற்குறிப்பிட்ட கிரயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன) | 16,552,286 | 22,593,951 | 100,871,204 | 3,660,805 | 143,678,246 |
| **பயனுள்ள ஆயுட்காலம் (வருடங்கள்)** | 10 | 8 | 3-5 | 5 | |

## 7.1 அருவச் சொத்துக்கள்

| விபரம் | கணினி மென்பொருள் |
|---|---|
| **கிரயம்** | |
| 01.01.2022 இல் உள்ளவாறான மீதி | - |
| இவ்வாண்டிலான சேர்க்கைகள் | 34,324,005 |
| இவ்வாண்டிலான விற்பனைகள் | - |
| **31.12.2022 இல் உள்ளவாறான மீதி** | 34,324,005 |
| **திரண்ட பெறுமானக்குறைப்பு** | |
| 01.01.2022 இல் உள்ளவாறான மீதி | - |
| ஆண்டிற்கான பெறுமானக்குறைப்பு கட்டணம் | 56,249 |
| விற்பனைகளிலான திரண்ட பெறுமானத்தேய்வு | - |
| **31.12.2022 இல் உள்ளவாறான மீதி** | 56,249 |
| **31.12.2022 இல் உள்ளவாறான தே.பு.பெ.** | 34,267,756 |
| **பயன்பாட்டு ஆயுட்காலம் (வருடங்கள்)** | 3-5 |

## 8 கையிருப்புகள்

| | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|
| எழுதுகருவிகள், முத்திரை மற்றும் ஈ.டி.பி. நுகர்பொருட்களின் இருப்பு | 4,159,956 | 3,005,873 |
| மொத்தம் | 4,159,956 | 3,005,873 |

## 9 வருமதிகள்

| | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|
| நானாவித கடன்பட்டோர்கள் | 128,910 | 1,915,896 |
| நி.த.நி. திட்டத்திற்காக உலக வங்கியிடமிருந்து வருமதிகள் | 66,561,467 | - |
| பண்டிகை முற்பணங்கள் | 1,780,000 | 2,055,000 |
| மீ.கொ.உ. மற்றும் நிலையான வைப்புகளில் வருமதியான வட்டி | - | 27,079 |
| பணியாட்கள் கடன்கள் | 15,909,726 | 17,690,604 |
| தொலைபேசி முற்பணங்கள் | - | 68,046 |
| வருமதியான காப்புறுதிக் கோரல்கள் | - | 37,875 |
| தீர்வை நிதியத்திலிருந்தான வருமதிகள் | 159,723,957 | 193,356,762 |
| இழப்பீட்டு நிதியத்திலிருந்தான வருமதிகள் | 15,563,295 | 5,845,532 |
| இடைநிறுத்தப்பட்ட பணியாளிடமிருந்து வருமதியானவை | 5,212,815 | 5,212,815 |
| மொத்தம் | 264,880,170 | 226,209,608 |

## 10 நிலையான வைப்புகளில் முதலீடுகள்

| | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|
| இலங்கை வங்கியுடனான நிலையான வைப்பு | 654,244 | 642,737 |
| மொத்தம் | 654,244 | 642,737 |

நிலையான வைப்புகளிலான முதலீடுகளின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ள தொகையானது இ.பி.ப.ஆ. ஆல் செயற்பாட்டு விடயங்களுக்காக இலங்கை வங்கிக்கு பிணையுரிமையின் கீழான நிலையான வைப்புகளின் பெறுமதியினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

## 11 வைப்புகள், முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள்

| | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|
| எரிபொருள் வைப்பு | 120,000 | 78,000 |
| மொபிடெல் - கூட்டாண்மை தரவுப் பொதிகள் | 15,000 | 15,000 |
| மொபிடெல் - பணம் செலுத்தப்பட்ட விங்கிள்கள் | 12,000 | 12,000 |
| ரெலிகொம் லிமிட்டட் உடனான வைப்புகள் | 23,125 | 23,125 |
| டயலொக் உடனான வைப்புகள் | 8,500 | 8,500 |
| வொரஸ்ட்டி - சூடான குளிர்ந்த நீர் விநியோகிப்பான்கள் | 12,899 | 12,899 |
| இலங்கை முதலாளிமார் சம்மேளனம் | 62,500 | 62,500 |
| DHL கூரியர் சேவைகள் | 30,000 | 30,000 |
| ORCL - மெனேஜ்மன்ட் கோர்ப்.குடியிருப்புத் திட்டம் 1824 | 44,522,736 | 44,522,736 |
| வழங்குநர்களுக்கான முற்பணங்கள் | 21,030,485 | 17,784,222 |
| மொத்தம் | 65,837,245 | 62,548,982 |

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 12 காசும் காசுக்குச் சமனானவைகளும்

| | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான முதலீடு | - | 74,999,999 |
| வங்கியிலுள்ள காசு | 52,107,145 | 33,997,724 |
| கையிலுள்ள காசு | 40,000 | 40,000 |
| மொத்தம் | 52,147,145 | 109,037,723 |

## 13 திரண்ட நிதியம்

| | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|
| இவ்வாண்டின் ஆரம்பத்திலுள்ளவாறான மீதி | - | - |
| இவ்வாண்டிற்கான வருமானத்தை விஞ்சிய செலவினம் | (331,264,461) | (352,589,980) |
| வருமானத்தை விஞ்சிய செலவினம் நோக்கி தீர்வை நிதியத்திலிருந்தான மாற்றல் | 331,264,461 | 352,589,980 |
| இவ்வாண்டின் இறுதியிலுள்ளவாறான மீதி | - | - |

## 14 மானியம் - மூலதனச் செலவினங்களுக்காக தீர்வை நிதியத்திலிருந்தான மாற்றல்கள்

| | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி | 58,702,817 | 69,195,940 |
| மூலதனச் செலவினத்திற்காக தீர்வை நிதியத்திலிருந்து மாற்றல் | 804,782 | 11,242,118 |
| மானியங்களின் அங்கீகாரம் | (19,350,111) | (21,735,241) |
| ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதி | 40,157,488 | 58,702,817 |
| | | |
| குறிப்பு: | | |
| மானியங்களின் அங்கீகாரம் | | |
| மானியமானது பின்வரும் வீதங்களில் அங்கீகரிக்கப்படுகின்றன | | |
| மோட்டார் வாகனங்கள் | 10.00% | 10.00% |
| தளபாடமும் பொருத்திகளும் | 12.50% | 12.50% |
| அலுவலக உபகரணம் - இலத்திரணியல் தரவு செயலாக்கமும் ஏனையவையும் | 20.00% to 33.33% | 20.00% to 33.33% |
| பயிற்றுவித்தல் உபகரணம் | 20.00% | 20.00% |

## 15 ஓய்வுபெறல் நலன் கடப்பாடு

| | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி | 59,054,227 | 50,378,208 |
| வட்டிச் செலவினம் | 6,791,236 | 4,030,257 |
| நடைமுறைச் சேவைக் கிரயம் | 5,320,905 | 4,488,982 |
| இவ்வாண்டில் செலுத்தப்பட்ட பணிக்கொடை | (9.804.479) | (915,485) |
| தேறிய காப்பீட்டுக் கணிப்பு (இலாபம்)/நட்டம் | 7,527,317 | 1,072,265 |
| **ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதி** | 68,889,206 | 59,054,227 |

ஓய்வுபெறல் நலன் கடப்பாடானது ஓர் சுயாதீன தொழில்சார் மதிப்பீட்டாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட காப்பீட்டுக் கணிப்பின் அடிப்படையிலாகும். காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடல்கள் கழிவிறக்க வீதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதங்கள், இறப்பு வீதங்கள் போன்றவற்றில் அனுமானங்கள் மேற்கொள்ளப்படுவதனை உள்ளடக்கும். திட்டத்தின் நீண்டகால தன்மையின் காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் கணிசமானளவு நிச்சயமற்றதன்மைக்கு உட்பட்டவையாகும். ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் அனைத்து அனுமானங்களும் மீளாய்வு செய்யப்படும்.

ஊழியர் நலன்களது கிரயத்தினை தீர்மானிப்பதில் பயன்படுத்தப்பட்ட பிரதான அனுமானங்கள்;

| | 2022 | 2021 |
|---|---|---|
| ஓய்வுபெறல் வயது | 55 வருடங்கள் | 60 வருடங்களை |
| கழிவிறக்க வீதம் | 18% p.a. | 11.5% p.a. |
| எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதம் | 15% p.a. | 7% p.a. |

### 15.1 பயன்படுத்தப்பட்ட அனுமானங்களின் உணர்திறன்

அனுமானங்களிலான ஒரு சதவீத மாற்றம் பின்வருமாறு பொறுப்புக்களை விளைவிக்கும்

| | கழிவிறக்க வீதம்<br>ரூ. | எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதம்<br>ரூ. |
|---|---|---|
| 1% அதிகரிப்பு | 65,729,201 | 72,505,977 |
| 1% வீழ்ச்சி | 72,355,531 | 65,551,405 |

ஓய்வுபெறல் பணிக்கொடை கடப்பாட்டிலான ஓர் காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடலானது 31 டிசம்பர் 2022 இல் ஓர் தொழில்சார் காப்பீட்டுக் கணிப்பாளரான எக்சுஹேரியல் அன்ட் மெனேஜ்மன்ட் கன்சல்டன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டினால் மேற்கொள்ளப்பட்டது. காப்பீட்டுக் கணிப்பாளரினால் பயன்படுத்தப்பட்ட பெறுமதியிடல் முறையானது "எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு முறையாகும். இது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - "பணியாளர் நலன்" இலான SLPSAS 19 இனால் பரிந்தரைக்கப்பட்ட ஓர் முறையாகும்.

## 16 செலுத்தவேண்டிய வருமான வரி

| | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|
| செலுத்தவேண்டிய வருமான வரி வ/ம 2020/21 | (2,909,457) | (2,912,946) |
| செலுத்தவேண்டிய வருமான வரி வ/ம 2021/22 | - | 325,931,918 |
| செலுத்தவேண்டிய வருமான வரி வ/ம 2022/23 | 248,729,238 | - |
| மொத்தம் | 245,819,781 | 323,018,972 |

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 17 கடன்கொடுத்தோரும் அட்டுறுகளும்

| | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|
| இ-தொடர்பாடல், தொலைபேசி மற்றும் இணையம் | 820,000 | 679,632 |
| மின்சாரம் | 477,161 | 363,744 |
| பணியாட்கள் தொடர்பான செலவினங்கள் | 4,110,502 | 4,362,984 |
| வெளிவாரி கணக்காய்வுக் கட்டணங்கள் | 650,000 | 900,000 |
| உள்ளகக் கணக்காய்வுக் கட்டணங்கள் | 1,500,000 | 598,620 |
| சட்ட மற்றும் தொழில்சார் கட்டணங்கள் | 715,991 | 3,369,390 |
| பொது விழிப்புணர்வு மற்றும் கருத்தரங்குச் செலவுகள் | 6,488,087 | 6,535,418 |
| சந்தை கண்காணிப்புச் செலவினம் | 1,546,875 | - |
| பிரயாணம் - உள்ளூர் | 101,319 | - |
| செலுத்தவேண்டிய வாடகை வைப்பு | 1,536,792 | 1,536,792 |
| செலுத்தவேண்டிய ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. | 3,263,226 | - |
| திருத்தம் மற்றும் பராமரிப்பு | 1,227,960 | 71,280 |
| உள்ளகப் பயிலுநர் படிகள் | 148,333 | 16,667 |
| ஏனைய செலுத்தவேண்டியவை | 90,669 | 86,169 |
| செலுத்தவேண்டிய பணிக்கொடை | - | 915,485 |
| செலுத்தவேண்டிய APIT | 108,422 | - |
| மொத்தம் | 22,785,337 | 19,436,181 |

## 18 உலக வங்கியின் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் திட்டம் (நி.து.ந.)

| | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|
| விற்பனையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை - நி.து.ந.தி. | 50,122,635 | 68,134 |
| மொத்தம் | 50,122,635 | 68,134 |

உலக வங்கியின் நி.து.நி.தி. பின்வருவனவற்றினூடாக திட்ட அபிவிருத்தி குறிக்கோளினை அடையும். நிதியியல் சந்தை உட்கட்டமைப்பினை நவீனமயப்படுத்தல், நிதியியல் அமைப்புமுறைக்கான சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை தரமுயர்த்துதல் மற்றும் நிதியியல் துறை முறைமைப்படுத்துபவர்களான இலங்கை மத்திய வங்கி, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு ஆகியவற்றின் நிறுவன கொள்திறனை பலப்படுத்துதல் என்பனவாகும். மேலாக, ஒரு திட்ட முகாமைத்துவ அலகொன்றினை செயலாற்றுவதன் மூலம் நிதி அமைச்சும் ஒட்டுமொத்த திட்ட ஒருங்கிணைப்பிற்கு துணை புரிகின்றது. இத்திட்டத்தின் கீழ் இ.பி.ப.ஆ. விளைவு அடிப்படையிலான நிதியளித்தல் கூறு மற்றும் முதலீடு அடிப்படையிலான நிதியளித்தல் கூறு ஆகியவற்றின் கீழ் நிதியியனை பெற்றுக்கொள்ளும்.

### கூறு I - விளைவு அடிப்படையிலான நிதியளித்தல் கூறு

கூறு 1 இனூடாக திட்டத்தின் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு இ.பி.ப.ஆ. பிரித்தளித்தல் இணைக்கப்பட்ட குறிகாட்டிகளது அடைவுத்திறனுக்கு நிதியினைப் பெறல் வேண்டும். 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறு, இ.பி.ப.ஆ. நி.து.ந.தி. இன் விளைவு அடிப்படையிலான நிதியளித்தல் கூறின் ஒரு பாகமாக மொத்தமாக USD 1,533,615.90 (ரூபா 369,323,237.12 இற்கு சமனானது) இனை பெற்றுள்ளது. உலக வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட பிரித்தளிப்புகளுடன் மொத்தமாக USD 514,929 ஒரு வருமதியாகக் காணப்படுகின்றது.

### கூறு II - முதலீட்டு அடிப்படையிலான நிதியளித்தல் கூறு

நி.து.ந.தி. இன் கூறு II இன் கீழ் இ.பி.ப.ஆ. பல்வேறு முக்கிய முன்னெடுப்புகளுக்கு தொழில்நுட்ப உறுதுணை மற்றும் முதலீட்டு நிதியளித்தல் உறுதுணையினை பெற்றுக்கொண்டது. 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறு, நி.து.ந.தி. இன் முதுலீட்டு அடிப்படையிலான நிதியளித்தல் கூறின் ஒரு பகுதியாக உலக வங்கியினால் நிதி அமைச்சிற்கு USD 367,000 பிரித்தளிக்கப்பட்டுள்ளதுடன், இதில் USD 143,880 இ.பி.ப.ஆ. ஆல் உள்ளூர் விற்பனையாளர்களுக்கு செலுத்துவதற்காக மீளப்பெறப்பட்டுள்ளதுடன் 31 டிசம்பர் 2022 இல் USD 158,641.49 வெளிநாட்டு விற்பனையாளர்களுக்கு நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.

## 19 நி.து.ந.திட்டத்திலிருந்து வருமானம்

| | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|
| நி.து.ந.தி. - DLI நிதியங்கள் | 171,674,294 | 104,804,128 |
| நி.து.ந.தி. - DLI அல்லாத நிதியங்கள் | 578,445 | - |
| மொத்தம் | 172,252,739 | 104,804,128 |

## 20 ஆளணிச் செலவினங்கள்

| | குறிப்பு | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|---|
| பணியாட்கள் சம்பளங்கள் | | 160,983,569 | 148,721,963 |
| தலைவரது படி | | 1,200,000 | 1,200,000 |
| சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு செலவீடுசெய்தல்கள் | | 6,319,668 | 6,245,252 |
| ஆணைக்குழு அங்கத்தவர்கள் கூட்டக் கட்டணங்கள் | | 1,440,000 | 750,000 |
| ஆலோசகரது படிகள் | | 3,000,000 | 250,000 |
| பணியாட்கள் நலன் மற்றும் ஏனைய பணியாட்கள் தொடர்பான கொடுப்பனவுகள் | | 37,965,470 | 30,933,949 |
| ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. | | 24,445,433 | 22,657,813 |
| பணியாட்கள் பணிக்கொடை | 15 | 19,639,457 | 9,591,504 |
| பணியாட்கள் மருத்துவ செலவினங்களும் காப்புறுதியும் | | 16,113,522 | 15,350,619 |
| பணியாட்கள் வீட்டுக் கடன் வட்டி மானியம் | | 1,914,419 | 2,266,022 |
| பணியாட்கள் வாகனப் படிகள் | | 25,881,000 | 26,662,653 |
| வெளிநாட்டு பயிற்சி மற்றும் பிரயாணம் | | 7,081,485 | - |
| பணியாட்கள் பயிற்சி - உள்ளூர் | | 1,371,374 | 705,210 |
| அங்கத்துவத்திற்கான சந்தாப்பணம் | | 1,769,646 | 1,413,666 |
| கற்கைக்கான அனுசரணை * | | 222,784 | 503,063 |
| விளம்பரம் - ஆட்சேர்ப்பு | | 667,864 | 838,399 |
| உள்ளக பயிலுநர்களது படிகள் | | 2,420,417 | 2,079,583 |
| மொத்தம் | | 312,436,108 | 270,169,695 |

* உறுதிசெய்யப்பட்ட ஊழியர்களுக்கு மேற்படிப்பிற்காக ஆகக்கூடிய தொகையாக ரூபா 250,000 மூன்று வருடங்களுக்கு ஒரு முறை நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய வழங்கப்படுகின்றது. இத்துடன் பரீட்சையில் முழுமையாக சித்தி எய்தியதன் பின்னர் இ.பி.ப.ஆ. இல் இரண்டு வருடங்கள் சேவையாற்றல் வேண்டும் என்ற ஒப்பந்தமொன்றையும் உள்ளடக்குகின்றது. ஊழியர் கற்கை நெறியினை ஏதேனும் காரணத்திற்காக பூர்த்தி செய்யத் தவறினால் அல்லது பதவி விலகினால், இ.பி.ப.ஆ. னால் செலவிடப்பட்ட கிரயத்தினை அந்த ஊழியர் முழுமையாக மீள்செலுத்துதல் வேண்டும். பரீட்சையில் சித்தி எய்தியதன் பின்னர் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்தில் ஊழியர் முழுமையாகச் சேவை செய்யத் தவறினால் இ.பி.ப.ஆ. னால் செலவிடப்பட்ட கிரயத்தை ஊழியர் விகிதாசாரப்படி எஞ்சிய ஒப்பந்தக் காலத்திற்கு மீள்செலுத்துதல் வேண்டும்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 21 நிர்வாக மற்றும் நிலையச் செலவுகள்

| | குறிப்பு | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|---|
| வாடகை மற்றும் வாகனத் தரிப்பிட வாடகை | | 110,895,458 | 101,143,670 |
| மின்சாரக் கட்டணங்கள் | | 4,833,476 | 4,027,541 |
| அலுவலகப் பராமரிப்பு | | 512,160 | 154,900 |
| அலுவலக உபகரணப் பராமரிப்பும் காப்புறுதியும் | | 2,134,086 | 1,900,000 |
| மென்பொருள் புதுப்பிப்பு மற்றும் பராமரிப்பு | | 10,741,282 | 5,996,974 |
| தொலைபேசி, இணையம், இ-தொடர்பாடல் மற்றும் தரவுச் செயன்முறை | | 8,868,781 | 8,456,359 |
| மோட்டார் வாகன எரிபொருள், பராமரிப்பு, உரிமம் மற்றும் காப்புறுதி | | 4,658,580 | 4,699,751 |
| தொழில்சார் கட்டணங்கள் | | 942,031 | 3,202,982 |
| கூட்டச் செலவினங்கள் | | 1,701,589 | 953,363 |
| செய்தித் தாள்கள், சஞ்சிகைகள் மற்றும் நூலகப் புத்தகங்கள் | | 589,802 | 333,276 |
| அச்சிடலும் எழுதுகருவியும் | | 6,866,091 | 4,314,634 |
| பிரயாணம் உள்ளூர் | | 1,380,062 | 7,030,161 |
| காப்புறுதி - அனைத்து இடர், பொது பொறுப்பு, காசு இடைவழியில் மற்றும் தீ | | 260,770 | 254,726 |
| அஞ்சல். முத்திரைத் தீர்வை மற்றும் கூரியர் கட்டணங்கள் | | 1,110,706 | 1,280,225 |
| சட்டச் செலவினங்கள் | | 2,646,930 | 2,803,360 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் - உள்வாரி | | 1,424,100 | 1,762,980 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் - வெளிவாரி | | 284,000 | 344,000 |
| பொதுச் செலவினங்கள் | | 4,212 | 999,101 |
| வர்த்தக வரி | | 5,000 | 5,000 |
| விருந்தளிப்பு | | 15,580 | - |
| பெறுமானத்தேய்வு / பெறுமானக்குறைப்பு - நி.து.ந.தி. | | 578,444 | - |
| பெறுமானத்தேய்வு | 7 | 19,350,111 | 21,735,241 |
| மொத்தம் | | 179,803,251 | 171,398,244 |

## 22 மூலதனச் சந்தை அபிவிருத்தி, வெளிவாரி உறவுகள், மூ.ச.க., கண்காணிப்பு மற்றும் புலனாய்வுச் செலவினங்கள்

| | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|
| மூலதனச் சந்தை மற்றும் கருவி அபிவிருத்தி - BBO, சாலை நிகழ்ச்சிகள் | 19,050,659 | 14,862,714 |
| பொது விழிப்புணர்வுத் திட்டங்கள் | 10,278,137 | 24,840,257 |
| கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1,678,495 | 1,802,431 |
| சர்வதேச அங்கத்துவக் கட்டணம் - ச.பி.ஆ.ஒ. | 7,334,807 | 4,210,388 |
| பகிரங்கம் மற்றும் விளம்பரம் | 147,015 | 146,664 |
| சந்தை கண்காணிப்பு கிரயம் | 11,820,060 | 9,349,152 |
| புலனாய்வு மற்றும் பரிசீலனை செலவினங்கள் | 18,890 | 30,329 |
| மொத்தம் | 50,328,063 | 55,241,934 |

## 23 நிதிச் செலவினங்கள்

| | 2022<br>Rs. | 2021<br>Rs. |
|---|---|---|
| வங்கிக் கட்டணங்கள் | 120,430 | 103,030 |
| மொத்தம் | 120,430 | 103,030 |

## 24 பாதீட்டிற்கெதிரான உண்மையான வருமானம் மற்றும் செலவினத்தின் ஒப்பீடு

| | மெய்யானது 2022 ரூ. | பாதீடு 2022 ரூ. | வேறுபாடு ரூ. |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| உரிமக் கட்டணங்கள் | 3,449,164 | 3,395,000 | 54,164 |
| நிர்வாக அறவீடுகள் | 6,152,213 | 7,028,383 | (876,170) |
| கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | 8,671,966 | 7,665,000 | 1,006,966 |
| வட்டி வருமானம் | 717,743 | - | 717,743 |
| ஏனைய வருமானம் | 110,261 | - | 110,261 |
| பணியாட்கள் கடன்களிலான வட்டி | 719,194 | 820,000 | (100,806) |
| நி.து.ந.திட்டத்திலிருந்து வருமானம் | 172,252,739 | 203,000,000 | (30,747,261) |
| மானியங்களின் அங்கீகாரம் | 19,350,111 | - | 19,350,111 |
| இ.பி.ப.ஆ. ஆல் உருவாக்கப்பட்ட மொத்த வருமானம் | 211,423,391 | 221,908,383 | (10,484,993) |
| கழி: செலவினம் | | | |
| ஆளணிச் செலவினம் | (312,436,108) | (412,344,695) | 99,908,588 |
| நிர்வாக மற்றும் நிலையச் செலவினம் | (179,803,251) | (180,341,792) | 538,541 |
| மூலதனச் சந்தை அபிவிருத்தி | (50,328,063) | (116,588,202) | 66,260,139 |
| நிதியியல் கட்டணங்கள் | (120,430) | (97,933) | (22,497) |
| மொத்த வருவாய்ச் செலவினம் | (542,687,852) | (709,372,623) | 166,684,771 |
| கழி: வருமான வரிச் செலவினம் | - | - | - |
| வருமானத்தினை விஞ்சி மேலதிக வருவாய் செலவினம் | (331,264,461) | (487,464,240) | 156,199,778 |

## 25 மூலதனக் கடப்பாடுகள்

31.12.2022 இல் எவ்விதமான மூலதனக் கடப்பாடுகளும் காணப்படவில்லை.

## 26 நிச்சயமற்ற பொறுப்புக்கள்

31.12.2022 இல் எவ்விதமான நிச்சயமற்ற பொறுப்புக்களும் காணப்படவில்லை.

## 27 ஐந்தொகைத் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

05 ஜனவரி 2023 இல் திரு. விராஜ் தயாரத்ன ஜ.ச. அவர்களின் பதவி முடிவுறலினைத் தொடர்ந்து ஆணைக்குழுவானது பின்வருமாறு மீளுருவாக்கப்பட்டது.

- திரு. வைசால் சாலி, 15 பெப்ரவரி 2023 இல் தலைவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சஞ்சய பண்டார, பதவிவழி அங்கத்தவர்.
- திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க, பதவிவழி அங்கத்தவர்.
- திரு. சஞ்சீவ திசாநாயக்க, பதவிவழி அங்கத்தவர்.
- திருமதி. ஈவட் பர்னாந்து - பதவிவழி அங்கத்தவர்
- திரு. மனில் ஜயசிங்க, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. சுஜீவ முதலிகே, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. அன்டன் கொட்விரி, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. அந்தனி சனில் பர்னாந்து, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 28 தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்

கீழே குறிப்பிட்டுள்ளவாறு தலைவரும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களும் 2022 ஆம் ஆண்டில் பதவி வகித்தார்கள்;

- நியமிக்கப்பட்ட அங்கத்தவரான தலைவர் திரு. விராஜ் தயாரத்ன ஜ.ச. அவர்கள் 5 ஜனவரி 2023 முதல் பதவி முடிவுற்றார்.
- திறைசேரியின் பிரதிச் செயலாளர் பதிவியினை வகித்ததன் நிமித்தம் 16 ஜனவரி 2020 இல் திரு. ஆர்.எம்.பி.ரத்நாயக்க அவர்கள் ஒரு பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவியினை வகித்ததன் நிமித்தம் 08 ஜுலை 2021 இல் திரு. சஞ்சீவ திசாநாயக்க அவர்கள் ஒரு பதிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. மனில் ஜயசிங்க, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. சுஹாத கமலத், நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. சிசிர ரத்நாயக்க, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. சுனில் லங்காதிலக்க, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினை தலைவர் பதவியினை வகித்ததன் நிமித்தம் 10 ஜனவரி 2022 இல் திரு. சஞ்ஜய பண்டார அவர்கள் ஒரு பதவிவழி அங்கத்தவராக நியிமிக்கப்பட்டார்.
- இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் பதவியினை வகித்ததன் நிமித்தம் 11 ஒக்டோபர் 2022 இல் திருமதி, ஈவட் பர்னாந்து அவர்கள் ஒரு பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

ஆணைக்குழுவின் பின்வரும் பதவிவழி அங்கத்தவர் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பதவி துறந்தார்.

- இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் பதவியினை வகித்ததன் நிமித்தம் ஒரு பதவிவழி அங்கத்தவரான திரு. என். டபிள்யு.ஜி.ஆர்.டி. நாணயக்கார அவர்கள் 29 ஏப்ரல் 2022 முதல் அங்கத்தவர் பதவியினை துறந்தார்.

மீளாய்வாண்டின்போது பதவி வகித்த ஆணைக்குழுவின் அங்கத்தவர்களது தொடர்புகளை பின்வரும் அட்டவணையானது விளக்குகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. விராஜ் தயாரத்ன ஜ.ச. | தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |
| திரு. மனில் ஜயசிங்க | எர்ன்ஸ்ட் அன்ட் யங் | முகாமைத்துவ பங்காளி - இலங்கை மற்றும் மாலைதீவுகள் | பூச்சியம் |
| | எர்ன்ஸ்ட் அன்ட் யங் கன்சல்டிங் சேர்விஸஸ் (பிரைவேட் ) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| | ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் ஸ்டார்ட்டிஜி அன்ட் ட்ரான்செக்சன் (பிரைவேட்)லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| | ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் GDS (CS) லங்கா (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| | லங்கா டுவர்ஸ் அன்ட் ட்ரேடர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| | NMJ லெசர் (பிரைவேட்)லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க | பொது திறைசேரி | பிரதிச் செயலாளர் | பூச்சியம் |
| | இலங்கை வங்கி | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | லோட்டஸ் டவர் மெனேஜ்மன்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் | 03/02/2022 முதல் இதுநாள் வரைக்கும் தலைவர் (பதில் ) | பூச்சியம் |
| | உள்ளுர் கடன் அபிவிருத்தி நிதியம் | 28/02/2022 வரை ஆணையாளர் மற்றும் தலைவர் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | 02/03/2022 வரை பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |
| திரு. சஞ்ஜீவ திசாநாயக்க | கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | கம்பனிகள் பதிவாளர் நாயகம் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| | இ.ப.க.நி. இன் கணக்கீட்டு நியமங்கள் குழு | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புக் குழு | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| திரு. சஞ்ஜய பண்டார | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் | தலைவர் | பூச்சியம் |
| | பிரைம் லேண்ட் ரெசிடன்சீஸ் பி.எல்.சி. | சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | அபான்ஸ் வைனான்ஸ் பி.எல்.சி. | 09/09/2022 முதல் சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | சி.எல்.எனர்ஜி (பிரைவேட்) லிமிட்டட் | சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | நெக்ஷியா மெனேஜ்மன்ட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | 1 |
| | நெக்ஷியா BPO (பிரைவேட் ) லிமிட்டட் | பணிப்பாளர் | 1 |
| திரு. சுனில் லங்காதிலக்க | நிதி அமைச்சு | அந்நியச் செலாவணிச் சட்டத்தின் விசாரணைச் சபையின் அங்கத்தவர் | பூச்சியம் |
| | எல்.ஓ.எல்.சி. டெவலப்மன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. | சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| திரு. சுஹத கமலத், ஜ.ச. | பூச்சியம் | பூச்சியம் | பூச்சியம் |
| திரு. சிசிர ரத்நாயக்க | பூச்சியம் | பூச்சியம் | பூச்சியம் |
| திருமதி. ஈவட் பர்னாந்து | இலங்கை மத்திய வங்கி | பிரதி ஆளுநர் | பூச்சியம் |
| | இலங்கை கடன் தகவல் மையம் (ஊசுஜடீ) | தலைவர் | பூச்சியம் |
| | இலங்கை வங்கியாளர்கள் நிருவகம் | தலைவர் | பூச்சியம் |
| | அபி வெனுவென் அபி நிதியம் | 06.05.2022 முதல் முகாமைத்துவச் சபையின் அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | ஆணையாளர் | பூச்சியம் |

மீளாய்வாண்டின்போது பதவி துறந்த ஆணைக்குழுவின் பதவிவழி அங்கத்தவர்களின் தொடர்புகளை கீழ் காணும் அட்டவணையானது விளக்குகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. என். டபிள்யு.ஜி.ஆர்.டி. நாணயக்கார | இலங்கை மத்திய வங்கி | 29 ஏப்ரல் 2022 வரை பிரதி ஆளுநர் | பூச்சியம் |

மீளாய்வாண்டில் சந்தை விலையில் பின்வரும் வழக்கமான வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களைத் தவிர மேல் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் வேறு எந்த கொடுக்கல் வாங்கல்களும் பதிவுசெய்யப்படவில்லை.

இ.பி.ப.ஆ. பின்வரும் ஐந்து நடைமுறை கணக்குகளை இலங்கை வங்கியில் (இ.வ.) பராமரிப்பதுடன் அவற்றின் வங்கி மீதிகள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன

| நடைமுறை கணக்கின் பெயர் | கணக்கு இலக்கம் | 31.12.2022 இல் உள்ளவாறான மீதி (ரூ.) | 31.12.2021 இல் உள்ளவாறான மீதி (ரூ.) |
|---|---|---|---|
| இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | 0000001694 | 63,384,501 | 23,794,693 |
| | 0009919753 | 1,488,143 | 10,146,896 |
| | 83810081 | 17,255,538 | 56,134 |

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2022 ஆம் ஆண்டின்போது பின்வரும் முதலீடுகள் இலங்கை வங்கியினூடாக மேற்கொள்ளப்பட்டன.

| முதலீட்டின் வகை | இவ்வாண்டின்போது இ.வ. இல் மேற்கொண்ட முதலீடுகள் (ரூ.) | இ.வ. இல் 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறான மீதி (ரூ.) |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | 139,000,000 | - |
| மொத்தம் | 139,000,000 | - |

இதற்கும் மேலாக, மீளாய்வாண்டில் பின்வரும் அட்டவணையானது நிறுவனங்களுடன் மேற்கொண்ட ஏனைய கொடுக்கல் வாங்கல்களை சித்தரிக்கின்றது. இவற்றுடன் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் ஆளுகை அங்கங்களுடன் அங்கத்தவர்களாக செயற்படுகின்றார்கள்.

| பணம் பெறுநர் | கொடுப்பனவின் விவரிப்பு | செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|
| இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் | அங்கத்துவ புதுப்பிப்புகள், தேசிய கருத்தரங்கு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 271,600/- |
| எர்ன்ஸ்ட் அன்ட் யங் | ஆலோசனைச் சேவைகள் | 2,021,440/- |
| பணிப்பாளர், வங்கியியல் கற்கைக்கான மத்திய நிலையம் | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 376,000/- |

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | BAN/G/CESS/FA/22/3 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 26 May 2023 |

தலைவர்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

**2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழவினது தீர்வை நிதியத்தின் ("நிதியம்") 2022 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தீர்வை நிதியத்தின் மாற்றங்களிலான கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன் (SLAuSs). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொறுத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

### 1.3 நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஓர் நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான நிதியத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் நிதியத்தினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் நிதியத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமைக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு நிதியம் வேண்டப்படுகின்றது.

### 1.4 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமாக எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கருதத்தக்கதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

NAOSL ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்வுகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்வுகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்வையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்வையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.
- நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்
- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான நிதியத்தின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் நிதியம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

## 2 ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

**2.1** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றன.

**2.2** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

**டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் அதிபதி

# நிதி நிலைமைக் கூற்று

| 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறானது | குறிப்பு | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு | | 3,010,320,650 | 3,159,199,611 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு | | 148,878,960 | 355,702,976 |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு | | 1,453,364,761 | - |
| திறைசேரி முறிகளில் வருமதியான வட்டி | | 24,559,621 | 76,520,029 |
| திறைசேரி உண்டியல்களில் வருமதியான வட்டி | | 115,829,935 | - |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் வருமதியான வட்டி | | 67,307 | 146,132 |
| வருமதியான தீர்வை | | 6,055,532 | 27,289,951 |
| காசும் காசுக்குச் சமனானவைகளும் | 7 | 75,145,466 | 459,076,390 |
| **மொத்த சொத்துக்கள்** | | 4,834,222,233 | 4,077,935,087 |
| **நிதியங்களும் பொறுப்புக்களும்** | | | |
| **பயன்படுத்தப்பட்ட நிதியங்களும் ஒதுக்கங்களும்** | | | |
| திரண்ட நிதியம் | | 4,674,258,276 | 3,884,378,325 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| இ.பி.ப.ஆ. இற்கு செலுத்தவேண்டியவை | | 159,723,957 | 193,356,762 |
| கணக்காய்வுக் கட்டணம் | | 240,000 | 200,000 |
| **மொத்த நிதியங்களும் பொறுப்புக்களும்** | | 4,834,222,233 | 4,077,935,087 |

பக்கங்கள் 99 முதல் 104 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் பொறுப்பாளியாவார்கள்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியத்திற்காகவும் அதன் சார்பிலும்

**சிந்தக்க மென்டிஸ்**
பணிப்பாளர் நாயகம்

**வைசால் சாலி**
தலைவர்

**நிரோஷா கொடிகார**
பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம்

கொழும்பு
31 மார்ச் 2023

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

# நிதிச் செயற்திறன் கூற்று

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| இவ்வருடத்தின்போது பெறப்பட்ட தீர்வை | | 916,667,624 | 1,554,518,067 |
| திறைசேரி முறிகளிலான வட்டி | | 323,891,505 | 144,908,971 |
| திறைசேரி உண்டியல்களிலான வட்டி | | 148,575,637 | - |
| மீள்கொள்வனவு உடன்படிக்கை முதலீடுகளிலான வட்டி | | 22,753,914 | 91,940,659 |
| **மொத்த வருமானம்** | | 1,411,888,680 | 1,791,367,697 |
| **செலவினம்** | | | |
| செயற்பாட்டு மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக இ.பி.ப.ஆ. இற்கு மாற்றல் செய்யப்பட்ட நிதிகள் | | (332,084,732) | (363,832,098) |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | | (268,000) | (398,000) |
| வங்கிக் கட்டணங்கள் | | (138,800) | (18,442) |
| **மொத்த செலவினம்** | | (332,491,532) | (364,248,540) |
| வருமான வரிச் செலவினம் | 8 | (289,517,197) | (343,056,625) |
| **செலவினத்திலும் மிகையான வருமானம்** | | 789,879,951 | 1,084,062,532 |

பக்கங்கள் 99 முதல் 104 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# தீர்வை நிதியத்திலான மாற்றங்களின் கூற்று

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|
| **திரண்ட நிதியம்** | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி | 3,884,378,325 | 2,800,315,793 |
| ஆண்டிற்கான செலவினத்தை விஞ்சிய வருமானம் | 789,879,951 | 1,084,062,532 |
| திரண்ட நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்ட நிதிகள் | - | - |
| **ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதி** | 4,674,258,276 | 3,884,378,325 |

பக்கங்கள் 99 முதல் 104 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

# காசுப் பாய்ச்சல் கூற்று

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| செலவினத்திலும் மிகையான வருமானம் | 789,879,951 | 1,084,062,532 |
| செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி) | 789,879,951 | 1,084,062,532 |
| **செயற்படு மூலதனத்திலான மாற்றங்கள்** | | |
| வருமதியான தீர்வையின் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | 21,234,418 | (16,023,104) |
| இ.பி.ப.ஆ. இலிருந்தான வருமதிகளின் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | | 130,331,961 |
| திறைசேரி முறிகளில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | 51,960,407 | (29,725,892) |
| திறைசேரி உண்டியல்களில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | (115,829,935) | - |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | 78,824 | 37,467 |
| செலுத்தவேண்டியவைகளில் அதிகரிப்பு / (வீழ்ச்சி) | (33,592,804) | 193,556,762 |
| | (76,149,090) | 278,177,195 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | 713,730,861 | 1,362,239,726 |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்குள்ளான காசுக் பாய்ச்சல்கள்** | | |
| அரச நிறுவனங்களின் தற்காலிய மிகை நிதியத்தில் முதலீடு | - | - |
| திரண்ட நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்ட நிதிகள் | - | - |
| திறைசேரி முறிகளில் முதலீடு | 355,702,976 | (2,340,843,389) |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு | (1,453,364,761) | |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | (1,097,661,785) | (2,340,843,389) |
| காசும் காசுக்குச் சமனானவைகளில் தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி) | (383,930,924) | (978,603,662) |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்(குறிப்பு A) | 459,076,390 | 1,437,680,052 |
| **காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்(குறிப்பு B)** | 75,145,466 | 459,076,390 |
| **குறிப்பு (A)** | | |
| **காலப்பகுதியின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்** | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | 452,265,729 | 1,425,824,301 |
| வங்கியிலுள்ள காசு | 6,810,660 | 11,855,751 |
| | 459,076,390 | 1,437,680,052 |
| **குறிப்பு (B)** | | |
| **காலப்பகுதியின் இறுதியல் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்** | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | 73,757,104 | 452,265,729 |
| வங்கியிலுள்ள காசு | 1,388,362 | 6,810,660 |
| | 75,145,466 | 459,076,390 |

பக்கங்கள் 99 முதல் 104 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1 பொதுவான தகவல்கள்

### 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியமானது (தீர்வை நிதியம் ) 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 14பி (1) இன் கீழ், 1991 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சட்டம், 2009 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க சட்டம் (பழைய இ.பி.ப.ஆ. சட்டம் ) என்பவற்றால் திருத்தியமைக்கப்பட்டு நிறுவப்பட்டதுடன் இது 21 செப்டம்பர் 2021 முதல் 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் (புதிய இ.பி.ப.ஆ.) பிரிவு இலக்கம் 156 (1) இனால் நீக்கப்பட்டு மாற்றீடு செய்யப்பட்டது.

2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 156 (1) இவ்வாறு கூறுகின்றது, "பிரிவு 155 இன் கீழ் விதிக்கப்படும் தீர்வை வருவாயினை வரவு வைப்பதற்காக ஆணைக்குழுவினால் நிர்வகிக்கப்படவேண்டிய "தீர்வை நிதியம்" என்றழைக்கப்படும் ஓர் நிதியம் நிறுவப்படல் வேண்டும்."

தீர்வை நிதியமானது இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசில் வாழ்வகத்தினைக் கொண்டுள்ளதுடன் கொழும்பு 01, எச்சிலன் சதுக்கம், உலக வர்த்தக மையம் - கிழக்கு கோபுரம், 28 மற்றும் 29 ஆம் மாடியில் அமைந்துள்ளது.

### 1.2 செயற்பாடுகளின் தன்மை மற்றும் பிரதான நடவடிக்கைகள்

21 செப்டம்பர் 2021 முதல் அமுலிலுள்ள 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க புதிய பி.ப.ஆ, சட்டத்தின் பிரிவு 156 (2) இன் பிரகாரம் தீர்வை நிதியத்தின் வரவில் தேங்கியுள்ள பணமானது பின்வரும் நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படலாம்:

(அ) பிணையங்கள் சந்தையினை அபிவிருத்தி செய்தல்

(ஆ) இழப்பீட்டு நிதியத்தின் அல்லது இந்த பிரிவின் கீழ் நிறுவப்பட்ட ஆணைக்குழுவின் நிதியத்தின் வரவிலுள்ள பணத்தை மேம்படுத்துவதற்கு்

(இ) ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுதல் மற்றும் செயற்படுத்தலில் முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் ஆணைக்குழுவினை செயற்படுத்துவதில் ஆட்படும் அனைத்து செலவினங்களையும் சந்தித்தல்

(ஈ) ஆணைக்குழு பொருத்தமானது என்று கருதுகின்றவாறு ஆணைக்குழுவின் பணியாட்களுக்கு வீடமைத்தல், கல்வி, ஆரோக்கியம் மற்றும் போக்குவரத்து தேவைகளுக்கு கடன் வழங்குதல்

(உ) பணிப்பாளர் நாயகம் மற்றும் அதன் உத்தியோகத்தர்கள், வேலையாட்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்பவர்கள் மற்றும் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்களது நலனுக்காக நிறுவப்படும் ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்கள் மற்றும் ஏனைய நிதியங்களுக்கு பங்களிப்பினை மேற்கொள்வதற்கு; மற்றும்

(ஊ) ஆணைக்குழுவினால் நிரூபிக்கப்பட்ட தகுதி வாய்ந்தவர்கள் என தீர்மானிக்கப்பட்டவாறு ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் சேவையாட்களின் இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் ஆட்படும் கற்கைச் செலவுக்காக பணங்கட்டுவதற்கு.

மேலும், புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 156 (3) இன் பிரகாரம் தீர்வை நிதியத்தின வரவில் ஏதேனும் மிகையான பணம் இருப்பின், அதனை தீர்வை நிதியத்தினை விருத்திசெய்வதற்காக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கும் அத்தகைய விதத்தில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

### 1.3 இணக்கப்பாடு கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியத்தினது நிதிக்கூற்றுக்களை இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.அ.க.நி.) ஏற்ப தயாரித்துள்ளது. நிதிக்கூற்றுக்கள், நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, தீர்வை நிதியத்தில் ஏற்படும் மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளையும் உள்ளடக்குகின்றது.

### 1.4 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் மற்றும் முன்னிலைப்படுத்தலுக்கும் பொறுப்பாளியாவார்கள்.

### 1.5 நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் தீர்வை நிதியத்தின் தொடர்ச்சியாக தொடர்ந்து செல்லக்கூடிய ஆற்றலை மதிப்பீடு செய்தனர். ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் தீர்வை நிதியம் எதிர்வரும் காலங்களில் தனது செயற்பாட்டு வாழ்க்கையைத் தொடர்வதற்கு போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என ஓர் நியாயமான எதிர்பார்ப்பினைக் கொண்டுள்ளார்கள். எதிர்காலம் பற்றிய கிடைக்கப்பெற்ற அனைத்து தகவல்களையும் கருத்திற்கொண்டு ஒழித்துக்கட்டலுக்கோ அல்லது செயற்பாட்டினை நிறுத்துவதற்கான தேவையொன்றை தீர்வை நிதியம் எதிர்பார்க்கவில்லை. இதற்கமைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது தீர்வை நிதியம் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பின்பற்றுவதனைத் தொடர்ந்ததுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

### 1.6 தயாரிப்பிற்கான அடிப்படை

பழைய இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இ.பி.ப.ஆ. இன் கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், 1 ஜனவரி 2020 முதல் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணைக்குழுவானது இ.பி.ப.ஆ. தீர்வை நிதியத்திற்கு தனியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தீர்மானித்தது. எனவே, இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியத்தின் நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, தீர்வை நிதியத்திலான மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளை உள்ளடக்குகின்றது.

தீர்வை நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில், கிட்டிய முழு ரூபாய்க்கு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

நிதிக் கூற்றுக்கள் வரலாற்று கிரயத்தின் அடிப்படையில் மற்றும் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமானவிடத்து அடுத்துவரும் குறிப்புகளில் கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

## 1.7 மதிப்பீடுகள் மற்றும் நியாயப்பாடுகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பானது முகாமைத்துவம் பின்வருவனவற்றை மேற்கொள்ளவேண்டுமென வேண்டப்படுகின்றது. வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மற்றும் அதனுடனிணைந்த வெளிப்படுத்தல்களும் எதிர்பாரா பொறுப்புக்களின் வெளிப்படுத்தல்கள் என அறிக்கையிடப்படும் தொகையில் நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன தாக்கத்தினை ஏற்படுத்தலாம். இந்த மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பனவற்றின் நிச்சயமற்றதன்மையானது, எதிர்வரும் காலப்பகுதியில் பாதிக்கப்படும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களது கொண்டுசெல்லப்படும் தொகையில் கணிசமானளவு செம்மையாக்கல்கள் தேவைப்படும் விளைவினை உருவாக்கலாம். மதிப்பீடுகளும் உள்ளார்ந்த அனுமானங்களும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகளுக்கான திருத்தியமைத்தல்கள் வருங்காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

## 1.8 செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது தீர்வை நிதியத்தின் செயற்பாட்டு நாணயமாகும். மீளாய்வாண்டில் நிறுவனத்தின் முன்னிலைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு நாணயத்தில் எவ்விதமான மாற்றங்களும் காணப்படவில்லை. அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் யாவும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்ற சமயத்தில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளன.

## 1.9 பொருண்மை மற்றும் திரள்வு

ஒத்த வகையான உருப்படியின் ஒவ்வொரு பொருண்மையான வகுப்பும் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. ஒத்தமையாத தன்மை அல்லது செயற்பாட்டினை உடைய உருப்படிகள் அவை பொருண்மையானவையாக இல்லாதவிடத்து மாத்திரமே தனித்தனியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

## 1.10 ஈடுசெய்தல்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பன பின்வருவனவாறு தேவைப்பட்டாலன்றி அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி ஈடுசெய்யப்படவில்லை. இ.அ.க.நி. அனுமதித்தால் அல்லது கொடுக்கல் வாங்கல் அல்லது ஏனைய நிகழ்வின் சாராம்சத்தினை ஈடுசெய்தல் பிரதிபலித்தால், பயனாளிகள் கொடுக்கல் வாங்கல்கள், ஏனைய நிகழ்வுகள் மற்றும் அவை ஏற்பட்ட நிலைமைகள் குறித்து புரிந்துகொள்ளுதல் மற்றும் தீர்வை நிதியத்தின் எதிர்கால காசுப்பாய்ச்சலை மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்கான ஆற்றலிலிருந்து விலகியிருந்தால்.

## 1.11 ஒப்பிடப்படும் தகவல்கள்

ஒப்பிடப்படும் எண்கள் நடைமுறை நிதியாண்டில் சமர்ப்பிப்பிலுள்ள மாற்றங்களுக்கு அமைவாக செம்மையாக்கப்பட்டுள்ளன

## 1.12 அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் இடம் பெற்ற பொருண்மையான நிகழ்வுகள் அனைத்தும் கவனத்திற்கொள்ளப்பட்டு தேவையானவிடத்து நிதிக்கூற்றுக்களில் உகந்த செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 1.13 கணக்கீட்டு கொள்கைகளிலான மாற்றங்கள்

பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

## 2 சொத்துக்களும் அவற்றின் பெறுமான மதிப்பீட்டின் ஆதாரங்களும்

## 2.1 முதலீடுகள்

உரிமமளிக்கப்பட்ட அரசாங்க வங்கிகளில், நிலையான வைப்புகள் மற்றும் குறுங்கால முதலீடுகள், அரசாங்க திறைசேரி உண்டியல்கள் மற்றும் அரசாங்க திறைசேரி முறிகள் போன்றவற்றில் முதலீடு செய்யப்படுகின்றன. இவை கிரயத்தில் மற்றும் அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதிவரைக்குமான அட்டுறு வட்டியுடன் சேர்த்து குறிப்பிடப்படுகின்றன.

## 2.2 வருமதிகள்

வருமதிகள் மதிப்பிடப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

## 3.1 பொறுப்புக்கள்

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் கோரும் பட்சத்தில், செலுத்தவேண்டியவற்றைக் கொண்டுள்ளன. நடைமுறையல்லாத பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் செலுத்தவேண்டிய நிலுவைகளைக் கொண்டுள்ளன.

தெரிந்துகொள்ளப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கிரயத்தில் கணக்கிடப்பட்டுள்ளன.

## 4 நிதிச் செயற்திறன் கூற்று

## 4.1 வட்டி வருமானம்

முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் நிதிச் செயற்திறன் கூற்றில் ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது

## 4.2 ஏனைய வருமானம்

ஏனைய வருமானம், ஏதேனும் இருப்பின், அவை ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

## 5 செலவின் அங்கீகரிப்பு

நிதியியல் செயற்திறனை உறுதிசெய்யும்போது தீர்வை நிதியத்தின் அனைத்து செலவினங்களும் ஓர் அட்டுறு அடிப்படையில் வருமானத்திற்கு ஆட்படுத்தப்படுகின்றது.

## 6 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றிற்காக, காசும் காசுக்குச் சமமானவைகளுக்குள் கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கிகளில் உள்ள மூன்று மாதங்களுக்குக் குறைவான முதிர்வினைக்கொண்ட மீள்கொள்வனவு உடன்படிக்கைகளையும் உள்ளடக்குகின்றன.

## 7 காசும் காசுக்குச் சமனானவைகளும்

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடுகள் | 73,757,104 | 452,265,730 |
| வங்கியிலுள்ள காசு | 1,388,362 | 6,810,660 |
| மொத்தம் | 75,145,466 | 459,076,390 |

## 8 வருமான வரிச் செலவினம்

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|
| வ/ம 2020/2021 இற்கான வருவான வரிச் செலவினம் | - | (2,905,438) |
| வ/ம 2021/2022 இற்கான வருவான வரிச் செலவினம் | (495,581) | 345,962,063 |
| வ/ம 2022/2023 இற்கான வருவான வரிச் செலவினம் | 290,012,778 | - |
| மொத்தம் | 289,517,197 | 343,056,625 |

வருமான வரிக்கான பொறுப்பானது 2017 ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கமைய, திருத்தியமைக்கப்பட்டவாறு, கணிக்கப்படுகின்றது.

## 9 மூலதனக் கடப்பாடுகள்

31.12.2022 இல் எவ்விதமான மூலதனக் கடப்பாடுகளும் காணப்படவில்லை.

## 10 நிச்சயமற்ற பொறுப்புக்கள்

31.12.2022 இல் எவ்விதமான நிச்சயமற்ற பொறுப்புக்களும் காணப்படவில்லை.

## 11 ஐந்தொகைத் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

05 ஜனவரி 2023 இல் திரு. விராஜ் தயாரத்ன ஜ.ச. அவர்களின் பதவி முடிவுறலினைத் தொடர்ந்து ஆணைக்குழுவானது பின்வருமாறு மீளுருவாக்கப்பட்டது.

- திரு. வைசால் சாலி, 15 பெப்ரவரி 2023 இல் தலைவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சஞ்சய பண்டார, பதவிவழி அங்கத்தவர்.
- திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க, பதவிவழி அங்கத்தவர்.
- திரு. சஞ்சீவ திசாநாயக்க, பதவிவழி அங்கத்தவர்.
- திருமதி. ஈவட் பர்னாந்து, பதவிவழி அங்கத்தவர்
- திரு. மனில் ஜயசிங்க, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. சுஜீவ முதலிகே, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. அன்டன் கொட்விரி, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. அந்தனி சனில் பர்னாந்து, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.

### இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 12 தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்

தீர்வை நிதியமானது இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் முகாமைப்படுத்தப்படுகின்றது.

- நியமிக்கப்பட்ட அங்கத்தவரான தலைவர் திரு. விராஜ் தயாரத்ன ஜ.ச. அவர்கள் 5 ஜனவரி 2023 முதல் பதவி முடிவுற்றார்.
- திறைசேரியின் பிரதிச் செயலாளர் பதிவியினை வகித்ததன் நிமித்தம் 16 ஜனவரி 2020 இல் திரு. ஆர்.எம்.பி.ரத்நாயக்க அவர்கள் ஒரு பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவியினை வகித்ததன் நிமித்தம் 08 ஜுலை 2021 இல் திரு. சஞ்சீவ திசாநாயக்க அவர்கள் ஒரு பதிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. மனில் ஜயசிங்க, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. சுஹுத கமலத், நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. சிசிர ரத்நாயக்க, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. சுனில் லங்காதிலக்க, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினை தலைவர் பதவியினை வகித்ததன் நிமித்தம் 10 ஜனவரி 2022 இல் திரு. சஞ்ஜய பண்டார அவர்கள் ஒரு பதவிவழி அங்கத்தவராக நியிமிக்கப்பட்டார்.
- இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் பதவியினை வகித்ததன் நிமித்தம் 11 ஒக்டோபர் 2022 இல் திருமதி, ஈவட் பர்னாந்து அவர்கள் ஒரு பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

ஆணைக்குழுவின் பின்வரும் பதவிவழி அங்கத்தவர் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பதவி துறந்தார்.

- இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் பதவியினை வகித்ததன் நிமித்தம் ஒரு பதவிவழி அங்கத்தவரான திரு. என். டபிள்யு.ஜி.ஆர்.டி. நாணயக்கார அவர்கள் 29 ஏப்ரல் 2022 முதல் அங்கத்தவர் பதவியினை துறந்தார்.

மீளாய்வாண்டின்போது பதவி வகித்த ஆணைக்குழுவின் அங்கத்தவர்களது தொடர்புகளை பின்வரும் அட்டவணையானது விளக்குகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. விராஜ் தயாரத்ன, ஜ.ச. | தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |
| திரு. மணில் ஜயசிங்க | ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் | முகாமைப் பங்காளி - இலங்கை மற்றும் மாலைதீவுகள் | பூச்சியம் |
| | ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் கன்சல்டிங் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| | ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் ஸ்டார்ட்டிஜி அன்ட் ட்ரான்செக்சன் (பிரைவேட்)லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| | ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் GDS (CS) லங்கா (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| | லங்கா டுவர்ஸ் அன்ட் ட்ரேடர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| | NMJ லெசர் (பிரைவேட்)லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க | பொது திறைசேரி | பிரதிச் செயலாளர் | பூச்சியம் |
| | இலங்கை வங்கி | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | லோட்டஸ் டவர் மெனேஜ்மன்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் | 03/02/2022 முதல் இதுநாள் வரைக்கும் தலைவர் (பதில்) | பூச்சியம் |
| | உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியம் | 28/02/2022 வரை ஆணையாளர் மற்றும் தலைவர் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | 02எ03/2022 வரை பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. சஞ்ஜீவ திசாநாயக்க | கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | கம்பனிகள் பதிவாளர் நாயகம் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | இ.பி.க.நி. இன் கணக்கீட்டு நியமங்கள் குழு | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| திரு. சஞ்ஜய பண்டார | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் | தலைவர் | பூச்சியம் |
| | பிரைம் லேண்ட் ரெசிடன்சீஸ் பி.எல்.சி. | சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | அபான்ஸ் வைனான்ஸ் பி.எல்.சி. | 09.09.2022 முதல் சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | சி.எல்.எனர்ஜி (பிரைவேட்) லிமிட்டட் | சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | நெக்ஷியா மெனேஜ்மன்ட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | 1 |
| | நெக்ஷியா BPO (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | 1 |
| திரு. சுனில் லங்காதிலக்க | நிதி அமைச்சு | அந்நியச் செலாவணிச் சட்டத்தின் விசாரணைச் சபையின் அங்கத்தவர் | பூச்சியம் |
| | எல்.ஓ.எல்.சி. டெவலப்மன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. | சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| திரு. சுஹத கமலத், ஜ.ச. | பூச்சியம் | பூச்சியம் | பூச்சியம் |
| திரு. சிசிர ரத்நாயக்க | பூச்சியம் | பூச்சியம் | பூச்சியம் |
| திருமதி. ஈவட் பர்னாந்து | இலங்கை மத்திய வங்கி | பிரதி ஆளுநர் | பூச்சியம் |
| | இலங்கை கடன் தகவல் மையம் (ஊசுஜடீ) | தலைவர் | பூச்சியம் |
| | இலங்கை வங்கியாளர்கள் நிருவகம் | தலைவர் | பூச்சியம் |
| | அபி வெனுவென் அபி நிதியம் | 06.05.2022 முதல் முகாமைத்துவச் சபையின் அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | ஆணையாளர் | பூச்சியம் |

மீளாய்வாண்டின்போது பதவி துறந்த ஆணைக்குழுவின் பதவிவழி அங்கத்தவர்களின் தொடர்புகளை கீழ் காணும் அட்டவணையானது விளக்குகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. என். டபிள்யு.ஜீ.ஆர்.டி. நாணயக்கார | இலங்கை மத்திய வங்கி | 29 ஏப்ரல் 2022 வரை பிரதி ஆளுநர் | பூச்சியம் |

மீளாய்வாண்டில் சந்தை விலையில் பின்வரும் வழக்கமான வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களைத் தவிர மேல் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் வேறு எந்த கொடுக்கல் வாங்கல்களும் பதிவுசெய்யப்படவில்லை.

**இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்**

# நிதிக் கூற்றுக்களின் குறிப்புகள்

இ.பி.ப.ஆ. இன் தீர்வை நிதியமானது பின்வரும் நடைமுறைக் கணக்கினை இலங்கை வங்கியில் பராமரிப்பதுடன் அதன் வங்கி மீதி கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது

| நடைமுறை கணக்கின் பெயர் | கணக்கு இலக்கம் | 31.12.2022 இல் உள்ளவாறான மீதி (ரூ.) | 31.12.2021 இல் உள்ளவாறான மீதி (ரூ.) |
|---|---|---|---|
| இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம் | 0009834430 | 363,351 | 2,784,645 |

2022 ஆம் ஆண்டின்போது பின்வரும் முதலீடுகள் இலங்கை வங்கியினூடாக மேற்கொள்ளப்பட்டன.

| முதலீட்டின் வகை | இவ்வாண்டின்போது இ.வ. இல் மேற்கொண்ட முதலீடுகள் (ரூ.) | இ.வ. இல் 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறான மீதி (ரூ.) |
|---|---|---|
| திறைசேரி முறிகள் | - | 2,961,938,365 |
| திறைசேரி உண்டியல்கள் | 1,007,695,630 | 1,007,695,630 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | 4,285,093,693 | 70,000,000 |
| மொத்தம் | 5,292,789,323 | 4,039,633,995 |

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } BAN/G/COM/FA/22/4 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 26 May 2023

தலைவர்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

**2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழவினது இழப்பீட்டு நிதியத்தின் ("நிதியம்") 2022 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, இழப்பீட்டு நிதியத்தின் மாற்றங்களிலான கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமா்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன் (SLAuSs). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொறுத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 1.3 நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஓர் நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான நிதியத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் நிதியத்தினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் நிதியத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமைக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு நிதியம் வேண்டப்படுகின்றது.

## 1.4 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமாக எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கருதத்தக்கதாக கருதப்படும்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குவதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

- நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்

- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான நிதியத்தின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் நிதியம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

## 2 ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

**2.1** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றன.

**2.2** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

**டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் அதிபதி

# நிதி நிலைமைக் கூற்று

| 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறானது | குறிப்பு | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு | | 369,424,068 | 394,240,378 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு | | 24,816,310 | 113,632,425 |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு | | 201,936,911 | - |
| திறைசேரி முறிகளில் வருமதியான வட்டி | | 4,594,270 | 13,002,217 |
| திறைசேரி உண்டியல்களில் வருமதியான வட்டி | | 15,878,275 | 0 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் வருமதியான வட்டி | | 8,460 | 13,406 |
| காசும் காசுக்குச் சமனானவைகளும் | 7 | 8,615,687 | 40,728,226 |
| **மொத்த சொத்துக்கள்** | | 625,273,981 | 561,616,651 |
| **நிதியங்களும் பொறுப்புக்களும்** | | | |
| **பயன்படுத்தப்பட்ட நிதியங்களும் ஒதுக்கங்களும்** | | | |
| திரண்ட நிதியம் | | 609,508,687 | 555,571,118 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| இ.பி.ப.ஆ. இற்கு செலுத்தவேண்டியவை | | 15,563,294 | 5,845,532 |
| கணக்காய்வுக் கட்டணம் | | 202,000 | 200,000 |
| **மொத்த நிதியங்களும் பொறுப்புக்களும்** | | 625,273,981 | 561,616,651 |

பக்கங்கள் 113 முதல் 118 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் பொறுப்பாளியாவார்கள்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியத்திற்காகவும் அதன் சார்பிலும்

**சிந்தக்க மெண்டிஸ்**
பணிப்பாளர் நாயகம்

**வைசால் சாலி**
தலைவர்

**நிரோஷா கொடிகார**
பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம்

கொழும்பு
31 மார்ச் 2023

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

# நிதிச் செயற்திறன் கூற்று

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்திறன் கூற்று | குறிப்பு | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| திறைசேரி முறிகளிலான வட்டி | | 46,233,518 | 33,305,523 |
| திறைசேரி உண்டியல்களிலான வட்டி | | 17,168,552 | - |
| மீள்கொள்வனவு உடன்படிக்கை முதலீடுகளிலான வட்டி | | 1,157,502 | 11,583,114 |
| இவ்வாண்டில் பெறப்பட்ட ஒத்திணங்கல் தண்டப்பணங்கள் | | 10,400,000 | - |
| **மொத்த வருமானம்** | | 74,959,572 | 44,888,637 |
| **செலவினம்** | | | |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | | (200,000) | (398,000) |
| வங்கிக் கட்டணங்கள் | | (72,180) | (2,912) |
| **மொத்த செலவினம்** | | (272,180) | (400,912) |
| வருமான வரிச் செலவினம் | 8 | (20,749,823) | (10,669,546) |
| **செலவினத்தினை விஞ்சிய மிகை வருமானம்** | | 53,937,569 | 33,818,179 |

பக்கங்கள் 113 முதல் 118 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# இழப்பீட்டு நிதியத்திலான மாற்றங்களின் கூற்று

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான இழப்பீட்டு நிதியத்திலான மாற்றங்களின் கூற்று | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|
| **திரண்ட நிதியம்** | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி | 555,571,118 | 521,752,939 |
| செலவினத்தினை விஞ்சிய மிகை வருமானம் | 53,937,569 | 33,818,179 |
| **ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதி** | 609,508,687 | 555,571,118 |

பக்கங்கள் 113 முதல் 118 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

# காசுப் பாய்ச்சல் கூற்று

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| செலவினத்திலும் மிகையான வருமானம் | 53,937,569 | 33,818,179 |
| செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி) | 53,937,569 | 33,818,179 |
| **செயற்படு மூலதனத்திலான மாற்றங்கள்** | | |
| திறைசேரி முறிகளில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | 8,407,946 | (3,693,508) |
| திறைசேரி உண்டியல்களில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | (15,878,275) | - |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | 4,945 | 18,621 |
| இ.பி.ப.ஆ. இற்கு செலுத்தவேண்டியவைகளிலான அதிகரிப்பு / (வீழ்ச்சி) | 9,717,762 | (13,045,081) |
| ஏனைய செலுத்தவேண்டியவைகளில் அதிகரிப்பு / (வீழ்ச்சி) | 2,000 | 200,000 |
| | 2,254,378 | (16,519,968) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | 56,191,947 | 17,298,211 |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்குள்ளான காசுக் பாய்ச்சல்கள்** | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு | 113,632,425 | (225,390,894) |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு | (201,936,911) | |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | (88,304,486) | (225,390,894) |
| காசும் காசுக்குச் சமனானவைகளில் தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி) | (32,112,539) | (208,092,682) |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்(குறிப்பு A) | 40,728,226 | 248,820,908 |
| **காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்(குறிப்பு B)** | 8,615,687 | 40,728,226 |
| **குறிப்பு (A)** | | |
| **காலப்பகுதியின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்** | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | 40,000,000 | 248,721,328 |
| வங்கியிலுள்ள காசு | 728,226 | 99,580 |
| | 40,728,226 | 248,820,908 |
| **குறிப்பு (B)** | | |
| **காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்** | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | 8,000,000 | 40,000,000 |
| வங்கியிலுள்ள காசு | 615,687 | 728,226 |
| | 8,615,687 | 40,728,226 |

பக்கங்கள் 113 முதல் 118 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1 பொதுவான தகவல்கள்

### 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியமானது (இழப்பீட்டு நிதியம் ) 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 38 (1) இன் கீழ், 1991 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சட்டம், 2009 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க சட்டம் (பழைய இ.பி.ப.ஆ. சட்டம் ) என்பவற்றால் திருத்தியமைக்கப்பட்டு நிறுவப்பட்டதுடன் இது 21 செப்டம்பர் 2021 முதல் 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் (புதிய இ.பி.ப.ஆ. சட்டம்) பிரிவு இலக்கம் 158 (1) இனால் நீக்கப்பட்டு மாற்றீடு செய்யப்பட்டது.

2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 158 (1) பின்வருமாறு கூறுகின்றது: 'யாரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர் அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்கு வர்த்தகர் தனது ஒப்பந்தக் கடப்பாடுகளைச் சந்திப்பதற்கான ஆற்றலின்றி காணப்படுவதன் விளைவாக பணவகையான நட்டத்தினை சகித்திருந்த யாரேனும் முதலீட்டாளருக்கு வரையறுத்த இழப்பீட்டினை வழங்கும் நோக்கத்திற்காக "இழப்பீட்டு நிதியம்" என்றழைக்கப்படும் ஓர் நிதியம் நிறுவப்படல் வேண்டும்.'

இழப்பீட்டு நிதியமானது இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசில் வாழ்வகத்தினைக் கொண்டுள்ளதுடன் கொழும்பு 01, எச்சிலன் சதுக்கம், உலக வர்த்தக மையம் - கிழக்கு கோபுரம், 28 மற்றும் 29 ஆம் மாடியில் அமைந்துள்ளது.

### 1.2 செயற்பாடுகளின் தன்மையும் பிரதான நடவடிக்கைகளும்

21 செப்டம்பர் 2021 முதல் 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 158 (1) இன் பிரகாரம், இழப்பீட்டு நிதியத்தினை நிறுவுவதன் நோக்கம் யாரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர் அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்கு வர்த்தகர் தனது ஒப்பந்தக் கடப்பாடுகளைச் சந்திப்பதற்கான ஆற்றலின்றி காணப்படுகின்றார் என ஆணைக்குழு கண்டறிந்து அதன் விளைவாக பணவகையான நட்டத்தினை சகித்திருந்த யாரேனும் முதலீட்டாளருக்கு வரையறுத்த இழப்பீட்டினை வழங்குவதற்காகும்.

மேலும், புதிய பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 158 (2) இழப்பீட்டு நிதியம் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும் என குறிப்பிடுகின்றது

(அ) பாராளுமன்றத்தினால் வாக்களிப்படக்கூடிய அத்தகைய பணத் தொகைகள்

(ஆ) இந்த சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிதியத்திற்கு வரவு வைக்கக்கூடிய அத்தகைய பணத் தொகைகள் மற்றும்

(இ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு தீர்வை நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படக்கூடிய அத்தகை பணத்தொகைகள்.

இதற்கும் மேலாக, புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 158 (3) இன் பிரகாரம், இழப்பீட்டு நிதியத்திற்கு சொந்தமான பணமானது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய விதத்தில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

### 1.3 இணக்கப்பாடு கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியத்தினது நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.அ.க.நி.) ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்கள், நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, ஒதுக்கத்தில் ஏற்படும் மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளையும் உள்ளடக்குகின்றது.

### 1.4 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் மற்றும் முன்னிலைப்படுத்தலுக்கும் பொறுப்பாளியாவார்கள்.

### 1.5 நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இழப்பீட்டு நிதியத்தின் தொடர்ச்சியாக தொடர்ந்து செல்லக்கூடிய ஆற்றலை மதிப்பீடு செய்தனர். ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இழப்பீட்டு நிதியம் எதிர்வரும் காலங்களில் தனது செயற்பாட்டு வாழ்க்கையைத் தொடர்வதற்கு போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என ஓர் நியாயமான எதிர்பார்ப்பினைக் கொண்டுள்ளார்கள். எதிர்காலம் பற்றிய கிடைக்கப்பெற்ற அனைத்து தகவல்களையும் கருத்திற்கொண்டு ஒழித்துக்கட்டலுக்கோ அல்லது செயற்பாட்டினை நிறுத்துவதற்கான தேவையொன்றை இழப்பீட்டு நிதியம் எதிர்பார்க்கவில்லை. இதற்கமைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இழப்பீட்டு நிதியம் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பின்பற்றுவதனைத் தொடர்ந்ததுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

### 1.6 தயாரிப்பிற்கான அடிப்படை

இ.பி.ப.ஆ. இன் கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், 1 ஜனவரி 2020 முதல் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணைக்குழுவானது இ.பி.ப.ஆ. இன் இழப்பீட்டு நிதியத்திற்கு தனியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தீர்மானித்தது. எனவே, இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியத்தின் நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, இழப்பீட்டு நிதியத்திலான மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளை உள்ளடக்குகின்றன.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

இழப்பீட்டு நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில், கிட்டிய முழு ரூபாய்க்கு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள் வரலாற்று கிரயத்தின் அடிப்படையில் மற்றும் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமானவிடத்து அடுத்துவரும் குறிப்புகளில் கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன..

நிதிக் கூற்றுக்கள் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

### 1.7 மதிப்பீடுகள் மற்றும் நியாயப்பாடுகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பானது முகாமைத்துவம் பின்வருவனவற்றை மேற்கொள்ளவேண்டுமென வேண்டப்படுகின்றது. வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மற்றும் அதனுடனிணைந்த வெளிப்படுத்தல்களும் எதிர்பாரா பொறுப்புக்களின் வெளிப்படுத்தல்கள் என அறிக்கையிடப்படும் தொகையில் நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன தாக்கத்தினை ஏற்படுத்தலாம். இந்த மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பனவற்றின் நிச்சயமற்றதன்மையானது, எதிர்வரும் காலப்பகுதியில் பாதிக்கப்படும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களது கொண்டுசெல்லப்படும் தொகையில் கணிசமானளவு செம்மையாக்கல்கள் தேவைப்படும் விளைவினை உருவாக்கலாம். மதிப்பீடுகளும் உள்ளார்ந்த அனுமானங்களும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகளுக்கான திருத்தியமைத்தல்கள் வருங்காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 1.8 செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது இழப்பீட்டு நிதியத்தின் செயற்பாட்டு நாணயமாகும். மீளாய்வாண்டில் நிறுவனத்தின் முன்னிலைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு நாணயத்தில் எவ்விதமான மாற்றங்களும் காணப்படவில்லை. அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் ஏதேனும் இருப்பின், யாவும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்ற சமயத்தில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளன.

### 1.9 பொருண்மை மற்றும் திரள்வு

ஒத்த வகையான உருப்படியின் ஒவ்வொரு பொருண்மையான வகுப்பும் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. ஒத்தமையாத தன்மை அல்லது செயற்பாட்டினை உடைய உருப்படிகள் அவை பொருண்மையாக இல்லாதவிடத்து மாத்திரமே தனித்தனியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.10 ஈடுசெய்தல்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பன பின்வருவனவாறு தேவைப்பட்டாலன்றி அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி ஈடுசெய்யப்படவில்லை. இ.அ.க.நி. அனுமதித்தால் அல்லது கொடுக்கல் வாங்கல் அல்லது ஏனைய நிகழ்வின் சாராம்சத்தினை ஈடுசெய்தல் பிரதிபலித்தால், பயனாளிகள் கொடுக்கல் வாங்கல்கள், ஏனைய நிகழ்வுகள் மற்றும் அவை ஏற்பட்ட நிலைமைகள் குறித்து புரிந்துகொள்ளுதல் மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் எதிர்கால காசுப்பாய்ச்சலை மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்கான ஆற்றலிலிருந்து விலகியிருந்தால்.

### 1.11 ஒப்பிடப்படும் தகவல்கள்

ஒப்பிடப்படும் எண்கள் நடைமுறை நிதியாண்டில் சமர்ப்பிப்பிலுள்ள மாற்றங்களுக்கு அமைவாக செம்மையாக்கப்பட்டுள்ளன.

### 1.12 அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கவனத்திற்கொள்ளப்பட்டு தேவையானவிடத்து நிதிக்கூற்றுக்களில் உகந்த செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.13 கணக்கீட்டுக் கொள்கைகளிலான மாற்றங்கள்

பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

## 2 சொத்துக்களும் அவற்றின் பெறுமான மதிப்பீட்டின் ஆதாரங்களும்

### 2.1 முதலீடுகள்

உரிமமளிக்கப்பட்ட அரசாங்க வங்கிகளில், நிலையான வைப்புகள் மற்றும் குறுங்கால முதலீடுகள், அரசாங்க திறைசேரி உண்டியல்கள் மற்றும் அரசாங்க திறைசேரி முறிகள் போன்றவற்றில் முதலீடு செய்யப்படுகின்றன. இவை கிரயத்தில் மற்றும் அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதிவரைக்குமான அட்டுறு வட்டியுடன் சேர்த்து குறிப்பிடப்படுகின்றன.

### 2.2 வருமதிகள்

வருமதிகள் மதிப்பிடப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

### 3.1 பொறுப்புக்கள்

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள், கோரும் பட்சத்தில், செலுத்தவேண்டியவற்றைக் கொண்டுள்ளன. நடைமுறையல்லாத பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் செலுத்தவேண்டிய நிலுவைகளைக் கொண்டுள்ளன.

தெரிந்துகொள்ளப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கிரயத்தில் கணக்கிடப்பட்டுள்ளன

## 4 நிதிச் செயற்திறன் கூற்று

### 4.1 வட்டி வருமானம்

முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் நிதிச் செயற்திறன் கூற்றில் ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 4.2 பெறப்பட்ட தண்டப்பணம்

இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இழப்பீட்டு நிதியத்தினால் பெறப்படும் தண்டப்பணம் காசு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 4.3 ஏனைய வருமானம்

ஏனைய வருமானம், ஏதேனும் இருப்பின், அவை ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

## 5 செலவின அங்கீகரிப்பு

நிதியியல் செயற்திறனை உறுதிசெய்யும்போது இழப்பீட்டு நிதியத்தின் அனைத்து செலவினங்களும் ஓர் அட்டுறு அடிப்படையில் வருமானத்திற்கு ஆட்படுத்தப்படுகின்றது.

## 6 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றிற்காக, காசும் காசுக்குச் சமமானவைகளுக்குள் கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கிகளில் உள்ள மூன்று மாதங்களுக்குக் குறைவான முதிர்வினைக்கொண்ட மீள்கொள்வனவு உடன்படிக்கைகளையும் உள்ளடக்குகின்றன.

## 7 காசும் காசுக்குச் சமனானவைகளும்

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான இழப்பீட்டு நிதியத்திலான மாற்றங்களின் கூற்று | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான முதலீடுகள் | 8,000,000 | 40,000,000 |
| வங்கியிலுள்ள காசு | 615,687 | 728,226 |
| மொத்தம் | 8,615,687 | 40,728,226 |

## 8 வருமான வரிச் செலவினம்

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான இழப்பீட்டு நிதியத்திலான மாற்றங்களின் கூற்று | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|
| வ/ம 2020/2021 க்கான வருமான வரிச் செலவினம் | - | (7,508) |
| வ/ம 2021/2022 க்கான வருமான வரிச் செலவினம் | - | 10,677,054 |
| வ/ம 2021/2022 க்கான வருமான வரிச் செலவினம் | 20,749,823 | - |
| மொத்தம் | 20,749,823 | 10,669,546 |

வருமான வரிக்கான பொறுப்பானது 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச்சட்டத்திற்கமைய, திருத்தியமைக்கப்பட்டவாறு, கணிப்பிடப்படுகின்றது.

## 9 மூலதனக் கடப்பாடுகள்

31.12.2022 இல் எவ்விதமான மூலதனக் கடப்பாடுகளும் காணப்படவில்லை.

## 10 நிச்சயமற்ற பொறுப்புக்கள்

31.12.2022 இல் எவ்விதமான நிச்சயமற்ற பொறுப்புக்களும் காணப்படவில்லை.

## 11 ஐந்தொகைத் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

05 ஜனவரி 2023 இல் திரு. விராஜ் தயாரத்ன ஜ.ச. அவர்களின் பதவி முடிவுறலினைத் தொடர்ந்து ஆணைக்குழுவானது பின்வருமாறு மீளுருவாக்கப்பட்டது.

- திரு. வைசால் சாலி, 15 பெப்ரவரி 2023 இல் தலைவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சஞ்சய பண்டார, பதவிவழி அங்கத்தவர்.
- திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க, பதவிவழி அங்கத்தவர்.
- திரு. சஞ்சீவ திசாநாயக்க, பதவிவழி அங்கத்தவர்.
- திருமதி. ஈவட் பர்னாந்து, பதவிவழி அங்கத்தவர்
- திரு. மனில் ஜயசிங்க, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. சுஜீவ முதலிகே, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. அன்டன் கொட்விரி, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. அந்தனி சனில் பர்னாந்து, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.

**இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்**

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 12 தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்

இழப்பீட்டு நிதியமானது இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் முகாமைப்படுத்தப்படுகின்றது

- நியமிக்கப்பட்ட அங்கத்தவரான தலைவர் திரு. விராஜ் தயாரத்ன ஜ.ச. அவர்கள் 5 ஜனவரி 2023 முதல் பதவி முடிவுற்றார்.
- திறைசேரியின் பிரதிச் செயலாளர் பதிவியினை வகித்ததன் நிமித்தம் 16 ஜனவரி 2020 இல் திரு. ஆர்.எம்.பி.ரத்நாயக்க அவர்கள் ஒரு பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவியினை வகித்ததன் நிமித்தம் 08 ஜூலை 2021 இல் திரு. சஞ்சீவ திசாநாயக்க அவர்கள் ஒரு பதிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. மனில் ஜயசிங்க, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. சுஹத கமலத், நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. சிசிர ரத்நாயக்க, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- திரு. சுனில் லங்காதிலக்க, நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினை தலைவர் பதவியினை வகித்ததன் நிமித்தம் 10 ஜனவரி 2022 இல் திரு. சஞ்ஜய பண்டார அவர்கள் ஒரு பதவிவழி அங்கத்தவராக நியிமிக்கப்பட்டார்.
- இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் பதவியினை வகித்ததன் நிமித்தம் 11 ஒக்டோபர் 2022 இல் திருமதி, ஈவட் ப்ர்னாந்து அவர்கள் ஒரு பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

ஆணைக்குழுவின் பின்வரும் பதவிவழி அங்கத்தவர் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பதவி துறந்தார்.

- இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் பதவியினை வகித்ததன் நிமித்தம் ஒரு பதவிவழி அங்கத்தவரான திரு. என். டபிள்யு.ஜி.ஆர்.டி. நாணயக்கார அவர்கள் 29 ஏப்ரல் 2022 முதல் அங்கத்தவர் பதவியினை துறந்தார்.

மீளாய்வாண்டின்போது பதவி வகித்த ஆணைக்குழுவின் அங்கத்தவர்களது தொடர்புகளை பின்வரும் அட்டவணையானது விளக்குகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. விராஜ் தயாரத்ன ஜ.ச. | இழப்பீட்டு நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |
| திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க | பொது திறைசேரி | பிரதிச் செயலாளர் | பூச்சியம் |
| | இலங்கை வங்கி | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | லோட்டஸ் டவர் மெனேஜ்மன்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் | 03/02/2022 முதல் இதுநாள் வரைக்கும் தலைவர் (பதில் ) | பூச்சியம் |
| | உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியம் | 28/02/2022 வரை ஆணையாளர் மற்றும் தலைவர் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | 02/03/2022 வரை பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | பொது திறைசேரி | பிரதிச் செயலாளர் | பூச்சியம் |
| திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க | பொது திறைசேரி | பிரதிச் செயலாளர் | பூச்சியம் |
| | இலங்கை வங்கி | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | லோட்டஸ் டவர் மெனேஜ்மன்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் | தலைவர் (மாற்றாள்) 03/02/2022 இலிருந்து இதுநாள்வரைக்கும் | பூச்சியம் |
| | உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியம் | 28/02/2022 வரை ஆணையாளர் மற்றும் தலைவர் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | 02/03/2022 வரை பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. சஞ்ஜீவ திசாநாயக்க | கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | கம்பனிகள் பதிவாளர் நாயகம் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | இ.ப.க.நி. இன் கணக்கீட்டு நியமங்கள் குழு | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புக் குழு | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| திரு. சஞ்ஜய பண்டார | இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் | தலைவர் | பூச்சியம் |
| | பிரைம் லேண்ட் ரெசிடன்சீஸ் பி.எல்.சி. | சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | அபான்ஸ் வைனான்ஸ் பி.எல்.சி. | 09/09/2022 முதல் சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | சி.எல்.எனர்ஜி (பிரைவேட்) லிமிட்டட் | சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| | நெக்ஷியா மெனேஜ்மன்ட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | 1 |
| | நெக்ஷியா BPO (பிரைவேட் ) லிமிட்டட் | பணிப்பாளர் | 1 |
| திரு. சுனில் லங்காதிலக்க | நிதி அமைச்சு | அந்நியச் செலாவணிச் சட்டத்தின் விசாரணைச் சபையின் அங்கத்தவர் | பூச்சியம் |
| | எல்.ஓ.எல்.சி. டெவலப்மன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. | சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | பூச்சியம் |
| திரு. சுஹத கமலத், ஜ.ச. | திரு. சுஹத கமலத், ஜ.ச. | பூச்சியம் | பூச்சியம் |
| திரு. சிசிர ரத்நாயக்க | பூச்சியம் | பூச்சியம் | பூச்சியம் |
| திருமதி. ஈவட் பர்னாந்து | இலங்கை மத்திய வங்கி | பிரதி ஆளுநர் | பூச்சியம் |
| | இலங்கை கடன் தகவல் மையம் (CRIB) | தலைவா | பூச்சியம் |
| | இலங்கை வங்கியாளர்கள் நிருவகம் | தலைவா | பூச்சியம் |
| | அபி வெனுவென் அபி நிதியம் | 06.05.2022 முதல் முகாமைத்துவச் சபையின் அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | ஆணையாளா | பூச்சியம் |

மீளாய்வாண்டின்போது பதவி துறந்த ஆணைக்குழுவின் பதவிவழி அங்கத்தவர்களின் தொடர்புகளை கீழ் காணும் அட்டவணையானது விளக்குகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. என். டபிள்யு.ஜி.ஆர்.டி. நாணயக்கார | இலங்கை மத்திய வங்கி | 29 ஏப்ரல் 2022 வரை பிரதி ஆளுநர் | பூச்சியம் |

மீளாய்வாண்டில் சந்தை விலையில் பின்வரும் வழக்கமான வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களைத் தவிர மேல் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் வேறு எந்த கொடுக்கல் வாங்கல்களும் பதிவுசெய்யப்படவில்லை.

**இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்**

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

இ.பி.ப.ஆ. இன் இழப்பீட்டு நிதியமானது பின்வரும் நடைமுறைக் கணக்கிளை இலங்கை வங்கியில் பராமரிப்பதுடன் அதன் வங்கி மீதியானது கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது

| நடைமுறை கணக்கின் பெயர் | கணக்கு இலக்கம் | 31.12.2022 இல் உள்ளவாறான மீதி (ரூ.) | 31.12.2021 இல் உள்ளவாறான மீதி (ரூ.) |
|---|---|---|---|
| இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம் | 75433985 | 615,687 | 728,226 |

2022 ஆம் ஆண்டின்போது பின்வரும் முதலீடுகள் இலங்கை வங்கியினூடாக மேற்கொள்ளப்பட்டன.

| முதலீட்டின் வகை | இவ்வாண்டின்போது இ.வ. இல் மேற்கொண்ட முதலீடுகள் (ரூ.) | இ.வ. இல் 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறான மீதி (ரூ.) |
|---|---|---|
| திறைசேரி முறிகள் | - | 359,889,636 |
| திறைசேரி உண்டியல்கள் | 156,457,994 | 145,008,441 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையில் முதலீடு | 322,298,717 | 8,000,000 |
| மொத்தம் | 478,756,711 | 512,898,077 |

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | BAN/G/SGF/FA/22/5 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 26 May 2023 |

தலைவர்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

**2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழவினது தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் ("நிதியம்") 2022 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்தின் மாற்றங்களிலான கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 1998 ஆம் ஆண்டிற்கு முன்னிலைப்படுத்தப்பட்ட பாதீட்டின் முன்மொழிவான ஒரு நிதியத்தினை நிறுவுதல் தொடர்பாக 21/22 மே 1998 திகதியிடப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புறுதி இலக்கம் 1376 இன் பந்தி 11 (டி) இன் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன் (SLAuSs). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொறுத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව | இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. | No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 1.3 நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஓர் நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான நிதியத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் நிதியத்தினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் நிதியத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமைக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு நிதியம் வேண்டப்படுகின்றது.

## 1.4 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமாக எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கருதத்தக்கதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

NAOSL
ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.
- நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்
- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான நிதியத்தின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் நிதியம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 2 ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

**2.1** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றன.

**2.2** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

**டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் அதிபதி

# நிதி நிலைமைக் கூற்று

| 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறானது | குறிப்பு | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு | | 90,631,135 | 194,860,375 |
| நிலையான வைப்புகளில் முதலீடு | | 300,000,000 | 300,000,000 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு | | 104,229,240 | 278,775,190 |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு | | 555,183,888 | |
| திறைசேரி முறிகளில் வருமதியான வட்டி | | 8,451,206 | 18,034,969 |
| நிலையான வைப்புகளில் வருமதியான வட்டி | | 50,054,798 | 30,780,824 |
| திறைசேரி உண்டியல்களில் வருமதியான வட்டி | | 44,371,549 | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் வருமதியான வட்டி | | 9,519 | 81,429 |
| காசும் காசுக்குச் சமனானவைகளும் | 5 | 9,412,567 | 243,458,440 |
| **மொத்த சொத்துக்கள்** | | 1,162,343,902 | 1,065,991,227 |
| **நிதியங்களும் பொறுப்புக்களும்** | | | |
| **பயன்படுத்தப்பட்ட நிதியங்களும் ஒதுக்கங்களும்** | | | |
| மானியம் - திறைசேரி | | 50,000,000 | 50,000,000 |
| மானியம் - தீர்வை நிதியம் | | 100,000,000 | 100,000,000 |
| மானியம் - கொழும்பு பங்குப் பரிவர்த்தனை | | 100,000,000 | 100,000,000 |
| திரண்ட நிதியம் | | 891,173,149 | 806,487,080 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| செலுத்தவேண்டிய வருமான வரி | 6 | 20,970,753 | 9,397,147 |
| கணக்காய்வுக் கட்டணம் | | 200,000 | 107,000 |
| **மொத்த நிதியங்களும் பொறுப்புக்களும்** | | 1,162,343,902 | 1,065,991,227 |

பக்கங்கள் 127 முதல் 131 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் பொறுப்பாளியாவார்கள்

தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்திற்காகவும் அதன் சார்பிலும்

**வைசால் சாலி**
தலைவர்

**நிரோஷா கொடிகார**
பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம்

கொழும்பு
31 மார்ச் 2023

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

# நிதிச் செயற்திறன் கூற்று

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்திறன் கூற்று | குறிப்பு | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கை முதலீடுகளிலான வட்டி | | 4,438,743 | 3,363,641 |
| திறைசேரி முறிகளிலான வட்டி | | 41,994,928 | 66,380,973 |
| திறைசேரி உண்டியல்களிலான வட்டி | | 47,443,738 | - |
| நிலையான வைப்புகள் முதலீடுகளிலான வட்டி | | 19,273,973 | 21,000,001 |
| மொத்த வருமானம் | | 113,151,382 | 90,744,615 |
| செலவினம் | | | |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | | (291,000) | (165,000) |
| வங்கிக் கட்டணங்கள் | | (106,480) | (2,164) |
| மொத்த செலவினம் | | (397,480) | (167,164) |
| வருமான வரிச் செலவினம் | 7 | (28,067,832) | (16,303,941) |
| செலவினத்திலும் மிகையான வருமானம் | | 84,686,069 | 74,273,510 |

பக்கங்கள் 127 முதல் 131 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# தேறிய சொத்துக்களிலான மாற்றங்களின் கூற்று

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான தேறிய சொத்துக்களிலான மாற்றங்களின் கூற்று | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|
| திரண்ட நிதியம் | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி | 806,487,080 | 732,213,570 |
| ஆண்டிற்கான செலவினத்தை விஞ்சிய வருமானம் | 84,686,069 | 74,273,510 |
| ஆண்டின் இறுதியில் உள்ளவாறன மீதி | 891,173,149 | 806,487,080 |

பக்கங்கள் 127 முதல் 131 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

# காசுப் பாய்ச்சல் கூற்று

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| செலவினத்திலும் மிகையான வருமானம் | 84,686,069 | 74,273,510 |
| செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி) | 84,686,069 | 74,273,510 |
| **செயற்படு மூலதனங்களின் மாற்றம்** | | |
| ஏனைய வருமதிகளிலான (அதிகரிப்பு) / வீழ்ச்சி | (53,989,850) | (20,631,836) |
| செலுத்தவேண்டியவைகளின் அதிகரிப்பு / (வீழச்சி) | 11,666,606 | 3,940,192 |
| | (42,323,244) | (16,691,643) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | 42,362,826 | 57,581,867 |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்குள்ளான காசுக் பாய்ச்சல்கள்** | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு | 278,775,190 | 155,151,060 |
| நிலையான வைப்புகளிலான முதலீடுகள் | - | - |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு | (555,183,888) | - |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | (276,408,698) | 155,151,060 |
| காசும் காசுக்குச் சமனானவைகளில் தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி) | (234,045,873) | 212,732,926 |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்(குறிப்பு A) | 243,458,440 | 30,725,513 |
| **காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்(குறிப்பு B)** | 9,412,567 | 243,458,440 |
| **குறிப்பு (A)** | | |
| **காலப்பகுதியின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்** | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | 242,950,000 | 30,486,575 |
| வங்கியிலுள்ள காசு | 508,440 | 238,938 |
| **மொத்தம்** | 243,458,440 | 30,725,513 |
| **குறிப்பு (B)** | | |
| **காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்** | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | 9,000,001 | 242,950,000 |
| வங்கியிலுள்ள காசு | 412,566 | 508,440 |
| **மொத்தம்** | 9,412,567 | 243,458,440 |

பக்கங்கள் 127 முதல் 131 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1. பொதுவான தகவல்கள்

### 1.1 இணக்கப்பாட்டு கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியமானது (தீ.உ.நி.) ஓர் இலாபமீட்டாத நம்பிக்கை நிதியமாகும். இது 1998 இல் நம்பிக்கை பொறுப்புறுதி இலக்கம் 1376, திருத்தியமைக்கப்பட்டவாறு, இன் காரணமாக நிறுவப்பட்டது. இதன் நிதிக்கூற்றுக்கள் இலங்கை அரசு துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்பத் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

தீ.உ.நி. இன் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையானது நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் மற்றும் முன்னிலைப்படுத்துவதற்கும் பொறுப்பாளியாவார்கள்.

### 1.3 தயாரிப்பிற்கான அடிப்படை

தீ. உ. நி இன் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில், கிட்டிய முழு ரூபாய்க்கு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் வரலாற்றுச் செலவு மரபொழுங்கின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமான விடயங்களில் கணக்கீட்டுக் கொள்கைகள் அடுத்து வரும் குறிப்புகளில் தரப்பட்டுள்ளன.

### 1.4 அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடும் தினத்தின் பின்னர் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கவனத்திற்கொள்ளப்பட்டு தேவையானவிடத்து நிதிக்கூற்றுக்களில் உகந்த செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.5 கணக்கீட்டு கொள்கைகளிலான மாற்றங்கள்

கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் கடந்த ஆண்டில் கடைப்பிடிக்கப்பற்றவற்றுடன் ஒத்ததாகக் காணப்படுகின்றன.

### 1.6 ஒப்பிடப்படும் எண்கள்

ஒப்பிடப்படும் எண்கள் நடைமுறை நிதியாண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாற்றல்களுக்கு அமைவாக செம்மையாக்கப்பட்டுள்ளன

## 2. சொத்துக்களும் அவற்றின் பெறுமான மதிப்பீட்டின் ஆதாரங்களும்

### 2.1 முதலீடுகள்

முதலீடுகள் அரசாங்கத் திறைசேரி முறிகளிலும், உரிமமளிக்கப்பட்ட அரச வங்கிகளில் நிலையான வைப்புகளிலும் மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலும் மேற்கொள்ளப்பட்டு அவை கொள்விலையில் மற்றும் அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதி வரைக்குமான அட்டுறு வட்டியுடன் சேர்த்து குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.2 வருமதிகள்

வருமதிகள் மதிப்பிடப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

### 3.1 ஓய்வுபெறல் நலன்

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கமைய பணிக்கொடை செலுத்தவேண்டிய எவ்வித பொறுப்புக்களும் எழவில்லை. ஏனெனில் தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தை நம்பிக்கைப் பொறுப்பாளர் நிர்வகிப்பதால் நிதியத்தில் உத்தியோகத்தர் எவரும் வேலைக்கு அமர்த்தப்படவில்லை.

### 3.2 செலுத்தவேண்டிய கணக்குகள்

செலுத்தவேண்டியவைகள் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 4. நிதிச் செயற்திறன் கூற்று

### 4.1 வருமான அங்கீகரிப்பு

முதலீடுகளிலான வட்டி ஒரு அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 4.2 செலவின அங்கீகரிப்பு

தீ.உ.நி இனைப் பேணுவதில் ஏற்படும் சகல செலவினங்களும் அட்டுறு அடிப்படையில் கணிக்கப்பட்டு நிதியியல் செயற்திறனை அறிவதற்காக வருமானத்தில் இருந்து கழிக்கப்படுகின்றது.

### 4.3 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்றிற்காக, காசும் காசுக்குச் சமனானவையும், கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கிகளிடம் மேற்கொள்ளப்பட்ட மூன்று மாதங்களுக்குட்பட்ட முதிர்வினைக் கொண்ட மீள்கொள்வனவு உடன்படிக்கைகளையும் உள்ளடக்குகின்றது.

## 5. காசும் காசுக்குச் சமனானவைகளும்

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---:|---:|
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு | 9,000,001 | 242,950,000 |
| வங்கியிலுள்ள காசு | 412,566 | 508,440 |
| மொத்தம் | 9,412,567 | 243,458,440 |

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 6. செலுத்தவேண்டிய வருமான வரி

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|
| வ/ம 2020/2021 க்கு செலுத்தவேண்டிய வருமான வரி | | (101,382) |
| வ/ம 2021/2022 க்கு செலுத்தவேண்டிய வருமான வரி | | 9,498,528 |
| வ/ம 2022/2023 க்கு செலுத்தவேண்டிய வருமான வரி | 20,970,753 | |
| மொத்தம் | 20,970,753 | 9,397,147 |

## 7. வருமான வரிச் செலவினம்

| 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|
| வ/ம 2021/2022 க்கான வருமான வரிச் செலவினம் | | 16,303,941 |
| வ/ம 2022/2023 க்கான வருமான வரிச் செலவினம் | 28,067,832 | |
| மொத்தம் | 28,067,832 | 16,303,941 |

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின், திருத்தியமைக்கப்பட்டது, ஏற்பாடுகளுக்கமைய வருமானவரிப் பொறுப்பானது கணிப்பிடப்பட்டுள்ளது

## 8. மூலதனக் கடப்பாடுகள்

31 டிசம்பர் 2022 இல் எவ்விதமான மூலதனக் கடப்பாடுகளும் காணப்படவில்லை.

## 9. நிச்சயமற்ற பொறுப்புக்கள்

31 டிசம்பர் 2022 இல் எவ்விதமான நிச்சயமற்ற பொறுப்புக்களும் காணப்படவில்லை.

## 10. ஐந்தொகைத் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

நம்பிக்கைப் பொறுப்பாளர் நிகழ்வுகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்து தேவையேற்படும்போது ஐந்தொகைத் திகதியின் பின்னரான முக்கியமான நிகழ்வு தொடர்பாக பொருத்தமான விதத்தில் நடைமுறை நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்களை மேற்கொள்வார்.

05 ஜனவரி 2023 இல் தலைவர் திரு. விராஜ் தயாரத்ன, ஜ.ச. இன் பதவி முடிவுறலைத் தொடர்ந்து 15 பெப்ரவரி 2023 இல் திரு. வைசால் சாலி அவர்கள் இ.பி.ப.ஆ. இன் தலைவராக நியமிக்கப்பட்டார்.

## 11. தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்

நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர், பணிப்பாளர் நாயகம், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

தீ.உ.நி. இன் கீழ்காணும் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் 2022 இல் பதவி வகித்தார்கள்;

- திரு. விராஜ் தயாரத்ன, ஜ.ச., தலைவர் இ.பி.ப.ஆ.
- திரு. ரஜீவ பண்டாரநாயக்க, பிரதம நிறைவேற்று அதிகாரி, கொ.ப.ப.
- திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க, இ.பி.ப.ஆ. இன் ஆணையாளர் மற்றம் திறைசேரியின் பிரதிச் செயலாளர்
- திரு. சிந்தக்க மென்டிஸ், பணிப்பாளர் நாயகம் இ.பி.ப.ஆ.

இவ்வாண்டின்போது தீ.உ.நி. இற்கு நியமிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்;

- திரு. தில்ஷான் வீரசேகர, தலைவர் கொ.ப.ப. (ஜூன் 2022 முதல் நியமிக்கப்பட்டார்)

மீளாய்வாண்டின்போது பின்வரும் நம்பிக்கைப் பொறுப்பாளர் தீ.உ.நி. இன் நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவியினைத் துறந்தார்;

- திரு. துமித் பர்னாந்து அவர்கள் கொ.ப.ப. இன் தலைவர் பதவியினை ஜூன் 2022 இல் துறந்ததன் நிமித்தம் ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளராக பதவி முடிவுற்றார்.

பின்வரும் அட்டவணையானது இவ்வாண்டின்போது நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் தொடர்பினைக் குறிப்பிடுகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. விராஜ் தயாரத்ன ஐ.ச. | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | 08 ஜனவரி 2022 முதல் தலைவராக நியமிக்கப்பட்டு 22 ஜனவரி 2020 இல் கடமையினைப் பொறுப்பேற்றார். | பூச்சியம் |
| திரு. தில்ஷான் வீரசேகர | கொழும்பு பங்குப் பரிவர்த்தனை | ஜூன் 2022 முதல் தலைவர் | பூச்சியம் |
| | ஹட்டர் கோர்ப் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| | சென்ரல் டிபொசிட்டரி சிஸ்டம்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் லிமிட்டட் | முகாமைப் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி (27 டிசம்பர் 2022 முதல்) | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. | முகாமைப் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி (27 டிசம்பர் 2022 முதல்) | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | முகாமைப் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி (27 டிசம்பர் 2022 முதல்) | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் மார்க்கட்ஸ் லிமிட்டட் | முகாமைப் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி (27 டிசம்பர் 2022 முதல்) | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் ஈக்யூட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் | முகாமைப் பணிப்பாளர் (27 டிசம்பர் 2022 முதல்) | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் ட்ரஸ்ட்டி சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டட் | முகாமைப் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி (27 டிசம்பர் 2022 முதல்) | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் ட்ரெசரீஸ் பி.எல்.சி. | முகாமைப் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி (27 டிசம்பர் 2022 முதல்) | பூச்சியம் |
| | கொழும்பு பங்குப் பரிவர்த்தனை | ஜூன் 2022 வரை பணிப்பாளர் | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் லிமிட்டட் | டிசம்பர் 2022 வரை பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. | டிசம்பர் 2022 வரை பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | டிசம்பர் 2022 வரை பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் மார்க்கட்ஸ் லிமிட்டட் | டிசம்பர் 2022 வரை பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் ஈக்யூட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் | டிசம்பர் 2022 வரை பணிப்பாளர் | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் ட்ரஸ்ட்டி சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டட் | டிசம்பர் 2022 வரை பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி | பூச்சியம் |
| | வெர்ஸ்ட் கெப்பிட்டல் ட்ரெசரீஸ் பி.எல்.சி. | டிசம்பர் 2022 வரை பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி | பூச்சியம் |
| திரு. ரஜீவ பண்டாரநாயக்க | கொழும்பு பங்குப் பரிவர்த்தனை | பிரதம நிறைவேற்று அதிகாரி | பூச்சியம் |
| | லங்கா வைனான்சியல் சேர்விஸஸ் பியுரோ லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க | பொதுத் திறைசேரி | 08 ஜனவரி 2020 முதல் பிரதிச் செயலாளர் | பூச்சியம் |

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | இலங்கை வங்கி | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | லோட்டஸ் டவர் மெனேஜ்மன்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் | 03.02.2022 முதல் இதுநாள் வரைக்கும் தலைவர் (பதில்) | பூச்சியம் |
| | உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியம் | 28.02.2022 வரைக்கும் தலைவர் மற்றும் ஆணையாளர் | பூச்சியம் |
| | இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு | 02.03.2022 வரைக்கும் பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| திரு. சிந்தக்க மென்டிஸ் | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | பணிப்பாளர் நாயகம் | பூச்சியம் |
| | இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை | பதவிவழி அங்கத்தவர் | பூச்சியம் |
| | கட்டுமான உத்தரவாத நிதியம் | நம்பிக்கைப் பொறுப்பாளர் | பூச்சியம் |

மீளாய்வாண்டின்போது பதவி துறந்த தீ.உ.நி. இன் பதவிவழி அங்கத்தவர்களின் தொடர்புகளை விளக்குகின்றது.

| பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பங்குரித்துவம், ஏதேனும் இருப்பின் |
|---|---|---|---|
| திரு. துமித் பர்னாந்து | கொழும்பு பங்குப் பரிவர்த்தனை | ஜுன் 2022 வரை தலைவர் | பூச்சியம் |
| | பெந்தோரா வென்சர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | 100% |
| | பிவி கோல் பிரொப்பர்ட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | 100% |
| | பிவி ஹில்டொப் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | 100% |
| | ஓமெக் டெக்னோலொஜீஸ் (பிரைவேட்) லிமிட்டட் | தலைவர் | 10% |
| | டெக்கிட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | தலைவர் / பணிப்பாளர் | 10.34% |
| | வன் சீசன் பிரொப்பர்ட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| | டியு பெரடைஸ் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| | அனிவா (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | 11.8% |
| | ஜெனரேட்டர் சொலுாஸன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| | ஜுவலெக்ஸ் எக்ரி குமாரகம (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | 15% |
| | ஏசியா செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | 76.70% |
| | ஏசியா செக்கியுரிட்டீஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | 27.64% |
| | ஏசியா செக்கியுரிட்டீஸ் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர்/தலைவர் | பூச்சியம் |
| | ஏ-செக் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | 100% |
| | ஏசியா செக்கியுரிட்டீஸ் எட்வைசர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர் | பூச்சியம் |
| | ஏசியா செக்கியுரிட்டீஸ் வெல்த் பிரடக்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | பணிப்பாளர்/தலைவர் ஜுன் 2022 முதல் | 100% |
| | சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி. | பணிப்பாளர் | பூச்சியம் |
| | யூனியன் எசூஹரன்ஸ் பி.எல்.சி. | பணிப்பாளர் | பூச்சியம் |

மீளாய்வாண்டில் சந்தை விலையில் பின்வரும் வழக்கமான வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களைத் தவிர மேல் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் வேறு எந்த கொடுக்கல் வாங்கல்களும் பதிவுசெய்யப்படவில்லை.

தீ.உ.நி. இலங்கை வங்கியில் (இ.வ.) பின்வரும் நடைமுறை கணக்கினை பராமரிப்பதுடன் அதன் மீதி கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது

| நடைமுறை கணக்கின் பெயர் | கணக்கு இலக்கம் | 31.12.2022 இல் உள்ளவாறான மீதி (ரூ.) | 31.12.2021 இல் உள்ளவாறான மீதி (ரூ.) |
|---|---|---|---|
| இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் | 1833 | 412,566 | 508,440 |

2022 ஆம் வருடத்தில் பின்வரும் முதலீடுகள் இ.வ. ஊடாக மேற்கொள்ளப்பட்டன

| முதலீட்டின் வகை | இவ்வாண்டின்போது இ.வ. இல் மேற்கொண்ட முதலீடுகள் (ரூ.) | இ.வ. இல் 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறான மீதி (ரூ.) |
|---|---|---|
| திறைசேரி முறிகள் | | 189,892,585 |
| திறைசேரி உண்டியல்கள் | 337,996,688 | 326,000,714 |
| மீ.கொ.உ. இல் முதலீடு | 987,147,506 | 9,000,000 |
| மொத்தம் | 1,325,144,194 | 524,893,299 |

# கூட்டாண்மைத் தகவல்கள்

**அலுவலக முகவரி**

28 மற்றும் 29 ஆம் மாடி
கிழக்குக் கோபுரம்
உலக வர்த்தக மையம்
எச்சிலன் சதுக்கம்
கொழும்பு 1
ஸ்ரீலங்கா

**தொலைபேசி**

+94 11 2143843

**தொலைநகல்**

+94 11 2439149

**மின்னஞ்சல்**

mail@sec.gov.lk

**இணையம்**

www.sec.gov.lk

**கணக்கீட்டு ஆண்டு**

31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது

**கணக்காய்வாளர்கள்**

கணக்காள்வாளர் தலைமை அதிபதி

**வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி
சம்பத் பேங்க் பிஎல்சி
கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
ஹட்டன் நெஷனல் பேங்க் பிஎல்சி

Designed & produced by
emagewise
Digital Plates & Printing by Softwave Printing and Packaging (Pvt) Ltd

SEC SECURITIES AND EXCHANGE COMMISSION OF SRI LANKA